# மலர்ந்தும் மலராமல்...

## 1

"வாராயென் தோழி வாராயோ...

மணப்பந்தல் காண வாராயோ..."

என்று ஒலி பெருக்கியில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. நத்தத்திற்கு அருகிலிருக்கும் கிராமம் அது... கணவாய்பட்டி.. இரண்டு மலைகளுக்கு இடையே அமைந்திருப்பதால் கணவாய்பட்டி என்ற பெயரைப் பெற்றதாம். திண்டுக்கல்லில் இருந்து நத்தம் போகும் ரோட்டில் அமைந்திருக்கும் அந்தக் கிராமத்திற்கு மற்றொரு சிறப்பும் உண்டு.

அதுதான் 'கணவாய் கருப்பு' கோவில்.. ஊருக்கு சமீபத்தில் அடர்ந்த மரங்களின் இடையே குளுமையான காற்று வீச.. குதிரையில் ஏறி கையில் வீச்சரிவாளுடன் காட்சி தரும் கணவாய் கருப்பசாமி... மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமென்று அந்த வட்டார மக்கள் வழிபடும் தெய்வம். தினமும் நான்கைந்து கார்களும் ஏழெட்டு மாட்டு வண்டிகளும் கோவில் வாசலில் நிற்க உள்ளே ஜனத்திரள் வழிபட்டுக் கொண்டிருக்கும்.

அந்த ஊரின் நாட்டாண்மை என்று அன்போடு அழைக்கப்படும் ஊர் பெரியவர் ரங்கசாமியின் மகனுக்குத்தான் அன்று திருமணம். பெண் வீட்டார் முதல் நாளே வந்து விட்டனர்... மணப்பெண் ரங்கசாமியின் மகள் கார்த்திகாவின் உயிர்த்தோழி பிருந்தாதான். நெருக்கமான தோழமையால் கார்த்திகாவின் அண்ணனுக்கு தோழியை பெண் கேட்கும்படி வற்புறுத்தினாள் கார்த்திகா... மகளுக்காக.. அதுவும் சமீப காலமாய் அடிபட்ட பறவையின் வேதனையோடு மூலையில் ஒடுங்கிக் கிடக்கும் அவள் மன ஆறுதலுக்காக.. அவளது தோழியையே பெண் கேட்டுப் போனார் ரங்கசாமி.

பிருந்தாவின் அப்பாவோ... திண்டுக்கல்லில் மிகப் பெரிய ஜவுளிக்கடை வைத்திருக்கும் பணக்காரர்... முதல் இரண்டு பையன்களுக்குப் பின்னர் பெண் குழந்தை வேண்டுமென்று வேண்டிப் பெற்றுக் கொண்ட பெண் தான் பிருந்தா. அவளது எதிர்காலத்தைப் பற்றி ஆயிரம் கனவுகளோடு இருந்தார் பிருந்தாவின் தந்தை சோமசுந்தரம். ஆனால் பிருந்தாவோ.. தன் தோழியின் அண்ணனைத் தான் மணம் முடிப்பேன் என்று ஒற்றைக் காலில் நின்றாள்.

''ஏம்மா பிருந்தா.. நீ அந்தப் பெண்ணின் அண்ணனைத் தான் கல்யாணம் பண்ணிக்கனும்னு ஏன் பிடிவாதம் பிடிக்கறே?''



''எந்தப் பெண்ணின் அண்ணனப்பா...''

''அதுதான் உன் குளோஸ் பிரண்டு.. கார்த்திகா.''

''அவள் பெயர் கூட உங்களுக்கு மறந்து போய் விட்டதா?''

''ஏம்மா.. நான் பல ஜோலிக்காரன்.. உன் பெயரை மறந்தால் நீ கோவிக்கிறதில் அர்த்தமிருக்கு. உன் பிரண்ட்டின் பெயரை மறந்தால் நீ கோவிக்கிறதில் அர்த்தமிருக்கா? சொல்லு..''

''அது எப்படி அவ்வளவு சாதாரணமாய் நீங்கள் சொல்லலாம். அவள் என் உயிர்த்தோழி.''

''இருக்கட்டும்மா.. அதுக்காக.. பாசமாக இருந்துவிட்டுப் போக வேண்டியதுதானே.. அவங்க வீட்டுக்கே வாழப் போவேன்னு அடம் பிடித்தால் என்ன அர்த்தம்?''

''எப்படியும் எனக்கொரு கல்யாணத்தை நடத்தியே தீருவேன்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கிறது யாரு..? நீங்களா.. இல்லை நானா?''

''ஏம்மா.. பெற்ற பெண்ணுக்குக் கல்யாணம் பேசி முடித்தால் அது ஒரு தப்பாம்மா..? உனக்கு செய்ய வேண்டிய கடமையில்லையா அது?''

''அப்ப.. என்னை அந்த வீட்டிலேயே கல்யாணம் பண்ணிக்கொடுங்க.''

''அமெரிக்காவில் மாப்பிள்ளை பார்த்து வைத்திருக்கிறேன்.. நீ அதை விட்டுவிட்டு பட்டிக்காட்டு மாப்பிள்ளையைத் தேடி ஓடுகிறாயே.''

''ஆமாம்பா. விட்டால் கார்த்திகாவின் அண்ணன் ஒரு படிக்காத தற்குறின்னு சொல்லி விடுவீங்க போல. அவர் எம்.எஸ்ஸி படித்துவிட்டு பேங்கில் மேனேஜராக உத்தியோகம் பார்ப்பவர்.''

"ஏம்மா.. நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளையின் சம்பளத்திற்கும் இந்தப் பையன் வாங்கும் சம்பளத்திற்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா?"

"ஏணி வைத்து ஏறிப் பார்க்க வேண்டிய அவசியமெல்லாம் எனக்கு இல்லை. நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்..."

சோமசுந்தரத்தின் முகம் சுருங்கியது. கட்டுப்பாடாய் வளர்த்த மகள் காதல் விவகாரத்தில் சிக்கி விட்டாளா?

"ஏம்மா.. நீ அந்தப் பையனை.. காதல்.. கீதல் ஏதாவது செய்கிறாயா?"

"வாயைக் கழுவுங்கள் அப்பா.. அதென்ன என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்?"

சோமசுந்தரம் நிம்மதியானார். அவர் பயந்தது போல் இல்லை.

"பின்னே எதற்கும்மா... அந்தப் பையனைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறாய்?"

"அவர் பலசாலியான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்கிறேன். ஆமாம்ப்பா... நானும் அப்போதிருந்து பார்க்கிறேன். நீங்கள் என்ன அவரை அந்தப் பையன் அப்படின்னே சொல்கிறீங்க.. வருங்கால மாப்பிள்ளை... மரியாதை தர வேண்டாமா?"

"முடிவே பண்ணி விட்டாயாம்மா?"

"ஆமாம்பா."

"இன்னும் குழந்தையாகவே இருக்கிறாயே.. நம்ம அந்தஸ்திற்கும் அவங்க அந்தஸ்திற்கும்..."



"ஏணி வைத்தாலும் எட்டாது. அதைத்தானே சொல்ல வருகிறீர்கள்? ஏணியைத் தூக்கி உடப்பில் போடுங்கள்."

"பிருந்தா.. நான் பார்த்திருக்கும் அமெரிக்க மாப்பிள்ளை.. வீட்டுக்கு ஒரே பையன். அவனுடைய அப்பா ரிட்டயர்டு ஜட்ஜ்.. அம்மா பிரபலமான டாக்டர்.. சென்னையில் பங்களா.. இப்படி சிட்டியில் மருமகளாகப் போய் வெளிநாட்டில் குடித்தனம் பண்ணுவதை விட்டு விட்டு.. கணவாய்பட்டியில் கட்டிக் கொள்வேனென்று அடம் பிடிக்கிறாயே."

"அப்பா. வெளிநாட்டிற்குப் போனால் உங்களை அடிக்கடி பார்க்க வர முடியுமாப்பா."

சோமசுந்தரம் நெகிழ்ந்து போனார். மகளுக்குத்தான் அவர் மேல் எத்தனை பாசம்.

"ஏம்மா.. இந்தப் பையன்.. முறைக்காதேம்மா.. என் வருங்கால மாப்பிள்ளை.. வேலை பார்ப்பது ஏதாவது டவுனாக இருந்தாலும் பரவாயில்லை."

"அப்பா.. நத்தம் டவுனில்லையே?"

"ஆனால் அவர் இருக்கிறது கணவாய்பட்டியில் தானேம்மா. தினமும் அங்கிருந்துதானே வேலைக்குப் போய் வருகிறார்?"

"பத்து கிலோ மீட்டரில் இருக்கும் ஊரில் வேலை பார்ப்பவர் வேறு என்ன செய்வார்?"

"அதற்காக பட்டிக்காட்டில் நீ போய் இருப்பதா?"

"அவர்கள் வீடு என்ன. பட்டிக்காட்டு வீடு போலவா இருக்கிறது?"

சோமசுந்தரம் யோசனையில் ஆழ்ந்தார். மகள் சொல்வது உண்மைதான் என்பது அவருக்குத் தெரியும்.

ரங்கசாமியின் குடும்பம் கணவாய்பட்டியில் தோப்பு.. துரவு.. வீடு வாசல் என்று வாழும் குடும்பம். சுதாகரன்.. கார்த்திகா என்று அளவாகப் பெற்று வளர்ப்பவர். வீடு முழுவதும் மார்பிள்ஸ் பதித்து வசதியான பங்களாவை கிராமத்தில் கட்டி வாழ்பவர். அவர் மகன் சுதாகரன் பேங்கிற்கு வேலைக்குப் போய் வருவது காரில்தான்.

''இருந்தாலும் பிருந்தா.. உன் பிரண்ட் வீட்டோடு இருக்கிறாளே...''

''அப்பா.. வேண்டாம்.. அவள் வீட்டில் அவள் இருக்காமல் வேறு எங்கே இருப்பாள்.''

''அவள் கல்யாணமே வேண்டாம்னு இருக்காளாமே.. அதுவும் அவளுடைய...''

மேலே சொல்ல முயன்றவரை மகளின் அக்கினிப் பார்வை பொசுக்க அப்படியே பேச்சை நிறுத்திக் கொண்டார்.

''சரி விடும்மா.. அவர்கள் வீட்டுப் பேச்சு நமக்கு எதற்கு? நான் பெண்ணைக் கொடுக்கப் போகிறவன். நாலையும் யோசிக்கத்தானே வேண்டும்..?''

''அந்த நாலில் ஒன்று.. கார்த்திகா அந்த வீட்டில் இருப்பதா?''

''அதையும் பார்க்கனும்தானே பிருந்தா..''

''அப்பா.. நான் வேறு.. அவள் வேறு இல்லை. இனி மேல் இப்படிப் பேசாதீர்கள்.''

மகளின் கோபம் கண்டு அந்தப் பேச்சை அவள் முன் பேசாமல் விட்டு விட்ட சோமசுந்தரம்.. மனைவி பார்வதத்திடம் அங்கலாய்த்தார்.



''ஏண்டி பார்வதம். இந்தப் பெண் ஏன் இப்படி கூறு கெட்டுப் போய் இருக்கு?''

''எல்லாம் நீங்க கொடுக்கும் செல்லம்தான்.''

''இவ ஒருத்தி.. நேரம் காலம் தெரியாமல் வக்கணைப் பேச்சுக்கு வருவாள்... ஏய்.. நடக்கிற வேலையைப் பேசுடி.. அமெரிக்கா மாப்பிள்ளை வேண்டாம்னு பிருந்தா முடிவாச் சொல்லிருச்சு.''

''அவள் சொன்னால் நீங்க ஏன் அதை அப்படியே கேட்டுக்கறீங்க?''

''வேறு என்னடி செய்யணும்?''

''நல்லது கெட்டதை ஆராயணுமா வேணாமா?''

''எல்லாம் ஆராய்ந்து பார்த்தாச்சு. அவளிடமும் சொல்லியாச்சு. கேட்கிற பாடாய் இல்லையே.''

''பிறந்ததில் இருந்து பிடித்தால் ஒரே பிடிதான். விட்டுக் கொடுக்க மாட்டாள்.. இப்ப என்ன செய்வது?''

''ரங்கசாமி குடும்பமும் வசதியானதுதான். தோட்டம்.. தோப்புன்னு காடு கரை நிறைய இருக்கு. பையனும் லட்சணமாய் இருக்கிறான். படித்திருக்கிறான். பேங்க் மேனேஜர்.. பெண்ணைக் குடுக்கலாம்தான். ஆனால்..''

''என்ன ஆனால் போடுகிறீங்க.''

''ஏண்டி உனக்குத் தெரியாதா? அந்தப் பொண்ணு கார்த்திகா. கடைசி வரை பிறந்த வீட்டிலேயே இருக்கப் போகிறேன்னு சொல்லிடுச்சாம்ல. அந்தச் சங்கதி உனக்கும் தெரியும்தானே. அப்புறமும் ஏன் 'ஆனால்' போடுகிறீங்கன்னு என்னைக் கேள்வி கேட்கிறாயே...''

பார்வதம் யோசனையில் ஆழ்ந்தாள். கார்த்திகாவிற்கு மாப்பிள்ளை பார்த்துப் பேசி முடித்து திருமண ஏற்பாடு

களையும் செய்தார்கள். திருமணத்தன்று காலையில் மாப்பிள்ளைப் பையன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தவன் எழுந்து கொள்ளவே இல்லை.

''ஹார்ட் அட்டாக்காம்.''

''ஐயோ பாவமே. இந்த வயதிலா.''

''எல்லாம் யார் செய்த பாவமோ.''

''என்ன நேரத்தில் இந்தக் கல்யாண ஏற்பாடு நடந்ததோ.. நல்லா இருந்த ஆள்.. அரை நொடியில் போய் விட்டானே...''

''எல்லாம் தாலி கட்டிக் கொள்ள இருந்தவளின் ராசி தான்.''

மணவறை வரை வந்த கல்யாணம் நின்று போனது.. மாப்பிள்ளை பையன் ஓடிவிட்டால்.. உடனே வேறு ஒருவனை மணமகனாக உட்கார வைத்து திருமணத்தை நடத்தி விடலாம். அதற்கு சொந்த பந்தத்தில் ஆயிரம் பேர் முன் வருவார்கள். மாப்பிள்ளை இறந்து விட்டால் மணமகளாக நிற்கும் அந்தப் பெண்ணை ஏற்றுக் கொள்ள யார் வருவார்கள்?

நமக்குத்தான் காலம் காலமாக சில வழக்கங்கள் உண்டே. மனைவி இறந்தால் மறு நொடியே அந்தக் கணவன் புது மாப்பிள்ளை. கணவன் இறந்தால்.. மனைவி காலம் முழுவதும் துயர் சுமப்பாள். உடன்கட்டை ஏற வைக்காமல் இருப்பதே பெரிய விஷயம் என்பதால் வேறு உரிமைகளைக் கோராமல் உயிரோடு விட்டு வைத்தால் போதும் என்று பெண்கள் வாழ்வார்கள்.

'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே – அங்கே
வேரில் பழுத்த பலா.'



மனித நேயம்மிக்க கவிஞர் ஒருவர் பாடிய வரிகள் இவை. 'வேர் பலா' என்பது இனிப்புச் சுவை அதிகமானது. ஆனால் அதை வேண்டுவாரில்லையாம்.

'வேர்ப்பலா' என்று அவர் குறிப்பிட்டது இளம் விதவையை.. 'விதவன்' என்ற சொல்தான் நம் வழக்கில் இல்லையே...

கார்த்திகா திருமணம் ஆகாமலேயே துயரை அனுபவித்தாள். அவளைப் போன்ற அழகான பெண்ணை மனைவியாக அடையக் கொடுத்து வைக்காமல் நிச்சயிக்கப்பட்டவன் போய்விட.. அவள் பழிச் சொல்லை ஏற்றுக் கொண்டு நின்றாள்.

என்னவோ.. அவள்தான் மணமகனின் கழுத்தை நெரித்துக் கொன்றது போல் ஆள் ஆளுக்கு அவளைப் பேசினார்கள். தூற்றினார்கள். அவர்கள் பேசுவதைக் கேட்டு... கார்த்திகா.. உண்மையிலேயே தான் கொடிய நேரத்தில்தான் பிறந்தோம் என்ற முடிவிற்கு வந்து விட்டாள்.

தன் ஜாதகம் சரியில்லை. தன்னை மணக்க நினைத்ததால் தான் மணமகன் போய் விட்டான் என்று யோசிக்க ஆரம்பித்து விட்டாள். தான் வாழவே தகுதியற்றவள் என்ற நினைவு அவளுக்கு வந்து விட்டது.

தன்னிரக்கம் என்பது மிகவும் கொடுமையான ஒன்று. கார்த்திகாவை தன்னிரக்கம் சூழ்ந்து கொண்டது. அவளது தன்னம்பிக்கை அவளை விட்டு விலகிவிட்டது.

தான் நின்ற இடத்தில் பூ மலரும் என்று மற்றவர்கள் கொண்டாட வளர்ந்த பெண். வீட்டுக்குள் முடங்கிப் போனாள். தான் மற்றவர்கள் எதிரில் வந்தால் அது அபசகுனமாகி விடுமோ என்று பயந்து போனாள்.

கார்த்திகாவின் நம்பிக்கைச் சிறகுகள் முறிந்து விட்டன. இந்த நிலையில் ஆளுக்கொரு நியாயம் பேசினார்கள். திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்கள்...

''நல்லவேளை தாலிகட்டலை... இல்லைன்னா இந்தப் பையன் அவ புருசன்னு இல்ல ஆகியிருக்கும்.''

இந்த வார்த்தை கார்த்திகாவின் மனதில் பதிந்து விட்டது. இயல்பாகவே சில கோட்பாடுகளுடன் கிராமத்தில் வளர்ந்தவள். முதன் முதலாய் பெண் பார்க்க வந்தவனுக்கே அவளைப் பிடித்துப் போய் திருமணம் நிச்சயமாகி விட்டது. அவன் போனதும்.. திருமணமே வேண்டாம் என்று சொல்லி விட்டாள்.

கெஞ்சிக் கதறிய தாய் தந்தையரிடம்,

''அப்பா.. உங்கள் மகளாக உங்கள் நிழலிலேயே வாழ்ந்து முடித்து விடுகிறேன்ப்பா. மீறி என்னைத் தொந்தரவு செய்தால் நானும் அவர் போன இடத்திற்கே போய் விடுவேன்'' என்று கூறி விட்டாள்.

அரண்டு போன பெற்றவர்கள்.. அதன் பின் வாயைத் திறக்கவே இல்லை. கார்த்திகாவும் திருமணத்தைப் பற்றிய நினைவே இல்லாமல் பெற்றோர்களும் உடன் பிறந்தவர்களும் போதுமென்று காலத்தைக் கழிக்க ஆரம்பித்து விட்டாள்.

இப்போது அவளுடைய தோழியை அவளது அண்ணனுக்கு பெண் தருவதற்கு அவளது இருப்பையே குறையாக எண்ணித் தோழியின் பெற்றோர்கள் பேசிக் கொள்வதை பாவம்.. அவள் அறிய மாட்டாள்.

இப்படியும் பிரச்னைகள் வரும் என்று எண்ணிப் பார்க்காதவள் அவள். அவளைப் பற்றிய யோசனையில் இருந்து மீண்ட பார்வதம் - சோமசுந்தரத்தை பார்த்துக் கூறினாள்.



''பெற்ற பெண்ணைப் பார்த்துக் கொள்கிற பொறுப்பு பெற்றவங்களுக்குத்தான். நம் மாப்பிள்ளைக்கு இல்லை. நீங்கள் கவலைப்படாமல் கல்யாண வேலைகளைப் பாருங்கள்...''

''பர்வதம் யோசனையில்லாமல் பேசாதேடி. மொட்டாக இருக்கும் பூவைப் பற்றிக் கவலையில்லை. மலர்ந்து விட்ட மலரைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டாம். அந்தப் பெண்.. மலர்ந்தும் மலராத பூ. அது இருக்கும் வீட்டில் நம் பெண் நிம்மதியாக வாழ முடியுமா?''

''சேச்சே.. கார்த்திகாவின் மனதில அப்படிப்பட்ட நினைவுகளே வராது.''

''இப்போது வராது. காலப் போக்கில் வந்து விட்டால்?''

''அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம்.''

''அப்படிங்கறே... அதுவும் சரிதான்...''

அரை மனதாய் சம்மதம் சொல்லி. தன் மகளை மண முடித்துக் கொடுக்க ஒப்புக் கொண்டார் சோமசுந்தரம்...

கெட்டி மேளம் முழங்க.. நாதஸ்வரம் ஒலிக்க.. கார்த்திகாவின் அண்ணன் சுதாகரன் பிருந்தாவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான். மணமக்கள் காலில் விழுந்தபோது.. ''நூறு வருசம் தீர்க்காயுளாய் வாழணும்'' என்று சோமசுந்தரம் வாழ்த்தினார்.

## 2

''வலது காலை எடுத்து வைத்து வாம்மா...'' கார்த்திகாவின் அம்மா பூங்கோதை அன்புடன் மருமகளை அழைத்தாள்.

மாப்பிள்ளையும்.. பெண்ணும் மணக் கோலத்தில் உள்ளே நுழைந்தனர். அவர்களை அமர வைத்து.. பால்.. பழம் சாப்பிட வைத்தனர். திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களில் நெருங்கிய உறவினர்கள் மட்டும் தங்கி விட மற்ற உறவினர்கள் மதிய உணவு விருந்து முடிந்ததும் சென்று விட்டனர்.

சோமசுந்தரம் தன் மனைவி மகன்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.

''ஏம்பா.. தங்கச்சியும் மாப்பிள்ளையும் நாளைக்கே நம் வீட்டுக்கு மறு வீடு விருந்துக்கு வந்துருவாங்கல்ல..'' பெரிய மகன் பூபாலன் வினவினான்.

''இது என்னடா கேள்வி.. வந்துதானே ஆகணும்'' என்றார் சோமசுந்தரம்.

''அப்போ.. நம்மில் யாராவது முன்னால் போய் வீட்டில் எல்லாவற்றையும் ரெடி பண்ண வேண்டுமே...'' இளைய மகன் தனபாலன் யோசித்தான்.

''ம்ம்.. அதுவும் சரிதான். என்னடி பார்வதம்.. யாரை அனுப்பலாம்.''

''அது சரி.. பெரிய மனுசனுக்கு இது தெரியாதா? நாமதான் முதலில் போகணும். பையன்களும்.. மருமகள் களும் இன்றைக்கு இங்கேயே இருந்து விட்டு.. நாளைக்கு மறு வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வரட்டும்.''

''ஏண்டி.. நாம் இருந்தால் என்ன? பெண்ணை எப் படிட தனியாக விட்டு விட்டுப் போவது.''

''எனக்கு வாயில் நல்லா வந்திடும். பெண்ணைக் கல் யாணம் பண்ணிக் கொடுத்திருக்கிறோம். அது நினைவு இருக்கா இல்லையா? எல்லாம் பெண்ணைக் கட்டிக்



கிட்ட மாப்பிள்ளை அவளைப் பார்த்துக்குவார். நாம இங்கே இருந்தால் சின்னஞ் சிறுசுகள் சங்கடப்பட மாட்டாங்களா... அதுதான் நம் மருமகள்கள் இருக்கிறாங் கல்ல.. அவங்க பார்த்துக்குவாங்க.. நீங்க கிளம்புங்க.''

''சின்னஞ்சிறுசுகள் ஏண்டி சங்கடப்படப் போகிறாங்க?''

''இவர் ஒருத்தர்.. எல்லாத்துக்கும் விளக்கம் சொல்ல ணும். ஏங்க நம்ம பெண்ணுக்கு இன்றைக்குத்தான் கல்யாணம் ஆகியிருக்கு. புரியுதா.''

சோமசுந்தரத்திற்குப் புரிந்தது. இரவு.. அவர்களுக்கு முதலிரவு.. பெண்ணை பெற்றவர்கள் உடனிருப்பதை விட.. அவளை விட சில வருடங்களே மூத்தவர்கள் ஆன அண்ணிகள் உடன் இருப்பதே சாலச் சிறந்தது என்ற முடிவிற்கு வந்தவர்.. புறப்பட ஆயத்தமானார்.

''அப்போ நாங்க கிளம்புகிறோம் தங்கச்சி...''

''அதுக்குள்ள கிளம்பணுமா மதினி...''

''ஆமாம் கோதை... நாளை பெண்ணும் மாப்பிள்ளை யும் மறுவீட்டிற்கு வரணும். நாங்க போய் ஏற்பாடுகளை கவனிக்கணும்.''

''இங்கே.. பிருந்தா கூட துணையாய் நீங்க யாரும் இல்லைன்னா எப்படி...?''

''பூபாலனும்.. தனபாலனும் அவங்க பெண்டாட்டி களோடு இங்கேதான் இருப்பாங்க.. காலையில் மறு வீட்டு விருந்திற்கு மாப்பிள்ளையையும் பெண்ணையும் அவங்க அழைச்சுக்கிட்டு வந்திருவாங்க.''

பார்வதம் வீட்டிற்குள் போய் பிருந்தாவின் தலையை தடவிக் கொடுத்தாள். இத்தனை நாளும் கைக்குள் வளர்த்த மகளை அடுத்தவர்கள் வீட்டில் விட்டுச் செல் லும் துயரம் அவள் நெஞ்சினில் எழுந்தது.

"அம்மா ஊருக்குப் போகிறேன் பிருந்தா.. கெட்டிக்காரத் தனமாய் இரு... இனிமேலும் நீ சிறு பெண்ணில்லை..."

பிருந்தா மௌனமாக தலையை ஆட்டினாள்.

"வனஜாவும்.. பூமாவும் இங்கேதான் இருப்பாங்க..."

அதற்கும் தலையாட்டலே பதிலாய் கிடைத்தது.

சோமசுந்தரமும்.. பர்வதமும் கிளம்பிப் போய் விட்டனர். இரவு உணவு முடிந்து.. வாசல் பந்தலில் போடப் பட்டிருந்த சேர்களில் அமர்ந்து வெற்றிலை பாக்கைப் போட்டுக் கொண்டிருந்தார்கள்... பூபாலனும்.. தனபாலனும்.

"என்னங்க.. கொஞ்சம் இங்கே வாங்க..." பூபாலனின் மனைவி வனஜா அழைத்தாள்.

எழுந்து வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்து விட்டு மனைவி யிடம் வந்து.

"என்னடி.." என்று வினவினான் அவன்.

"கல்யாண மாப்பிள்ளை போல் வெற்றிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறீங்களே. கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாமா?"

"என்ன பொறுப்பைப் பார்க்கச் சொல்கிறாய்...?"

அவள், பட்டுப் புடவை உடுத்தி.. கைகளில் பொன் வளையல்கள் குலுங்க... காதுகளில் ஜிமிக்கி ஆட பூவா சத்துடன் இருந்த மனைவியை ஆசையுடன் பார்த்தபடி கேட்டான்.

அவனது பார்வையை உணர்ந்தவள் ஜாக்கிரதையாய் தள்ளி நின்று கொண்டு,

"பிள்ளைகள் தூங்கி விட்டார்களான்னு அத்தையிடம் விசாரித்தீர்களா" என்று கேட்டான்.



பிள்ளைகள் இருவரையும் சோமசுந்தரமும்.. பர்வதமும் அழைத்துச் சென்று விட்டிருந்தனர். பூபாலனின் பிள்ளை கள் ஆறு வயதிலும்.. நான்கு வயதிலும் இருந்தனர். தனபாலனிற்குத்தான் ஒரு வயதில் கைக்குழந்தை இருந்தது.

"வா.. நாம இரண்டு பேரும்.. மொட்டை மாடிக்குப் போய் போன் போட்டு விசாரிக்கலாம்."

வனஜாவின் கண்களில் மையல் வந்தது... கணவ னின் சரஸத்தை ரசித்தவாறு...

"இன்றைக்கு உங்க தங்கைக்குத்தான் முதலிரவு..." என்றாள்.

"அதனால் என்ன.. நாமும் இந்த இரவைக் கொண் டாடக் கூடாதுன்னு ஏதும் சட்டம் இருக்கா?"

"வந்த இடத்தில் படுத்தாமல் அடங்கி இருங்கள். முத லில் வீட்டுக்குப் போன் போட்டு பிள்ளைகளை விசாரி யுங்கள்."

அவள் வேண்டுமென்றே.. முந்தானையை அவன் முகத்தில் படுமாறு விசிறி விட்டு வீட்டிற்குள் சென்று விட்டாள்.

பூவாசத்துடன் தன் மேல் பட்டு விலகிய சேலையின் ஸ்பரிசத்தில் மயங்கிப் போன பூபாலன் வாய்க்குள் முணுமுணுத்தான்.

"போகிறவள் சும்மா போகிறாளா?"

பூபாலன் போனை எடுத்துப் பேச ஆரம்பித்தபோது.. வீட்டுக்குள்ளிருந்து பூமா தன் மகனைச் சமாதானப் படுத்திக் கொண்டே வந்தாள்.. தனபாலன் வெற்றிலையை மறந்து மனைவியின் அருகே சென்றான்.

''ஏண்டி அழுகிறான்?''

''புது இடமில்லை. அதுதான்.''

பூமா அங்கிருந்த சேர்களில் ஒன்றில் அமர்ந்து மகனுக்கு வேடிக்கை காட்ட ஆரம்பிக்க.. தனபாலன் அவளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

'அது எப்படித்தான். விசேஷ வீடுகளில் இந்தப் பெண்கள் எல்லோரும் பூ மணக்க.. மணக்க.. இவ்வளவு அழகாக ஆகி விடுகிறார்களோ.'

மகனுக்கு வேடிக்கை காட்டிக் கொண்டே தனபாலனைப் பார்த்த பூமா புருவங்களை உயர்த்தினாள்.

''என்ன...?''

''எப்படிடீ இவ்வளவு அழகாக இருந்து தொலைக்கிறாய்..?''

பூமா பல்லைக் கடித்தாள். முன்கோபக்கார தனபாலன் சட்டென்று மனைவியிடம் கை நீட்டி விடுவான். அன்று காலையில் தான்.. கல்யாண வீடென்றும் பாராமல் மனைவியின் கன்னத்தில் ஒரு அறை விட்டிருந்தான்.

'காலையில் மிஞ்சுவது... ராத்திரி கொஞ்சுவது.. இந்த மனிதனுக்கு இதுவே வழக்கமாகி போய் விட்டது...'

''ஏண்டி முறைக்கிற?''

''என் அழகு இப்போதுதான் தெரிகிறதாக்கும்? காலையில் அடிக்கும்போது தெரியவில்லையாக்கும்.''

''அடிக்கிற கைதாண்டி அணைக்கும்.''

''போதும்.. இன்றைக்கு உங்கள் தங்கையின் கல்யாண நாள். அது நினைவிருக்கிறதா?''

''உனக்கு நம் கல்யாண நாள் நினைவுக்கு வரவில்லையா?''



''அதை நினைத்து விட்டாலும்...''

''ஏண்டி ராகம் போடுகிற.. எனக்கு என்ன குறை..?''

''சொல்லி விட்டாலும்...''

''நான் சிங்கம்டி. கல்யாணமான அடுத்த வருடமே உன் கையில் சிங்கக் குட்டியை கொடுத்து விட்டேனில்ல...''

''கொடுத்து விட்டாலும்...''

''ஏய்.. இப்ப என்னங்கிற.. நானும் அப்போதிருந்து பார்க்கிறேன். ஒரு மார்க்கமாகவே பேசுகிறாய். என்ன விஷயம்? கல்யாண வீடாச்சேன்னு பார்க்கிறேன்...''

''பார்த்து விட்டாலும்...''

தனபாலன் கண்கள் சிவக்க அவளை முறைத்தான். அவள் தன் மடியிலிருந்த மகனை அவன் மடிக்கு இடம் மாற்றினாள். அப்போது அவன் நாசியின் அருகே வந்த மல்லிகையின் வாசம் அவன் மனதைக் கிறங்கடிக்க... அவன் கோபம் பறந்து விட்டது.

''பூமா...'' மனைவியைக் காதலுடன் பார்த்தான்.

''பிள்ளையைப் பார்த்துக்கங்க... நான் உங்கள் தங்கையை கவனித்து விட்டு வருகிறேன். அதுவரை சமர்த்தாக இருக்க வேண்டும்.. சரியா?''

''அதன்பின்?''

''பார்க்கலாம்...''

அவன் கன்னத்தில் மெதுவாகத் தட்டிவிட்டு அவள் வீட்டிற்குள் போய் விட்டாள். அவளது கையின் ஸ்பரிசம் பட்ட இடத்தை தொட்டுப் பார்த்துக் கொண்ட தனபாலன்.. தன் தமையனைப் பின்பற்றி தானும் முணுமுணுத்தான்.

''போகிறவள் சும்மா போகிறாளா..?''

வீட்டிற்குள் சென்ற பூமா... பிருந்தாவைத் தேடிப் போனாள். வனஜா அவளுக்குத் தலையைப் பின்னி விட்டுக் கொண்டிருந்தாள். பூமாவைக் கண்டதும்,

''குட்டி.. அழுதானே...'' என்று வினவினாள்.

''உங்க கொழுந்தனிடம் கொடுத்து விட்டு வந்தேன்'' என்றபடி பூவைக் கையில் எடுத்த பூமா.. அதை பிருந் தாவின் தலையில் அழகுற வைத்து விட்டாள்.

''கார்த்திகா எங்கே..?'' என்று பிருந்தா வினவினாள்.

''அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள்..'' என்று பதில் சொல்லிக் கொண்டே பூமாவைப் பார்த்தாள் வனஜா.

இருவரின் விழிகளும் சங்கேதமாய் பேசிக் கொண்டன.

கார்த்திகா பிருந்தாவின் அருகேதான் இருந்தாள். வனஜாதான் நாசுக்காக அவளிடம் பேசி தூங்க அனுப்பி விட்டாள்.

''கார்த்திகா... நீ யதார்த்தமான பெண்ணாக இருக் கலாம். பிருந்தாவிற்கு குளோஸ் பிரண்டாக இருக்கலாம். ஆனால்.. இன்றைக்குத்தான் அவளுக்கு கல்யாணம் ஆகியிருக்கிறது. அவளும்.. உன் அண்ணனும் உன்னைப் பார்த்து உன்னைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விட்டால், என்ன செய்வது? நீ புத்திசாலிப் பெண். நான் சொல்வது புரியும். கொஞ்ச நேரம் அவர்கள் பார்வையில் படாமல் நீ ஒதுங்கியிருந்தால் தேவலாம். அவர்கள் வாழ்க்கையை சந்தோசமாக ஆரம்பிக்கட்டுமே.''

வனஜா கூறியதைக் கேட்ட கார்த்திகாவின் முகம் மாறி விட்டது. முதன் முதலாக ஒதுக்கப்படுகிறாள். தன் வீட்டிலேயே தான் தனிமைப் படுத்தப்படுதை உணர்ந்த கார்த்திகா மனம் வலிக்க.. அவளது அறையில் சீக்கிர மாகவே போய் படுத்து விட்டாள்.



பிருந்தாவை தனியறையில் சந்தித்த சுதாகரன் அவளை ஆசையோடு பார்த்தான். தலையில் சூடியிருந்த மல் லிகைச் சரம் தோள்களில் வழிய மஞ்சள் நிறத்தில் அரக்குச் சிகப்பில் கரையிட்ட மைசூர் பட்டு உடுத்தி அழகோவியமாய் அவள் நின்று கொண்டிருந்தாள். அவள் அருகில் நெருங்கினான். அவள் பின் வாங்கினாள்.

''ஏன் பிருந்தா... என் அருகே வா...'' அவன் கரம் நீட்டி அழைத்தான். அவள் முகம் இறுகியிருந்தது. அவன் அழைப்பை லட்சியம் பண்ணாமல் ஜன்னலோரம் சென்று நின்று கொண்டாள்.

சுதாகரன் புருவம் உயர்த்தினான். அவளது விலகல் அவனுக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது.

'ஏன் விலகிப் போகிறாள்..? இவள்தானே என்னை விரும்பினாள்..? இவள் தானே பிடிவாதம் பிடித்து என்னை மணந்து கொண்டாள்?

ஜன்னலருகே சென்று அவளது தோள் தொட்டான். நெருப்புப் பட்டது போல் பதறி விலகினாள் பிருந்தா.

'இவள் உண்மையிலேயே விலகுகிறாள்..'

அவளது விலகல் நிச்சயமாய் புரிய அவனது புருவங் களில் முடிச்சு விழுந்தது... மீண்டும் அவன் தொட்டான்... அவள் விலக முடியாதபடி அவனது கரம் இறுக்கிப் பற்றி யிருந்தது.

அவனது கரத்தை தட்டி விட்டாள் பிருந்தா... இப்போது சுதாகரனின் விழிகளில் நெருப்புப் பொறி பறந்தது.

'இவள் விளையாடிப் பார்க்கிறாளா..?'

''பிருந்தா'' என்று அழுத்தமாக அழைத்தான்.

அவள் பதில் சொல்லாமல் மௌனமாக நின்றாள்.

''உன்னைத்தான் கூப்பிடுகிறேன்.''

அதற்கும் அவளிடம் பதில் இல்லாமல் போக அவன் ஆத்திரத்துடன் அவளை அணுகினான்... அவள் நகர்ந்து சென்றாள். பலவந்தமாய் அவளது கரம் பிடித்து நிறுத்தியவன்.

''என்னடி.. என்னுடன் விளையாடுகிறாயா?'' என்று கேட்டான்.

அவனது இறுக்கமான பிடியில் கை வலிக்க முகம் சுளித்த பிருந்தா,

''விளையாட இது விளையாட்டு மைதானமுமில்லை.. நீங்களும்.. நானும் குழந்தையில்லை..'' என்றாள்.

'ஒரு வழியாய் பேசிவிட்டாள்..' அவன் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தான். அவள் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

''அது உனக்குத் தெரிந்தால் சரி.. ஓடிப் பிடித்து விளையாடும் விளையாட்டை நீயும் விளையாடி.. என்னையும் விளையாட வைக்காமல் ஒரு இடத்தில் அடங்கி உட்காருகிறாயா..?''

பிருந்தா அறையைச் சுற்றிப் பார்வையை ஓட்டினாள்.

''இங்கே ஒரு சேர் கூட இல்லையே... எங்கே உட்காருவது?''

''கட்டில் இருப்பது உன் கண்ணுக்குத் தெரியவில்லையா?'' பிருந்தா உதடு கடித்தாள். நகம் பார்த்தாள். பொறுமை இழந்த சுதாகரன்.. அவளது கரம் பற்றி கட்டிலில் அமர வைத்து.. தானும் அவள் பக்கத்தில் அமர்ந்தான்.



''பிருந்தா.. உனக்கு என்ன ஆனது? என்னிடம் உனக்கு எதற்கு பயம்? ஏன் இப்படி விலகுகிறாய்? எதுவானாலும் தயக்கமில்லாமல் சொல்லு.''

''எனக்கு கொஞ்ச நாள் அவகாசம் வேண்டும்.'' பிருந்தா விரல் நகங்களை ஆராய்ந்தபடி சொன்னாள்.

'எதற்கு..?' என்று அவன் கேட்கவில்லை. பேசாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தான். பின் எழுந்து.. அறைக்குள் குறுக்கும்.. நெடுக்குமாய் கொஞ்ச நேரம் உலவினான். பின் கட்டிலருகே வந்து தலையணையை சரி செய்து,

''சரி.. படுத்துத் தூங்கு'' என்று அவளிடம் சொன்னான்.

''இங்கேயா?''

''ஏன் இங்கே படுத்தால் என்ன?''

''இல்லை.. நான் தரையில் விரித்துப் படுத்துக் கொள்கிறேன்.''

சுதாகரனுக்கு கோபம் வந்து விட்டது.. அடக்கிக் கொண்டான்.

''ஏன்.. கட்டிலில் படுப்பதற்கென்ன?''

''வேண்டாம்.''

''இங்கே பார்.. பிடிவாதம் பிடிப்பதற்கும் ஓர் அளவு இருக்கிறது. நீ சொன்னதற்கு சரியென்று சொல்லி விட்டேன். அதன் பின்னாலும் நீ கட்டிலில் படுக்க மாட்டேன் என்று அடம் பிடித்தால் எப்படி? மணவறையில் என் பக்கத்தில் அமர்ந்தவள்தானே.. அப்புறம் இங்கே என் பக்கத்தில் படுத்துத் தூங்க என்ன தயக்கம்?''

பிருந்தா. கட்டிலின் ஓரமாக சுருண்டு படுத்தாள். சுதாகரன் முகத்தை சுளித்து அவளைப் பார்த்தபடி அவளருகே படுத்தான். உறக்கம்தான் வரவில்லை.

இன்றைய இரவைப் பற்றி எவ்வளவு கனவுகள் கண்டிருந்தான்? பிருந்தாவை அவன் அடிக்கடி பார்ப்பவன் தான். பேசியது இல்லை. அவள் தன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாள் என்பதை அறிந்ததும் அவன் ஆச்சரியப்பட்டான். அதுவரை கார்த்திகாவின் நிலையை எண்ணி திருமணத்தைத் தவிர்த்து வந்தவன்.. பிருந்தா.. கார்ததிகாவின் தோழி என்ற ஒரே காரணத்திற்காகவும்..

''எனக்காக இதைக் கூடச் செய்ய மாட்டாயா..?'' என்று கார்த்திகா கேட்டதற்காகவுமே.. திருமணத்திற்கு சம்மதித்தான்.

அதன்பின்.. திருமணத்தைப் பற்றிய எதிர்பார்ப்பு இயல்பாக அவன் மனதில் எழுந்து விட்டது. அமெரிக்க மாப்பிள்ளையை மறுத்து.. தன்னை பிருந்தா கரம் பிடிப்பதை எண்ணி மனதிற்குள் கர்வம் கொண்டான்.

இதற்கு அடிப்படை தன் மேல் பிருந்தா வைத்திருந்த காதல் என்று அவன் நம்பினானே.. அது பொய்யா..?



## 3



தூங்கிக் கொண்டிருந்த பிருந்தாவையே பார்த்துக் கொண்டிருந்தான் சுதாகரன்.. நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

'எப்படி.. இவளால் நிச்சிந்தையாய்.. இப்படி ஓர் உறக்கம் உறங்க முடிகின்றது? இன்றைக்கு காலையில் தான் இவளுக்கும் எனக்கும் திருமணம் ஆகியிருக்கிறது..



இது எங்கள் வாழ்வின் முதலிரவு. இந்த இரவைப் பற்றிய எந்தக் கிளர்ச்சியும் இல்லாமல் இவள் உறங்குகிறாளே.'

தலை முடி லேசாகக் களைந்திருக்க.. மலர்ச்சரம் தோளோடு வழிந்திருக்க.. ஒரு புறமாய் திரும்பி சீரான மூச்சுக்களை விட்டுக் கொண்டு படுத்திருந்தவளின் தோளில் லேசாகத் தொட்டான் சுதாகரன் அவளிடம் லேசான அசைவு தோன்றியது.

'வேண்டாம்..' கையை இழுத்துக் கொண்டான். அவளைப் பார்க்கப் பார்க்க தாபம் அதிகரிப்பதை உணர்ந்தவன் அவளிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

எப்போது படுத்துத் தூங்கினான் என்று அவனுக்கேத் தெரியாமல் தூங்கி விட்டவனை.. வளையல் ஒலி எழுப்பியது. கண்களை கசக்கிக் கொண்டு கண் விழித்தான். எதிரே காபியுடன் நின்றிருந்தாள் பிருந்தா. குளித்து வேறு உடை அணிந்திருந்தாள். ஈரத் தலையைத் துண்டால் சுற்றியிருந்தாள். கழுத்தில் மின்னிய புது மஞ்சள் சரடு... அவள் அவனுக்குச் சொந்தமென்பதை அறிவித்தது.

அவனது பார்வையில் சங்கடப்பட்டவள். காபியை அவனிடம் நீட்டினாள்.

''இது என்ன..?''

'என்ன கேள்வி இது..' என்பது போல் பார்த்தவள்,

''காபி..'' என்றாள்.

''இதை நீ ஏன் கொண்டு வந்தாய்?''

''ஆசைப்பட்டு வாங்கி வரவில்லை. நான்தான் கொண்டு வர வேண்டுமென்று அண்ணி சொன்னதால் கொண்டு வந்தேன்.''

'எப்படி முகத்தில் அடித்தது போல் பேசுகிறாள்..' சுதாகரனின் விழிகள் சிவந்தன. அவளை உறுத்துப் பார்த்தான். அவள் முகத்தில் சலனமில்லை.

"ஆசைப்படவில்லையா?" இரு பொருள் படக் கேட்டான்.

"ஆசைப்படவில்லை.." அவள் தெளிவாகப் பதில் கூறினாள்.

"ஆசைப்படாததை ஏன் செய்தாய்..?"

"நிர்பந்தத்திற்காக..."

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி யார் உன்னை நிர்பந்தப் படுத்தியது?"

"கார்த்திகாவின் நட்பு..."

"என்ன...?"

சுதாகரன் ஸ்தம்பித்து விட்டான். இவள் பிடிக்காமல் தன்னைத் திருமணம் செய்து கொண்டாளா?

"நீ என்ன சொல்கிறாய்?"

"எனக்கு அப்பா அமெரிக்காவில் மாப்பிள்ளை பார்த்தார்."

"எனக்கும் தெரியும்."

"அமெரிக்காவிற்கு கல்யாணம் பண்ணிக் கொண்டு போய் விட்டால் கார்த்திகாவைப் பார்க்கவே முடியாது. என்னால் அவளைப் பிரிய முடியாது. அதனால்தான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்."

சுதாகரனுக்கு என்னவோ போல் இருந்தது. அவன் கர்வம் இடிந்து தரை மட்டமாகி விட்டிருந்தது...

"உனக்கு என் மேல் கடுகளவு கூட ஆசை இல்லையா..?"



"நான் உங்கள் முகத்தைக் கூடச் சரிவரப் பார்த்தது இல்லை. அப்புறம் எப்படி உங்கள் மேல் ஆசைப்பட்டிருப்பேன்..? அந்த அமெரிக்கா மாப்பிள்ளையின் போட்டோவைப் பார்த்திருக்கிறேன். உங்கள் போட்டோவைக் கூட நான் பார்த்தது இல்லையே."

சுதாகரனின் முகம் கருத்தது.

'இவள் என்ன பேசுகிறாள் என்பதைப் புரிந்தேதான் பேசுகிறாளா.'

"அந்த அமெரிக்க மாப்பிள்ளையைப் பற்றி நிறையப் பேசுகிறாயே."

"ஆமாம்... அப்பா.. நிச்சயமாய் அங்கேதான் என்னைக் கொடுப்பதாக இருந்தார்.. ரியலி ஹி இஸ் ஸோ ஹேண்ட்சம்... தெரியுமா?"

அவ்வளவுதான்.. சுதாகரன் கோபம் தலைக்கேற 'பளார்' என்று அவள் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான். அவர்களது அறைக் கதவு திறந்திருந்தது. அப்போது தற்செயலாக அவர்களது அறை வாசலைக் கடந்து சென்ற பூமா... இதைப் பார்த்து விட்டாள்.. பதறி விட்டாள்.

முதல் நாள் தான் பெண்ணை மணம் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். மறுநாளே பெண்ணை.. மாப்பிள்ளை அடித்தால் யார்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?

புகுந்த வீட்டில் பிருந்தாவை எவ்வளவு கொண்டாடுகிறார்கள் என்பதை அறிந்தவள் பூமா.. சோமசுந்தரமும்.. பார்வதமும் மகளின் கால்களை தரையில் பட விடாமல் வளர்த்தவர்கள்.. பூபாலனும்.. தனபாலனும் தங்கைக்கொன்று என்றால் தாங்க மாட்டார்கள்.

அப்படி வளர்த்த பெண்ணை திருமணமான மறுநாளே அவளின் கணவன் கன்னத்தில் அறைந்தால் யார்தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள்?

''பிருந்தா... என்னம்மா இது...''

பூமா அழைத்ததும் திரும்பிப் பார்த்த பிருந்தா பெருங் குரலெடுத்து அழ ஆரம்பித்து விட்டாள்.

''அண்ணீ...''

பூமா அவசரமாய் அவர்களது அறைக்குள் போய் பிருந்தாவை அணைத்துக் கொண்டாள். அதற்குள் பிருந் தாவின் அழுகுரல் கேட்டு வீடு மொத்தமும் சுதாகரனின் அறைக்குள் வந்து விட்டது.

சுதாகரனுக்கு கோபம் இன்னும் கூடியது.

'இவள்தான் விவரமில்லாமல் அழுது ஊரைக் கூட்டு கிறாள் என்றால் இவளுடைய அண்ணி எப்படி இங்கிதமில் லாமல் அவர்களுடைய படுக்கையறைக்குள் நுழையலாம்?'

''என்னம்மா... என்ன நடந்தது?''

ரங்கசாமி அவசரமாய் அங்கு வந்து விசாரித்தார். பூமாவின் கண்களில் கோபம் இருந்தது.

''ம்ம்.. அதை உங்க மகன்கிட்ட கேளுங்க.''

''என்னடா நடந்தது?''

''ஒன்றுமில்லைப்பா...''

''ஒன்றுமில்லாததற்கா மருமகப் பெண் அழுது கொண்டிருக்கிறாள்.''

அதற்குள் தனபாலன் அங்கு வந்து விட்டான். வனஜா பூமாவிடம் மெல்லிய குரலில் விசாரித்துக் கொண் டிருக்க.. பூபாலன் சுதாகரனை முறைத்துக் கொண்டிருந் தான்.

''ஏய்.. என்னடி நடந்தது..?'' தனபாலன் பூமாவை அதட்டினான்.



''உங்க தங்கையை உங்க மாப்பிள்ளை அடித்து விட் டார்.''

''என்னது..''

தனபாலன் மட்டுமில்லை. அங்கிருந்த எல்லோருமே அதிர்ந்து விட்டனர்.

''என்னடி சொல்றே..''

''நான் கண்ணால் கண்டதைத்தான் சொல்கிறேன். என்னவென்று தெரியவில்லை. இவர் நம்ம பிருந்தாவை கண்ணு மண்ணு தெரியாமல் போட்டு அடித்து விட் டார்.''

இப்போது சுதாகரனுக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது.

''ஹலோ.. நான் கண்.. மண்.. தெரியாமல் அடித்ததை நீங்கள் பார்த்தீர்களா? அதிகம் பேசாதீங்க.''

''ஹலோவா.. ஏன் மாப்பிள்ளை.. என் பெண்டாட் டியைப் பார்த்தால் ஹலோ போடத் தோன்றுகிறதா உங்களுக்கு.. மைத்துனன் பெண்டாட்டியிடம் நீங்கள் காட்டும் மரியாதை இதுதானா..?''

''புருசன்.. பெண்டாட்டி தகாறில் மூக்கை நுழைப்ப வர்களுக்கு இந்த மரியாதையே போதும்.''

சுதாகரன் கோபத்தில் வாயை விட... அங்கே ரகளை ஆரம்பித்து விட்டது.

''புருசன் பெண்டாட்டி தகராறா? முந்தா நாள் வரைக் கும் அவள் எங்க தங்கச்சி... நேத்து இந்நேரம் தாலியைக் கட்டிவிட்டு.. இன்றைக்கு அடித்து நொறுக்குகிறாயே.. நீயெல்லாம்... எப்படி என் தங்கையை கண்ணும் கருத்து மாய் காப்பாற்றுவாய்'' பூபாலன் கொதித்தான்.

''வா.. போன்னால் நடக்கிறதே வேற...'' சுதாகரன் முறைத்தான்.

''எங்க கண்ணு முன்னாடியே எங்க தங்கையை அடிக்கிறாய்.. தட்டிக் கேட்க வந்த என் பெண்டாட்டியிடம் 'ஹலோ' போடுகிறாய்.. உனக்கெல்லாம் எதற்கய்யா மரியாதை..'' தனபாலன் போர் முரசு கொட்டினான்.

''அடச்சே.. குடும்பம் மொத்தமுமே சண்டைக்கு அலைகிற குடும்பமாய் இருக்கிறதே. அப்பா இதற்குத்தான் நான் கல்யாணம் வேண்டாம்.. வேண்டாமென்று சொன்னேன்... கேட்டீர்களா? இப்போது நடக்கும் கூத்தைப் பார்த்தீர்களா? இப்போது உங்களுக்குத் திருப்திதானே.''

''ஓஹோ... அதுதானா விஷயம்? தனபாலா.. இவருக்கு இஷ்டமில்லாமல் இந்தக் கல்யாணம் நடந்து விட்டது போலடா.. நமக்கு இது தெரியாமல் போச்சே. பிடிக்காத கல்யாணம் என்பதால் நம்ம தங்கையை துன்புறுத்துகிறார் போலடா.''

''உனக்காக அந்த அமெரிக்க மாப்பிள்ளை தவம் கிடந்தானேம்மா.. அதை விட்டு விட்டு.. ஆசைப்பட்டு இவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாயே.. இதற்குத்தான் ஆசைப்பட்டாயா.''

அண்ணனும்.. தம்பியும் மாறி மாறிப் பேச சுதாகரனுக்கு தலை முடியை பிய்த்துக் கொள்ளலாம் போலத் தோன்றி விட்டது.

'இவள் ஆசைப்பட்டாளாமா..' அவன் ஆத்திரத்துடன் பிருந்தாவை முறைக்க.. அவள் இன்னும் அழ ஆரம்பித்தாள்.

''பாருங்கண்ணா.. ஏதும் குற்றம் குறை இருந்தால் உட்கார்ந்து பேசுங்கள். அதை விட்டு விட்டு அடிக்



கிறதும்... இப்படி முறைக்கிறதும் சரியில்லை. என் மனதிற்கு பட்டதை சொல்லி விட்டேன். அப்புறம் உங்கள் இஷ்டம்'' பூமா சுதாகரனிடம் கண்டிக்கும் தொனியில் கூறினாள்.

''உட்கார்ந்து பேசுவதா.. இவளிடமா.. போதும்மா.. இவளோடு நான் பேசி வாங்கியிருக்கிற கொடுமைக்காரன் பட்டம் போதும். நீங்களே உங்கள் அருமை நாத்தனாரிடம் உட்கார்ந்து பேசி சரி பண்ணுங்க... இப்போது தயவு செய்து எல்லோரும் வெளியே போகிறீர்களா. நான் குளிக்கப் போக வேண்டும்.''

சுதாகரன் டவலை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் மறைந்து விட்டான். விசும்பிக் கொண்டிருந்த பிருந்தாவை அழைத்துக் கொண்டு வேறு ஒரு அறைக்குள் அவளது குடும்பத்தினர் சென்று விட்டனர்.

ரங்கசாமி மனைவியின் முகம் பார்த்தார்.

''என்னடி கோதை.. என்ன நடக்கிறது இங்கே.. நம்ம பிள்ளை சாதாரணமாய் கோபப்பட மாட்டானே... அவனா பெண் பிள்ளையிடம் கை நீட்டினான்? அதுவும் புதுப் பெண்டாட்டியை அடித்தானா?''

''அதுதாங்க எனக்கு விளங்கலை.''

''அவன் இஷ்டப்பட்டுத்தானே கல்யாணம் பண்ணிக்கிட்டான்?''

''ஆமாங்க. ஆனால் அந்தப் பொண்ணுதானே முதலில் அவன் மேல் இஷ்டப்பட்டிருச்சு.''

''ஓ.. அதனால்... நமக்காக சம்மதம் சொல்லி விட்டானோ.''

''அப்படித்தான் எனக்குத் தோணுது.''

"என்னாடி இது.. விநாயகரைப் பிடிக்கப் போனால் ஆஞ்சநேயர் வருகிறார்? இப்ப அந்தப் பெண்ணுக்கு என்ன பதில் சொல்வது?"

"அதைவிட அவளுடைய அண்ணன்களுக்கு யார் பதில் சொல்வது? ரெண்டு பேரும் கடோத்கஜன்களாய் இருக்கிறாங்க... நம்ம வீட்டுக்கு வந்து நம்ம முன்னாடியே... நம்ம பிள்ளையை இந்தப் பேச்சு பேசுகிறாங்கன்னா இவங்க வீட்டுக்கு மறு வீடு போனால் அங்கே வைத்து... நம்ம பிள்ளையை என்னவெல்லாம் பேசக் காத்திருக்கிறாங்களோ."

"நீ சொல்வதும் சரிதாண்டி..."

"இதைவிடக் கொடுமை என்னன்னா... நேற்று நம்ம பையனுக்குத்தான் முதல் ராத்திரி... ஆனால் இவங்க இரண்டு பேரும்.. அவங்களுக்குத்தான் முதல் ராத்திரி போல் அவங்க பெண்டாட்டிகளோடு குழாவிய குழாவல் இருக்கே... அப்பப்பா... தாங்க முடியலை."

"அது உனக்கு எப்படித் தெரியும்?"

"வீட்டுக்குள் நடப்பது வீட்டுப் பொம்பளைக்குத் தெரியாமல் போய் விடுமாக்கும்."

"அப்போ... இதற்குப் பதில் சொல்லு."

"எதுக்குப் பதில் சொல்ல..?"

"நம்ம பையன் முதல் ராத்திரியைக் கொண்டாடினானா.. இல்லையா?"

பூங்கோதையின் முகம் வாடிவிட்டது.. பெற்ற இரண்டில் ஒன்று திருமணத்தைத் தவிர்த்து விட்டது.... இன்னொன்று வாழ்ந்ததா... இல்லையா என்று தெரியவில்லையே.. அவள் என்ன வரம் வாங்கி வந்தாள்?



"இல்லைன்னுதான் தோணுது... முதல் நாள் சந்தோசமாக இருந்திருந்தால்... விடியற்காலையிலேயே ஏன் கை நீட்டி புதுப் பெண்டாட்டியை அடிக்கப் போகிறான்?"

"ஆக.. இந்த வீட்டில் முதல் இரவைக் கொண்டாடியது பூபாலனும் தனபாலனும்தான். சுதாகரன் இல்லை. இதற்காடி.. நான் மார்பிள்ஸாலேயே இழைத்து இப்படி ஒரு பங்களாவைக் கட்டி வைத்திருக்கிறேன்?"

"நீங்க வேற வயிற்றெரிச்சலைக் கிளப்பாமல் வந்து சேருங்க. பிள்ளை குளித்து விட்டு வந்து விடப் போகிறான்."

அவர்கள் இருவரும் அறையை விட்டு வெளியேறினர்.

பிருந்தாவை மடி தாங்கி.. பூமா.. என்ன விஷயமென்று விசாரித்துக் கொண்டிருந்தாள். பூபாலனும்.. தனபாலனும் ஆளுக்கொரு பக்கம் கத்திக் கொண்டிருக்க.. வனஜா அவர்களுக்கு பதில் சொல்லி சமாளித்துக் கொண்டிருந்தாள்.

"பிருந்தா.. அழுகாமல் என்ன நடந்ததுன்னு சொல்லும்மா."

"அவருக்கு என்னைக் கண்டாலே பிடிக்கவில்லையாம் அண்ணி..."

"அப்படி அவர் சொன்னாரா..?"

"வாய் வார்த்தையால் சொன்னால்தானா?"

பூமாவுக்கு ஏதோ புரிவது போல் இருந்தது. அவள் வனஜாவைப் பார்த்தாள். இருவாது விழிகளும் உரையாடிக் கொண்டன... வனஜா தாழ்ந்த குரலில் நாத்தனாரிடம் வினவினாள்.

''பிருந்தா.. உன்னைப் பிடிக்காமலா.. அவர் உன்
னுடன் ஆசையாக இருந்திருப்பார்?''

''போங்கண்ணி. நான்தான் அவருக்கு என்னைக்
கண்டாலே பிடிக்கவில்லை என்கிறேனே... அதிலிருந்தே
புரியவில்லையா?''

பெண்கள் ரகசியமாய் பேசிக் கொண்டிருக்க..
பூபாலன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கத்திக்
கொண்டிருந்தான்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்ப
தற்கு ஆள் இல்லை என்று நினைத்துக் கொண்டார்களா?''

''ஏங்க.. உங்க தங்கை வீட்டுக்காரரைத் திட்டுவதற்கு..
என் ஊரையே கூப்பிட்டுத் திட்டுகிறீர்கள்? மற்றவங்க
என்ன பண்ணினாங்க?''

''நீங்க சும்மா இருங்க அண்ணி.. உங்களுக்கு ஒன்றும்
தெரியாது.''

''அப்படிச் சொல்லித்தானே அண்ணனும்.. தம்பியும்
எங்க வாயை தைத்து வைத்திருக்கிறீங்க..''

''இப்ப ஏண்டி.. நீ கச்சை கட்டிக்கிட்டு வருகிற?''

''நீங்க முதலில் வேட்டியை இறக்கி விடுங்க...
என்னவோ ஜல்லிக்கட்டு காளையை அடக்கப் போகிறது
போல வரிந்து கட்டிக் கொண்டு நிற்கறீங்க... இப்ப என்ன
ஆச்சு.. கட்டிக்கிட்டவர் கன்னத்தில் ஒரு அறை விட்டு
விட்டார் அவ்வளவுதானே...''

''இதென்ன அண்ணி.. இவ்வளவு சாதாரணமாகச்
சொல்லிட்டிங்க. அது எப்படி கட்டின பெண்டாட்டியாக
இருந்தாலும் கை தொட்டு அடிக்கலாம்.''

''யாரு.. என் கொழுந்தனாரா பேசுகிறது..? என்ன
நியாயம்.. என்ன நியாயம்.. அட.. அட.. அட புல்லரிக்

குது போங்க.. [illegible]
உன் காதில் விழுந்துச்சா பூமா...''

''விழுந்துச்சுக்கா. நல்லா விழுந்துச்சு. பிருந்தாவைக் கட்டிக்கிட்ட மாப்பிள்ளையாவது மறுநாள்தான் அறைந்தார். இவர் தாலி கட்டினவுடனே அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் அத்தனை பேரும் பார்க்க என்னை அறைந்தாரே ஒரு அறை... அது மறக்குமா அக்கா.''

தனபாலனின் திருமணத்தன்று புது மணமக்களை.. பானைக்குள் மோதிரத்தைப் போட்டு எடுக்கச் சொல்ல... மோதிரம் பூமாவின் கையில் அகப்பட்டு விட்டது. அதை வெளியே எடுக்கும் உற்சாகத்தில் அவள் கையைப் பட்டென்று பானையை விட்டு எடுத்து மோதிரத்தை காட்டும் போது அவளது விரல் தனபாலனின் கண்ணில் பட்டு விட்டது.


உடனே கோபக்கார தனபாலன் விட்டான் ஒரு அறை... திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் திகைத்துப் போய் விட்டனர்.

அதை இன்று மனைவி நினைவு படுத்தியதும்.. தனபாலனின் முகத்தில் குடம் குடமாய் அசடு வழிந்தது. அதைக் கண்ட வனஜாவும் பூமாவும் லேசாகச் சிரித்துக் கொண்டனர்.

சூழ்நிலையின் தீவிரம் படிப்படியாகக் குறைந்தது.



## 4



''எல்லோரும் சாப்பிட வாங்க...'' பூங்கோதை வந்து அழைத்தாள்.

சாப்பாடு ஒன்றுதான் இங்கே குறைச்சல்..'' பூபாலன் இரைந்தான்.

''வேறு என்ன குறைச்சல்? ஒரு குறைச்சலும் இல்லை. அம்மா.. நீங்க போங்கம்மா.. நாங்க பின்னாடியே வருகிறோம்..'' என்றாள் வனஜா.

முகத்தில் சுளிப்புடன் பூங்கோதை அகன்றதும் கணவனை முறைத்தாள் வனஜா.

''ஏண்டி என்னை முறைக்கிற?''

''உங்களுக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா?''

''ஏண்டி.. என் கூட வாழ்ந்து இரண்டு பிள்ளை பெற்றதற்கு அப்புறமும் இப்படி ஒரு சந்தேகமா?''

''அதுக்கெல்லாம் எதுக்குங்க அறிவு?''

''இப்ப நீ என்ன தாண்டி சொல்ல வருகிறாய்?''

''நம்ம பெண்ணை அவருக்குக் கட்டிக் கொடுத்தாச்சு.. அடித்தாலும்.. பிடித்தாலும்.. அது அவங்க பாடு.''

''அப்படி எப்படிட விட முடியும்?''

''விடனும்... அப்பத்தான் நம்ம பொண்ணு வாழ முடியும். முதலில் பூமா அவங்க ரூமுக்குள்ளே போனதே தப்பு.''

''அக்கா.. என் கண் முன்னாலே அவர் நம்ம பிருந்தாவை அடிக்கவும் என் மனது கேட்கவில்லை அக்கா...''

''தப்பா எடுத்துக்காதே பூமா... உன் புருசன் உன்னை தொட்டதற்கெல்லாம் அடித்து வைக்கிறார்.. நீ மற்றவர்களிடம் அவரைப் பற்றி புகார் சொல்லியிருக்கிறாயா?''

''என்னக்கா இது இப்படிக் கேட்கறீங்க... புருசன்.. பெண்டாட்டி சண்டையெல்லாம் ஒரு சண்டையா?''



''நல்லாச் சொன்னேடியம்மா.. உனக்கொரு நியாயம்.. ஊருக்கொரு நியாயமா? நீ சொன்னதை உன் மச்சினர் கிட்டயும்.. புருசன் கிட்டயும் உரக்கச் சொல்லு.... அப்பவாவது அவங்களுக்கு உறைக்கிறதான்னு பார்க்கலாம்.''

''இப்ப என்னதாண்டி செய்யச் சொல்கிறாய்?''

''நாம எதுக்கு இங்கே இருக்கிறோம்? பெண்ணையும்... மாப்பிள்ளையையும் மறு வீடு அழைச்சுக்கிட்டு போவதற்காக இங்கிருக்கிறோம்.. மாப்பிள்ளை கிட்ட முறைத்துக் கிட்டிங்கன்னா.. அவர் மறு வீட்டு விருந்திற்கு வருவாரா..?''

''அட ஆமாம். இது ஏன் எனக்கு முதலிலேயே தோன்றவில்லை?''

''எப்படித் தோன்றும்? அண்ணனும் தம்பியும் ஆடுவதற்கு எதுடா சாக்குன்னு அலைகிறீங்களே. இது எப்படித் தோன்றும். பெண்ணையும் மாப்பிள்ளையையும் மறு வீட்டுக்கு அழைத்துப் போவது மட்டுமில்லை. நாளைக்குச் சாயங்காலம் திண்டுக்கல்லில்.. மாமா.. கல்யாண ரிசப்ஷன் விருந்து கொடுக்கப் போகிறார். அப்ப பிருந்தா பக்கத்தில் மாப்பிள்ளை மேடையில் நின்னாகனும்.. மறந்து விட்டதா?''

''ஆமாம் வனஜா.. மறந்துதான் விட்டேன்.''

''பொறுமையாகப் போங்க.. இன்றைக்கு பெண்ணையும் மாப்பிள்ளையையும் நம் கூட அழைத்துப் போகா விட்டால் நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்க.. மாமா.. பெரிய மனிதர்.. அவர் வீட்டுப் பேச்சு வெளியில் வரக்கூடாது...''

மூத்த மருமகள் என்பவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற இலக்கணம் வகுத்தால் அதற்கு மிகப்

பொருத்தமாக இருப்பாள் வனஜா. எந்த நேரம் எதைப் பேச வேண்டும்.. எப்போது எதைச் செய்ய வேண்டும் என்று அவளுக்கு மிக நன்றாகத் தெரியும்.

இது அடங்கிப் போக வேண்டிய நேரம் என்பதை அவள் தன் கணவனுக்கும் கொழுந்தனுக்கும் உணர்த்தினாள். நாத்தனாருக்கு அறிவுரை சொன்னாள்.

''பாரு பிருந்தா.. ஒரே நாளில் எந்த முடிவுக்கும் நீ வந்து விடக்கூடாது.''

''சரிங்க அண்ணி.''

''மெல்ல.. மெல்லத்தான்.. அவருடைய மனது உனக்குப் புரியும்.''

''சரிங்க அண்ணி.''

''நீதான் உன் அன்பால் அவரை மாற்றிக் காட்டனும்.''

''சரிங்க அண்ணி.''

''கோபத்தில் ஓர் அடி அடித்து விட்டார். இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே.''

''சரிங்க அண்ணி.''

ஒன்றும் அறியாதவள் போல் வனஜா சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டினாள் பிருந்தா.. அவள் மனதில் முதல் அடியை வெற்றிகரமாய் எடுத்து வைத்து விட்ட திருப்தி எழுந்தது.

''வாங்க சாப்பிடப் போகலாம்.''

அவர்கள் அனைவரும் சாப்பாட்டு அறைக்குள் நுழையவும்.. சாப்பிட்டுக் கொண்டிருந்த சுதாகரன் தலை நிமிர்ந்த அவர்களைப் பார்த்தான். அவனது பார்வை நிதானமாய் எல்லோர் மீதும் படிந்து.. பிருந்தாவின் மேல்



நிலைத்தது. வனஜா ஜாடை காட்ட பிருந்தா முன்னால் வந்து சுதாகரனின் தட்டில் பரிமாற ஆரம்பித்தாள்.

''என்ன செய்கிறாய்..?'' சுதாகரன் அவளை முறைத்தான்.

''உங்களுக்குப் பரிமாறலாமென்று...''

''நான் உன்னை பரிமாறச் சொல்லிக் கேட்டேனா?''

பிருந்தா வனஜாவைப் பார்த்தாள். அவள் உடனே சமரசமாகப் பேச ஆரம்பித்தாள்.

''என்ன தம்பி இது.. கட்டிக்கிட்டவள் ஆசையாய் பரிமாற வந்தால் வேண்டாமென்று சொல்லலாமா?''

''ஆசையாய் பரிமாற வந்தாளா.. யார் இவளா..?''

பூபாலன் பல்லைக் கடிக்க.. தனபாலன் விரல் மடக்க.. கண்களாலேயே கணவனையும் கொழுந்தனையும் கட்டுப்படுத்தியவள்.. சுதாகரனிடம் தன்மையாகப் பேசினாள்.

''இவளும் சிறு பெண் தானே தம்பி. அறியாமல் ஏதாவது பேசியிருந்தால் மன்னித்து விடுங்கள்.''

''அறியாமல் பேசியதாகத் தெரியவில்லை அக்கா.. அறிந்தேதான் பேசுகிறாள்.''

சுதாகரனின் பார்வை பிருந்தாவின் மேல் பாய்ந்தது. அவள் ஒன்றும் தெரியாத குழந்தை போல் மலங்க.. மலங்க விழித்தாள்.

''அப்படி என்னதான் பேசி விட்டாள்? என்னிடம் சொல்லுங்கள் தம்பி. நான் கண்டித்து வைக்கிறேன்.''

''அவளுக்குத்தான் அறிவில்லை என்றால் நானும் அப்படியே இருக்க முடியுமா? எனக்கும் அவளுக்கும்

நடக்கும் பேச்சு வார்த்தைகளுக்கு பஞ்சாயத்து வைக்க முடியாது. அது கணவன் மனைவி விவகாரம்...''

சுதாகரன் பிருந்தாவைப் பார்த்துக் கொண்டே இதைக் கூறினான். அவன் விழிகளில்.. 'நீ நம்மிடையே நடந்த உரசலை.. மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தினாய்' என்ற குற்றச்சாட்டு இருந்தது.

அறியாதவள் போல் அவள் விழிகளை நோக்கிய பிருந்தா மனதிற்குள் நகைத்துக் கொண்டாள்.

'இது எனக்குத் தெரியாதென்றா நினைத்தாய்.. தெரியும். உன்னை விட அதிகமாய் பிரைவஸி பார்ப்பவள் நான்.. வேண்டுமென்றுதான் ஊரைக் கூட்டினேன். நான் உன்னிடம் முரண்டு பிடிப்பதை நீ வீட்டில் சொன்னால்.. அவர்கள் அதை நம்பக்கூடாது. உனக்கும் எனக்கும் இடையில் இனி ஆரம்பிக்கப் போகும் போராட்டத்திற்கு காரணகர்த்தா நான் என்று என் வீட்டினருக்குத் தெரியக்கூடாது. அது நீயாக இருக்க வேண்டும். அதற்குத்தான் இந்த முதல் நாடகத்தை ஆடினேன்.'

வனஜா தன் கணவனைப் பார்த்துக் கொண்டாள்.

''நீங்கள் சொல்வதுதான் சரி தம்பி.. உங்களிடையே நடந்தது புருசன் பெண்டாட்டி சண்டை... பூமா யதார்த்தமாக உங்கள் ரூமிற்குள் வந்து விட்டாள். பிருந்தாவின் அண்ணன்களும்.. தங்கை மேல் இருக்கும் பாசத்தில் வார்த்தைகளைக் கொட்டி விட்டார்கள்.''

''கொட்டிய வார்த்தைகளை அவர்களால் அள்ள முடியுமா? பேசிய வார்த்தைகளை திரும்பிப் பெற்றுக் கொள்ள முடியுமா?''

''முடியாதுதான். கோபத்தில் மதியிழந்து போனார்கள். நீங்கள் பெரிய மனது பண்ணி நடந்ததை மறந்து விடவேண்டும்.''



''மறந்துவிட்டு...?''

''நீங்களும்.. பிருந்தாவும் எங்களுடன் மறு வீட்டு விருந்திற்கு கிளம்பி வரவேண்டும்... நாளைக்குச் சாயங்காலம்.. உங்கள் கல்யாண ரிசப்சனை மாமா திண்டுக்கல்லில் நடத்தப் போகிறார். அதற்கு நீங்கள் இரண்டு பேரும் வந்து சபையில் நிற்க வேண்டாமா?''

''அதற்கெல்லாம் வேறு ஆளைப் பாருங்கள்.''

சுதாகரன் கோபத்துடன் எழுந்தான். வனஜா ரங்கசாமியிடம் ''என்ன சித்தப்பா இது..? நீங்களாவது சொல்லக் கூடாதா?'' என்று முறையிட்டாள்.

ரங்கசாமி... மனைவியின் முகம் பார்த்தார். அவள் ஜாடை காட்டினாள். ''சுதாகரன்.. கோபத்தை விடு.. அவங்கதான் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்கிறார்களே.. மாப்பிள்ளையும்... பெண்ணும் மறு வீட்டிற்கு வாருவார்கள் என்று உன் மாமனார் வீட்டில் காத்திருப்பார்கள். எதையும் பெரிது பண்ணாமல் கிளம்பிப் போய் விட்டு வா...''

''என்னால் முடியாதுப்பா...''

''இது சரியில்லை சுதாகர்.''

''எதுதான் இங்கே சரியாய் நடக்கிறது.''

சுதாகரன் மனைவியைப் பார்த்தவாறு கூற... பூங்கோதை துயர் கொண்டாள். 'என் மகனின் வார்த்தைக்குள் ஒளிந்திருக்கும் அர்த்தத்தை இந்தப் பெண் புரிந்து கொள்ளுமா.. தேடி வந்து கல்யாணம் பண்ணிக் கொண்டு மறுநாளே.. பஞ்சாயத்து பண்ணிக் கொண்டு நிற்கிறதே.'

தனபாலனுக்கு மீசை துடித்தது. அண்ணன் மனைவி விழியால் எச்சரிப்பதைப் பொருட்படுத்தாமல் வேகமாய் பேசினான்.

''இப்போது என்னதான் சொல்கிறீங்க மாப்பிள்ளை. மறு வீட்டு விருந்திற்கு வர முடியுமா.. முடியாதா..?''

''முடியாது..'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டு சுதாகரன் போய்விட.. வனஜா தலைமேல் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

''சொன்னால் கேட்கறீங்களா.''

''அவர் பேசியது மட்டும் நியாயமா அண்ணி..?''

''நியாய.. அநியாயத்தைப் பேச இதுவா நேரம்? குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போகிற பழக்கம் என்றைக்குத்தான் உங்களிடம் இருந்திருக்கிறது? இன்றைக்கு புதிதாய் வரப் போகிறது...''

''நீங்கள் என்னையே குற்றம் சொல்லுங்க...''

தனபாலன் சடைத்துக் கொள்ள.. பூங்கோதை பொதுவாகச் சொன்னாள்.

''யார் கூடக் குறைய பேசியிருந்தாலும்.. குடும்பத்துக்குள்ளே தானே பேசிக் கொள்கிறோமுன்னு விட்டுக் கொடுத்துப் போய் விட வேண்டும். வம்பு.. வழக்கெல்லாம் குடும்பத்துக்குள் வரக்கூடாது.''

வனஜா கெட்டிக்காரி... நிலைமையைச் சமாளிக்க சமயோசமிதமாய் பூங்கோதையின் உதவியை நாடினாள்.

''நீங்க சொல்வதுதான் சரி சித்தி... எங்க வீட்டுப் பெண்ணுக்கும் அறிவில்லை. அது கூடப் பிறந்தவர்களுக்கும் அறிவில்லை.''

''அண்ணி...'' என்று தனபாலன் ஆட்சேபக் குரல் எழுப்ப..

''நீங்க கொஞ்சம் சும்மா இருக்கீங்களா. பூமா.. உன் வீட்டுக்காரரை கொஞ்ச நேரம் வாய் அடக்கி இருக்கச் சொல்..'' என்று வனஜா கண்டிப்பான குரலில் கூறினாள்.





''ஆமாம்க்கா.. நான் சொன்னவுடனே.. 'ஆஹா..'ன்னு அவர் கேட்டுக் கொள்ளப் போகிறாராக்கும்.. அவர் கதை தான்... தெரிந்த கதையாச்சே'' என்று பூமா நொடித்துக் கொண்டாள்.

''கேட்டிங்களா சித்தி.. இவங்க மனசிலும் வில்லங்க மில்லை. வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையை மதிக்கத் தெரியாதவங்க நாங்க இல்லை. பேசத் தெரியாமல் பேசி விட்டு.. சரி பண்ணத் தெரியாமல் விழிக்கிறார்கள். நீங்கள்தான் தம்பியிடம் எடுத்துச் சொல்லி.. எங்ககூட அனுப்பி வைக்க வேண்டும்.''

வனஜா பவ்யமாய் வேண்டிக் கொள்ளவும் பூங் கோதை யோசித்தாள்.

'நேற்று... இந்நேரம் கல்யாணமான மாப்பிள்ளை... மறு வீட்டு விருந்துக்குக் கிளம்பிப் போகா விட்டால் நாலு பேர் நான்கு விதமாய் பேசுவார்கள். இது கிராமம். ஊர் வாயில் விழுகக் கூடாது...'

''நான் அவனிடம் சொல்லிக் கிளம்ப வைக்கிறேன் வனஜா.. நீங்க எல்லோரும் முதலில் சாப்பிட உட்காருங்க...''

கணவனையும்.. கொழுந்தனையும் பார்வையிலேயே அடக்கி அமர வைத்த வனஜா.

''நான் இவங்களுக்கு பரிமாறிக் கொள்கிறேன் சித்தி.. நீங்க போய் தம்பியிடம் பேசுங்க..'' என்று கூறினாள்.

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலேயே கண்ணாக இருக்கிறதே இந்தப் பெண்.. பரவாயில்லை.. சோமசுந்தரம் கொடுத்து வைத்தவர்தான்.. ம்ஹூம்.. எனக்கும் ஓர் மருமகள் வந்து வாய்த்திருக்கிறதே.'

பெருமூச்சுடன் பிருந்தாவை ஓர் பார்வை பார்த்த பூங்கோதை.

''சுதாகரனிடம் நான் பேசினால் காரியம் நடக்காதும்மா..'' என்று கூறினாள்.

''வேறு யார் பேசணும்? சித்தப்பாவா?''

''ஊஹூம். அவர் சொன்னாலும் கேட்க மாட்டான். அவன் பிடித்தால் உடும்புப் பிடிதான். பிடிவாதக்காரன்...''

''அப்போ.. என்னதான் செய்வது சித்தி.''

''சொல்கிறவங்க சொல்லனும்.''

''யாரைச் சொல்கிறீங்க.. நம்ம பிருந்தாவைச் சொல்லச் சொல்கிறீங்களா? அவர்தான் இவள் பேசினாலே முறைக்கிறாரே.''

''நான் கார்த்திகாவைச் சொல்கிறேனம்மா.. அவன் தங்கையின் பேச்சுக்குத்தான் கட்டுப்படுவான். பிருந்தாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி அவள் கேட்டுக் கொண்டதால்தான் இந்தக் கல்யாணத்திற்கே சம்மதம் சொன்னான்.''

பூங்கோதை சொன்னது அங்கிருந்த எல்லோருக்கும் புரியத்தான் செய்தது.. அவள் தொடர்ந்து சொன்னாள்.

''அதனால் கார்த்திகாவை விட்டே பேசச் சொல்கிறேன்.''

பூங்கோதை அந்த இடத்தை விட்டு அகன்றதும்.. சாப்பாட்டு மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்தவர்கள். வட்ட மேஜை மாநாடு போட்டனர்.

''பார்த்தீங்களா அக்கா.''

''பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.''

''நம்ம பிருந்தாவின் அழகிற்கு மயங்கிக் கட்டுப்படாதவர்... தங்கையின் பாசத்துக்குக் கட்டுப்படுகிறாராம்.. இது எங்கே போய் முடியுமோ.''



''எனக்கும் அந்த எண்ணம் தான் பூமா.''

''என்னடி.. நீங்க இரண்டு பேருமாய் பூடகமாய் பேசிக் கொண்டிருக்கிறீங்களே.. எங்களுக்கும்தான் கொஞ்சம் சொல்லுவது.''

''உங்களிடம் சொல்லி விட்டாலும்.. உடனே புரிந்து கொள்வீர்களாக்கும். உங்களுக்கு விளக்கம் சொல்லி ஓய இது நேரமில்லை.''

''பாருடா தனபாலா.. இவங்க ரெண்டு பேரும் கூட்டணி போட்டுக் கொண்டு நம்மை கழட்டி விடுவதை.''

''இதிலெல்லாம் இவர்கள் கெட்டிக்காரர்கள் அண்ணா.''

''ஆமாமாம். நாங்கள் கெட்டிக்காரத்தனமாய் இருந்து என்னத்தை சாதித்தோம். ஒன்றுமில்லை'' அசுவாரஸ்யமாய் கூறினாள் பூமா.

''ஒன்றுமேயில்லையா..'' என்று வினவின தனபாலனின் விழிகள் பூமாவின் கையிலிருந்த குழந்தையின் மேல் படிந்தது.

பூமாவின் முகம் சிவந்து விட்டது.

''தட்டைப் பார்த்துச் சாப்பிடுங்கள். மாப்பிள்ளையுடன் உறண்டை இழுத்து விட்டு.. இங்கே உட்கார்ந்து கதை பேசிக் கொண்டு இருக்கிறீர்களா? மாப்பிள்ளையை மறு வீட்டுக்கு அழைத்து வருகிற வழியைக் காணோம். இங்கே உட்கார்ந்து பகடி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.''

தனபாலனின் உணர்வுகள் மாறின. தமையனை கவலையுடன் நோக்கினான். பூபாலனோ மனைவியை நோக்கினான்.

''செய்வதையெல்லாம் செய்து விட்டு இங்கேயென்ன பார்வை வேண்டிக்கிடக்கு? அண்ணனும் தம்பியும்

யோசிக்காமல் வாயை விட்டுவிட வேண்டியது. அப்புறம் அறியாப் பிள்ளை போல் எங்களைப் பார்க்க வேண்டியது. இதற்கு நாங்கள் பிணையாக முடியாது. போய் மாப் பிள்ளையை கூப்பிடுகிற வழியைப் பாருங்கள்.''

''என்னடி வனஜா... இப்படிச் சொல்கிற.. உன்னை நம்பி வந்தவனை கைவிடலாமா?''

பூபாலன் வனஜாவை நோக்கி வினவிய தினுசைக் கண்ட பூமா 'களுக்'கென்று வாய் பொத்திச் சிரித்தாள். அதைக் கண்ட வனஜாவின் முகத்திலும் இளநகை அரும்பியது.

# 5

''அதுதான் கார்த்திகாவை அவளுடைய அண்ண னிடம் பேசச் சொல்வதாய் பிருந்தாவின் மாமியார் சொல்லி யிருக்காங்க இல்ல. என்ன நடக்கிறதுன்னு பார்ப்போம்... அதற்குள் அவசரப்பட்டால் எப்படி..'' இதமாகக் கூறி னாள் வனஜா.

வெளியே செல்லத் தயாராகி.. அறைக் கதவைத் திறந்த சுதாகரன்.. கார்த்திகாவைக் கண்டதும் அப்படியே நின்றான்.

''உள்ளே வாம்மா.''

''எங்கோ கிளம்பிக் கொண்டிருக்கிறாய் போல இருக்கே.''

''ம்ம்.. பேங்கில் போய் லீவைக் கேன்ஸல் செய்து விட்டு இன்றைக்கே ஜாயின் பண்ணி விடலாம்னு கிளம்பினேன்.''



கார்த்திகா தமையனையே இமைக்காமல் பார்த்தாள். சுதாகரன் தங்கையின் பார்வையை தவிர்த்து சுவரை வெறித்தான்.

''நீ செய்வது உனக்கே நல்லா இருக்கா அண்ணா?''

''ஏன்.. நான் இப்போது என்ன தவறு செய்து விட்டேன்.''

''நேற்று இந்நேரம்தான் நீ பிருந்தாவின் கழுத்தில் தாலி கட்டியிருக்கிறாய். ஒரு நாள் கூட ஆகவில்லை. அதற்குள் அவளை அடித்து அவளுடைய அண்ணன் களுடன் தகராறு பண்ணி முடித்து விட்டாய்.. இதை நான் உன்னிடமிருந்து எதிர்பார்க்கவில்லை அண்ணா.''

கார்த்திகா கோபமாய் கடிந்து கொண்டிருந்தாள்.

'நானும்தான் இதை எதிர்பார்க்கவில்லை... என்னை விரும்பித் திருமணம் பண்ணிக் கொண்டிருக்கிறாள் என்று நான் நினைத்த உன் தோழி... உன் தோழமைக்காக என்னைத் திருமணம் பண்ணிக் கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்த பின் என் மனம் படும் பாடு... அதை உன்னால் புரிந்து கொள்ள முடியாது... போதாக் குறைக்கு அந்த அமெரிக்க மாப்பிள்ளை வெரி ஹேன்ட்சம்மாம். என்னிடமே வர்ணிக்கிறாள். இதைக் கேட்டுக் கொண்டு என்னால் எப்படி சும்மா இருக்க முடியும்? நானும் மனிதன் தானே. எனக்கும் ஆசாபாசங்கள் இருக்காதா.. என்னிடமே என் மனைவி இன்னொருவனின் அழகை ரசித்துச் சொன் னால் என்னால் தாங்கிக் கொள்ள முடியுமா? என் கோபத்தைத்தான் அடக்கிக் கொள்ள முடியுமா?'

சுதாகரனின் மனம் குமுறிக் கொண்டிருந்ததை அறியா மல் கார்த்திகா.. தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தாள்.

''இன்றைக்கு மறு வீட்டு விருந்துக்கு போக மாட்டே னென்று சொல்லி விட்டாயாமே...?''

"ஆமாம்.."

"ஏன்..?"

"இது என்னம்மா கேள்வி? எனக்கும் அவளுக்கும் ஆயிரம் இருக்கும்.. அதில் எப்படி அவளுடைய அண் ணன்கள் தலையிடலாம்?"

"அப்படியென்றால்.. உனக்கும் பிருந்தாவுக்கும் இடை யில் நான் வரக்கூடாதா?"

சுதாகரன் பதறி விட்டான்.

"என்ன கார்த்திகா இப்படிக் கேட்டு விட்டாய்? உனக்கு இல்லாத உரிமையா? அவள் உன் தோழி என்பதால் தானே நான் அவள் கழுத்தில் தாலி கட்டினேன்?"

"என் வார்த்தைக்காகத்தான் தாலி கட்டினாய்.. அவள் மீது கடுகளவு கூட உனக்கு அன்பில்லை..."

"நான் அப்படிச் சொன்னேனா?"

"அதை உன் வாயால் சொன்னால்தானா?"

"நீயாக எதையும் கற்பனை பண்ணிக் கொள்ளாதே."

"நடப்பதை கவனித்த பின்தான் சொல்கிறேன்."

"அப்படி என்ன கவனித்து விட்டாய்?"

"போதும் அண்ணா.. நான் மனதில் நிறைய கற் பனைகளை வைத்திருந்தேன்... நீ எல்லாவற்றையும் ஒர் நொடியில் அழித்து விட்டாய்."

சுதாகரனின் மனதை துயரம் சூழ்ந்தது. அவனது இத யத்தை யாரோ பிசைவது போல் இருந்தது... இருந்திருந்து இவளுக்கு என்ன வயதிருக்கும்? இவனை விட ஆறு வயது இளையவள். இருபத்தி இரண்டு வயதுதான் ஆகிறது.. திருமண வாழ்வைத் தவிர்த்து நிற்கிறாள்.



தன்னைப் பற்றி எந்தக் கற்பனைகளையும் வளர்த்துக் கொள்ளாமல்.. தன் அண்ணனைப் பற்றியும்.. தோழியைப் பற்றியும் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு இருக் கிறாள். இதை என்னவென்று சொல்வது?

"கார்த்திகா.. நீ நினைப்பது போல் எதுவும் இல்லை யம்மா."

"மறு வீட்டு விருந்துக்கு நீ போகவில்லையென்றால் நம் சொந்த பந்தம் கதை கட்டிப் பேசுவார்களே. நாளைக்கு ரிசப்சன் வேறு இருக்கிறது. அதில் நீயும் பிருந்தாவும் கலந்து கொள்ளவில்லையென்றால் ரிசப்ஷனே நின்று போய்விடாதா?"

"அதைப் பற்றி அவளுடைய அண்ணன்களுக்கு இல்லை கவலை இருந்திருக்க வேண்டும்? அவன்களுக்கே கவலை இல்லாதபோது நான் ஏன் கவலைப்பட வேண் டும்?"

"உன் மாமனார் வீட்டைப் பற்றி உனக்குக் கவலை இல்லையா?"

"சும்மா இரும்மா. இவன்களே இப்படி இருக்கும்போது மாமனார் எப்படியிருப்பாரோ?"

"அண்ணா.. நீ மாப்பிள்ளை முறுக்கைக் காண்பிக் கிறாய்."

"இருக்கட்டுமே... அப்படியாவது அவன்களுக்கு புத்தி வருகிறதா என்று பார்ப்போம்."

"ஏன் அண்ணா.. நான் உன் கூடப் பிறந்த தங்கை யென்பதால் உங்கள் விசயத்தில் தலையிடலாம்.. அதே.. பிருந்தாவின் கூடப் பிறந்த அண்ணன்கள் உங்கள் விச யத்தில் தலையிட்டால் அது தப்பு.. எந்த ஊர் நியாயம் அண்ணா இது."

"நீயும் அவர்களும் ஒன்றா..?"

"ஏன் ஒன்றில்லை.. நான் உன்னுடன் பிறந்தது போல் தானே.. அவர்களும் பிருந்தா கூடப் பிறந்திருக்கிறார்கள்?"

"அதற்காக.. மரியாதையில்லாமல் பேசலாமா?"

"அது தப்புத்தான்.. ஆனால் அவர்கள் கண் எதிரிலேயே.. அவர்களின் தங்கையை அடித்தது உன்னுடைய தப்புத்தானே..."

"ஏம்மா நீ வேற... நாங்கள் எங்கள் ரூமில் பேசிக் கொண்டிருந்தோம். அவள் ஏதோ ஏடாகூடமாய் பேசி வைத்தாள். நான் கோபத்தில் லேசாக அடித்து விட்டேன். அதை அவளுடைய சின்ன அண்ணி பார்த்துவிட்டு அவங்க பாட்டுக்கு ரூமிற்குள் வந்து விட்டாங்க. போதாக் குறைக்கு.. உன் பிரண்ட் வேற அழுது ஊரைக் கூட்டி விட்டாள்."

"அப்படியா...?"

"ஆமாம்..."

"நீ சொல்வது போல இருந்தாலும்.. நீயேன் சட்டென்று கோபப்பட்டு அவளை அடித்தாய்..? பிருந்தா நல்லவள் அண்ணா."

"நான் இல்லையென்று சொன்னேனா.. ஏம்மா.. தாலி கட்டிய உரிமையில் கை நீட்டி விட்டேன். ஏன்.. நான் அவளை அடிக்கக் கூடாதா?"

"எனக்கு இதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. ஆனால் ஒன்று.. ஏன் எல்லா ஆண்களும்... பெண்களுக்கு தாலி கட்டியவுடன் அவளை அடிக்கும் உரிமையை எடுத்துக் கொள்ளுகிறார்கள்?"



சுதாகரன் பதில் சொல்லவில்லை.

"சரி அண்ணா.. நடந்ததை விட்டு விடுவோம். இனி நடக்கப் போவதைப் பார்ப்போம். நீ மறு வீட்டு விருந்துக்கு கிளம்பு."

"அது மட்டும் முடியாது..."

"அதெல்லாம் முடியும்.. நீ கிளம்பு..."

"என்னை வற்புறுத்தாதே கார்த்திகா..."

"ஏன் அண்ணா.. என்னை ஏற்கனவே எல்லோரும் ராசியில்லாதவள்ன்னு சொல்லி விட்டாங்க... இன்னும் அதிகமாக சொல்லட்டும்ன்னு நீ ஆசைப்படுகிறாயா?"

"கார்த்திகா..."

"இது நான் ஆசைப்பட்டு நடத்தி வைத்த கல்யாணம் அண்ணா.. இது தோற்றுப் போய் விட்டால்.. நான் முன்னால் நின்றதால்தான் இந்தக் கல்யாணம் தோற்று விட்டதுன்னு அர்த்தமாகி விடாதா.. கல்யாணம் என்ற வார்த்தையைச் சொல்வதற்குக் கூட நான் தகுதியில்லாதவள் என்று ஆகிவிட மாட்டேனா..."

கார்த்திகாவின் விழிகளில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் துளிகள் சிதற ஆரம்பித்தன.

சுதாகரன் மனம் கலங்கிப் போனான்.

"கார்த்திகா.. அழாதேம்மா.. ப்ளீஸ்.. நான் மறு வீட்டுக்குக் கிளம்புகிறேன்."

கார்த்திகா கண்களைத் துடைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே சென்றாள். சற்று நேரத்தில் சாப்பாட்டு அறைக்குச் சென்ற பூங்கோதை.

"பிருந்தா.. கிளம்பும்மா.. சுதாகரன் ரெடியாகி விட்டான்" என்றாள்.

உடனே அங்கிருந்தவர்களின் முகங்களில் ஒளி வந்தது. பிருந்தா மட்டும் கலக்கமாக வனஜாவின் கையைக் கிள்ளினாள்.

''என்ன பிருந்தா.''

''அண்ணி.. இவர் அங்கே வந்து ஏடா கூடமாய் பேசி சண்டை போட ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது?''

''அட.. ஆமாம்.. உன் புருசன் செய்தாலும் செய்வார்.''

''அவர் கோபத்தில் மலையேறி விட்டால் கீழே இறங்க வைப்பது மகா கஷ்டம்.''

''அதைத்தான் கண் கூடாய் பார்த்து விட்டோமே.''

''அவரை மலை இறங்க வைக்க யாராலும் முடியாது.''

''ஆமாமாம். முடியாது.''

''அதனால் கார்த்திகாவையும் கையோடு அழைத்துக் கொண்டு போய் விடுவோம்... அவளால் மட்டும்தான் அவரை மலை இறங்க வைக்க முடியும்.''

''அதுவும் சரிதான்.''

வனஜா முழு மனதாக ஆமோதித்தாள். முதல் நாளிரவு கார்த்திகாவை சுதாகரன் கண்ணிலும், பிருந்தாவின் கண்ணிலும் பட வேண்டாமென்று சொல்லியது அவளுக்கு மறந்து விட்டது.

'விலகிப்போ.' என்று சொன்னவள் வாயாலேயே அவளைக் கூட வரும்படி அழைக்க வைத்து விட்ட பிருந்தா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

சுதாகரனை மலை ஏற வைப்பதே பிருந்தாதானே.. மலையேற வைப்பவளுக்கா.. அவனை மலையிறங்க வைக்கத் தெரியாது.



ஒரு சின்னப் பார்வை... ஓர் ரகசியப் புன்னகை இவை போதுமே அவனை அடிமைப்படுத்த.

ஆனால் ஒரு நாளும் பிருந்தா அதைச் செய்ய மாட்டாள். அவனைக் கடுகளவுகூட காதல் இல்லாத பார்வையைத்தான் பார்ப்பாள். புன்னகையில்லாமல் இறுகிய முகத்துடன்தான் இருப்பாள். அவளிடமிருந்து காதல் அணுவளவு கூட அவனுக்குக் கிடைக்காது.

பிருந்தா வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள்.

''பிருந்தா.. வா.. நாம் போய் கார்த்திகாவையும் கிளம்பச் சொல்லலாம்...'' வனஜா அவள் தோள் தொட்டு அழைத்தாள்.

''நீங்களே போய் கூப்பிடுங்கள் அண்ணி.. நான் கூப்பிட்டால் அது சரியாக இருக்காது.''

''ஏன்...?''

''எப்படி அண்ணி..? என் கணவர் என் பேச்சுக்குக் கட்டுப்பட மாட்டார். நீதான் அவரைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று என் நாத்தனாரிடமே போய் நான் எப்படிச் சொல்லுவேன்...?''

''அவள் உன் பிரண்ட் இல்லையா?''

''அது நேற்றோடு.. இன்றைக்கு அவள்தானே என் நாத்தனார்.''

வனஜாவிற்கு பிருந்தா சொல்வது சரியென்றே பட்டது.

'பாவம்.. இவள்..' என்று மனதிற்குள் பரிதாபப்பட்டபடி அவள் கார்த்திகாவைத் தேடிப் போனாள்.

அவள் மட்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்திருந்தால் பிருந்தாவின் வெற்றிப் புன்னகையை கண்டிருப்பாள்.

வனஜா கார்த்திகாவின் அறைக்குப் போனபோது... அவள் ஒரு நாவலைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள்.

''கார்த்திகா...''

''வாங்கக்கா...''

''ரொம்ப தேங்க்ஸ்ம்மா.''

''எதற்குக்கா..?''

''தம்பி கோபமாய் மறு வீட்டுக்கு வரமாட்டேன்னு சொல்லி விட்டார். நீதான் அவரை சமாதானப்படுத்தி எங்களுடன் அனுப்பி வைக்கிறாய். அதற்குத்தான் தேங்க்ஸ் சொன்னேன்.''

''அது என் கடமையில்லையா அக்கா.''

''சரியாகச் சொன்னாய்.. உன் கடமை இத்தோடு முடியவில்லை. இன்னும் இருக்கிறது.''

''இன்னும் என்னக்கா.''

''நாளைக்கு சாயங்காலம் ரிசப்ஷன் நடந்து முடியும் வரை தம்பிக்கு கோபம் வராமல் இருக்க வேண்டும்.''

''நான் சொல்லி அனுப்பி வைக்கிறேன்...''

''அதற்குப் பதில் நீயும் உன் அண்ணனுடனேயே வந்தால் நாங்கள் கொஞ்சம் நிம்மதியாக இருப்போமில்லையா?''

''நான் உங்களுடன் வருவதா?''

''ஆமாம் கார்த்திகா. மாட்டேனென்று மட்டும் சொல்லி விடாதே...''

வனஜா கெஞ்சிக் கூத்தாடி கார்த்திகாவையும் கிளம்ப வைத்து விட்டாள். மகள் கிளம்பியதில் ரங்கசாமிக்கும்.. பூங்கோதைக்கும் ஆச்சர்யம்.



'எங்கேயும் போகாமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தவள் இன்றைக்குக் கிளம்புகிறாளே...'

பூங்கோதையின் கண்கள் கசிந்தன... வெளியுலகின் வெளிச்சம் படாமல் வீட்டுக்குள் புதைந்து கிடந்தவள் வெளியுலகில் கால் வைக்கப் போகிறாளா?

சுதாகரன் கிரீம் கலர் பேன்ட்டும்.. மெரூன் கலர் சட்டையும் அணிந்திருந்தான். உயரமாக.. சிகப்பாக.. கவர்ச்சியான தோற்றத்துடன் இருந்தவனை பாராதது போல் பார்த்த பிருந்தாவின் மனம் அவனது அழகில் சொக்கிப் போனது.

'என்ன ஹேண்ட்சம்மாக இருக்கிறான். இவனை விட வேறொருவனை நான் அழகு என்பேனா? அது புரியாமல் எவனோ ஒரு முகம் தெரியாதவன் மேல் பொறாமைப் பட்டுக் கொண்டு இருக்கிறானே..'

அதே நேரம்... வெந்தயக் கலர் பிரிண்டட் சில்க்கில்.. கல்யாணப் பெண்ணின் களை குறையாமல் கிறங்கடிக்கும் அழகுடன் இருந்தவளை முறைப்புடன் சுதாகரன் பார்க்க.. அவள் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

சுதாகரன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

'நான் பார்த்தால் கூட உனக்குப் பிடிக்கவில்லையா.. கார்த்திகாவிற்காக கிளம்பி வருகிறேன்.. இல்லாவிட்டால் இன்றைக்கு உன்னைப் போட்டுப் பார்த்திருப்பேண்டி.. மறு வீட்டு விருந்திற்கு நான் வர வேண்டுமா? அதுவும் உன் வீட்டிற்கு.. உன் கூடவா.. கொடுமைடி.'

கார்த்திகா பார்வையாலேயே தன் அண்ணனை புருவம் உயர்த்திக் கண்டித்தாள். சுதாகரன் தன் முகமாற்

றத்தை தங்கை அறியாத வண்ணம் முகம் திருப்பிக் கொண்டான்.

சோமசுந்தரம் வீட்டிலிருந்து இரண்டு கார்கள் வந்திருந்தன. அதில் ஒரு காரின் கதவைத் திறந்து விட்ட பூபாலன்.

''ஏறுங்க மாப்பிள்ளை...'' என்று மரியாதையுடன் கூறினான்.

''எனக்கு என் கார் இருக்கிறது...'' என்று அமர்த்தலாய் கூறிய சுதாகரன் தன் காரில் ஏறி டிரைவர் சீட்டில் அமர்ந்தான்.

''கார்த்திகா...'' என்று அவன் அழைக்கவும் வனஜாவின் முகத்தில் கவலை வந்தது.

''என்ன பூமா.. புதுப் பெண்டாட்டியை விட்டு விட்டு தங்கையைக் கூப்பிடுகிறார்..'' என்று கொழுந்தன் மனைவியின் காதுகளில் அவள் கிசுகிசுத்தாள்.

''ஆமாம்க்கா.''

கார்த்திகா அவர்கள் பேசிக் கொள்வதைக் கவனித்தபடி பிருந்தாவின் கரம் பற்றினாள். காரின் முன் பக்கக் கதவைத் திறந்து விட்டு.

''ஏறு பிருந்தா...'' என்றாள்.

பிருந்தா தன் அண்ணிகள் பார்க்கிறார்கள் என்று பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு காரில் ஏறிக் கொண்டாள். கார்த்திகா பின் பக்கக் கதவைத் திறந்து ஏறிக் கொள்ள.. சுதாகரன் காரைக் கிளப்பினான். கார் திண்டுக்கல்லை நோக்கி ஓட ஆரம்பித்தது.



# 6

''என்னடி இது மாப்பிள்ளை இவ்வளவு கோபக்காரராய் இருக்கிறார்..'' பூபாலன் கவலைப்பட்டான்.

''இனிமேல் இதைப்பேசி என்ன ஆகப் போகிறது.. காரில் ஏறுங்க போகலாம்..'' என்று சலிப்புடன் கூறினாள் வனஜா.

பூபாலனும் தனபாலனும் தத்தம் மனைவிகளோடு ஆளுக்கு ஒரு காரில் ஏறிக் கொண்டனர்.

சுதாகரன் காரை ஓட்டிக் கொண்டே பக்க வாட்டில் பார்வையை ஓட்டினான். தங்கச் சிலை போல் அமர்ந்திருந்தாள் பிருந்தா.

'தங்கச் சிலைதான்' என்று நினைத்துக் கொண்டான் அவன்... ஓர் உணர்ச்சியும் இல்லாத உலோகச் சிலை தான் இவள்.

''பிருந்தா.. நாளைக்கு ரிசப்ஷனுக்கு என்ன சேலை எடுத்திருக்கிறாய்.'' எதையாவது பேச வேண்டும் என்பதற்காக கார்த்திகா வினவினாள்.

''அப்பா.. கடையில் இருப்பதில் உயர்ந்த விலை சேலைகளைக் கொண்டு வந்து கடை பரப்பி விட்டார் கார்த்திகா. அதில் மெஜந்தா கலர் பிரிண்டட் சில்க்கை எடுத்து வைத்திருக்கிறேன்..'' என்றாள் பிருந்தா.

பின்னால் திரும்பிப் பேசும்போது.. பிருந்தாவின் கை சுதாகரனின் மேல் பட்டுவிட அவள் ஒதுங்கி அமர்ந்து கொண்டாள்.

கார்த்திகாவிற்கு அந்த விவரமெல்லாம் புரியவில்லை. சுதாகரனின் மேனி பற்றியெரிவது போல் ஆனது.

'ஏன் என் மீது கை பட்டால் என்னவாம்.. இவள் என்னைத் தொடக்கூடாதா..? இல்லை இவளை நான் தான் தொடக்கூடாதா.. ஆணவம்.. என்னை விட பணக் காரி என்ற ஆணவம்.'

''அண்ணா.. பாட்டைப் போடேன்.''

கார்த்திகா சொல்லவும் காரில் இருந்த சி.டி. பிளே யரை ஓட விட்டான் சுதாகரன்... முதல் நாள் ரங்கசாமி யும்.. பூங்கோதையும் அந்தக் காரில் ஏறி நத்தம் சென்று திரும்பியிருந்தனர். அவர்கள் கேட்ட பழைய பாடல்கள் கொண்ட சி.டி. ஒலிக்க ஆரம்பித்தது.

'நிலவைப் பார்த்து வானம் சொன்னது
என்னைத் தொடாதே...
நிழலைப் பார்த்து பூமி சொன்னது
என்னைத் தொடாதே...
நதியைப் பார்த்து நாணல் சொன்னது
என்னைத் தொடாதே...
நாளைப் பார்த்து இரவு சொன்னது
என்னைத் தொடாதே...'

சுதாகரனின் மனம் கேட்பது போல் பாடல் ஒலிக்க அவன் ஜாடையாய் மனைவியைப் பார்த்துக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

''ஏன் அண்ணா.. உனக்குப் போட வேறு பாட்டே கிடைக்கவில்லையா?''



''ஏன்ம்மா.. இந்தப் பாட்டு நல்லாத்தானே இருக்கு.''

''பாட்டு நல்லாத்தான் இருக்கு... கேட்கும் ஆண்கள் இதைக் கேட்க வேண்டும். நீ போய் இதைக் கேட்பதா.. பாட்டை மாற்று.''

சுதாகரனின் பார்வை பிருந்தாவை குற்றம் சாட்டியது. அவள் அதைக் கவனிக்காதவள் போல் கார்த்திகாவிடம் பேசிக் கொண்டே வந்தாள்.

சோமசுந்தரத்தின் வீட்டு வாசலில் பந்தல் போடப்பட் டிருந்தது. வாசலில் ஆரத்தியுடன் காத்திருந்த உறவுப் பெண்கள் ஆரத்தி எடுத்து உள்ளே அழைக்க சுதாகர னும்.. பிருந்தாவும் வீட்டுக்குள் நுழைந்தனர். உறவினர் களும்.. பக்கத்து வீட்டுக்காரர்களும் வந்து போய் கொண்டு இருந்ததால்.. புது மணமக்களை ஹாலில் அமர வைத் திருந்தனர்.

சற்று நேரம் கழித்து வந்த வனஜா

''பிருந்தா.. மாடியில் உன் ரூமிற்கு தம்பியை கூப்பிட் டுக் கொண்டு போம்மா.. ரெஸ்ட் எடுக்கட்டும்..'' என்றாள்.

''கார்த்திகாவிற்கு எந்த ரூம் அண்ணி?''

''உன் ரூமிற்கு பக்கத்தில்தானே கெஸ்ட் ரூம் இருக் கிறது.''

''அங்கே யாரும் இல்லையே...''

''சோழவந்தான் அத்தை இருந்தாங்க.. அவங்களுக்கு வேறு ரூம் கொடுத்து விட்டேன். கார்த்திகா உங்கள் பக்கத்திலேயே இருப்பாள்.''

'ஆஹா..' என்று மெச்சிக் கொண்டாள் பிருந்தா.

'என் அருமை அண்ணியே... உனக்கு வேண்டுமென் றால் கார்த்திகா எங்கள் பக்கத்திலேயே இருக்க வேண்

டும். வேண்டாமென்றால் அவள் எங்கள் கண் பார்வையி லேயே படக்கூடாதா.. இரு.. உங்களையெல்லாம் கதற வைக்கிறேன்.. கார்த்திகாவை.. என் நிழல் போல இருக்கச் சொல்லி உங்களையெல்லாம் அவளிடம் கெஞ்ச வைக் கிறேன்...'

''வா.. கார்த்திகா..''

பிருந்தாவின் வீட்டிற்கு அடிக்கடி வந்து போயிருந் தாலும் சமீப காலமாக வருவதைத் தவிர்த்திருந்த கார்த் திகா.. பிருந்தா அழைத்ததும் சங்கடம் நீங்கப் பெற்றவ ளாய் எழுந்தாள்.

''உன் அண்ணனைக் கூப்பிடு...''

''அண்ணா...''

கார்த்திகா அழைத்ததும் சுதாகரன் பதில் பேசாமல் எழுந்து அவர்கள் அருகில் வந்தான்... அவன் விழிகள் தீப்பிழம்புகளாய் மாறி பிருந்தாவை எரித்துக் கொண் டிருந்தன.

'மற்றவர்களுக்காக கூட நீ என்னிடம் பேச மாட்டாயா? அதற்கும் தூது வேண்டுமா...'

பிருந்தாவுடன் பேசியபடி படியேறிய கார்த்திகா நாசுக்காய் விலகி சுதாகரனையும் பிருந்தாவையும் ஒன்றாக படியேறவிட்டு அவள் பின்னால் ஏறினாள்.

அதைக் கவனித்துக் கொண்டிருந்த வனஜாவின் மனதில் அவளைப் பற்றி மதிப்பு உருவாகியது.

''என்னக்கா அவங்களை அப்படிப் பார்க்கறீங்க...''

''இந்தப் பெண் கார்த்திகா நல்ல டைப்பா இருக்கிறாள் பூமா... பிருந்தாவின் வீட்டுக்காரர் விலகிப் போனாலும்... இவள் அவர்கள் இருவரையும் இழுத்து வைத்துப் பழக வைக்கிறாள்.''



''நிஜம்தான் அக்கா.. என்னதான் பிரண்டா இருந்தாலும் நாத்தனார்ன்னு வந்து விட்டால் யாராக இருந்தாலும் பொறாமைப்படுவார்கள் ஆனால் இவள் அப்படியில்லை.''

''அதுவும் இவள் இப்போது இருக்கும் நிலையில் இப்படி ஓர் மனதுடன் இவள் இருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது...''

''நிறைகுடம் தளும்பாதுக்கா... கார்த்திகா நிறைகுடம். பாவம் இந்தப் பெண்ணுக்கு போய் இப்படி சோதனையா?''

''எனக்கும் அதே நினைவுதான் பூமா...''

அதன்பின் வனஜாவும் பூமாவும் போட்டி போட்டுக் கொண்டு கார்த்திகாவை உபசரித்தனர்.

''கார்த்திகா சாப்பிட்டு விட்டாயாம்மா.''

''கார்த்திகா ரெஸ்ட் எடும்மா...''

''ஏதாவது தேவையாக இருந்தால் என்னிடம் சொல்லு கார்த்திகா.''

பிருந்தா ஒரு கட்டத்தில் செல்லச் சண்டை போடும் அளவிற்கு உபசரணை தொடர்ந்தது.

''அண்ணி.. கல்யாணம் முடிந்து மறு வீட்டிற்கு வந்திருக்கும் புதுப் பெண்.. நானா.. இல்லை அவளா.. நீங்கள் என்னை விட்டு விட்டு அவளையே கவனிக்கிறீர் களே...''

''ஸ்ஸ்... சத்தமாய் பேசாதே.. அவள் காதில் விழுந்து விட்டால் வருத்தப்படுவாள்.''

'பாருடா.. இந்த அளவுக்கு மாறியாகி விட்டதா.. எப்படியோ.. கார்த்திகாவின் மனதை நீங்கள் எல்லோரும் புரிந்து கொண்டீர்களே.. அந்த மட்டிலும் சரி.'

பிருந்தா அந்த இடத்தை விட்டு அகன்று மாடிக்குச் சென்றாள். சுதாகரன் கட்டிலில் படுத்து ஏதோ ஓர் வார இதழை புரட்டிக் கொண்டிருந்தான்.

அறைக்குள் வந்த பிருந்தா.

''ஜூஸ் கொண்டு வரவா...?'' என்று வினவினாள்.

சுதாகரன் சுற்று முற்றும் பார்த்தான்.

''என்ன பார்க்கறீங்க?''

''நீ யாரிடம் கேட்கிறாய்?''

பிருந்தாவின் முகம் சிவந்தது. அவளையே பார்த்துக் கொண்டிருந்த சுதாகரன் புருவங்களை உயர்த்தினான். பதில் சொல்லாமல் அவள் வெளியே சொல்லத் திரும்ப...

''இவனுக்கெல்லாம் எதற்கு ஜூஸ் என்று முடிவே பண்ணி விட்டாயா?'' என்று கேட்டான்.

வேண்டுமென்றே அவன் வம்புக்கு இழுக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. ஒரு கணம் அவனையே அவள் இமைக்காமல் பார்க்க.. அவன் விழிகளில் மின்னல் வெட்டியது.

## 7

சுதாகரன் இயல்பாக லுங்கி.. சட்டையில் இருந்தான். அவன் முடி கலைந்திருந்தது. கவர்ச்சிகரமான தோற்றத்துடன் அவளைப் பார்த்து அவன் புருவம் உயர்த்த ஒரு கணம் பிருந்தா மயங்கி விட்டாள்.

அவனையே இமைக்காமல் பார்த்தாள்... அவன் கிறங்கிப் போனவனாக எழுந்து அமர்ந்து விட்டான்.



அவளுடன் பேச வேண்டும்.. பேச்சை வளர்க்க வேண்டும் என்ற முடிவோடு.. அவன் மேலும் வம்புக்கு இழுத்தான்.

''வாயைத் திறந்து பதில் சொல்லுடி. வாயில் உள்ள முத்துக்குள் உதிர்ந்து விடுமென்றா வாயை மூடிக் கொண்டிருக்கிறாய்?''

''ஆமாம்.. முத்துக்கள் உதிர்ந்து அதை எடுத்து நீங்கள் முத்தாரமாய் கோர்த்து விட்டால் என்ன செய்வது என்ற பயம்தான்.''

அவளும் பதில் கொடுத்தாள். அவன் உற்சாகமாகி விட்டான்.

''முத்தாரத்தைக் கோர்த்து விட்டால் நீ ஏன் பயப்பட வேண்டும்? அதை வேறு யாருடைய கழுத்திலாவது போட்டு விடுவேனோ என்ற பயமா?''

''போடுவீர்கள்.. போடுவீர்கள்.. எங்கள் கை பூப்பறித்துக் கொண்டிருக்கும்.''

''எங்கள் என்றால் யார்.. யார்..? உன் ஒருத்தி கழுத்தில் தாலி கட்டி விட்டு ஒரே நாளில் உலகை வெறுத்து சாமியாராகப் போய் விடலாமென்று இருக்கிறேன்.. இதில் இன்னும் ஆட்களை நீ கூட்டுச் சேர்த்தால் நான் என்ன கதியாவேன் என்று யோசித்துப் பார்த்தாயா?''

''உங்களுக்கு நான் ஒருத்தி கிடைத்ததே பெரிய விஷயம். இதில் இன்னும் ஆள் தேடுகிறீர்களா?''

''நீ தேட வைக்கிறாயே...''

பிருந்தா சுதாகரனைக் கூர்மையாகப் பார்த்தாள். அவள் பார்வையில் காந்தம் போல் ஈர்க்கப்பட்டவன் அவளது கை பிடித்து இழுத்தான். அவன் கை

தொடுவான் என்று எதிர்பார்க்காத பிருந்தா அவன் மடி மீது விழுந்தாள்.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாத சுதாகரன் அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான். முதல் நாளைய இரவின் ஏமாற்றம்.. காலையில் நடந்த தகராறு... இவையெல்லாம் ஒன்று சேர... வெறியுடன் அவள் இதழ் தேடிக் குனிந்தான். திமிற முயன்ற பிருந்தாவி னால் அது முடியாமல் போனது.. சுதாகரன் முன்னேறி னான் அவளது இதழோடு இதழ் சேரவும்... பிருந்தா தன்னிலை மறந்தாள்... அவன் கைகளுக்குள் அடங்கிப் போனாள்...

தன் கைகளுக்குள் இருப்பவள் தனக்கே உரிமையான தன் புது மனைவி என்ற உணர்வு... அவள் சூடியிருந்த பூவின் வாசம்... அவன் புதிதாய் உணர்ந்த இளம் பெண்ணின் வாசம்.. இவையெல்லாம் சேர... சுதாகரன்... பிருந்தாவுடன் கட்டிலில் சரிந்தான்.

எதுவென்று புரியாத இனம் விளங்கா உணர்வில் அவன் அவளில் மூழ்கி தேடுதலைத் தொடங்கியபோது பிருந்தா விழித்துக் கொண்டாள். அவனைத் தள்ளி விட்டு எழுந்தாள்.

கட்டிலில் உருண்டு புரண்டவன்.. எழுந்து நின்ற வளின் கையை இறுக்கிப் பிடித்து நிறுத்தினான்...

''எங்கே போகிறாய்..?''

''கீழே...''

''எதற்காக...?''

''இது என்ன கேள்வி.. கீழே அப்பாம்மா... அண்ணன் அண்ணி.. குழந்தைகள் எல்லோரும் இருக்கிறார்கள்..''



''ஆனால்... நான்... உன் புருசன் இங்கேதான் இருக் கிறேன்.''

பிருந்தா தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் தவித்தாள்... அவளது உடலும் மனமும்.. அவனுடன் ஒன்றி விடத் துடித்தன. ஆனால் அவளது அடி மனம் அதைத் தடுத்தது.

'வேண்டாம் பிருந்தா.. தோற்று விடாதே...' என்று எச்சரித்தது.

பிருந்தா கடுமையான முகமூடியை மாட்டிக் கொண் டாள்...

''மனிதருக்கு நரம்பில்லாத நாக்கு இருப்பதினால்... பேசிய வார்த்தைகளை மாற்றிப் பேசலாமா?'' என்று கேட்டாள்.

''யாரைப் பார்த்து நரம்பில்லாத நாக்கிருப்பவன் என்று சொன்னாய்?''

''இந்த ரூமில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?''

''ஸோ... எனக்குத்தான் அந்தப் பட்டம் கொடுத்திருக் கிறாய். உன் கழுத்தில் தாலி கட்டிய கொடுமைக்கு இன்னும் என்ன... என்ன.. பட்டம் கொடுப்பாயோ... நான் அதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டுமோ... நேரம்டி.''

''உங்கள் நேரம்தான் நன்றாக இருக்கிறதே...''

''எதை வைத்து இப்படியொரு முடிவிற்கு வந்தாய்.''

''இல்லாமலா... நேற்று ராத்திரி எனக்கு வாக்குக் கொடுத்து விட்டு இன்றைக்கு என்னைக் கையைப் பிடித்து இழுப்பீர்கள்.''

''ஆமாண்டி.. இந்த ஒரு பட்டம்தான் மீதி இருந்தது. அதையும் கொடுத்துவிடு. அடித்துப் பல்லை உடைத்து

விடுவேன் ராஸ்கல்.. யாரிடம் பேசுகிறோம் என்று யோசித்துப் பேச மாட்டாயா?''

''எல்லாம் தெரிந்துதான் பேசுகிறேன்.''

''எல்லாம் தெரிந்தவளா நீ...? நீ தெரிந்து பேசும் லட்சணம்தான் தெரிகிறதே... ஏண்டி.. நான் என்ன ரோட்டில் போகிறவள் கையைப் பிடித்தா இழுத்தேன்? தாலி கட்டின பெண்டாட்டி கையை பிடித்து இழுக்கக் கூட ஒரு மனுசனுக்கு உரிமையில்லையா?''

''ஓஹோ.. உரிமைக் குரல் எழுப்புகிறீர்களா?''

''ஆமாண்டி. இப்ப அதுக்கு என்னங்கிற?''

''இப்ப இல்ல உங்க சுயரூபம் தெரிகிறது.''

''என் சுயரூபம் தெரியாமல்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்னு ஒற்றைக் காலில் நின்றயாக்கும்?''

''ஆமாம்.. நான் ஏமாந்து விட்டேன்.''

''என்ன சொன்னாய்..? என் காது குளிர திரும்பச் சொல்லு.''

''ஏமாந்து விட்டேன். ஏமாந்து விட்டேன். போதுமா?''

''யார்.. யாரிடம் ஏமாந்தது? ஏமாந்து நிற்பது நீயா.. இல்லை நானா? ஏய்.. நீ பெரிய கட்டழகி காஞ்சனான்னு நினைத்தா உன் கையைப் பிடித்தேன். நீ என் பெண்டாட்டி.. உன் கையைப் பிடிக்காமல் வேறு யார் கையைப் பிடிப்பேன்? இயல்பான ஒன்றிற்கு தேவையில்லாமல் அலட்டிக் கொள்ளாதே.''

''பெண்டாட்டியென்றால் அவள் என்ன உங்களுக்கு அடிமையா? அவளுக்கென்று ஒரு மனம் இருக்கிறது என்று நீங்கள் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டீர்களா?''



''முதலில் புருசன் என்றால் கிள்ளுக் கீரையென்று நினைப்பதை நீ நிறுத்து.. பெண்ணுக்குத்தான் மனம் இருக்கிறதா? ஆணுக்கு இல்லையா? என் மனதில் உன்னைப் பற்றிய நினைப்பே இல்லாதபோது நீயாகத் தாண்டி என்னை விரும்பினாய்.. இப்போது ஏதேதோ கதை சொல்கிறாய்.. உன் கதையை நம்ப நான் கேனையன் கிடையாது.''

''நீங்கள்தான் கெட்டிக்காரர் ஆயிற்றே...''

''இப்படியொரு சர்டிபிகேட்டை எதற்காகக் கொடுக்கிறாய்?''

''நேற்றைக்கே நான் கொஞ்ச நாள் அவகாசம் வேண்டுமென்று கேட்டேனா இல்லையா...''

''அதைத்தானே கேட்டாய்... யாருக்கும் அமையாத பெண்டாட்டி எனக்கு அமைந்திருக்கிறாள். என்னை உயிருக்குயிராய் காதலித்து... நான்தான் வேண்டுமென்று போராடி.. என்னை மணந்திருக்கிறாள் என்று நினைத்தேன். அதை ஒரு நொடியில் உடைத்தவள்தானே நீ.. யாருக்குடி அமையும் இப்படியொரு முதலிரவு..?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது.''

''வேறு என்னதாண்டி உனக்குத் தெரியும்?''

''நான் அவகாசம் கேட்டேன். நீங்களும் சரி என்றீர்கள்.''

''வேறு வழியில்லையே...''

''இப்போது வார்த்தை மாறாதீர்கள்.''

சுதாகரன் அவளைப் பிடித்த பிடியை விடாமல் அவளையே பார்த்தான். சற்று முன் உணர்ந்த அவளின் அருகாமை தந்த இன்பம்.. அவனைத் தூண்டியது. முதன் முதலாய் தொட்ட பெண்ணின் தொடுகை... அவளின்

ஸ்பரிசம் தந்த சுகம்.. அவனுக்கு வேண்டியிருந்தது.. அவளைப் பார்க்கப் பார்க்க அவனுள் மோகத்தீ மூண்டது. அதன் வெம்மை தாங்காமல் அவன் அவள் விரல்களை அழுத்தினான்.

# 8

"ஏண்டி முரண்டு பிடிக்கிற?" அவன் குரலில் எல்லையில்லாத தாபம் வெளிப்பட்டது.

அவனது பிடிக்குள் இருந்த பிருந்தாவின் விரல்கள் நடுங்கின. அவளது விரல் நடுக்கத்தை அவனும் உணர்ந்தான்.

"ஏண்டி... என்னிடம் உனக்கென்ன பயம்? நான் உன் புருசன்டி..."

"கொஞ்ச நாட்கள் ஆகட்டும் ப்ளீஸ்..."

"அதுதான் எதற்கு?"

"ஏன் கொஞ்ச நாட்கள் பொறுத்துக் கொண்டால்தான் என்ன?"

"எதற்காக பொறுத்துக் கொள்ள வேண்டும்? கண்முன் நான் தாலி கட்டின மனைவி இருக்கும்போது எதற்காக நான் காத்திருக்க வேண்டும்?"

"ஏன் காத்திருக்கக் கூடாது."

"போடி முட்டாள்... நீ கண்ணதாசன் பாட்டு ஒன்றைக் கேட்டிருக்கிறாயா... கேட்காவிட்டால் இப்போது கேள்... பாடுகிறேன்."



சுதாகரன் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டியவாறு பாடினான்.

"அங்கே மாலை மயக்கம் யாருக்காக?
இங்கே மயங்கும் இரண்டு பேருக்காக...
இது நாளை வரும் என்று காத்திருந்தால்
ஒரு நாள் அல்லவோ வீணாகும்..."

பாடி முடித்தவன்... "புரிகிறதா?" என்று கேட்டுக் கண் சிமிட்டினான்.

பிருந்தாவுக்குப் புரிந்தது. அவகாசம் கொடுத்தால்.. கொடுக்கப்படும் அத்தனை நாட்களும் வீணாகும் என்கிறான். அவனின் அந்தக் குறும்பு.. பிருந்தாவிற்கு மிகவும் பிடித்திருந்தது. ஏன்..? அவனையே அவளுக்கு மிகவும் பிடிக்கும்தானே...

'எனக்கு மட்டும் கடமை இல்லாமல் இருந்திருந்தால் நேற்று ஒரு நாள் வீணாகக் கழிய நான் விட்டிருப்பேனா...'

சொல்ல நினைப்பவைகளை சொல்ல முடிந்தால் வாழ்க்கை என்பது ஏது? அதனால் சொல்ல வந்ததை தனக்குள் விழுங்கிக் கொண்டாள் பிருந்தா.

"எனக்கு ஒன்றும் புரியவில்லை..." உளமார பொய் சொன்னாள்.

"உண்மையிலேயே புரியவில்லையா...?" அவன் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"உண்மையாகவும்.. பொய்யாகவும்.. இரு வகைப்பட நீங்கள் பேசலாம் எனக்கு அது தெரியாது..." பிருந்தாவின் முகம் கல்லைப் போல் கடினமாக இருந்தது.

சுதாகரனின் முகம் சுருங்கி விட்டது. அவளின் கையை விட்டு விட்டான்.. அடிக்குரலில் உருமினான்.

"போடி... என் கண் முன்னால் நிற்காதே... போய் விடு."

பிருந்தாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது. தன்னை சமாளித்துக் கொண்டவளாய் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

"சே..." சுதாகரன் கையிலிருந்த புத்தகத்தைத் தூக்கி எறிந்தான். அது தரையில் போய் விழுந்தது.

அறைக்கதவு திறந்தது. தரையில் விழுந்த புத்தகத்தை குனிந்து எடுத்தாள் கார்த்திகா... தமையனை நிமிர்ந்து பார்த்தாள். அவளது அமைதியான பார்வையில் அலையடித்த உணர்வுகள் அடங்கிப்போய் சமனமாகிவிட,

"என்னம்மா..." என்றவாறு எழுந்து அமர்ந்தான் சுதாகரன்.

"உனக்கு ஜூஸ் கொண்டு வந்தேன் அண்ணா."

கார்த்திகா ஜூஸ் தம்ளரை சுதாகரனின் கையில் கொடுத்தாள்... பிருந்தா கொடுத்து விட்டிருக்கிறாள் என்பதை யூகித்துக் கொண்ட சுதாகரன்.. தங்கையிடம் மறுத்துப் பேசாமல் வாங்கிக் குடிக்க ஆரம்பித்தான்.

"அண்ணா.. நான் சொல்வதற்கு கோபித்துக் கொள்ளக் கூடாது..."

"உன்னிடம் கோபம் கொள்ள என்னால் முடியுமா? சொல்லு.."

"நீ பிருந்தாவிடம் இவ்வளவு கோபம் காட்டக்கூடாது..."

"நான் அவளைக் கோபித்தேன் என்று அவள் உன்னிடம் சொன்னாளா?"

"சொல்லவில்லை.. அழுதாள்..."



"எதற்காம்...?"

"உன் அண்ணனுக்கு என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை கார்த்திகான்னு சொல்லித் தேம்பித் தேம்பி அழுகிறாள். அவளை சமாதானப்படுத்துவதற்குள் போதும்.. போதும் என்றாகி விட்டது..."

சுதாகரனுக்கு சிரிப்பதா.. இல்லை அழுவதா என்று தெரியவில்லை. அவனுக்கு அவளைப் பிடிக்கவில்லையா? அவள் அதைச் சொல்லி அழுக வேறு செய்தாளா... எந்தச் சுவரில் போய் முட்டிக் கொள்வது என்று தெரியாமல் குழம்பிப் போனான் சுதாகரன். அவனது நிலைமை தெரியாமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள் கார்த்திகா...

"அண்ணா.. நீ எனக்காக பிருந்தாவைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கலாம். அதற்காக அவளை வெறுத்து ஒதுக்கலாமா?"

'இது வேறா...?'

"அவளே பாவம்... உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று அவளைப் பெற்றவர்களிடம் போராடி உன்னை மணம் செய்திருக்கிறாள்... அவள் மனம் ஏமாற்றமடையலாமா?"

'நானா அவளை ஏமாற்றுகிறேன்?'

"உன்னை விரும்பிக் கல்யாணம் பண்ணிக் கொண்டவள் அண்ணா அவள்."

'நான் அதைச் சொன்னால்.. அவள் அதை ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாளே..'

"பெண் பாவம் பொல்லாதது அண்ணா."

'ஆண் பாவம் மட்டும் நல்லதா?'

''அவள் உன்னைத்தானே நம்பி உன்னுடன் வாழ வந்திருக்கிறாள்?''

'எதற்கு வந்திருக்கிறாள்ன்னு தான் தெரியவில்லையேம்மா.'

''நீ கோபித்துக் கொண்டால் அவள் எங்கே போவாள்?''

'அதுதான் பொசுக்கு பொசுக்குன்னு கீழே போய் விடுகிறாளே...'

''அவள் உன் மேல் உயிரையே வைத்திருக்கிறாள்...''

'இதை என்னை நம்பச் சொல்கிறாயா?'

''அமெரிக்க மாப்பிள்ளையை வேண்டாமென்று சொல்லி விட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவள் அவள்.''

'இந்தப் பெருமையைத்தான் அடிக்கு ஆயிரம் தடவை சொல்லுகிறாளே.. நீ வேறு சொல்ல வேண்டுமா?'

''அமெரிக்க மாப்பிள்ளையைப் பற்றிய பேச்சையே எடுக்கக் கூடாதுன்னு அவளுடைய அப்பாவிற்கு கண்டிசன் போட்டு விட்டாள்.''

'இவள் மட்டும் அவன் பெருமையை என்னிடம் பேசுவாள்.'

''அதனால்தான் சொல்கிறேன். அவள் மனம் நோகப் பேசாதே.''

'நான் பேசுவதை நிறுத்த வேண்டும் என்றுதானே அவள் இத்தனை டிராமா போடுகிறாள்.'

''அவளை நல்ல முறையில் வைத்துக்கொள்...''

'எந்த முறையில் என்பதையும் நீயே சொல்லி விடம்மா...'



''என்ன அண்ணா.. நான் இவ்வளவு சொல்கிறேன்.. நீ வாயே திறக்காமல் மௌனச் சாமியார் போல அமர்ந்திருக்கிறாய்...''

கார்த்திகா கடிந்து கொள்ள.. அது நேரம் வரை அறைக்கு வெளியே மறைவாய் நின்று கொண்டிருந்த பிருந்தா தலையை உள்ளே நீட்டினாள்.

''கார்த்திகா.. உன் அண்ணனை என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். ஆனால் சாமியார்ன்னு மட்டும் சொல்லிவிடாதே. அவர் சாமியாராகி விட்டால் என் கதி என்ன ஆவது?''

சுதாகரன் அனல் விழிகளால் அவளைச் சுட்டெரித்தான்.

''சாமியாராக்கத்தானேடி.. இந்தப் பாடுபடுகிறாய்.. அதற்குள் எதற்கு இந்த சிருங்கார வேசம் போடுகிறாய்...''

''இத்தனை நேரம் நான் பேசியதை கேட்டு விட்டு அவளை ஏன் இந்த முறை முறைக்கிறாய்.. நீ திருந்தவே மாட்டாயா?''

கார்த்திகா சுதாகரனை கோபித்துக் கொண்டாள். ஒன்றும் அறியாத குழந்தை போல் பிருந்தா சேலை முந்தானையை எடுத்து வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அதைக் கண்ட கார்த்திகா. அர்ச்சனையை அதிகப்படுத்தினாள்.

## 9

சுதாகரன் இவ்வளவு கல் மனம் கொண்டவனென்று கார்த்திகா நினைத்துக் கூடப் பார்க்கவில்லையாம்.

எப்படி இப்படி மாறினான் என்று அவளுக்கே தெரியவில்லையாம். தோழிக்கு நல்லது செய்வதாய் நினைத்து அவள் வாழ்வை கேள்விக் குறியாக்கி விட்டாளாம். தன் அண்ணன் தங்கக் கம்பி என்று நினைத்துக் கொண்டிருந்தது பொய்யாகிப் போயிற்றாம்.

பொறுக்க முடியாத சுதாகரன் நேரடித் தாக்குதலில் இறங்கி விட்டான்.

''சரிம்மா.. நான் பித்தளைக் கம்பியாகவே இருந்து விட்டுப் போகிறேன். உன் தோழி.. இந்த மாதர் குல மாணிக்கம்.. மங்கையர் குல திலகம்... மாதரசி... இன்னும் என்னவெல்லாம் சொன்னாள். அதை முதலில் சொல்லு.''

''சொன்னால் மட்டும் கேட்டுக் கொள்வாயாக்கும்.''

''கேட்டுக் கொள்கிறேனம்மா.. உனக்காக கேட்டுக் கொள்கிறேன். நீ அவளையும் கூப்பிடு. இப்போது பேச்சு வார்த்தை நடத்தி விடலாம்.''

பிருந்தா அவசரமாய் அறையை விட்டு நழுவப் பார்க்க... கார்த்திகா அவளை அழைத்தாள்.

''பிருந்தா.. இங்கே வாடி...''

''கீழே அண்ணி கூப்பிடுவது போல் இருக்கிறது கார்த்திகா.''

''கூப்பிட்டால் கூப்பிடட்டும்.. நீ முதலில் இந்தப் பஞ்சாயத்துக்கு வா.''

''வேண்டாம் கார்த்திகா.. என் முன்னால் அவரைக் குற்றவாளி போல் விசாரிக்காதே. என்னால் அதைப் பார்க்க முடியாது...''



'என்னே.. ஓர்.. மாய்மாலம்..' சுதாகரன் பல்லைக் கடித்தான்.

''அவள்தான் வேண்டாம்ன்னு சொல்கிறாளே.. விட்டு விடு கார்த்திகா...''

வேண்டுமென்றே கார்த்திகாவிடம் இப்படிக் கூறினான் அவன்... சுதாகரன் தப்பிக்க முயல்வதாக எண்ணி கார்த்திகா கோபம் கொண்டாள்.

''ஏன் தப்பிக்கப் பார்க்கிறாய்?''

''இல்லை.. உன் தோழியை அவளுடைய அண்ணி.. கூப்பிடுகிறாளே..''

''நீ அவள் கழுத்தில் தாலிகட்டி விட்ட தைரியத்தில் பேசுகிறாயா? நீ என்ன செய்தாலும் அவள் பொறுத்துக் கொள்வாள் என்ற எண்ணம் உனக்கு. அதுதான் என்னிடம் நடக்காது.''

''ம்ஹூம்.. உன்னிடமிருந்து தப்ப முடியாது போல இருக்குதே...'' பொய்யாய் சலித்தபடி பிருந்தாவின் முகத்தைப் பார்த்தான் அவன்.

வலையில் மாட்டிக் கொண்ட மான் குட்டி போல் மிரள.. மிரள விழித்தாள் அவள். அவனுக்கு குஷி உண்டாகி விட்டது.

'வாடி.. வா.. என்னையா சீண்டிப் பார்க்கிறாய்.'

அவர்களது நிலையை உணராமல் கார்த்திகா தன் சமரசத்தைத் தொடர்ந்தாள். சுதாகரன் பிருந்தாவுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தான்.

''இதைத்தான்.. தான் பறித்த குழிக்குள்.. தானே மாட்டிக் கொள்வது என்பது.''

''அவளை என்னண்ணா மிரட்டுகிறாய்?''

''ஒன்றுமில்லையம்மா.''

''ஒன்றுமில்லையா. உன்னை நம்ப முடியாது. பிருந்தா.. அண்ணா உன்னிடம் என்ன சொன்னது?''

''ஒன்றுமில்லை கார்த்திகா...''

''பார்த்தாயா.. உன்னை விட்டுக் கொடுக்காமல் அவள் பேசுவதைக் கேட்டாயா.. இப்போதாவது இவள் அருமை உனக்குப் புரிகின்றதா?''

''புரிகிறது கார்த்திகா புரிகிறது.''

''இவளுக்கு என்ன குறை?''

''ஒரு குறையும் இல்லை...''

''இவளை நன்றாக வைத்துக் கொள்ளக் கூடாதா?''

''ம்ம்.. நன்றாக வைத்துக் கொள்கிறேன். போதுமா..'' கார்த்திகா அறியாமல் பிருந்தாவைப் பார்த்து கண் சிமிட்டினான் அவன்.

''கொஞ்சம் தன்மையாகப் பேசு அண்ணா...''

''கொஞ்சும் தன்மையாகவே பேசி விடுகிறேன்.''

''தொட்டதெற்கெல்லாம் கோபித்துக் கொள்ளாதே...''

''தொட்டதெற்கெல்லாம் கோபித்தது நானில்லைம்மா.. அவள்தான். உண்டா இல்லையா.. என்று நீயே கேட்டுக் கொள்..'' அவன் பிருந்தாவைப் பார்த்தான்.

''அவள் அப்படியெல்லாம் செய்திருக்க மாட்டாள்.''

''இது என்னம்மா நியாயம்..? நாட்டாண்மை வேலை பார்த்தால் ஒழுங்காகப் பார்க்க வேண்டும். நீ என் முன்னாலேயே அவளிடம் கேள்..''

''என்ன பிருந்தா.. அண்ணன் சொல்வது உண்மையா?''

பிருந்தா கையைப் பிசைந்தாள். என்னவென்று சொல்வது.. ஆமாம்.. உன் அண்ணன் தொட்டான். நான் கோபித்துக் கொண்டேன் என்பதா?

''கார்த்திகா.. வா.. நாம் கீழே போகலாம்.''

''நீ கீழே போவதிலேயே குறியாக இரு...''

''இதைத்தான் நானும் சொன்னேன். அவள் உன்னிடம் வந்து அழுகிறாள். நீயும் சின்னக் கவுண்டர் போல துப்பட்டாவை உதறி சுடிதாரின் மேலே போட்டுக் கொண்டு விசாரிக்க வந்து விட்டாய்.'

''பொறு அண்ணா.. இந்தக் கேலி கிண்டலுக்கெல் லாம் மயங்குபவள் பிருந்தா இல்லை.''

''அதுதான் எனக்குத் தெரியுமே.. உனக்குத் தெரி யாமல் போனதுதான் ஆச்சர்யம்.''

''வரவர.. நீ மூடு மந்திரமாகவே பேசுகிறாய்.. வெளிப் படையாய் பேச மாட்டாயா?'' கார்த்திகா கோபத்துடன் கேட்டாள்.

''என்ன பிருந்தா.. நான் வெளிப்படையாய் பேசி விடவா.''

''கார்த்திகா.. என்ன இது.. புருசன் பெண்டாட்டிக்குள் ஆயிரம் இருக்கும். அதில்... நீயேன் வீணாகத் தலை யிடுகிறாய்?''

''என்னடி இது.. நான் பாட்டுக்கு ரூமில் இருந்தேன். என்னிடம் வந்து அழுதவள் நீ.. இப்போது இப்படிச் சொல் கிறாய்?''

''நேரத்துக்கு ஒரு பேச்சுப் பேச உன் தோழிக்கு சொல்லியா தரவேண்டும்?''

''இப்போது நீ எதற்கு என்ன சாக்குக் கிடைத்ததுன்னு அவளைத் திட்டிப் பார்க்கிறாய்?''

''அவள் மேல் அவ்வளவு ஆசை.''

சுதாகரனின் கண்கள் பிருந்தாவை விழுங்கின... அவ உதட்டைக் கடித்துக் கொண்டு தலையை குனிந்து கொண்டாள்.

''ஓகே.. கார்த்திகா.. இப்போது என்ன.. நான் பிரு தாவைத் திட்டக் கூடாது. அவ்வளவுதானே.. இனி திட்ட மாட்டேன். பட் ஒன் கண்டிசன்.''

''என்ன அண்ணா?''

''நான் திட்டுவது போல் அவளும் நடந்து கொள்ள கூடாது...''

''அவளே உன்னை விரும்பிக் கல்யாணம் பண்ணி கொண்டவள்.''

''திரும்பத் திரும்ப இதையே சொல்லாதேம்மா. எரிச்சலாய் இருக்கு.''

''நீ ஏன் எரிச்சல் படுகிறாய். அவள் உன்னிடம் திட் வாங்குவது போல் நடந்து கொள்ள மாட்டாள். சரிதானே பிருந்தா.''

அன்று இரவு... அவனருகில் படுத்த பிருந்தாவின பக்கம் நகர்ந்து படுத்து அணைத்துக் கொண்டான் சுதா கரன்... அவள் விலகினாள். அவன் விலக விடவில்லை காலையில் நடந்தது.. அவனது நெஞ்சிலிருக்க.. அவ அவளது காதோரம் முத்தமிட்டான்.

''பேச்சு மாறாதீர்கள்...''



''நான் என்ன பேச்சு மாறினேன்.''

''நான் திட்டுவது போல் நடந்து கொள்ள மாட்டேன் என்றாயே...''

''நீங்கள் திட்டுவது போல் எப்போது நடந்து கொண்டேன்.''

''இப்போது விலகிப் போனால் நான் திட்ட மாட்டேனா.''

அவனது ஜெகஜாலப் பேச்சு அவளுக்குச் சிரிப்பை வரவழைத்தது. அரிசிப் பற்கள் தெரிய சிரித்தவளிடம் நெருங்கினான் அவன். அவளை ஆக்டோபஸ் போலச் சுற்றி வளைத்தன அவன் கரங்கள்... ஒரு கணம் அடங்கி.. அவனது முகத்தோடு முகம் வைத்து விழி மூடியவள்.. மறுகணம் அவனை விட்டு விலகி எழுந்து நின்றாள். அவன் உல்லாசமாய் அவள் கரம் பற்ற உதறினாள்.

## 10

சுதாகரனின் கையை நெருப்புப் பட்டவள் போல அவள் உதறிவிட அவன் உன்மத்தம் பிடித்தவன் போலா னான். கோபம் தலைக்கேற அவளை முறைத்தான்.

''உனக்கு என்ன பைத்தியமாடி பிடித்திருக்கு?''

''உங்கள்கூட குடும்பம் நடத்தினால் கட்டாயம் அது பிடித்து விடும்...''

''என்னடி சொன்னாய்...?''

அவன் அவள் கன்னத்தில் அடித்து விட்டான். காலை யில் ஓர் அறை... இரவினில் ஓர் அறை என்று வாங்

கியும்.. கண்ணீர் சிந்திக் கொண்டு கலங்காமல் நின்றாள் அவள்.

''ஏண்டி.. ஏண்டி.. என்னை மிருகமாக்குகிறாய்.''

''இதற்கு முன் மனிதனாக இருந்ததாக எண்ணமா?''

''பிருந்தா...''

''பேசாதீர்கள்.''

அவள் வெறும் தரையில் தலையணையை போட்டுக் கொண்டு படுத்து விட்டாள். அவன் மனதில் சற்று முன் புகுந்திருந்த உல்லாசம் பறந்து விட்டது. அவன் உடலில் இருந்த இன்ப உணர்வுகள் மறைந்திருந்தன. பேசாமல் படுத்துத் தூங்கி விட்டான்.

அவனுக்குத் தெரியாதது ஒன்று உண்டு. பிருந்தா விடிய விடிய சப்தமில்லாமல் அழுது கொண்டிருந்தாள்.

காலையில் அவள் காபியோடு வந்தபோது பேசாமல் வாங்கிக் கொண்டான். அவள் பாத்ரூமில் ஹீட்டரை போட்டு விட்டு டவலை எடுத்துக் கொடுக்க.. அமைதியாய் குளிக்கப் போய் விட்டான். காலையில் டிபன் சாப்பிடும்போதும்.. மதிய உணவின்போதும் வாயே திறக்கவில்லை.

கார்த்திகா ஆச்சர்யப்பட்டுப் போனாள்.

''வெரிகுட் அண்ணா.. என் பேச்சிற்கு இவ்வளவு மதிப்பு கொடுத்து அமைதியாகி விட்டாயே...''

''உன் பேச்சுக்கு மட்டுமில்லை அம்மா.''

பிருந்தா மௌனமாக மனதிற்குள் அழுதாள். அவள் தானே அவனை 'பேசாதீர்கள்' என்று சொன்னாள்? அவன் அவளிடம் பேசுவதை நிறுத்தி விட்டான். அவள் மனம் வலித்தது. ஆழ் மனமோ ஆறுதல் சொன்னது.



'பொறு பிருந்தா.. தேன் எடுக்க முயன்று கொண்டிருக்கிறாய்... தேனீ கொட்டுவதை நினைத்துக் கவலைப்படக் கூடாது.'

பிருந்தா சாயங்கால ரிசப்ஷன் போது சுதாகரன் அணிய வேண்டிய கருநீல கோட்.. சூட்டைக் கொண்டு வந்து கார்த்திகாவிடம் கொடுத்தாள்.

''உன் அண்ணனுக்கு பிடித்திருக்கிறதான்னு தெரியவில்லை கார்த்திகா.''

''உனக்குப் பிடித்திருக்கிறதா அண்ணா?''

''பிடித்திருக்கிறது.''

''பார்க்காமல் சொல்கிறாயே...''

சுதாகரன் தங்கையைப் பார்த்து மென்மையாகச் சிரித்தான்...

''உன் தோழியைக் கூட நான் கல்யாணத்திற்கு முன்னால் சரியாகப் பார்த்தது இல்லை கார்த்திகா. உனக்காகவும்.. அவள் என்னை விரும்புகிறாள் என்பதற்காகவும் தான் இந்தக் கல்யாணத்திற்கே சம்மதித்தேன்.''

''அதை ஏன் இப்போது சொல்கிறாய்?''

''இல்லை.. ஒரு பாட்டு உண்டு. உனக்குத் தெரியுமோ என்னவோ..

'சிரிக்கச் சொன்னால் சிரிப்பேன்...

பார்க்கச் சொன்னால் பார்ப்பேன்...

எனக்கென ஓர் உணர்ச்சியில்லை தோழி...' என்று என் கதையும் இது போல் தானே ஆகிவிட்டது?''

''அண்ணா..''

''உனக்கும் உன் தோழிக்கும் நான் விளையாட்டுப் பொம்மை... அப்படித்தானே நீங்கள் இரண்டு பேரும்

என்னை வைத்து விளையாடிக் கொண்டு இருக்கிறீர்கள்?''

''அண்ணா.. இப்படியெல்லாம் பேசாதே.''

''உனக்கு நான் அண்ணன். நீ சொன்னதைக் கேட்க வேண்டும். அவளுக்கு நான் புருசன். அவள் சொல்வதையும் கேட்க வேண்டும். ஆக மொத்தம் நீங்கள் இருவரும் நான் சொல்வதைக் கேட்க மாட்டீர்கள்.''

''நீ சொல்லி நான் கேட்கவில்லையா?''

''எதைக் கேட்டாய்? இரண்டு சொட்டு கண்ணீர் விட்டு இந்தக் கல்யாணத்தால் என்னைக் கட்டிப் போட்டு விட்டாயே.''

கார்த்திகா துணுக்குற்றாள். சுதாகரன் இப்படி வெளிப்படையாய் பேசி.. இப்போதுதான் அவள் கேட்கிறாள்.

'பிருந்தா சொல்வது உண்மைதானோ.. சுதாகரனுக்கு பிருந்தாவைப் பிடிக்கவில்லையோ..'

கார்த்திகா மனம் துடித்துப் போனாள். தோழியின் காதலுக்காக... அவள் இருவரின் வாழ்வையும் பாழாக்கி விட்டாளோ...

''என்னம்மா.. கார்த்திகா.. ஏன் கண்கலங்கி நிற்கிற?'' வனஜா கேட்டாள்.

''ஒன்றுமில்லைக்கா... பிருந்தாவை நினைத்துக் கொண்டு இருந்தேன்'' கார்த்திகா துன்பத்துடன் பதில் கூறினாள்.

''இனி நீ நினைத்தோ.. நான் நினைத்தோ.. என்ன ஆகப் போகிறதம்மா. உன் அண்ணன் நினைக்க வேண்டுமே...''



''அதுதான்க்கா எனக்கும் கவலையாக இருக்கிறது...''

''நீயும்.. நானும் கவலைப்பட்டு ஆகப் போவது ஒன்றுமில்லை கார்த்திகா.. பிருந்தாதானே உன் அண்ணன் மீது ஆசைப்பட்டாள்..?''

''அவர் உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத்தானே தாலி கட்டினார். அதனால் இவள்தான் பொறுமையாக அவர் மனம் திரும்பும் வரை காத்திருக்க வேண்டும்.''

''நான் நல்லது நினைத்துத்தான் இதற்கு அண்ணனை சம்மதிக்க வைத்தேன் அக்கா.. இப்படி நடக்கும்ன்னு நினைத்தும் பார்க்கவில்லை.''

''இதற்குப் போய் எதற்காக வருத்தப்படுகிறாய்? அந்த மட்டிலும் உன்னைப் போன்ற ஒரு நாத்தனார் அவளுக்குக் கிடைத்திருக்கிறாளே.. இல்லாவிட்டால் அவள் வாழ்க்கை என்ன ஆவது?''

பூபாலன் கை அசைக்கவும் வனஜா அவனிடம் போய் விட்டாள். அவர்கள் இயல்பாக பேசிக் கொள்வதையும்.. சிரித்துக் கொள்வதையும் பார்த்த கார்த்திகா.. என்று தன் அண்ணனும் பிருந்தாவும் இவ்வாறு அன்யோன்யமாவார்கள் என்று கலங்கினாள்.

பிருந்தா கார்த்திகாவைத் தேடி வந்தாள். அவள் கையில் கடல் நீல பிரிண்டட் சில்க் சேலை இருந்தது.

''கார்த்திகா.. இந்தச் சேலை உனக்கு.. உடுத்திக் கொள்.''

''எனக்கு எதற்கடி புதுச் சேலை?''

''நீதானே என் நாத்தனார்..?''

''அடிப்பாவி.. அதிலென்ன சந்தேகம்?''

''மறு வீட்டிற்கு வரும்போது.. நாத்தனார் முறையில் இருப்பவர்களுக்கு சேலை எடுத்துக் கொடுக்க வேண்டுமாம்.''

"ஓஹோ.. பிளவுஸ்..?"

"அதெல்லாம் தைத்து ரெடியாக இருக்கிறது."

பிருந்தா மெஜந்தா கலர் பிரிண்டட் சில்க்கை உடுத்தி முடித்தவுடன் அழகு நிலையத்திலிருந்து பெண்கள் வந்து அவள் கூந்தலை அழகாகக் கொண்டையிட்டு.. அதில் வெள்ளை முத்துக்களை செருகி வைத்தனர். காதுகளில் வைரக் கம்மல்கள். கழுத்தில் வைர அட்டிகை என்று அழகாகத் தயாராகி விட்டவளைப் பார்த்து கண்கள் விரிய,

"வாவ்..." என்று ரசித்தாள் கார்த்திகா.

அப்போது "உள்ளே வரலாமா...?" என்று கேட்டபடி வந்த உயரமான மாநிறத்துடன் கம்பீரமாய் இருந்த அந்த இளைஞனின் விழிகள் கார்த்திகாவை ரசித்தன. அவன் விழிகள் 'வாவ்...' என்று சொல்லாமல் சொல்லின. அவனது பார்வையில் கார்த்திகா தர்ம சங்கடமுற்றாள்.

பிருந்தாவோ அவனைக் கண்டதும் துள்ளிக் குதித்தாள்.

"ஹை... கபிலன் அண்ணா... வந்து விட்டீர்களா?"

## 11

அந்தக் கபிலன் தங்கையை விட்டு விட்டு கார்த்திகாவை பார்த்துக் கொண்டிருந்தான்.

கடல் நீலநிற பிரிண்டட் சில்க்கில் தேவதை போல் நின்று கொண்டிருந்தாள் கார்த்திகா. தலையைத் தளர பின்னலிட்டு.. அதில் கொஞ்சமாய் மலர்ச் சரம் வைத்



திருந்தாள். அவள் விழிகளை மூடித் திறக்கும் போது அவளது விழிகள் மீது கவியும் இமை.. குடை போல் விரிந்திருக்க.. அவள் இமைகளை படபடவென்று அடித்துக் கொண்டது பட்டாம்பூச்சிகள் பறப்பதைப் போலவே இருந்தது.

"என்ன அண்ணா இப்படிப் பார்க்கறீங்க?"

"தேவதைகள்.. மண்ணுலகிலும் இருப்பார்களான்னு பார்க்கிறேன்."

அவனது வெளிப்படையான புகழ்ச்சியில் முகம் சிவந்து போனாள் கார்த்திகா.. அவள் மனதில் சன்னமாய் எரிச்சல் உருவாகியது.

'யார் இவன்.. இங்கிதமில்லாமல் பேசிக் கொண்டு...' அவள் மனதிலிருப்பதை அறிந்தவள் போல.

"இதுதான் என் கபிலன் அண்ணன். என் பெரியப்பாவின் மகன்."

"ஓஹோ."

"நான் உன்னிடம் அடிக்கடி இவரைப் பற்றி சொல்லியிருக்கிறேன்."

"ம்ம்.. நினைவில் இருக்கிறது."

'இவன்தான்... பிருந்தா.. வாய் ஓயாமல் பேசும் அவளின் ஒன்று விட்ட அண்ணனா.. பெயரைப் பாரேன்.. கபிலனாமே.. புலவரின் பெயர்.. அதனால்தான் கவிதை போல் பிதற்றுகிறானோ..'

"வேலூரில் சொந்தமாக பிஸினெஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்."

"அப்படியா?"

''என் பெரியப்பாவிற்கு அண்ணன் மட்டும்தான். ஒரே பையன்.''

''ஓஹோ.''

''அப்புறம்..'' என்று பிருந்தா ஆரம்பிக்க கபிலன் தடுத்து நிறுத்தினான்.

''போதும் பிருந்தா.. உன் பிரண்டிற்கு பாவம்.. 'அப்படியா.. ஓஹோ'ங்கிற இரண்டு வார்த்தைகளை மாறி மாறிப் பேசி வாய் வலித்துவிடப் போகிறது. பாவம் இவங்களுக்கு வேறு வார்த்தைகளே பேசத் தெரியாதா..?''

கார்த்திகா மீண்டும் முகம் சிவந்தாள்.

'இவன் என்ன ரோட்டோர ரோமியோ போலவே பேசுகிறானே.'

''நீங்க வேற.. இவள் பேச ஆரம்பித்தால்... நிறுத்த மாட்டாள். வாய் வலிக்கப் பேசுவாள். நீங்கள் புதியவர் என்பதால் தடுமாறுகிறாள்.''

''புதுமுகம்ன்னு நினைக்கிறாங்களா?''

''ஆமாம்...''

''புதுமுகம் அறிமுகமாகி விட்டால் பழைய முகமாகி விடப் போகிறது.''

''மெதுவாய் இவளிடம் அறிமுகம் ஆகலாம். முதலில் என் ஹஸ்பெண்டிடம் அறிமுகம் ஆகுங்கள். என் கல்யாணத்திற்கு வரவில்லைங்கிறதுக்குக் காரணத்தையும் சொல்லுங்கள்.''

''அவ ^_ம் சொல்லணுமா.. இல்லை உன்னிடம் சொல்லணுமா?''

''முதலில் என்னிடம்.. பிறகு அவரிடம்.''



''இருவர் மனமும் ஒரு மனமாய் திருமணமாகி விட்டதில்லையா? அதனால் உங்கள் இரண்டு பேரிடமும் சேர்ந்தே சொல்கிறேன். வா.. உன் ஹஸ்பெண்டிடம் போகலாம்.''

''ம்ம்.. வாங்க போகலாம்.''

''இவங்க வரவில்லையா..?''

''இவங்க வந்தால்தான் நீங்க வருவீங்களா?''

பிருந்தா குறும்பாக வினவினாள்... கார்த்திகாவின் முகம் அந்தி வானமாகவே மாறி விட்டது.

''இல்லை... இவங்க இங்கே தனியே நிற்கிறாங்களேன்னு நினைத்தேன்.''

''நீங்கள் துணையாக நிற்கப் போகிறீர்களா?''

''ஏய்ய்... வாயாடி.. வா.. உன் கணவரிடம் சொல்லி உன் வாய்க்கு பூட்டுப் போடச் சொல்கிறேன்.''

பிருந்தாவின் முகத்தில் தெரிந்த உற்சாகத்தைக் கண்டு கார்த்திகா வியப்படைந்தாள்... ஒன்று விட்ட அண்ணனின் மேல் இவ்வளவு பாசமா?

வேண்டா வெறுப்பாக கோட்... சூட்டை அணிந்திருந்த சுதாகரன் கழுத்து டையை சரி செய்து கொண்டிருந்தான். அவன் மனதில் இரவில் பிருந்தா அவனைப் பார்த்துக் கேட்ட கேள்வியே எதிரொலித்தது.

'இதற்கு முன் மனிதனாக இருந்ததாக எண்ணமா?'

எப்படிக் கேட்டு விட்டாள். அப்படியென்றால் என்ன அர்த்தம். அவன் மிருகமாக இருந்ததாக அல்லவா அர்த்தம் ஆகிறது. கட்டிய மனைவியை தொட்டால் அவன் மிருகமா?

ஏன் அப்படிக் கேட்டாள்? இந்த உறவை தவிர்க்க நினைப்பவள் ஏன் அவன்தான் வேண்டுமென்று போராடி அவனைக் கை பிடித்தாள்?

அவன் முன்னால் ஒரு மாதிரியும்.. மற்றவரிடம் வேறு மாதிரியும் அவள் நடிப்பதற்கு பின்னணி தான் என்ன?

அவள் மனதில் அவன் இல்லையென்றால் அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ள ஏன் ஆசைப்பட்டாள்?

நினைக்க நினைக்க பிருந்தா ஒரு விடுவிக்க முடியாத விடுகதையாக அவனுக்குத் தோன்றினாள்.

அறைக் கதவு திறந்தது. ஆனந்தமான முகத்துடன் உள்ளே வந்தாள் பிருந்தா. இவ்வளவு மகிழ்ச்சியை இப்போதுதான் அவள் முகத்தில் சுதாகரன் முதன் முதலாகப் பார்க்கிறான். அவன் முகம் சுருங்கியது.

'இவனைப் பார்த்ததில் இத்தனை மகிழ்ச்சியா? யார் இவன்?'

''அத்தான்...'' என்று பிருந்தா அவனை அழைக்க அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

'என்னது... அவள் இவனை 'அத்தான்' என்று அன்பொழுக அழைக்கிறாளா.. என்னடா அதிசயம் இது?'

அவன் அயர்ந்து போய் நிற்கும்போதே அவள் மீண்டும் அழைத்தாள்.

''அத்தான்... என்னத்தான். நான் கூப்பிடுகிறேன். நீங்கள் பேசாமல் நிற்கிறீர்கள். பேசுங்கள் அத்தான்.''

சுதாகரனுக்குப் புரிந்தது. முதல் நாள் இரவு 'பேசாதீர்கள்' என்று சொன்னதை திரும்பப் பெற்றுக் கொள்கிறாளாம். இப்போது அவளோடு பேச வேண்டுமாம்.

ஒரு நிமிடம் தான் அவளுக்குத் தாலி கட்டியிருக்கிறோமா.. இல்லை அவள் தனக்கு தாலி கட்டியிருக்கிறாளா என்று அவனுக்குச் சந்தேகம் வந்து விட்டது.

இவள் விரும்பினால் அவன் இவளோடு பேச வேண்டும். விரும்பா விட்டால் பேசக்கூடாது.. என்ன அராஜகம் இது.

கூட நிற்பவனை கவனத்தில் கொண்டு லேசாகச் சிரித்து வைத்தான் சுதாகரன்.. அந்த சிரிப்பிற்கே முகம் மலர்ந்து போனாள் பிருந்தா.

''அத்தான்.. இவர்தான் என் அண்ணன் கபிலன்.''

'அப்பாடி அண்ணன்தானா.. அந்த அமெரிக்காகாரன் இல்லையா..' நிம்மதிப் பெருமூச்சு விட்டான் சுதாகரன்.

''ஹலோ மாப்பிள்ளை...'' முகம் முழுக்க சிரிப்புடன் கை நீட்டியவனை சுதாகரனுக்கு மிகவும் பிடித்துப் போனது.

''ஹலோ...'' என்று அவன் கரம் பற்றிக் குலுக்கினான்.

''முதலில் அண்ணனை ஏன் நம் கல்யாணத்திற்கு வரவில்லைன்னு கேளுங்க..'' பிருந்தா உரிமையுடன் சுதாகரனின் கரம் பற்றிக் கொண்டாள்.

ஆச்சர்யமாய் மனைவி காட்டிய நெருக்கத்தைப் பார்த்தவன் கபிலனை நோக்கிச் சிரித்தான்.

''ஆக்சுவலி மாப்பிள்ளை... அப்போது நான் என் பிஸினெஸ் விசயமாய் பாரினில் இருந்தேன். அதனால்தான் வரமுடியவில்லை..'' என்று கூறிய கபிலன்.. தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து தங்கச் செயின் போட்ட வெளிநாட்டு கைக் கடிகாரத்தை எடுத்து சுதாகரனின் கைகளில் கட்டினான்.

பிருந்தா பூரிப்புடன் கணவனைப் பார்த்தாள்.

# 12

சுதாகரன் வியப்புடன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். முள் இருக்கும் இடங்களில் வைரக் கற்கள் ஒளிர்ந்தன.

'இவ்வளவு விலை உயர்ந்த பரிசை அளிக்கிறானே.'

''மாப்பிள்ளை... நான் பிருந்தாவின் பெரியப்பா மகன்.. என் அப்பா பெயர் கல்யாணசுந்தரம்.. உங்கள் கல்யாணத்திற்கு அவர் வந்திருப்பாரே. அவர்தானே பிருந்தாவை தாரை வார்த்துக் கொடுத்திருப்பார்.''

கபிலன் பேசப்பேச.. சுதாகரனுக்கு நினைவு வந்துவிட்டது.. சோமசுந்தரம் திருமணத்திற்கு முதல் நாளே கூறி விட்டார்.

''எங்க இரண்டு குடும்பத்திற்கும் உள்ள ஒரே பெண் வாரிசு என் மகள் பிருந்தாதான். அதனால் அவள் கல்யாணத்தை என் அண்ணன்தான் முன்னால் நின்று நடத்தி வைப்பார்.''

அதன்படி பெண்ணின் தாய் தகப்பனாக சோமசுந்தரத்தின் அண்ணன் கல்யாணசுந்தரமும் அவரது மனைவியும் தான் மணமேடையில் அமர்ந்தார்கள்.

''ஓ... ஆமாம்.. நினைவிருக்கிறது.''

''கல்யாணத்திற்கு என்னால் வர முடியவில்லை. அப்பாம்மா வந்தார்கள். இப்போது ரிசப்சனுக்கு நான் வந்திருக்கிறேன்.''



''எப்படியோ ரிசப்ஷனிற்காவது வந்தீர்களே.. அத்தான். அண்ணன் பெரிய பிஸினெஸ் மேன். நான்கைந்து பிஸினெஸ் நடத்துகிறார்.''

'இவளுக்கு பிஸினெஸ் பண்ணினால்தான் பிடிக்குமோ. நான் பேங்க் மேனேஜர் என்பதால் பிணங்குகிறாளோ.'

சுதாகரன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போதே.. கபிலன் பேசினான்.

''உனக்குத்தான் பிஸினெஸ் பண்ணும் மாப்பிள்ளையே வேண்டாம்ன்னு சொல்லி விட்டாயே... மாப்பிள்ளையிடம் மயங்கிப் போய் விட்டாயே.''

''போங்க அண்ணா.''

பிருந்தா வெட்கத்துடன் சுதாகரனின் தோள் மீது முகம் புதைத்துக் கொண்டாள். சுதாகரன் மேனி சிலிர்த்துப் போனான்.

'என்னடா இது... இவள் திடீரென்று இப்படி இழைகிறாளே.'

''நான் இன்னும் இரண்டு மாதங்கள் கழித்துத்தான் வருவதாக இருந்தது...''

''ஆமாம் அத்தான். அண்ணன் திடீரென்று வந்து நிற்கவும் எனக்கு ஆச்சர்யமாகிப் போய் விட்டது. அண்ணன் இரண்டு மாதங்கள் கழித்துத்தான் வருவார்ன்னு நான் நினைத்திருந்தேன்.''

''போன வேலை சீக்கிரமே முடிந்து விட்டது பிருந்தா...''

''தேங்க் டு காட்.''

'இவன் சீக்கிரம் வந்ததற்கு இவள் எதற்கு கடவுளுக்கு நன்றி சொல்கிறாள்.'

புதிருக்குத் தாலிகட்டி விட்டுப் போராடிக் கொண்டிருக்கும் தன் விதியை தானே நொந்து கொண்டான் சுதாகரன்.

அதற்குள் அறை வாசலில் ஆரவாரக் குரல்கள் கேட்டன..

''டேய் கபிலா...'' என்று பூபாலன் கை விரிக்க.

''எப்படா வந்தே...'' என்று தனபாலன் நலம் விசாரித்தான்.

சட்டென்று திரும்பி.. அவர்கள் அறைக்குள் வருவதற்குள் அறை வாசலுக்குச் சென்று விட்ட கபிலன்.. திரும்பிப் பார்த்து இங்கிதமாய் புன்னகைத்தபடி அறைக் கதவை சாத்திவிட்டு சென்று விட்டான்.

''ம்ஹூம்.. இந்தக் குடும்பத்திலும் இங்கிதம் தெரிந்த ஒருவன் இருக்கிறானா.. ஆச்சரியமாய் இருக்கிறது..''

தனக்குத்தானே சொல்லிக் கொண்ட சுதாகரன் இன்னும் தன் தோள் வளைவில் தலை சாய்த்திருந்த மனைவியை விசித்திரமாய் பார்த்தான்.

'அதுதான் அவன் போய் விட்டானே.. இன்னும் ஏன் வீணாக போஸ் கொடுக்கிறாள்.'

அவனது பார்வையை எதிர் கொண்ட அவளது பார்வையில் மையல் இருந்தது.. அவனது முகம் மாறியது.. அதைக் கண்டும் காணாதவள் போல் பிருந்தா அவன் கரம் பற்றி அதில் இதழ் பதித்தாள்.

சுதாகரன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

'என் உணர்வுகளோடு விளையாடுகிறாளா இவள்..?'

தன் கரத்தை உருவிக் கொண்டு அறை வாயிலை நோக்கி நடந்தான். அவள் சட்டென்று அவன் வழியை மறித்ததோடு இல்லாமல் அறைக்கதவைத் தாழிட்டாள்.



சுதாகரன் அவளையே உறுத்துப் பார்த்தபடி நிற்க..

''ஐ ஆம் ஸாரி..'' என்றாள் பிருந்தா.

அவனிடமிருந்து பதில் வராமல் போக..

''என்னிடம் பேச மாட்டீர்களா..?'' என்று வினவினாள்.

''நீதானே பேசாதீர்கள் என்றாய்.''

''அதற்குக் காரணம் இருக்கிறது.''

''என்ன காரணம்?''

''நீங்கள்.. நீங்கள்...''

அவள் பேச முடியாமல் தடுமாறினாள். சுதாகரன் மனதிற்குள் மீண்டும் முதல் நாளைய உணர்வு புகுந்து கொண்டது.

''சொல்.. நான் என்ன செய்தேன்..?''

''அத்தான் ப்ளீஸ்...''

பிருந்தா சட்டென்று அவன் மார்பில் முகம் புதைத்தாள். மூன்று நாட்களாக போராடிய மனைவி.. முதன் முதலாக தானாக விரும்பி அவனைத் தழுவி நிற்கிறாள். சுதாகரன் நம்ப முடியாமல் பார்த்தான்.

அவன் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்தன. மெல்ல அவள் முகம் தூக்கிப் பார்த்தான். அவள் பார்வையில் காதல் இருந்தது. தாபத்துடன் அவள் இதழ் தேடிக் குனிந்தான். அவள் முகம் விலக்கிக் கொள்ளாமல் இசைந்து நின்றாள். நீண்ட சில நிமிடங்களுக்குப் பின்னர் அவள் முகம் விட்டு விலகியவன்.. அவளை இறுக்கி அணைத்து அவள் தோள் வளைவில் முகம் பதித்தான்.. அவளது கரங்கள் அவனது முதுகைச் சுற்றிப் படர்ந்தன.

''ஏண்டி.. என்னிடமிருந்து விலகிப் போனாய்..?''

''காரணமாகத்தான்...''

''என்ன காரணம்.. நான் மனிதனல்ல.. மிருகம் என்று காரணமா?''

''அத்தான்..''

பிருந்தா கை நடுங்க அவன் வாய் பொத்தினாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் சிதற ஆரம்பித்தன. சுதாகரனுக்கு மனம் தாங்கவில்லை. அவளை கட்டிலில் அமர வைத்து தானும் அமர்ந்து கொண்டான். அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'கொஞ்ச நேர விலகலைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத .இவளா இவன் கை பட்டாலே உதறி விட்டாள்?'

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் மார்பில் கிடந்தவளின் தலையை வருடிக் கொடுத்தவன்.

''ஒரு மணி நேரமாய் அலங்காரம் பண்ணிய தலை கலைந்து விடப் போகிறது. நாம் ரிசப்சனுக்குப் போக வேண்டாமா?'' என்று கூறினான்.

''கலைந்தால் கலையட்டும். எனக்கு கவலையில்லை.''

''முகத்தில் செய்திருக்கும் ஒப்பனை கண்ணீர் துளி பட்டுக் கரைகிறது பார்.''

''கரையட்டும் அத்தான்.''

''ஏண்டி இப்படி வேதனைப்படுகிறாய்?''

''அத்தான்.. எனக்கு உங்கள் மேல் அளவுக்கதிகமான ஆசையிருக்கிறது. நீங்களென்றால் எனக்கு உயிர். உங்கள் முகம் பார்ப்பதற்காகவே அடிக்கடி கார்த்திகாவை பார்க்கவென்று சாக்கு சொல்லிக் கொண்டு உங்கள் வீட்டிற்கு வருவேன்.''



''அப்புறம் ஏண்டி அந்த அமெரிக்காகாரனின் புகழ் பாடினாய்?''

''உங்கள் கோபத்தைத் தூண்டி விட்டு என்னை வெறுக்க வைக்கத்தான்.''

''பிருந்தா...''

''நேற்று ராத்திரி... நீங்கள் மனிதரா என்று கேட்டதும் அதற்காகத்தான்.''

''ஏண்டி.. நான் ஏன் உன்னை வெறுக்க வேண்டும்?''

பிருந்தா சொன்னாள். அவள் சொல்லச் சொல்ல.. சுதாகரனின் மதிப்பில் அவள் இமயமாய் உயர்ந்து நின்றாள்.

## 13

வானளாவிய தேவியைப் போன்று உயர்ந்து நின்ற தன் மனைவியை பரவசத்துடன் பார்த்தான் சுதாகரன். அவளது உயரத்திற்கு முன் தான் வெறும் தூசு என்று அவனுக்குத் தோன்றியது.

''அத்தான்.. நீங்கள் என்னைத் தொட்டு ஆள ஆசைப் பட்டீர்கள்.''

''அதில் தவறு என்னடி இருக்கிறது?''

''தவறில்லை அத்தான். நானும் உங்களுடன் கலந்து விடவே துடித்தேன்.''

''அப்புறம் என்ன...''

சுதாகரனின் கரங்கள் அவளை இறுக்கிக் கொண்டன.

"இல்லை அத்தான். இப்போது அதை நான் விரும்பவில்லை. அதனால் தான் உங்களிடம் கொஞ்சக் கால அவகாசம் கேட்டேன்."

"அவகாசம் கொடுக்கும் விசயமாடி இது?"

"இல்லைதான். எனக்கே என் மனதை அடக்க முடியவில்லையெனும் போது உங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை."

"ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?"

"அவசியம் இருக்கிறது அத்தான். அதனால்தான் உங்கள் மனம் புண்படும் வார்த்தைகளைச் சொன்னேன். அப்போதுதான் உங்களுக்கு என் மேல் வெறுப்பு வரும். விலகியிருப்பீர்கள் என்று கணக்குப் போட்டேன்."

"உனக்கு உடம்பு எதுவும் சரியில்லையாடி. அதை என்னிடம் சொல்வதற்கு என்ன..? நீ என்னைக் காதலிக்கவில்லையோ என்ற எண்ணம் தான் எனக்கு. மற்றதெல்லாம் எனக்குப் பெரிது இல்லை பிருந்தா."

"அத்தான்.." என்று அவனைக் கட்டிக் கொண்டாள் பிருந்தா.

"நீங்கள் இப்படித்தான் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அத்தான்.. எனக்கு மனம்தான் சரியில்லை."

"ஏன்.. என்னவாயிற்று?"

"கார்த்திகா."

பிருந்தா ஒற்றைச் சொல்லாய் சொன்னாள். சுதாகரனுக்குப் புரியவில்லை.

"என்னடி சொல்கிறாய்.."



"அத்தான்.. அவள் வாழாத வாழ்க்கையை நாம் வாழலாமா?"

"பிருந்தா.."

சுதாகரன் அவளை விட்டு விலகி அமர்ந்தான். அவனுக்கு எதுவோ புரிவது போல் இருந்தது. பிருந்தாவும் அவனை நெருங்க முடியவில்லை.

"அவள் என்ன தவறு செய்தாள்? தனக்கே அவள் தண்டனை விதித்துக் கொண்டு சந்நியாசினியாய் வாழ நினைப்பது எந்த வகையில் நியாயம்? நான் விசாரித்த வரையில் அந்த மாப்பிள்ளைப் பையன் ஓர் இதய நோயாளியாம். மறைத்து வைத்துக் கல்யாணம் செய்யப் பார்த்திருக்கிறார்கள். நீங்கள் இதையெல்லாம் விசாரித்துப் பார்க்கவில்லையா?"

"எங்கே போய் விசாரிப்பது.. அப்பா வெள்ளந்தியான மனிதர். வெளியூர் சம்பந்தம்... மாப்பிள்ளை சாப்ட்வேர் என்ஜினியர்ன்னாங்க.. மயங்கி விட்டோம்."

"நடந்தது கொடுமை. இதில் கார்த்திகா பலியாகி நிற்கிறாள்."

"நான் அவளைப் பற்றிக் கவலைப்படவில்லையென்றா நினைக்கிறாய்?"

"கவலைப்பட்டால் போதுமா?"

"அவள்தான் கல்யாணத்தை மறுத்து விட்டாளே.."

"அதற்காக அவளை அப்படியே விட்டு விடுவதா?"

"கல்யாணப் பேச்சை எடுத்தால் மருந்தைக் குடித்து விடுவேன் என்று சொல்கிறவளை என்ன செய்வது?"

"கல்யாணம் செய்து கொண்டுதான் ஆக வேண்டும் என்ற நிர்பந்தத்தில் சிக்க வைப்பது."

''அது எப்படி முடியும்?''

''நாம் ஒற்றுமையாக வாழாமல் அடித்துக் கொண்டு நின்றால் முடியும்.''

''பிருந்தா...''

''அத்தான்... அவள்தானே உங்களைப் போர்ஸ் பண்ணி என் கழுத்தில் தாலி கட்ட வைத்தாள்?''

''ஆமாம்.''

''என் மச்சானுக்கு என் மேல் ஒன்றும் ஆசையில்லை. அப்படித்தானே.''

''இதுதான் போட்டு வாங்குவது என்பதா?''

''கிண்டலுக்குச் சொன்னேன். இப்போ.. நான் உங்கள் வாழ்வை நரகமாக்குகிறேன்னு வைத்துக் கொள்ளுங்கள் அவளுக்கு தன்னால்தானே.. தன் அண்ணனின் வாழ்க்கை பாழாகி விட்டது என்ற எண்ணம் வருமா இல்லையா?''

''கட்டாயம் வரும்.''

''அப்போது என்னிடம் அட்வைஸ் பண்ண வருவாள். நான் அவளிடம் ஒரு கண்டிசன் வைப்பேன்.''

''என்ன கண்டிசன்?''

''நீ என் அண்ணனுடன் சந்தோசமாக வாழ்ந்தால் தான்.. நானும் உன் அண்ணனுடன் சந்தோசமாக வாழ் வேன் என்பேன்.''

''எந்த அண்ணனுடன்? உன் அண்ணன்கள் திரும மானவர்கள்.''

''கபிலன் அண்ணனுடன்... அதைச் சொல்வதற்குள் அவசரப்படுகிறீர்களே...''

''என்னது...?''



ஆச்சர்யப்பட்டுப் போனான் சுதாகரன். கபிலனைப் போன்ற கோடீஸ்வரன் திருமணம் நின்று போன தன் தங்கையை ஏற்றுக் கொள்வானா?

தன் சந்தேகத்தை மனைவியிடம் கேட்டான் அவன்.

''உங்களுக்கும்.. எனக்கும் தெரியாதது ஒன்று இருந் திருக்கிறது அத்தான். அது கபிலன் அண்ணன். கார்த்தி காவை காதலித்தது..''

''என்னடி சொல்கிறாய்?''

''கபிலன் அண்ணா ஓர் முறை எங்கள் வீட்டில் என் னுடன் கார்த்திகாவைப் பார்த்திருக்கிறார். கண்டதும் காதல் கொண்டு விட்டாராம். அவர் தான் பிஸினஸ் விஷய மாய் அடிக்கடி வெளிநாட்டிற்குப் பறக்கிறவர் ஆச்சே... அதைப் போல் அவர் வெளிநாட்டிற்குப் போய் சில நாட்கள் இருந்து விட்டுத் திரும்பி வருவதற்குள் கார்த்தி காவிற்கு திருமணம் நிச்சயமாகி விட்டது. திருமணத் திற்கு முதல் நாள் தான் திண்டுக்கல் வந்து என்னிடம் சொன்னார். எப்போதும் போல் வந்த அண்ணனிடம் சந்தோசமாகப் பேசி முடித்த பின் அண்ணன் என்னிடம் முக்கியமாய் பேசணும்ன்னார். நான் வேறு ஒரு முக் கியமான வேலையாகக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன் போய் விட்டு மறுநாள் வந்து விடுவேன். வந்து பேச லாம்ன்னு சொன்னேன்.''

பிருந்தா அந்த நாளின் நினைவிற்குப் போனாள்.

அன்று கபிலனின் கம்பீரமான முகத்தில் ஓர் வெட்கம் சூழ்ந்திருந்து. அவன் பரபரப்பாய் இருந்தான். தன் மனதிலிருப்பதை தங்கையிடம் பகிர்ந்து கொள்ளத் துடிக்கும் துடிப்புத் தெரிந்தது. பிருந்தா அவனை ஆச் சர்யமாகப் பார்த்தாள்.

''ஏன் அண்ணா இவ்வளவு நெர்வஸ்ஸாக இருக்கறீங்க?''

''உன்னிடம் ஒன்றைச் சொல்ல வேண்டும் பிருந்தா.''

''நான் போய் விட்டு வந்து விடுகிறேனே... நாளைக் காலையில் நாம் ப்ரீயாக உட்கார்ந்து பேசலாமே...''

''அதுவரை தாங்காதும்மா. நான் பாரின் போவதற்கு முன்னாலேயே உன்னோடு பேச வேண்டும்ன்னு நினைத்தேன். அதற்குள் அவசரமாய் நான் பாரின் போக வேண்டியதாகி விட்டது...''

''ஒகேண்ணா... சொல்லுங்க. கேட்டு விட்டேக் கிளம்புகிறேன்.''

''நான்.. நான்...''

''நீங்க... நீங்க...''

''ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்...''

இதைச் சொல்வதற்குள் மாநிறமான கபிலனின் முகம் வெட்கத்தில் செக்கச் செவேல் என்று சிவந்து விட்டது.

பிருந்தா அதைப் பார்த்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

''இதைச் சொல்ல இவ்வளவு வெட்கமா? யார் அந்த அதிர்ஷ்டசாலி.''

''அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் நான்தான் அதிர்ஷ்டசாலி.''

''பாரப்பா.. இப்போதே அவளை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்களே. ம்ம்.. ஓகே.. உங்கள் காதலில் என்ன பிரச்னை. பெரியப்பாவும் பெரியம்மாவும் சம்மதிக்க மாட்டேன் என்கிறார்களா? நான் அவர்களிடம் பேச வேண்டுமா?''



''அதற்கு முன்னால்.. நான் காதலிப்பவளிடம் நீ பேச வேண்டும்.''

''என்ன பேச வேண்டும்?''

''என் காதலைச் சொல்ல வேண்டும்?''

பிருந்தாவின் முகம் திகைப்பைக் காட்டியது. அவள் யோசனையுடன் தன் ஒன்று விட்ட தமையனை நோக்கினாள்.

'அண்ணனின் காதலியிடம் நான் தூது போக வேண்டுமா. எனக்குத் தெரிந்த அந்தப் பெண் யார்?

அவள் கேள்விக் குறியை முகத்தில் காட்டி கபிலனைப் பார்த்தாள்.

## 14

''யார் அந்தப் பெண் அண்ணா?''

''உன் பிரண்ட் கார்த்திகா தான்...''

பிருந்தா அதிர்ந்து போனாள். இது என்ன...? இதுவரை தோல்வியைச் சந்திக்காத கபிலன்... வியாபாரத்தில் வெற்றிக் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருக்கும் கபிலன்... முதன் முதலாய் தோற்று விட்டானே.

கார்த்திகா பிருந்தாவின் உயிர் தோழி... தன் அண்ணன்களுக்குத் திருமணம் ஆகாமல் இருந்திருந்தால்... அவர்களில் ஒருவருக்கு கார்த்திகாவை திருமணம் செய்து வைத்து.. தன் உறவாக்கிக் கொண்டிருக்கலாமே என்று எத்தனையோ முறை நினைத்துப் பார்த்தவளுக்கு.. ஏன் கபிலனின் நினைவு தோன்றாமல் போனது?

இது யாருடைய துரதிர்ஷ்டம்? விடிந்தால் தன் காதலிக்கு திருமணம் ஆகப் போவதை அறியாதவனாய்... வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த உடனே.. தன் காதலைச் சொல்ல பறந்து கொண்டு வந்திருக்கிறானே.. கபிலன்.. அவன்தான் துரதிர்ஷ்டசாலியா? இல்லை... இப்படியொருவன் தன்னை உயிருக்குயிராய் காதலிப்பதை அறியாமல் எவனோ ஒரு முகம் தெரியாதவனுக்கு மாலையிடப் போகிறாளே.. கார்த்திகா. அவள்தான் துரதிர்ஷ்டசாலியா?

''ஏன் பேசாமல் இருக்கிறாய் பிருந்தா?''

''இனிப் பேசி என்ன ஆகப் போகிறது?''

''ஏன் இப்படிச் சொல்கிறாய்?''

''நான் கிளம்பிக் கொண்டிருப்பது யாருடைய கல்யாணத்தை அட்டெண்ட் பண்ண என்று உங்களுக்குத் தெரியுமா?''

கபிலனின் மனதிற்குள் ஓர் வெறுமை உருவானது. 'இவள் சொல்வதை வைத்துப் பார்த்தால்... இவள் போவது...'

அதற்கு மேல் அதை யோசிக்க விரும்பாதவன் பிருந்தாவின் முகத்தைப் பார்த்தான். அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள் பிருந்தா.

''விடிந்தால் கார்த்திகாவிற்கு கல்யாணம் அண்ணா.''

கபிலன் அதிர்ந்து போய் விட்டான். அவன் முகம் காட்டிய வேதனையை இன்றளவும் பிருந்தாவினால் மறக்க முடியவில்லை.

மறுநாள் அவள் கார்த்திகாவின் கல்யாணத்திற்குப் போனதும் அது நின்றதும்.. கார்த்திகா திருமணத்தைத் தவிர்த்ததும் அடுத்த வந்த நிகழ்வுகள்.



பிருந்தா கபிலனிற்கு போனில் இவற்றைத் தெரிவித்ததும் அவன் செய்த முதல் வேலை.. கார்த்திகாவை மணக்க இருந்தவனைப் பற்றிய முழு விவரங்களையும் சேகரித்ததுதான்.

சேகரித்த விவரங்களையும் அவனின் மெடிக்கல் ரிப்போர்ட்டையும் தூக்கி பிருந்தாவின் முன்னால் போட்டான்.

''பார்.. இவற்றையெல்லாம் பார்... அவன் ஒரு சிவியர் ஹார்ட் பேஷண்ட்... அவனுக்குப் போய் எப்படி... உன் தோழியைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க நினைத்தார்கள்? கொஞ்சம்கூட விசாரிக்காமல் கல்யாணம் வரை போய் விட்டார்களே.. கல்யாணத்திற்கு முன்னால் நடந்தது... கல்யாணத்திற்குப் பின்னால் நடந்திருந்தால் என்ன செய்வது? இப்போது கார்த்திகாவை அதிர்ஷ்டமில்லாதவள் என்கிறார்கள். அப்படி நடந்திருந்தால்.. இளம் விதவை என்றில்லையா சொல்லியிருப்பார்கள்? அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்?''

பிருந்தா அப்போது அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''ஒருவேளை அப்படி நடந்திருந்தால்.. நீங்கள் சொன்னபடி அவள் இளம் விதவை ஆகியிருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் அண்ணா..?''

கபிலன் பிருந்தாவை ஆழமாகப் பார்த்தான்.

''அப்படியொரு நிலையில் அவள் இருந்திருந்தாலும் நான் அவள் மேல் கொண்ட காதல் மாறியிருக்காது பிருந்தா. நான் அவளை மணந்து கொள்ளவே விரும்பியிருப்பேன்.''

''அப்படியென்றால்.. இப்போது...''

''அவள் எனக்காகவே பிறந்தவள். யார் நினைத்தாலும் அதை மாற்றிவிட முடியாது. நான் கார்த்திகாவைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்.''

கபிலன் சர்வ நிச்சயமாகக் கூறினான். பிருந்தா யோசித்தாள். கார்த்திகாவின் பெற்றோரைவிட பிருந்தா வின் பெற்றோர் வசதியானவர்... பிருந்தாவின் பெற் றோரைவிட கபிலனின் பெற்றோர்... மிக மிக அதிக அளவில் வசதியானவர்கள்.

மாதத்திற்கு ஒரு நாட்டிற்கு பறக்கும் கபிலன்... கார்த்திகாவை இவ்வளவு ஆழமாய் நேசிக்கிறான். அவள் திருமணம் நின்றாலும்... அவளையே மணம் முடிக்கத் துடிக்கிறான். என்பதை நினைக்கும் போதே அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'ஆனால்..?' நெஞ்சில் எழுந்த கேள்வியை கபிலனிடம் வாய் விட்டுக் கேட்டாள் பிருந்தா.

''அண்ணா.. கார்த்திகா திருமணத்தை தவிர்த்து வருகிறாள்.''

''ஸோ வாட்.. அவள் எப்போது சம்மதிக்கிறாளோ.. அப்போது அவளைத் திருமணம் செய்து கொள்கிறேன்.''

''ஒருவேளை அவள் சம்மதிக்காமலேயே வாழ்ந்து முடித்து விட்டால்...?''

''நான் அவள் நினைவிலேயே வாழ்ந்து முடித்து விடு வேன்.''

கபிலன் தீர்மானமாகக் கூறினான். அவன் உறுதியைப் பற்றி நன்கு அறிந்தவள் பிருந்தா.

ஒரு சொல்... ஒரு வார்த்தையில் நிற்பவன் கபிலன். வார்த்தை தவற மாட்டான்... பிருந்தா ஓர் முடிவிற்கு வந் தாள்.

''கார்த்திகா உனக்குத்தான் அண்ணா.. நான் இதை நடத்திக் காட்டுகிறேன்.''



தன்சேலை முந்தானையை விரல்கள் சுற்றிப் பிரித்து.. பின் சுற்றிப் பிரித்து என்று குனிந்த தலையுடன் கபிலனின் காதலையும்.. தன் வாக்குறுதியையும் கூறிய பிருந்தா.. தலை நிமிர்ந்து.. தன் கணவனைப் பார்த்தாள்.

''அத்தான் எனக்கு உங்களை மிகவும் பிடிக்கும்... உங்களைப் பார்ப்பதற்காகவே.. கார்த்திகாவிடம் அதிக தோழமையை வளர்த்துக் கொண்டவள் நான். கபிலன் அண்ணா தன் காதலைச் சொல்லி விட்டார். கார்த்திகா திருமணத்தை தவிர்த்து மூலையில் புதைத்து விட்டாள். இந்த நிலையில் அப்பா எனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார். கபிலன் அண்ணன் தன் வழக்கப்படி வெளி நாட்டிற்குப் பறந்து விட்டார். திரும்பி வர ஆறு மாதங் களாகும் என்று வேறு சொல்லிவிட்டுப் போய் விட் டார்.''

''நீ என்னிடம் இதையெல்லாம் பேசியிருக்கலாமே பிருந்தா...''

''யாரிடம் பேசுவது? உங்களிடமா? உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள்.. என் கழுத்தில் மூன்று முடிச்சுக் களைப் போடும் வரை நான் உங்கள் மனதில் இருந்தேனா என்று...''

''அது.. அது.. அது வந்து...''

''போதும். அசடு வழியாதீர்கள். சும்மாவே நீங்கள் என் முகத்தைப் பார்க்க மாட்டீர்கள். இதில் கார்த்திகாவிற்கு இப்படி ஆனதும் சுத்தமாய் மூலையில் முடங்கிப் போனீர் கள். என்னவோ பெண்களின் நிழல்களைப் பார்ப்பது கூட கார்த்திகாவிற்கு செய்யும் பாவம் என்பது போல் ஒதுங்கிப் போனீர்கள். உங்களிடம் பேசுவதைவிட கார்த்திகாவிடம்

பேசுவதே பெட்டர்ன்னு முடிவு பண்ணி அவளிடம் என் காதலைச் சொன்னேன்.''

''உனக்குத்தான் என் மேல் எவ்வளவு காதல்.. ஹி.. ஹி.''

''வழிகிறது. துடைத்துக் கொள்ளுங்கள். கபிலன் அண்ணா தன் காதலுக்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். உங்களைக் காதலித்து வைத்த நான் என்ன செய்வது? நீங்கள் ஒரு துரும்பைக்கூட நம் காதலுக்கு ஆதரவாய் கிள்ளிப் போடப் போவதில்லை. என் காதலை நான்தானே பார்த்துக் கொண்டாக வேண்டும்..?''

''உன் நிலையை நினைத்தால் எனக்குப் பரிதாபம் பொங்கி வழிகிறது...''

''அந்தச் சாக்கில் கட்டி அணைத்துக் கொள்ளப் பார்க்கிறீர்களாக்கும். தள்ளிப் போங்க.. நீங்களும் உங்கள் கரிசனமும்.''

''எனக்கு என்னடி தெரியும்?''

சுதாகரன் மனைவியை சமாதானப்படுத்துவது போல் நெருங்கிக் கொண்டான். அவளும் விலக மனமின்றி அவன் கைகளுக்குள் புகுந்து கொண்டாள். வேறுபட்ட மனமிரண்டும் ஒன்றுபட்டு நின்றன. எங்கோ இருந்த இன்னிசை காற்றில் தவழ்ந்து வந்தது.

## 15

''அப்பா.. நம் காதலை எதிர்த்தார். போராடி நின்று ஜெயித்தேன். உங்களை கார்த்திகா சமாளித்து விட்டாள்.



என் காதல் கைகூடியது. நானும் உங்கள் மனைவியாகி விட்டேன். அதன் பின் தான்...''

''நமக்கு முதலிரவு வந்தது. நீயும் நடிக்க ஆரம்பித்து விட்டாய்.''

''வேறு என்ன செய்வது? கபிலன் அண்ணா திரும்பி வர மாதக் கணக்காகும். அவரைக் கண்ணில் காட்டாமல் நான் விசயத்தைச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அதனால்..''

''என்னை வெறுக்க வைக்க.. கடுமையான வார்த்தைகளைப் பேசினாய்.''

''பேசாமல் எப்படி உங்களைச் சமாளிப்பது?''

''நன்றாகச் சமாளித்தாய். ஏண்டி உண்மையிலேயே உன்னை வெறுத்து நான் விலகிப் போய் விட்டிருந்தால் என்ன செய்திருப்பாய்? இந்த வீண் விஷப் பரிட்சையில் இறங்கி விட்டாயே...''

''என்னை நீங்கள் வெறுத்திருந்தாலும் கார்த்திகாவிற்காகவாவது என்னுடன் வாழ வந்திருப்பீர்கள்.''

''பிருந்தா.. கார்த்திகா என் தங்கைதான். அவள் மேல் நான் உயிருக்குயிரான பாசத்தை வைத்திருக்கிறேன் தான். ஆனால் காதலி என்பவள் வேறு. தங்கை என்பது வேறு. உன்னை உனக்காக நான் காதலிக்க வேண்டும். நீ என் மேல் வைத்திருக்கும் காதல் அந்த அளவுக்கு அதிகமானது. அதை விட்டுவிட்டு.. என் தங்கைக்காக உன்னை ஏற்றுக் கொள்ளும் நிலையில் உன்னை வைக்கத் துணிந்தாயே...''

''எனக்கு வேறு வழி தெரியவில்லைங்க...''

சுதாகரன் அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டான். பின் விலகி எழுந்து நின்றான்...

''சற்று முன் வரை நான் எதையோ இழந்து விட்ட மனநிலையில் இருந்தேன். இப்போது.. இந்த உலகையே வென்று விட்ட மனநிலையில் இருக்கிறேன். உன்னைப் போன்ற ஒருத்தி என்னைக் காதலித்து.. என் மனைவி யாவது என்பது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய வரம்...''

''ச்ச்... என்ன அத்தான் இது. பெரிய வார்த்தைகளைப் பேசுகிறீர்கள். காதலித்தவரையே கைபிடிப்பது தானே பெரிய வரம்.''

''இனி எது செய்தாலும் என்னிடம் சொல்லிவிட்டுச் செய் பிருந்தா.. நீ வேறு.. நான் வேறு இல்லை. இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்.''

''நாம் சண்டைக் கோழிகளாகவே இருக்க வேண்டும்.''

''சரியாய் சொல்லுடி. நீ சண்டைக்கோழி. நான் சண்டைச் சேவல்.''

''அடடா.. ஆண் பிள்ளை பெருமையை விட்டுக் கொடுக்க மாட்டீர்களே.''

''பின்னே... என்னை என்னவென்று நினைத்தாய்?''

''என் புருசன் என்றுதான்...''

''கார்த்திகா வாழாத வாழ்க்கையை நாம் வாழலாமா என்று கேட்டுவிட்டு உசுப்பேற்றுகிறாயே... என் உறுதியைக் காப்பாற்ற.. கொஞ்சம் ஒத்துழைடி.. மகராசி.''

''ஓகே.. ஓகே.. நாம் வெளியே முறைத்துக் கொண்டிருப்போம்.''

''அறைக்குள் அணைத்துக் கொண்டிருப்போம்.''



''அளவாகத்தான்.''

''எந்த அளவு என்பதையும் நீயே அளந்து சொல்லி விடு.''

''நீங்கள் இதிலேயே இருங்கள். கதவைத் திறக்கலாமா?''

''அதற்குள்ளாகவா?''

''ரிசப்சனுக்கு நேரமாகி விட்டதே. நீங்களும் நானும் தானே... கல்யாண மாப்பிள்ளையும்... பெண்ணும்?''

''அதற்குள் இதை மறந்து விட்டாயா? அடிப்பாவி...''

''போங்கத்தான்..''

பிருந்தா செல்லமாக அவன் நெஞ்சில் ஒரு குத்து விட்டு விட்டு அறைக் கதவைத் திறந்தாள். கிறங்கிப் போய் விட்ட சுதாகரன்.. ஒரு மார்க்கமாய் விழித்துக் கொண்டு நின்றிருந்தான்.

அறைக்குள் அவனை அழைத்துச் செல்வதற்காக வந்த பூபாலனும் தனபாலனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்னடா ஆச்சு நம்ம மாப்பிள்ளைக்கு..'' பூபாலன் முணுமுணுத்தான்.

''அதுதானே. இப்படி விழிக்கிறாரே...'' தனபாலன் தன் தாடையை யோசனையாய் சொறிந்தான்.

''பேசலாமா... வேண்டாமா.''

''தெரியவில்லையே...''

''என்னடா பிழைப்பு இது.''

''தங்கைகூடப் பிறந்து விட்டோமே.''

''கூப்பிடவா.''

"தைரியமாய் கூப்பிடு."

பூபாலன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சுதாகரனைப் பார்த்து.

"மாப்பிள்ளை..." என்று அழைத்தான்.

"ம்ம்..." மனைவி சொல்லிக் கொடுத்தபடி முறைப்பாய் 'ம்' கொட்டினான் சுதாகரன்.

"போகலாமா..."

"எங்கே..."

'இது என்ன கேள்வி.. சூட்டும்.. கோட்டும் எதற்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோமென்று போட்டுக் கொண்டு நிற்கிறாய்?' மனதிற்குள் பொறுமிக் கொண்ட பூபாலன் வெளியே பவ்யமாய்..

"ரிசப்னுக்குத்தான் மாப்பிள்ளை..." என்றான்.

"அதற்குள் அங்கே போய் நிற்க வேண்டுமா?"

"பெண்ணும்.. மாப்பிள்ளையும் முதலிலேயே போய் விட வேண்டுமில்லையா?"

"அது சரி... உங்கள் தங்கை எங்கே...?"

'அவள் வராமலா போய் விடுவாள்..? வருவாள்.. வருவாள்..' என்று அலுப்புடன் நினைத்துக் கொண்ட தனபாலன்.

"கீழே நிற்கிறாள் மாப்பிள்ளை. உங்களுக்காகத்தான் காத்திருக்கிறாள்.." என்றான்.

"எனக்காகக் காத்திருக்கச் சொல்லி நான் சொன்னேனா?"

"இதையெல்லாம் சொல்லித்தான் செய்ய வேண்டுமா?"



"பின்னே இல்லையா? அவளை யார் காத்திருக்கச் சொன்னது. முதலிலேயே மண்டபத்திற்குப் போய் விட வேண்டியதுதானே..."

"உங்களுடன் போகலாமென்று... இருக்கிறாள்..."

"நான் கார்த்திகாவுடன் வந்து கொள்வேன்..."

தனபாலனுக்கு நன்றாக கேட்டு வைக்க வேண்டும் போல் இருந்தது. வாய் வரை வந்த வார்த்தைகளை மென்று விழுங்கிக் கொண்டான்.

"முதலில் நீங்க கீழே வாங்க மாப்பிள்ளை..."

விறைத்தது போதும் என்று சுதாகரனுக்கே தோன்றி விட்டது... பேசாமல் அவர்களுடன் சென்றான். கீழே கார்த்திகா... பிருந்தாவுடன் பேசிக் கொண்டு நின்றிருந்தாள். நெடுநாட்களுக்கு பின்னர்... அழகிய வேலைப்பாடுகள் கொண்ட சேலையை அணிந்து நின்றிருந்த தங்கையின் தோற்றம் அவனுக்கு நிறைவைத் தந்தது. தலையில் மட்டும் சிறு துண்டு மலர்ச்சரம் வைத்து.. கழுத்தில் மெல்லிய செயினோடு அவள் நின்றிருந்ததைக் கண்டு மனம் வருந்தினான்.

'இதனால் இவள் அழகு குறையவில்லை. ஆனால் யாருக்காக இந்தக் கோலம் கொள்கிறாள்? இது தவறில்லையா?'

அவன் பிருந்தாவை கோபமாய்ப் பார்த்தான்.

"எங்கள் வீட்டில் நகைகள் இல்லையென்று நினைத்து விட்டாயா?"

பிருந்தா உண்மையிலேயே புரியாதவளாய் விழிக்க வனஜா அவள் உதவிக்கு வந்தாள்.

"அவள் அப்படியெல்லாம் நினைக்கிறவள் இல்லை தம்பி."

"பின் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?"

"என்ன செய்தாள்?"

"கார்த்திகாவை அவள்தானே அழைத்து வந்தாள்?"

"ஆமாம்..."

"வரும்போது வீட்டிலிருக்கும் கார்த்திகாவின் நகைகளை போடச் சொல்லிக் கூப்பிட்டு வந்திருக்க வேண்டாமா? உறவினர்கள் கூடும் திருமண வரவேற்பு விருந்தில் என் தங்கை கழுத்தில் புல் போன்ற செயினுடன் நிற்க வேண்டுமா?"

பிருந்தா கபிலனை ஜாடையாகப் பார்த்துச் சிரித்தாள்.

## 16

கபிலன் வரும்போதே தங்கைக்கு ஒரு வைர நகை செட்டும்... கூடவே கார்த்திகாவிற்கு ஒரு வைர நகை செட்டையும் வாங்கிக் கொண்டு வந்திருந்தான். இரண்டும் ஒன்று போல்.. ஒரே டிசைனில் இருந்தன. அதன் அழகில் கவரப்பட்ட பிருந்தா.. தனக்கான நகைகளை அப்போதுதான் அணிந்திருந்தாள். கார்த்திகாவிற்கானதை தன் பீரோவில் மறைவாக வைத்திருந்தாள்.

சோமசுந்தரம் கூட ஆட்சேபமாய் கூறினார்.

"என்னம்மா இது..? உனக்கு அப்பா வாங்கிக் கொடுத்த நகைகளை விட கபிலன் வாங்கிக் கொடுத்தது உயர்வாகப் போயிற்றா?"



"இதில் உயர்வு தாழ்வு என்று எதுவும் இல்லை அப்பா. அண்ணன் வாங்கி வந்திருப்பது புது டிசைனில் இருக்கிறது. ரிசப்ஷனுக்கு போட்டுக் கொண்டால் அட்ராக்ஷனாக இருக்கும் என்பதால் போட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வாங்கிக் கொடுத்தவைகளைக் கல்யாணத்தின்போது போட்டுக் கொண்டேனே..."

சோமசுந்தரம் சமாதானமாகி விட்டார்.

இப்போது சுதாகரன் சத்தம் போடவும் பிருந்தா.. சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

"கார்த்திகா.. இங்கே வா.. இந்த நகை செட்டைப் போட்டுக் கொள்."

கபிலன் கார்த்திகாவிற்காக வாங்கி வந்ததை அவள் நீட்ட.. கார்த்திகா.. அதிர்ந்து பின் வாங்கினாள்.

"வைரமா.. எனக்கு வேண்டாம் பிருந்தா..."

"எதற்கு இப்படி என்னைப் பழி வாங்குகிறாய் கார்த்திகா. உன் அண்ணன்.. இன்னும் என்னை நான்கு பேர் எதிரில் சத்தம் போடட்டும் என்பதுதான் உன் ஆசையா?"

"நான் அண்ணனிடம் சொல்கிறேன்."

"இனிமேல் சொல்லி என்ன செய்ய? எல்லோரின் முன்னிலையிலும் அவர் கேட்டது.. கேட்டதுதானே... என் அண்ணிகள் என்னை எப்படியெல்லாம் கவனித்துக் கொள்வார்கள் தெரியுமா? அவர்கள் இப்போது என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எனக்கு சின்ன புத்தி என்று நினைக்க மாட்டார்களா?"

பிருந்தா பொலபொலவென்று கண்ணீர் உதிர்க்க.. அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவசரமாய்

கார்த்திகா நகைப் பெட்டியை கையில் வாங்கிக் கொண்டாள்.

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?''

''இந்த நகைகளை போட்டுக் கொள்ள வேண்டும்.''

''அவ்வளவுதானே... போட்டுக் கொள்கிறேன்...''

கார்த்திகா.. தன் காது.. கழுத்து.. கைகளில் இருந்த நகைகளை அவிழ்த்து விட்டு கபிலன் வாங்கிக் கொடுத்தது என்பதை அறியாமலே அந்த நகைகளை போட்டுக் கொண்டாள்.

பிருந்தா பூச்சரத்தை எடுத்து கார்த்திகாவின் தலை நிறைய வைத்துவிட கார்த்திகா ஆட்சேபிக்க முயன்றாள்.

''என்ன பிருந்தா இது?''

''பூ.. இது கூடத் தெரியாதா?''

''எனக்கு எதற்கு இவ்வளவு பூ?''

''இதை நான் சொன்னால் உன் அண்ணன் என்னை சும்மா விடுவாரா?''

கார்த்திகாவின் வாய் அடைத்துப் போனது. கிளம்பும் போது பிருந்தா கார்த்திகாவை தன்னுடன் வருமாறு அழைத்தாள். கார்த்திகா மறுத்தாள்.

''நான்.. அக்காவுடன் வருகிறேனே...''

''எதற்குடி..? போகும் வழியிலேயே உன் அண்ணன் என்னைப் பிடுங்கு பிடுங்கென்று பிடுங்குவார். நான் மண்டபம் போய்ச் சேர்வதற்குள் ஒரு வழியாகி விடுவேன். அதற்குப் பின் முக மலர்ச்சியாய் நான் ரிசப்ஷன் மேடையில் நிற்க முடியுமா?''



கார்த்திகா சுதாகரனைப் பார்க்க... அதுவரை பிருந்தாவை ஆசையாய் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த சுதாகரன்.. அவசரமாய் முகத்தை கடுகடுவென்று வைத்துக் கொண்டான்.

''என்ன.. சொல்கிறாள் உன் தோழி..'' என்று கர்ஜிக்க வேறு செய்தான்.

அவன் போட்ட சத்தத்தில் அரண்டு போன தனபாலன்.. பெண்டாட்டியைப் பார்த்து..

''என்னடி.. இந்த ஆள் வாயைத் திறந்தால் கர்ஜனை தான் வருகிறது?'' என்று வினவினான்.

''என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்? நானே.. உங்கள் கர்ஜனையை ஆராய்ச்சி பண்ண முடியாமல் ஒய்ந்து போய் கிடக்கிறேன். இதில் உங்க தங்கை புருசனின் கர்ஜனைக்கு என்னிடம் விளக்கம் கேட்க வந்து விட்டிங்க... போங்க... போய் வேலை எதுவும் இருந்தால் பாருங்க...''

''வேலைக்கு என்னடி நம்ம வீட்டில் பஞ்சமிருக்கப் போகுது? இந்த ஆளை மண்டபத்துக்குக் கொண்டு போய் சேர்த்து ரிசப்ஷன் மேடையில் நிற்க வைத்தால் தானே... வேறு வேலையை நான் ஒழுங்காகப் பார்க்க முடியும்?''

அவன் கவலையுடன் கூறவும் பூமாவுக்கு சிரிப்பு வந்து விட்டது. அவன் மனைவியை முறைத்தான்.

''ஏண்டி.. இப்போது சிரிக்கிறாய்?''

''இல்லை.. திருக்குறளை நினைத்தேன் சிரித்தேன்.''

''திருக்குறளை படித்துவிட்டு சிந்திப்பவர்களை பார்த்திருக்கிறேன். சிரிப்பவளை.. இப்போதுதான் பார்க்கிறேன்.

நீ சிரித்து மகிழும் அளவிற்கு வள்ளுவர்.. என்ன வ.. மொழியை உதிர்த்திருக்கிறார்?''

''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தானே வரும்.''

''அடடா.. இன்னாவைப் பற்றி.. என்னமாய் சொல்லியிருக்கிறார். இதில் நீ சிரிக்க என்ன சொல்லியிருக்கிறா..''

''இன்னாவைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.''

''அந்த 'இன்னா'தான் என்னா?''

''எங்க அண்ணன்களை உங்க கோபத்தால் நடுங்க வைத்தீங்க இல்ல. இப்போது பார்த்தீங்களா.. உங்களை நடுங்க வைக்க.. உங்கள் தங்கையின் மாப்பிள்ளை வந்து விட்டார்.''

''புருசனுக்கு 'இன்னா' வருவதை ரசிக்கும் நீ என்ன மாதிரியான பெண்டாட்டி டீ.. நான் கொடுத்து வைத்தவன்தான்.''

தனபாலன் பல்லைக் கடித்துக் கொண்டு கூ.. அடுத்து அவன் பக்கத்தில் நின்றிருந்தால்.. நேரக்கூடிய 'இன்னா'வை நினைத்து... பூமா அவசரமாய் வேலையிருப்பது போல் வனஜாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

''என்னக்கா... கூப்பிட்டிங்களா.''

அவளை எந்த அக்காவும் கூப்பிட்டிருக்க மாட்டா.. என்பது தனபாலனுக்கு நன்றாகத் தெரிந்திருந்த.. பெண்களின் சாதுர்யத்தை எண்ணி... தன்னை நொந்து கொண்டான் அவன்.

'சமயம் பார்த்து போட்டுத் தாக்குகிறாயா... எல்லாம் என் நேரம்டி.'



சற்றுத் தள்ளி நின்ற சுதாகரனை அவன் முறைப்பாய் பார்க்க.. அவன் தோள் மேல் ஒரு கை விழுந்தது. திரும்பிப் பார்த்தான். பூபாலன் நின்றிருந்தான். ஆதரவாய் கேள்வி வேறு கேட்டு வைத்தான்.

''எதற்குடா.. அந்த மனுசனை அந்தப் பார்வை பார்க்கிற?''

''இவன் வந்து... நமக்கு தங்கச்சி புருசனாக வாய்த்தானே...''

''எனக்கும் அதே நினைவுதான்.. என்ன நீ வாயைத் திறந்து சொல்லி விட்டாய்... நான் சொல்லவில்லை. அதுதான் வித்தியாசம்...''

''என்னைப் பார்த்தாலே நடுங்கும் என் பெண்டாட்டி என்கிட்ட இன்றைக்கு என்ன போடு போடுகிறாள் தெரியுமான்னே...''

''பூமா சாதுவாச்சே. அப்படி என்னடா சொல்லி விட்டாள்?''

''திருக்குறளையெல்லாம் சொல்கிறாள் அண்ணே.''

''ஏண்டா தம்பி.. திருக்குறளைச் சொன்னால் தப்பாடா?''

''ஏண்ணே... நீங்க வேற வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீங்க. அவள் என்னைக் கிண்டல் பண்ணுகிறாள்ன்னே.''

''சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது.. நீயாய் எதையாவது நினைத்து மனதை போட்டு உழப்பிக் கொள்ளாதே... எனக்கும் இப்படித்தான் இருந்தது.''

''எப்படி இருந்தது?''

''யார் எது சொன்னாலும்.. என்னைக் குறை சொல்வது போல் இருந்தது. அப்புறம் ஒரு கிளாஸ் எலுமிச்சை

ஜூஸ் குடித்தேன். தெம்பு வந்து விட்டது. உனக்கும் ஒரு எலுமிச்சம் பழம் கொண்டு வரச் சொல்லவா?''

''எதற்குத் தலையில் தேய்த்துக் குளிக்கவா?''

''அதை நாளைக் காலையில் நீயும் நானும் செய்யலாம். இப்போது அதைப் பிழிந்து அனுப்புகிறேன் குடி...''

மைத்துனன்மார்களை எலுமிச்சம் பழத்தை தேட வைத்த சுதாகரன். அவர்கள் பக்கம் ஓர் பார்வை பார்க்க.. தனபாலன் இன்னும் கடுப்பானான்.

## 17

'இந்த ஆள் என்னமோ ஹீரோ மாதிரி.. நான் என்னவோ வில்லன் மாதிரி.. அடிக்கடி இந்தப் பக்கம் இப்படி ஓர் பரர்வை பார்த்து வைக்கிறானே.. மனதிற்குள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்...'

மேற்கொண்டு சுதாகரனின் பார்வையைப் பற்றிய ஆராய்ச்சியை தனபாலன் தொடர முடியாமல் சோமசுந்தரம் அங்கே வந்து விட்டார். வந்த வேகத்தில் மகன்கள் இருவரையும் அழைத்து சத்தம் வேறு போட்டார்.

''டேய்.. பூபாலா.. தனபாலா.. இன்னும் இங்கே என்னடா பண்ணுகிறீங்க. அங்கே மண்டபத்தில் விருந்தாளிகள் வர ஆரம்பித்து விட்டாங்க. நானும் உன் அம்மாவும் வந்தவங்களை வாங்கன்னு சொல்லி வரவேற்று உட்கார வைத்துக் கொண்டிருக்கிறோம். அதில ஒரு நையாண்டி பிடித்தவன் ரிசப்ஷன் உங்களுக்கா.. இல்லை உங்கள் மகளுக்கான்னு கேட்கிறான். பெண்ணையும் மாப்



பிள்ளையையும் மண்டபத்துக்கு அழைத்துக்கிட்டு வாங்கடான்னு சொல்லிவிட்டுப் போனேனா இல்லியா.. இன்னும் இங்கே என்னடா புதையல் எடுத்துக்கிட்டு இருக்கீங்க...''

''அதுதான் புதையல் போல மாப்பிள்ளையே நமக்குக் கிடைத்து விட்டாரே.. இதைவிட வேறு என்ன புதையலைத் தோண்டி எடுக்கப் போகிறோம்'' பொறுக்க மாட்டாமல் தனபாலன் சொல்லி வைத்தான்.

''என்னடா.. விளையாட்டுத்தனமா பேசுகிறாய்.''

''ஏம்ப்பா நீங்க வேற... நாங்களா பெண்ணையும் மாப்பிள்ளையும் இங்கேயே இருக்க வைத்திருக்கிறோம். அங்கே பாருங்க.. இரண்டு பேரும் ஆளுக்கு ஒரு திசையை பார்த்துக் கொண்டு நிற்பதை... கிளம்புங்கன்னு சொன்னால் அதுகூட இந்த மாப்பிள்ளைகிட்ட தப்பாய் போயிடுமோன்னு... கிட்டப் போக பயந்துகிட்டு தள்ளி நின்று யோசித்துக்கிட்டு இருக்கோம் அப்பா...'' பூபாலன்... பிட்டு.. பிட்டு வைத்தான்.

''ஏண்டா... நம்ம மாப்பிள்ளை.. தங்க மாப்பிள்ளையாச்சே...''

''ஆமாம். அவரைக் கொண்டு போய் உங்க ஜவுளிக் கடை ஷோ ரூமில் வைங்க... வியாபாரம் இன்னும் பிச்சுக்கிட்டுப் போகும்.''

''பொறுடா பூபாலா... வீட்டுக்கு வரும் மாப்பிள்ளை கொஞ்சம் அப்படி.. இப்படி.. இருந்தால் நாம்தான் அனுசரித்துப் போகணும். பெண்ணைக் கொடுத்தோமா.. இல்லை பொன்னைக் கொடுத்தோமான்னு... நம்ம வீட்டுப் பெண்ணையில்ல அவருக்குக் கொடுத்திருக்கோம்?''

''அதை நினைத்துத்தான் நான் அடக்கி வாசிக்கிறேன். இல்லைன்னா அப்படியும்.. இல்லாம.. இப்படியும் இல்லாம.. எப்படியோ இருக்கிற இந்த மாப்பிள்ளைக்கு எப்போதோ பாடம் கற்பித்து இருப்பேன்...''

தனபாலன் தன்னை எந்த அளவுக்கு அடக்கிக் கொண்டிருக்கிறான் என்பது அவன் கை முஷ்டியை இறுக்கி.. மடக்கிப் பிடித்திருப்பதில் தெரிந்தது. பூபாலனோ... கண்ணீர் மல்காத குறையாய் நின்றிருந்தான்.

சோமசுந்தரம் துணுக்குற்றார். மருமகள்களை அழைத்தார்.

''ஏம்மா வனஜா.. இது என்னம்மா புதுக்கதையாய் இருக்கு? உன் புருசன் என்னவோ.. இப்படிப் புலம்புகிறானே.. என்ன நடந்தது..?''

வனஜா சுதாரித்துக் கொண்டாள். கணவனை விழிகளில் எச்சரித்தவாறு..

''அது ஒன்றும் இல்லை மாமா.. உங்கள் மகன்.. இத்தனை நாளாய் எங்கள் வீட்டு மாப்பிள்ளையாய் இருந்து பழகி விட்டார். இப்போது அவர் மாப்பிள்ளை உபசாரம் பண்ணனும்கிறபோது.. அவருக்கு அது வரவில்லை. அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை...'' என்று கூறினாள்.

''நீ சொல்லும்மா பூமா.. தனபாலன் ஏன் கோபமாய் இருக்கிறான்?''

''அவர் கோபப்படுவதற்கு காரணம் வேறு வேண்டுமா மாமா?''

மருமகள்களின் பதில்களில் சமாதானம் ஆகிவிட்ட சோமசுந்தரம்... மணமக்களின் அருகே சென்றார்.



''என்னம்மா... பிருந்தா... மாப்பிள்ளையும் நீயும் தயாராகிட்டிங்களா... போகலாமா?''

''ஒ.. நாங்க அப்போதே ரெடிப்பா.. போகலாம்...''

''தனபாலா... பூபாலா...''

அவர் காரை எடுக்க மகன்களை அழைக்க... அவர்கள் இருவரும் ஆளுக்கு ஒரு திசையில் ஒளிந்து கொண்டனர்.

வனஜா... பூமாவின் காதில் கிசுகிசுத்தாள்.

''அடடா.. உன் புருசனும்.. என் புருசனும் ஆடுகிற ஆட்டம் இருக்கே.. கொஞ்சம் கூட நல்லா இல்லை.''

''இதை உங்களால் உங்க புருஷன்கிட்ட சொல்ல முடியும். என்னால் என் புருசனிடம் சொல்ல முடியுமா?''

''அதைச் சொல்லு...''

பிருந்தாவிற்கு அண்ணன்களின் ஒளிதலைக் கண்டு சிரிப்பு வந்தது. மெதுவாக சுதாகரனுக்கு மட்டும் கேட்கும் வகையில் முணுமுணுத்தாள்.

''மைத்துனன்களை என்னமாய் அரட்டி வைத்திருக்கிறீங்க. உங்களை கூப்பிட்டுக் கொண்டு வருகிற பொறுப்பை எடுத்துக் கொள்ளனும்னால் இரண்டு பேரும் அலறுகிறாங்களே...''

பதிலுக்கு சுதாகரனும் மனைவிக்குக் கேட்கும்படி முணுமுணுத்தான்.

''இதில் என் பெருமை எதுவுமே இல்லைடி. நீ ஆட்டி வைத்தால் நான் ஆடுகிற பம்பரம்... சாட்டைக் கயிறு நீன்னு தெரியாமல்... என்னவோ என்னைப் போய் வேட்டைக்காரனைப் பார்ப்பது போல பார்த்துக்கிட்டு இருக்காங்களே.''

சோமசுந்தரம் மகன்களை காணாமல் விழித்தார்.

''ஏம்மா வனஜா.. இவனுகளை எங்கேம்மா காணோம்.''

வனஜா என்ன சொல்வது என்று புரியாமல் தவிக்க.. கபிலன் கை கொடுத்தான்.

''எதுக்கு சித்தப்பா அண்ணன்களைத் தேடுகிறீங்க...?''

''நம்ம பிருந்தாவையும்.. மாப்பிள்ளையையும் மண்டபத்துக்கு அழைத்துக் கொண்டு வரணும்பா.''

''இதுக்கு அண்ணன்கள் எதுக்கு? நான் அழைத்துக் கொண்டு வர மாட்டேனா... அண்ணன்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும் விட்டு விடுங்களேன்.''

சோமசுந்தரம் நிம்மதியுடன் கிளம்பிப் போய் விட்டார்.

கபிலன் சுதாகரனின் அருகில் வந்து மிக மரியாதையாய் சிரித்தான்.

''போகலாமா மாப்பிள்ளை...''

அருகில் கார்த்திகா இல்லையென்பதை உறுதிபடுத்திக் கொண்ட சுதாகரன் பதிலுக்கு மென்மையாய் சிரித்தான்.

''நீங்கள்தான் எனக்கு மாப்பிள்ளை...''

''அது நாளைக்கு... இன்றைக்கு நீங்கள் தான் ஹீரோ.. வாங்க போகலாம்.''

புதுமணத் தம்பதிகள் அமர.. மரியாதையாய்.. தன் வெளிநாட்டுக் காரின் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டான். அவர்களும் ஏறி அமர்ந்து விட்டனர்.

பிருந்தா அழைத்தாள் என்று கூடவே வந்த கார்த்திகா திகைத்து நிற்க.. கபிலன் இயல்பாக.. காரின் முன் பக்க கதவைத் திறந்து விட்டான்.



கார்த்திகா பின் வாங்கப் போக.. சுதாகரன் காரை விட்டு இறங்கப் போனான்... பிருந்தா அவனைத் தடுத்தாள்.

''என்னங்க.. நீங்க இறங்கப் போகிறீங்க.''

''கார்த்திகா உன் பக்கத்தில் உட்காரட்டும்.''

''ஏங்க... நாம் சேர்ந்து உட்காராமல்.. தனித்தனியே உட்கார்ந்து போவது சரியில்லைங்க.''

''என் தங்கை வராமல் நான் வரமாட்டேன்.''

''அவள்தான் வருகிறாளே...''

''அவள் எங்கே உட்கார்ந்து வருவாள்.''

இருவரும் கடுமையாய் முகத்தை வைத்துக் கொண்டு வழக்கடிக்க.. கார்த்திகா... தன்னால்தானே தகராறு என்று தர்ம சங்கடப்பட்டாள். சட்டென்று மனதை திடம் செய்து கொண்டு முன் பக்கம் ஏறி அமர்ந்து விட்டாள். கார் கதவை அதிராமல் சாத்திய கபிலனின் முகத்தில் பெரிய வெற்றியைப் பெற்று விட்டது போல் ஓர் பூரிப்பு இருந்தது.

தங்கையையும்.. சுதாகரனையும் நன்றியுடன் பார்த்தான் கபிலன்... அவர்கள் மூவரின் கண்களிலும் ரகசியப் புன்னகை இருந்தது. சுற்றி வந்து டிரைவர் சீட்டில் அமர்ந்து காரை எடுத்தான்.

அருகில் அமர்ந்திருந்த கார்த்திகாவை ஓரக் கண்ணால் பார்த்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான் கபிலன்.

தங்கையை.. அவளுடைய கணவனுடன் மணக் கோலத்தில் பார்த்து விட்டது போல் சுதாகரனுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது.

''தேங்க்ஸ் பிருந்தா..'' என்று மனைவியின் பக்கம் சரிந்து கிசுகிசுத்தான்.

''கார்த்திகா பார்க்கப் போகிறாள்...'' அவள் பதிலுக்கு கிசுகிசுத்தாள்.

சுதாகரன் பிருந்தாவின் கரத்தோடு தன் கரத்தை இணைத்துக் கொண்டான். அவள் சிலிர்த்துப் போனாள். மெதுவாக.. சுதாகரனின் பக்கம் நகர்ந்து நெருங்கி அமர்ந்து கொண்டாள். அவன் தோள் மேலே தலை சாய்த்துக் கொண்டாள்.

இதுதான் திருமண வாழ்வு தரும் பந்தமா? சுதாகரனின் மனம் சிறகடித்தது... இதுவரை அவன் மனதில் நெருடிக் கொண்டிருந்த கிலேசங்கள் பறந்து போக... கார்த்திகா அறிய மாட்டாள்... என்ற நிச்சயத்துடன் அவளது தோள்களைச் சுற்றி கை போட்டுக் கொண்டான்.

தூரத்தில் ரிசப்ஷன் நடக்க இருந்த மண்டபம் தென்பட்டது.

## 18

கபிலனின் கார் போனவுடன் பூபாலனும்.. தனபாலனும்.. அவரவர் அறைகளில் இருந்து வெளிப்பட்டனர். முகத்தில் 'அப்பாடா..' என்ற நிம்மதி தெரிந்தது.

''பேயைக் கண்டால் கூட பயப்படாத மனுசன்.. வீட்டு மாப்பிள்ளைக்கு இந்த பயம் பயப்படுகிறாராம். வெட்கக் கேடு...'' வனஜா தலையில் அடித்துக் கொண்டாள்.

''அரட்டல் எல்லாம் பெண்டாட்டியிடம் தான் போல.. தங்கை புருசன்கிட்ட உங்க அரட்டல் செல்லுபடி ஆகவில்லையாக்கும்'' பூமா.. பக்கத்தில் வனஜா இருக்கும் தைரியத்தில் வாயைத் திறந்தாள்.



''பேசுவடி.. பேசுவ.. நீ பேச.. நான் கேட்க வேண்டியிருக்கில்ல.. தனியாய் என்கிட்ட மாட்டுவ இல்ல.. அப்ப கவனிச்சுக்கிறேன்'' தனபாலன் மனைவியைப் பார்த்த பார்வையில் அவன் கவனித்துக் கொள்ளப் போகும் விதமே வேறு என்று தெரிந்தது.

பூமா. புதுப் புடவையில் ஒப்பனைப் பெண்ணின் உதவியுடன் வெகு அழகாகக் காட்சியளித்தாள்.

'இது என்ன மாயம்ன்னுதான் பிடிபட மாட்டேங்குது. இவள் விசேஷ நாட்களில் மட்டும் ரொம்பவும் விசேஷமாய் தெரிகிறாளே..'

கொழுந்தனின் முகபாவத்திலிருந்து அவனது மனநிலையை யூகித்துக் கொண்ட வனஜாவிற்கு சிரிப்பு வந்தது.

''ஏங்க.. உங்க தம்பி.. அவர் பெண்டாட்டியை கவனிக்கப் போகிறாராம். நீங்க.. என்ன செய்யப் போகிறீங்க...''

கேட்டவள்... அன்றுதான் மலர்ந்த பூப்போல் இருக்க.. பூபாலன் மயங்கிப் போனான்.

'இவளைப் பார்த்தால் இரண்டு பிள்ளைகள் பெற்றவள் என்று யாராவது சொல்லுவார்களா?'

''உன்னை பூப்போல அலுங்காமல் குலுங்காமல் என் காரில் மண்டபத்திற்கு கூப்பிட்டுக் கொண்டு போகப் போகிறேன்..'' அவன் மயக்கத்துடன் கூற...

''அப்போது.. உங்கள் பிள்ளைகள் இரண்டையும் யார் கூட்டி வருவது..'' என்று கடுப்பாகக் கேட்டான் தனபாலன்.

அது என்னவோ... மனைவியை மையலாகப் பார்த்தாலும்... முறைத்துக் கொண்டே பார்த்து வைக்கும்

தனபாலனுக்கு... எதையும் வெளிப்படையாகப் பேசப் பூபாலனைக் கண்டு எரிச்சல் வந்தது.

"உன் வீட்டுக்காரர் ரொம்ப கோபமாய் இருக்கிறார் போல இருக்கிறது. நீ வேண்டுமானால் எங்க கூட காரில் வந்து விடுகிறாயா...?"

"ஆமாம் அண்ணி.. அண்ணன் மட்டும் இரண்டு பிள்ளைகளைக் கூட மறந்து விட்டு உங்களுடன் ஜோடி போட்டுக் கொண்டு கிளம்புவார். நான் தனியே... தன்னந்தனியேன்னு.. வந்து சேரணுமா? எல்லாம் என் பெண்டாட்டி பிள்ளையை நான் கூப்பிட்டுக் கொண்டு வர எனக்கு வழி தெரியும். நீங்க கரிசனத்தைப் பிழி யாமல் கிளம்புங்க..."

வனஜா எதிர்பார்த்தது போல் தனபாலன் பொரிய... பூமாவைப் பார்த்து ரகசியப் புன்னகை புரிந்தாள் வனஜா.

"அது சரி... ரிசப்சனுக்கு போக வேண்டிய பெண் ணையும்... மாப்பிள்ளையையும் மண்டபத்துக்கு கூப் பிட்டுக் கொண்டு போக வேண்டுமென்றால் அண்ண னும் தம்பியும் போட்டி போட்டுக் கொண்டு போய் ஒளிஞ் சுக்கங்க... பெண்டாட்டியைக் கூப்பிட்டுக் கொண்டு போக... முதல் ஆளாய் வந்து விடுங்க... உங்க தங்கை கொடுத்து வைத்தவள்தான். அப்பேர்பட்ட அண்ணன் களோடு பிறந்திருக்கிறாளே,... ம்ஹூம்.. வாங்க. போகலாம்."

வனஜா தோள்பட்டையில் ஓர் இடி இடித்துக் கொண்டு கிளம்பினாள். அண்ணனும்.. தம்பியும்.. அவரவர் குடும்பங்களுடன் மண்டபத்திற்குப் போய் இறங்கினார்கள்.

மேடையில் சுதாகரனும்.. பிருந்தாவும் சிரித்த முகத் துடன் மேடைக்கு வந்து பரிசு கொடுத்தவர்களிடம்



பரிசுகளை வாங்கிக் கொண்டு.. அவர்களுடன் போட் டோவிற்கும்.. வீடியோவிற்கும் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்... கார்த்திகாவை இரும்புப் பிடியாய் பிடித்து தன் அருகில் நிற்க வைத்துக் கொண்டிருந்தாள் பிருந்தா... அவள் நகர முற்பட்டால் அழுகுரலில் அவள் காதோரம் கிசுகிசுத்தாள்.

"நீ பக்கத்தில் இருப்பதால் உன் அண்ணன் சிரித்த முகத்துடன் இருக்கிறார் கார்த்திகா... நீ நகர்ந்து விட்டால்.. பழைய கதை திரும்பி விடும். சிடுசிடுவென்று ரிசப்ஷன் மேடையென்றும் பார்க்காமல் என்னை திட்ட ஆரம்பித்து விடுவார். இந்த போட்டோ.. வீடியோவெல்லாம்.. காலம்.. காலமாக நம்மிடம் இருக்கப் போகிறவை. இதில் அவர் மலர்ந்த முகமாய் இருக்க வேண்டாமா?"

பிருந்தா சொல்வதிலும் உண்மை இருக்கிறது என்பதை உணர்ந்த கார்த்திகா அவளை விட்டு நகரவில்லை. கபிலன் இயல்பாக மாப்பிள்ளைத் தோழனாக சுதாகர னின் அருகே நின்று கொண்டான்.

வந்த விருந்தினர்கள்.. பிருந்தா.. சுதாகரனின் ஜோடிப் பொருத்தத்தை பாராட்டிப் பேசிக் கொள்ளும் போதே.. கார்த்திகாவையும் கபிலனையும் கவனித்துப் பேசிக் கொண்டனர்.

"யாரு அது.. பெண்ணுக்குப் பக்கத்தில்... அவளைப் போலவே நகை போட்டு அழகாய் நிற்பது..?"

"உனக்குத் தெரியாதா? அதுதான் பெண்ணோட நாத்தனார்."

"மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் நிற்கிறது யாரு...?"

"பெண்ணோட ஒண்ணு விட்ட அண்ணன்."

"இவங்க பொருத்தத்தைப் போல... அவங்க பொருத்தமும் சிறப்பா இருக்கே."

"சிறப்பா.. இருக்குதுதான். ஆனால்.. இந்தப் பெண்ணுக்குக் கல்யாண மேடை வரை வந்த கல்யாணம் நின்று போய்விட்டது. அந்தப் பையனோ பெரிய கோடீஸ்வரன். இந்த ஜோடி சேர முடியாத ஜோடி."

ஆனால்.. அது சேர முடிகிற ஜோடி என்பதை அறிந்த கபிலன்.. வாசல் பக்கம் பார்த்துக் கையாட்டினான். கல்யாண சுந்தரமும்.. காமாட்சியும் உள்ளே வந்து கொண்டிருந்தனர். வரும்போதே மேடையில் நின்ற கார்த்திகாவைப் பார்த்து விட்டனர்.

"கல்யாணத்தில் பார்த்ததைவிட.... இன்றைக்கு இந்தப் பெண் ரொம்பவும், அழகாய் தெரிகிறாளே..." என்றாள் பார்வதம்.

"அன்றைக்கு ஒதுங்கி.. ஒதுங்கிப் போனாள். இன்றைக்கு அழகுக்கு அழகு சேர்த்து.. நம்ம பிருந்தா மேடையில் நிற்க வைத்து விட்டாள். உன் மகன் பார்த்து பார்த்து வாங்கி வந்திருக்கும் வைர நகைகளை வேறு போட்டுக் கொண்டிருக்கிறாள். அப்புறம் ஜொலிக்க மாட்டாளா.." கலயாணசுந்தரம் மனைவிக்கு பதில் கூறினார்.

"என்னவோ.. காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பிளேனிலேயே பறந்து கொண்டிருக்கிற உங்கள் மகன்.. இந்த மட்டிலும் கல்யாணத்திற்கு சம்மதித்தானே.. அதுவே எனக்குப் போதும்.."

"பெண் பார்க்க லட்சணமாக இருக்கிறாள். நல்ல குடும்பத்தில் பிறந்தவள்.. நம் பிருந்தாவின் நாத்தனார் வேறு... எனக்கும் மனம் நிறைவாக இருக்கிறது."



பணத்தினால் மட்டுமில்லாமல் குணத்தினாலும் பெரிய மனிதர்களாக இருக்கும் அந்தத் தம்பதியினர்.. தங்கள் மகனுக்கு ஏற்ற மனைவியாக கார்த்திகாவை மனதில் வரித்தனர்.

அதே சமயம் ரங்கசாமியும்.. பூங்கோதையும் மண்டபத்திற்குள் பிரவேசித்தனர். உள்ளே வந்தவர்கள்.. அமர்ந்திருந்த உறவினர்களிடம் உபசாரமாய் பேசிக் கொண்டிருந்தபோது தற்செயலாய் திரும்பி மேடையைப் பார்த்த பூங்கோதை அயர்ந்து விட்டாள்.

'நம்ம கார்த்திகாவா இது...?'

மனைவியிடம் எதையோ வினவிய ரங்கசாமி. அவள் பதில் சொல்லாமல் மேடையைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு.. அவளது பார்வை போன திக்கிலேயே தானும் பார்த்தார். ஆச்சரியப்பட்டுப் போனார்.

ஒப்பனைகளை தவிர்த்து... சாதாரண நிறத்தில் எளிமையான சேலைகளையும்.. சுடிதார்களையும் உடுத்தி.. நகைகள் அதிகம் அணியாமல் மூலையில் முடங்கிக் கிடந்த பெண்.. இவ்வளவு அழகாய்.. தலை நிறைய பூவோடு.. வைரங்கள் ஒளிர.. தேவதை போல் மேடையில் நிற்பதைக் கண்டவளுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"என்னடி கோதை இது அதிசயமாய் இருக்கு?"

"ஆமாங்க.. நானும் உங்களைப் போல்தான்.. திகைத்துப் போய் நிற்கிறேன்."

"நம்ம மருமகள் கெட்டிக்காரிடி. வந்த இரண்டு நாட்களில் கார்த்திகாவை மாற்றி விட்டாளே."

"நானும் அதைத்தான் நினைத்தேன்."

உள்ளேயிருந்து வந்த வனஜா.. ரங்கசாமியையும், பூங்கோதையையும் கண்டு.. அவசரமாய் வரவேற்க வந்தாள்.

''வாங்க சித்தப்பா.. வாங்க சித்தி.. இப்போதுதான் வருவதா? காலையிலேயே வருவதற்கு என்ன?''

''தோப்பில் காய் இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் வர முடியவில்லை.''

''என்ன சித்தி.. கார்த்திகாவையே பார்த்துக் கொண்டு நிற்கறீங்க.''

''அவள் வரும்போது நகைகளை எடுத்துக் கொண்டு வரவில்லையே.''

''அவள் போட்டுக் கொண்டிருப்பது பிருந்தாவின் நகைகள்.''

''அவள் நகை போடுவதை விட்டு ரொம்ப நாளாகிறது வனஜா...''

''எதற்குக் கண் கலங்குகிறீர்கள் சித்தி... கார்த்திகாவின் நல்ல மனத்திற்கு ஒரு குறைவும் வராது.''

அப்போது கல்யாணசுந்தரமும்.. காமாட்சியும் மேடையில் ஏறி.. மணமக்களுக்கு இருபுறமும் நின்று வீடியோவிற்கு போஸ் கொடுத்தனர்... பூங்கோதையும் வனஜாவும் அதைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

## 19

போட்டோவிற்கும்.. வீடியோவிற்கும் போஸ் கொடுத்த போது.. பார்வதம் மிக இயல்பாக கார்த்திகாவை அணைத்



துக் கொள்ள.. மாப்பிள்ளையின் பக்கம் நின்றிருந்த கல்யாணசுந்தரம்.. கபிலனை அணைத்துக் கொண்டார்.

பூங்கோதைக்கு எதுவோ மனதில் பட்டது. அவள் வனஜாவைப் பார்த்துக் கேட்டாள்.

''அந்தத் தம்பி யாரும்மா..?''

''அவர்தான் என் பெரிய மாமனாரின் ஒரே மகன்.. கபிலன்.''

''வெளிநாட்டிற்கெல்லாம் போய் வியாபாரம் பண்ணுதுன்னு பேசிக்குவாங்களே.. அந்தப் பிள்ளையா?''

''ஆமாம்.. சித்தி...''

வனஜாவை பர்வதம் அழைக்கவும் அவள் போய் விட்டாள். பூங்கோதை அங்கேயே ஒரு சேரில் அமர்ந்து மேடையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். காமாட்சி.. கார்த்திகாவிடம் எதையோ வினவுவதையும்.. அவள் மரியாதையுடன் பதில் சொல்வதையும் பார்த்தவள் கண் கலங்கினாள்.

''என்ன கோதை கண் கலங்குற? கண்ணைத் துடை.. கண்ணைத் துடை... இது நம்ம பையனின் ரிசப்ஷன். இங்கே உட்கார்ந்து கண் கலங்கலாமா?''

ரங்கசாமி.. மனைவியைக் கடிந்து கொண்டார்.

''நம்ம பெண்ணைப் பாருங்க.. துடைச்சு வைத்த குத்துவிளக்கு கணக்கா பளிச்சுன்னு இருக்கா. பிருந்தாவின் பெரியம்மா.. ஆசையாய் அவளைக் கட்டி அணைத்துக்கிறாங்க.. அவங்களும் பையனைப் பெத்தவங்க.. நம்ம பெண்ணுக்கு மட்டும்... நாம் அவசரப்பட்டு கல்யாண ஏற்பாடுகளை பண்ணாமல் இருந்திருந்தால் இப்போது.. நம் பெண் கல்யாணத்துக்கு தயாராய் இருந்திருப்பாள் இல்லையா.''

''நீ சொல்வது போல் அவள் தயாராக இருந்தாலும்.. அவங்க கோடீஸ்வர குடும்பம். நமக்கு ஏணி வைத் தாலும் எட்டாது.''

பூங்கோதை மௌனமாகி விட.. ரங்கசாமி.. அருகில் வந்து அமர்ந்த மற்றொரு உறவினரிடம் பேச ஆரம்பித்து விட்டார்.

மேடையில் கபிலன் ஜோக்குகளாக சொல்லிக் கொண்டிருக்க.. பிருந்தாவும்.. சுதாகரனும் சிரித்துக் கொண்டிருந்தனர். அமைதியான முகபாவனையுடன் நின்று கொண்டிருந்த கார்த்திகாவினால் கூட ஒரு கட்டத்திற்கு மேல்.. புன்னகைக்காமல் இருக்க முடிய வில்லை.

ஒரு கட்டத்தில் தன்னையறியாமல் அவள் கலகல வென்று சிரித்துவிட... கபிலன் தரையில் குனிந்து உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்.

''என்ன தேடுகிறீங்க அண்ணா..'' என்று வினவினாள் பிருந்தா.

''உன் சிநேகிதி சிரித்ததில் சிந்திய சில்லரைக் காசு களைத் தேடுகிறேன்'' என்று குறும்புடன் கூறிய கபிலன் கார்த்திகாவின் முகம் பார்க்க.. அவள் முகம் சிவந்தாள்.

அப்போது ஒரு உறவினர் குடும்பம் மேடையேறி வர பேச்சு திசை மாறவும் கார்த்திகா சமாளித்துக் கொண் டாள். ஆனாலும் ஊடே.. சுதாகரன் கேட்பதற்கு பதில் சொல்லும்போது.. அவனிருக்கும் திசை பக்கம் பார்க்கை யில் கபிலன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த கார்த்திகா தவித்துப் போனாள்.

'என்ன மாதிரியான பார்வை இது.. ஊடுருவும் பார்வை. ஏன் இப்படிப் பார்க்கிறான்..?' மனம் கலங்கினாள் கார்த்திகா



'என்னை இப்படிப் பார்க்காதே...' தனக்குள் சொல்லிக் கொண்டாள் அவள்.

'நான் பூக்கும் முன் கருகிய மலர்.. என்னைப் பார்த்து உனக்கு ஆகப் போவதென்ன.. வறண்டு கிடக்கும் தரிசு நிலத்தை.. மழை மேகமாய் உன் பார்வை சீண்டிப் பயன் என்ன ஆகப் போகிறது? பாறையில் ஊற்றுத் தோண்ட நினைக்கிறாயே... உன் பார்வையில் வேறு பெண்களே படவில்லையா...'

கார்த்திகாவிற்கு மூச்சுத் திணறுவது போல் இருந்தது... நல்ல வேளையாக.. கபிலன் இறங்கி.. மெல்லிசைக் கச்சேரி நடக்கும் இடத்திற்கு போய் விட்டான். கார்த் திகாவின் சுவாசம் சீரானது.

''உன் அண்ணன் ஏன் அங்கே போகிறார்..?'' சுதா கரன் வினவினான்.

''ஒருவேளை பாடப் போகிறாரோ என்னவோ...'' என்று பிருந்தா பதிலளித்தாள்.

''அவருக்குப் பாடத் தெரியுமா?''

''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? அந்தக் காலத்து டி.எம்.எஸ். பாடல்களில் இருந்து.. இப்போதைய ஹரி ஹரன்.. கிரிஷ் வரை.. எல்லோரின் பாடல்களையும் பாடுவார் தெரியுமா.''

''அப்படியா.''

சுதாகரன் ஆச்சரியமாக வினவியபோது.. உண்மையி லேயே.. கபிலன் மைக்கின் முன் நின்று பாட ஆரம்பித்து விட்டான். அவன் பார்வையோ கார்த்திகாவின் மேல் மையம் கொண்டிருந்தது. கார்த்திகாவின் மூச்சு மீண்டும் திணற ஆரம்பித்தது.

"காலங்களில் அவள் வசந்தம்...

கலைகளிலே அவள் ஓவியம்...

மாதங்களில் அவள் மார்கழி...

மலர்களிலே அவள் மல்லிகை...

பறவைகளில் அவள் மணிப்புறா...

பாடல்களில் அவள் தாலாட்டு...

கனிகளிலே அவள் மாங்கனி...

காற்றினிலே அவள் தென்றல்..."

கண்ணதாசனின் பாடல் வரிகள்.. கபிலனின் வாய் மொழியில் மெல்லிசையாய் தவழ்ந்து வந்தது. அங்கிருப் போர்களின் செவிகளில் நுழைந்தன. சுதாகரன்.. அவனது குரலினிமையில் சொக்கிப் போனான். கார்த்திகாவின் நெஞ்சம் அறியும். கபிலன் குறிப்பிடும் வசந்தம். ஓவியம்.. மார்கழி மாதம்.. மல்லிகை மலர்.. மணிப்புறா.. தாலாட்டு.. மாங்கனி.. தென்றல் காற்று... இவை எல்லாமே அவள்தான் என்பது அவன் அவளுக்காகப் பாடுகிறான் என்பதை அவள் அறிவாள். கபிலன் தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தான்.

"பால் போல் சிரிப்பதில் பிள்ளை – அவள்

பனிபோல் அணைப்பதில் கன்னி...

கண்போல் வளர்ப்பதில் அன்னை – அவள்

கவிஞனாக்கினாள் என்னை..."

சுதாகரன் திரும்பி அருகிலிருந்த பிருந்தாவை காத லுடன் பார்த்தான்... ஒரு கணம்.. கார்த்திகாவை மறந்து போனவளாய்... கணவன் கண்களில் பிரதிபலித்த அதே காதலை தன் கண்களில் பதிலுக்கு எதிரொலித்தாள் பிருந்தா.



மற்ற நேரமாக இருந்திருந்தால்.. கார்த்திகா அதைக் கவனித்திருப்பாள். இப்போது.. கபிலனின் பாடலின் கதாநாயகி... தான்தான் என்பதை உணர்ந்த மனத்தடு மாற்றத்துடன் அவள் இருந்ததால்.. தமையனையும்.. தோழியையும் அவள் கவனிக்கவில்லை.

கபிலனின் பாடல் முடிந்ததும்.. உறவினர் கை தட்டி ஆர்ப்பரித்தனர். வனஜாவும்.. பூமாவும்.. அங்கிருந்த சேர்களில் அமர்ந்து விட்டிருந்தனர்.

"என்னமாய் ரசித்துப் பாடுகிறார்..." என்றாள் பூமா...

"எனக்கென்னவோ.. இந்தத் தம்பி அனுபவித்துப் பாடுவதைப் பார்த்தால்.. அவர் மனதிலிருக்கும் பெண்.. இந்த மண்டபத்தில்தான் இருக்கிறாள் என்று தோன்று கிறது" வனஜா யோசனையுடன் கூறினாள்.

"இந்த மண்டபத்திலா.. சான்ஸே இல்லை..."

"இல்லை பூமா... எனக்கு நன்றாகத் தெரியும். யாரோ ஒரு பெண்.. இந்தத் தம்பியின் மனம் கவர்ந்தவள் இந்த மண்டபத்தில்தான் இருக்கிறாள்."

"ஏங்கா... கபிலனின் அழகுக்கும்.. பணத்திற்கும் ஏற்ற பெண். இந்த மண்டபத்தில் எங்கேயிருக்கிறாள். நீங்களே பார்த்துச் சொல்லுங்க... அவர் லெவல் என்ன...? அவர் போய். இந்தக் கூட்டத்தில் இருக்கும் பெண்ணைப் பார்த்துப் பாட்டுப் பாடுகிறதாவது."

"ஊஹூம்.. என் உள்ளுணர்வு சொல்வது என்றைக் கும் பொய்க்காது."

வனஜாவின் கண்கள் மண்டபத்தைச் சுற்றி வந்து கார்த்திகாவின் மேல் நிலைத்தன. அவளுக்குள் சந்தேகம் உதித்தது.

''ஏன் பூமா... அந்தப் பெண்.. கார்த்திகாவாக இருக்குமோ?''

''இல்லைக்கா... அப்படி இருக்காது... கார்த்திகாவின் கதை ஊரறிந்த ரகசியம் ஆயிற்றே.. அவள் கல்யாணத்தைத் தவிர்ப்பவள்.''

''அவள்தானே காதலையும்.. கல்யாணத்தையும் தவிர்க்கிறாள். நம் கபிலன் தவிர்க்கவில்லையே... வெளிநாட்டிலேயே பாதி நாட்கள் வாசம் செய்பவர். ராசியில்லாதவள் என்கிற பேச்சையெல்லாம் பொருட் படுத்துவாரா என்ன?''

''அப்படியும் இருக்குமோ..?''

''அப்படியும் இருக்க சான்ஸ் இருக்கிறது.''

''கார்த்திகா நல்ல பெண்தான்...''

''ம்ஹூம்... அவளுக்கு ஒரு நல்லது நடந்தால்.. நல்லதுதான்.''

இருவரும் மேடையை ஊன்றிக் கவனித்தனர். கபிலனின் பார்வை.. கார்த்திகாவை மொய்ப்பதையும்.. அவள் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு.. கல் போல் அசையாமல் நிற்பதையும் கவனித்தனர்.

''அக்கா.. அப்படி கபிலனின் மனதில் கார்த்திகா இருந்தால் அவர்பாடு திண்டாட்டம்தான்...'' என்றாள் பூமா.

''அதைச் சொல்லு... திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாள்.''

''கல்லில் இருந்து பூப்பறிக்க கபிலன் ஆசைப்படுகிறார்.

''காதல் கல்லையும் கரைக்கும்.. பார்ப்போம்.. கார்த்திகா கரைவாளா இல்லை... மறைவாளா என்பதை...''

வனஜா யோசனையுடன் கூறினாள்.





## 20



விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. கார்த்திகா பிருந்தாவின் அருகிலேயே அமர்ந்திருந்தாள். கபிலன் சுதாகரனை விட்டு அகலவே இல்லை. அவர்கள் நால்வருக்கும் பரிமாறிக் கொண்டிருந்தாள் வனஜா. கார்த்திகாவின் இலையில் இனிப்பைப் போடப் போனபோது.. அவள் கை நீட்டி மறுத்தாள். உடனே...

''ஸ்வீட்டை ஏன் வேணாம்ன்னு சொல்கிறாங்க... நீங்க அவங்க இலையில் போடுங்க அண்ணி'' என்றான் கபிலன்.

''அக்கா... எனக்கு வேண்டாம்'' என்று நிர்தாட்சண்யமாக மறுத்தாள் கார்த்திகா.

''நீங்க ஸ்வீட்டை அவங்க இலையில் வைக்கறீங்க...''

''அக்கா.. நீங்க என் இலையில் ஸ்வீட்டை வைக்கக் கூடாது.''

வனஜாவிற்கு இந்த மறைமுகப் பேச்சு வார்த்தை புரிந்து போனது. பூமாவைப் பார்த்து ரகசியமாய் கண் அடித்தபடி.. அவளும் அதில் கலந்து கொண்டாள்.

''அடடா.. என்னம்மா கார்த்திகா. நீயானால் ஸ்வீட்டை வேண்டாம் என்கிறாய்... அந்தத் தம்பி என்னவென்றால் நீ கட்டாயம் ஸ்வீட்டை சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்கிறார். ஊடே நான் என்ன செய்வது?''

''அக்கா... சாப்பிட வேண்டியவள் நான். எனக்கு எது வேண்டும்.. எது வேண்டாம் என்பதை.. நான்தான் முடிவு பண்ண வேண்டும்.''

''என்ன கபிலன்.. கார்த்திகா இப்படிச் சொல்கிறாளே...''

''அண்ணி.. எப்போதும்.. நம் உணர்வுகளையே.. நாம் முன்னிறுத்தக் கூடாது. கொஞ்சம் மற்றவர்கள் உணர்வு களையும் கவனிக்க வேண்டும்.''

''என்னம்மா கார்த்திகா.. தம்பி இப்படிச் சொல்கிறாரே.''

''அது அவர் கருத்து.. என்னைப் பொறுத்தவரை.. என் உணர்வுகளுக்குத்தான் நான் முதலிடம் கொடுப்பேன். ஸ்வீட் சாப்பிடுவதை வேண்டாம் என்று நான் தள்ளி வைத்து மாதக் கணக்காகிறது. மற்றவர்களுக்காக என்னை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன்.''

''இவள் சொல்வதும் சரிதானே தம்பி...?''

''என்னத்தை சரி..? விசேஷ வீடுகளில் ஸ்வீட் போடு வது எதற்கு? அதுவும் இலையில் முதலாவதாக ஸ்வீட்டை வைப்பது எதற்கு?''

''தம்பி கேட்பதற்கு பதில் சொல் கார்த்திகா...''

''அது எதற்காகன்னு எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.''

வனஜா இப்போது பேச்சைத் தவிர்த்து கபிலனின் முகத்தைப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்தது போலவே.. வனஜாவை ஊடாக வைத்துக் கொண்டுதான் கபிலன் பேசினான்.

''இப்படிச் சொன்னால் எப்படி அண்ணி.. இதற்குத் தான் தன்னிலேயே நிற்காமல்.. நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும் என்பது...''

''அப்படி மற்றவர்களை கவனிப்பது என் வழக்கமல்ல என்பதை சொல்லுங்கள் அக்கா...''



''ஊர் வழக்கத்தோடு அனுசரித்துப் போக வேண்டும் என்பதை நீங்களும் சொல்லுங்கள் அண்ணி.''

''ஊர் வழக்கத்தை ஏன் நான் என் வழக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேளுங்கள் அக்கா...''

''ஏனென்றால் இன்றைக்கு கல்யாண ரிசப்ஷன் நடப்பது... அவங்களுடைய அண்ணனிற்குத்தான் என்பதை.. நீங்கள் கொஞ்சம் சொல்லுங்கள் அண்ணி.''

''மொட்டைத் தலைக்கும்.. முழங்காலுக்கும் ஏன் முடிச்சுப் போடுகிறார் என்று கேளுங்கள் அக்கா...''

''மொட்டைத் தலையும்.. முழங்காலும்.. ஒரே உடம்பில் இருக்கிறதால்தான் என்பதை நீங்களும் சொல்லுங்கள் அக்கா.''

''விளங்குவது போல் பேச... அவருக்கு வராதா என்று கேளுங்கள் அக்கா...''

''மொட்டைத் தலையும்.. முழங்காலும் போல் மேடும்.. அவங்க அண்ணனும்.. உடன் பிறந்தவர்கள்தானென்் பதை சொன்னேன் அண்ணி.''

''என் அண்ணனின் கல்யாணத்தில் கூட நான் இனிப்பை தவிர்த்தேன் என்பதை சொல்லுங்கள் அக்கா...''

''அப்போது நான் அங்கு இல்லை அண்ணி.''

''இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் அக்கா.''

''இப்போது போல் அப்போதும் வழக்கடித்திருப்பேன் அண்ணி.''

''வழக்கடிப்பதுதான் அவர் தொழிலா? அவர் என் னவோ பிஸினெஸ்மேன் என்று பிருந்தா சொன்னாளே.. அது பொய்யா அக்கா.''

கார்த்திகாவின் கிண்டலைப் புரிந்து கொண்ட கபில னின் விழிகள் மின்னின. என்னமாய் பேசுகிறாள்... இத் தனை புத்திசாலித்தனத்தையும் மழுங்கடித்துக் கொண்டு மூலையில் முடங்குவது அநியாயம் அல்லவா?

''நான் லாயர் இல்லை. பிஸினஸ் மேன்தான் அண்ணி. அதனால் நியாயத்தைச் சொல்லக்கூடாது என்றிருக் கிறதா.. லாயர்தான் நியாயம் பேச முடியுமா அண்ணி...''

''நான் ஸ்வீட் சாப்பிடாவிட்டால் நியாயத்திற்கு என்ன குறை வந்து விட்டதாம் அக்கா...''

''பின்னே இல்லையா... திருமணமாகும் மணமக் களின் வாழ்க்கை இனிப்பாக என்றும் இருக்க வேண்டும் என்றுதான் அனைவரின் இலைகளிலும் முதலில் இனிப்பை வைப்பார்கள். விருந்து சாப்பிடுகிறவர்களின் வாயில் இனிப்பு கரையும்போதே.. வாழ்வில் இணைகிற வர்களின் வாழ்வும் இனிப்பாகி விடும்.. என்பது பெரிய வர்களின் வாக்கு அண்ணி. அதை விட்டுவிட்டு அண்ணன் கல்யாணத்திலேயே இனிப்பைத் தவிர்த்து விட்டேன் என்று இவங்க பெருமை பேசிக் கொள்கிறார்களே. இப் படியொரு பாசமலர் தங்கையை இப்போதுதான் பார்க் கிறேன். என்னம்மா பிருந்தா.. உன் தோழிக்கு அண்ணன் என்றால் உயிர் என்று பெருமை பீற்றிக் கொள்வாயே.. கடைசியில் இவ்வளவுதானா இவங்க பாசம்?''

கார்த்திகாவிற்கு 'திக்'கென்று இருந்தது... ஒரு வேளை.. அண் தான் இனிப்பை மறுத்ததால்தான்.. பிருந்தாவும்.. அண் ணனும்.. திருமணமான மறுநாள் காலையிலேயே சண்டை போட்டுக் கொண்டார்களோ.

அவள் கலக்கத்துடன் தோழியைப் பார்த்தாள். அந் தான் சாக்கென்று பிருந்தா முகத்தை சோகமாக வைத்துக்



கொண்டாள். சந்தர்ப்பம் கிடைத்தது என்று சுதாகரன் முகத்தில் கடுமையுடன் பிருந்தாவைப் பார்த்தான்.

வனஜாவின் ரகசிய சமிக்ஞை கிடைத்ததுமே.. பூமா அவர்களுக்கு அருகில் வந்து விட்டாள். பேச்சுக்கு.. 'அக்கா' 'அண்ணி' என்று அழைத்துக் கொண்டு கார்த்தி காவும்.. கபிலனும் வழக்கடித்ததை சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல.. மெல்ல.. அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்த இரு வீட்டுப் பெரிய வர்களும் இந்த வழக்காடு மன்றத்தைக் கவனிக்க ஆரம் பித்து விட்டனர்.

கார்த்திகா என்னதான் செய்யப் போகிறாள் என்பதை அறிந்து கொள்ள அனைவருக்குமே ஆவலாக இருந்தது.

கார்த்திகா தோழியின் சோகமான முகத்தைக் கவனித் தாள். சுதாகரனின் கடுமையான முகத்தையும் பார்த்தாள். அவர்களது திருமணத்திற்கு தான்தான் பாடுபட்டோம் என்பது அவளுக்கு நினைவில் நின்றது.

'கார்த்திகா.. கல்யாணம் என்று ஒன்று என் வாழ்வில் நடந்தால் அது உன் அண்ணனோடு மட்டும்தான்...' பிருந்தாவின் குரல் மனதில் எதிரொலித்தது.

'உனக்காகத்தான் நான் இந்த திருமணத்திற்கு சம் மதித்து இருக்கிறேன். அண்ணா.. எனக்காக இதைச் செய்.. என்று நீ கேட்பதால் மட்டுமே நான் இதைச் செய்கிறேன்....' சுதாகரன் சொன்னது நினைவில் சுழன்றது.

'இவர்கள் இருவரும் என் உயிரானவர்கள்... இவர்களது இன்பமான வாழ்வு.. என் சிறு செயலால் தடைபடுவதா.. இவர்களது நல்வாழ்விற்காக நான் என் உயிரையே தியாகம் பண்ணுவேனே... என் கொள்கையை தியாகம்

பண்ண மாட்டேனா..?' கார்த்திகா முடிவெடுத்து விட்டாள்.

"அக்கா... இனிப்பைப் போடுங்கள். பிருந்தா நன்றாக வாழ வேண்டும்."

கார்த்திகாவின் சொல் கேட்டு... வனஜாவின் கண்கள் பனித்துவிட்டன. 'இந்தப் பெண்ணிற்குத்தான் எப்பேர்பட்ட மனது...? இதுவரை கடைபிடித்த வழக்கத்தை கண நேரத்தில் தன் தோழிக்காக தூக்கி எறிகிறாளே. இவளது அருகாமையில் பிருந்தா நன்றாகத்தான் வாழ்வாள். அத்தோடு இவளும் நன்றாக வாழ வேண்டும்.'

கார்த்திகா இனிப்பை சாப்பிட ஆரம்பிக்க.. பூங்கோதை ரகசியமாய் விசும்பினாள். அருகில் அமர்ந்திருந்த ரங்கசாமி அவளை அதட்டினார்.

"கண்ணைத் துடைச்சுக்க கோதை... இது கல்யாண வீடு..."

"கார்த்திகா இனிப்பை சாப்பிட்டு விட்டாளே..."

"இது ஏதோ நன்மை நடப்பதற்கான அறிகுறி."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது..."

கார்த்திகா இனிப்பைச் சாப்பிடுவதை பாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்த சுதாகரனின் விழிகள் நன்றியுடன் கபிலனை நோக்கின... கபிலன் தன் விழிகளை மூடித் திறந்து... அவனுக்கு நம்பிக்கை அளித்தான்.

தோழி இனிப்பு சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த பிருந்தாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது.

'எனக்காக இன்று இதைச் செய்கிறாய். நாளை நான் நினைப்பதையும் நீ செய்வாய்.'



# 21

இரவின் இதமான அமைதி... அறையினில் ஒளியின் மெல்லிய சப்தம். நாசியை வருடும் மெல்லிய நறுமணம். முதல் நாள் போல் விலகிச் செல்லாமல்.. கைகளில் அடங்கிய மனைவி.. அவளது கூந்தலில் இருந்து வரும் பூவாசம்... அவள் மேனியின் ஸ்பரிசம் தரும் சுகம்...

சுதாகரன் கிறங்கிப் போயிருந்தான். முதலிரவில் கூட இவ்வளவு மோகத்துடன் மனைவியை நெருங்கியிருக்க மாட்டான். அவ்வளவு தாபத்துடன் அவளை நாடினான் அவன்...

"பிருந்தா..." அவனது சூடான மூச்சு... கன்னத்தில் பட... பிருந்தாவின் மேனி மெலிதாக நடுங்கியது. தன் மேல் சரிந்தவளின் முடி கோதி... அதில் முகம் புதைத்தான் அவன்.

"கார்த்திகாவிற்காக... நாம் விலகியிருக்க வேண்டும் தான். அதற்காக இந்த சிறு அணைப்பைக் கூட வேண்டாம் என்று சொல்லிவிடாதே..."

"எதையுமே நான் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை..."

"நீ என்ன சொல்கிறாய்... சாயங்காலம் வேறு மாதிரி சொன்னாயே... இப்போது ஏன் இப்படிச் சொல்கிறாய்?"

"ம்ம்... இப்போது என் முடிவை மாற்றிக் கொண்டு விட்டேன்."

''எனக்காகவா... வேண்டாம் பிருந்தா... கார்த்திகா வாழாத வாழ்வை நாம் வாழ வேண்டாம்.''

பிருந்தா திரும்பி.. கணவனின் முகம் பார்த்தாள். பின் காதலுடன் அவனது மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். அவளது முகத்தை நிமிர்த்தி முகத்தோடு முகம் வைத்துக் கொண்டான் சுதாகரன்...

''கார்த்திகாவிற்கு சந்தோசம் கிடைக்க வேண்டுமென்றால்... நாம் சந்தோசமாய் இருந்துதான் ஆக வேண்டும்.''

''எனக்குப் புரியவில்லையே...''

''புரியும்போது புரியும்...''

''ஊஹூம்.. என்னால் என்னவென்று தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. என் மனதில் கார்த்திகாவின் வாழ்க்கையைப் பற்றிய கவலை வந்து விட்டது.''

''நான் இருக்கிறேன் அத்தான். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''என்னிடம் சொல்ல மாட்டாயா?''

''இப்போது சொல்ல மாட்டேன்.''

''வேறு எப்போது சொல்வாய்...''

பிருந்தா முகம் சிவக்க... சுதாகரனின் காதுகளில் ரகசியமாய் கூறினாள்.

''நான் உங்கள் குழந்தைக்குத் தாயாகப் போகிறபோது...''

அவள் கூறியதைக் கேட்ட சுதாகரனின் காது மடல்கள் சூடாகின. அவன் பிருந்தாவை இழுத்து அணைத்துக் கொண்டான்.

சில நேரம்... தீயை... தீதான் அணைக்கும்.. சுதாகரனிடம் பற்றிக் கொண்ட மோகத்தீ... பிருந்தாவிற்குள்ளும்



பரவி.. பற்றிக் கொண்டது.. தீயை தீயே.. எதிர் கொண்டது... விடியலின் அருகாமையில் தீ அணைந்தது.

காலையில் அறைக்கதவு தட்டப்பட.. பிருந்தா விலகி எழ முயன்றாள். சுதாகரன்.. அவளது கை பிடித்துத் தடுத்தான்.

''கையை விடுங்கள்.. கதவைத் தட்டும் சத்தம் கேட்கவில்லையா?''

''ஒரு முத்தம் கொடுத்து விட்டுப் போ...''

''கொடுப்பேன். ஆனால் முகத்தை தேன் குடித்த நரிபோல் வைத்துக் கொள்ளாமல்.. கடுகடுவென்று வைத்துக் கொள்ள வேண்டும்.. சரியா?''

''அது எதற்குடி.''

''அப்படித்தான்.. சொன்னதைச் செய்யுங்கள்.''

''ஏண்டி.. உன்னைப் பார்த்தால் எனக்கு முறைக்கத் தோன்ற மாட்டேன் என்கிறதே.. நான் என்ன செய்ய..?''

''முறைத்துத்தான் ஆக வேண்டும்.''

''நாளைக்கே.. நான் அப்பனாகப் போகும் நிலை வரும்போது நான் வேசம் போடுகிறேன் என்று சொல்லி விட மாட்டார்களா?''

''அப்போது என்ன செய்ய வேண்டும் என்று நான் டைரக்ஷன் கொடுக்கிறேன்.''

''சரி விடு. நீ டைரக்டர்.. நான் நடிகன். நீ சொல்வதை செய்து விட்டுப் போகிறேன்.. இப்போது நான் சொன்னதை நீ செய்...''

அவன் சொன்னதை நிறைவேற்றி விட்டு பிருந்தா எழுந்து சென்று கதவைத் திறந்தாள். வனஜா சூடான

காபியுடன் நின்றிருந்தாள். காபி டிரேயை வாங்கிக் கொண்டு திரும்பிய பிருந்தா முகத்தை சோர்வாக வைத்துக் கொண்டாள்.

"ஏன் என்னவோ போல் இருக்கிறாய்."

"ஒன்றுமில்லை அண்ணி..."

"ஒன்றுமில்லை அண்ணி..."

"என்னிடம் சொல்லக் கூடாதா?"

"என்னிடம் சொல்லப் போகிறேன்...?"

"புதிதாய் என்ன சொல்லப் போகிறேன்...?"

"இன்னும் உன் புருசன் மலையிறங்கவில்லையா..."

'அவர் மலையேறினால் தானே.. இறங்க முடியும்..' மனதிற்குள் நகைத்துக் கொண்டாள் பிருந்தா.

"என்னம்மா... எதுவும் பேச மாட்டேன்.. என்கிறாய்..."

"என்னத்தைச் சொல்ல அண்ணி.. இவர் கலகலப்பாகவே பேச மாட்டேன் என்கிறார்.. உர்ரென்று இருக்கிறார்."

"வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்காமல்.. வெளியே சுற்றிவிட்டு வாங்களேன்."

"யார் கூடப் போவது?"

"என்னம்மா கேள்வி இது. உன் புருசன் கூடத்தான் போகணும்."

"இவர்கூடப் போகச் சொல்கிறீங்களா... எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விடும்... சரியான உம்மணாம் மூஞ்சி..."

"மெல்லப் பேசம்மா... உன் புருசன் காதில் விழுந்து விடப் போகிறது..."

"விழுந்துட்டாலும்..."

பிருந்தா அலுப்புடன் சொல்வது போல் சொல்லிக் கொண்டு அறையினுள் பார்த்தாள். அவள் பேசுவதை

[illegible]

அந்த உம்மணாம் மூஞ்சி [illegible] பார்த்துக் கொண்டிருந்து விட்டு.. கண நேரத்தில் சிடுமூஞ்சியாய் மாறி கடுகடுத்தான்.

"நீ உன் அண்ணியுடன் பேச வேண்டுமானால் ரூம் கதவை மூடிவிட்டு வெளியே போய் பேசு... மனிதன் தூங்க வேண்டாமா? சும்மா காதோரமாய் நொன.. நொனன்னு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?"

நாத்தனார் கணவனின் முகத்தை ஆராய்ச்சியாய் பார்த்தபடி நின்று கொண்டிருந்த வனஜா... நாத்தனாரிடம் கிசுகிசுப்பாய் வினவினாள்.

"என்னம்மா இது... காதோரம்தான் நான் பாடுவேன்னு பாடி மயக்கி வைப்பாய்ன்னு பார்த்தால்.. அது முடியாது போல இருக்கே.. காதோரமாய் பேசினால் கத்துவார் போல இருக்கே..."

"ஆமாம் அண்ணி... இப்படித்தான்.. எதற்கெடுத்தாலும் பிடுங்குகிறார்."

உள்ளே படுத்துக் கொண்டிருந்த சுதாகரன்.. அப்படி என்னத்தை இவளிடம் இருந்து பிடுங்கி விட்டோமென்று யோசித்துக் கொண்டிருந்தான்.

'ஒருவேளை... இவளது மனதைப் பறித்துக் கொண்டு விட்டதைத்தான் பிடுங்கி விட்டதாகச் சொல்கிறாளோ...'

"அதற்குத்தான் சொல்கிறேன். வெளியே காற்றாட கூட்டிக் கொண்டு போய் விட்டு வா."

தன்னை என்னவென்று இந்த மைத்துனனின் மனைவி நினைத்து விட்டாள் என்று அவனுக்குக் கோபம்... கோபமாக வந்தது.

கிறாரே...''

''கார்த்திகாவையும் கூப்பிட்டுக் கொண்டு போ.''

''எதற்கு அண்ணனும் தங்கையும் சோக கீதம் பாட.. நான் கூடப் போய் வயலின் வாசிப்பதற்கா?''

''அதற்கும் ஒரு வழி இருக்கிறது...''

''என்ன வழி அண்ணி...''

''நேற்று இரவு விருந்தில் பார்த்தாயில்லை...?''

''ஆமாம் அண்ணி... வெஜிடபிள் பிரியாணி.. அடை... பாதாம் அல்வா... பணியாரம் எல்லாம் சூப்பராக இருந்ததே...''

அறியாதவள் போல் பிருந்தா சொல்ல.. வனஜா பல்லைக் கடித்தாள்.

''இப்படி நீ சாப்பாட்டு ராமியாக இருந்தால் உன் புருசன் கடுவன் பூனையாக இல்லாமல் வேறு எப்படி இருப்பார்?''

இன்னும் இந்தப் பெண் தனக்கு என்னவெல்லாம் பட்டம் கொடுக்கக் காத்திருக்கிறாளோ என்று சுதாகரன் நொந்து போய் விட்டான்.

''ஸாரி... அண்ணி... நீங்கள் என்ன சொல்ல நினைக்கி றீங்க.''

''கபிலன் எப்படி.. கார்த்திகாவையே இனிப்பு சாப்பிட வைத்தார்ன்னு பார்த்தாயில்லை...? நீ கபிலனையும் உட களுடன் கூப்பிட்டுக் கொண்டு போ... அவர் கார்த்திகாவை சோகரசம் பிழிய விட மாட்டார். தங்கை சிரித்தால் உ புருசன் தானாகச் சிரிப்பார். அப்புறம் என்ன...''



ஐடியா சூப்பர் அண்ணி...''

காபி ஆறிப் போய் விட்டதா.. என்ற கவலையுடன்.. அறைக்கதவை மூடிவிட்டு.. அன்புக் கணவனுக்கு காபி கொண்டு போனாள் பிருந்தா.

# 22

''காபி என்ன நிலைமையில் இருக்கிறது...?'' சுதாகரன் சூடாகக் கேட்டான்.

''உங்களைப் போலவே சூடாக இருக்கிறது...'' கணவனின் கோபம் புரிந்து பதில் சொன்னாள் பிருந்தா.

கோபத்துடன் பேசப்போன கணவனின் கைகளில் காபியை திணித்தாள் பிருந்தா.

''எது பேசுவதாக இருந்தாலும் காபியைக் குடித்து விட்டுப் பேசுங்க. இரண்டாவது பேச்சு வார்த்தைக்கு காபி தாங்காது.''

காபிப் பிரியனான சுதாகரனுக்கும் அதுவே சரியென்று தோன்றிவிட காபியை வாங்கிக் குடிக்க ஆரம்பித்தான்.

''இப்போ என்ன வேண்டுமானாலும்.. உங்கள் ஆசை தீரத் திட்டுங்க...''

''ஆசை தீர வேண்டுமானால் திட்டக் கூடாதே...''

அவன் பிருந்தாவை அருகே இழுத்துக் கொண்டான்... சற்று நேரம் கழித்த பின்.. பிருந்தா... கணவனின் காதோரமாகக் கூறினாள்.

''எனக்குக் காதோரமாய் பாடத் தெரியாதாம்.. அண்ணி சொல்கிறாங்க.''

''உன் அண்ணி அதை மட்டுமா சொன்னாங்க... என்னைக் காற்றாட வெளியில் கூப்பிட்டுக் கொண்டு போகச் சொன்னாங்களே... நான் குணசீலத்தில் இருக்க வேண்டியவன்னு முடிவே பண்ண வைத்து விட்டாயா?''

''அவங்க பேசியதைக் கேட்டு விட்டிங்களா?''

''இதை மட்டுமா கேட்டேன்...? இன்னும் கடுவன் பூனை... உம்மணாம் மூஞ்சி... சோகரசம் விழியும் பாச மலர்ன்னு எல்லாத்தையும் கேட்டேனே...''

''ஸாரி... ஸாரி...''

''அதுக்கு ஏன்டி.. இப்படி இழையறே...''

''நாங்க மெதுவாகத்தானே பேசினோம்?''

''அப்படி நீயாக நினைத்துக் கொண்டு... இனி மேல் ரகசியம் பேசாதே.''

''என் ஹஸ்பெண்ட் என்னைப் புரிந்து கொள்வாங்கிற நம்பிக்கைதான்.''

''இதை ஒன்றைச் சொல்லி... என் வாயை தைத்துவிடு...''

''உங்கள் வாயைத் தைக்க ஊசியால் முடியுமா?''

''உன்னால் மட்டும்தான் முடியும்..''

''அதுதான் தெரிகின்றதே. நேற்று சாயங்காலம் வரை நீங்கள் படுத்திய பாடு இருக்கிறதே... அப்பப்பா.. யாருக்கும் பயப்படாத பீம சேனன்கள்.. என் அண்ணன்கள்.. அவர்களையே பயமுறுத்தி.. ஆளுக்கு ஒரு மூலில் ஒளிய வைத்தீர்களே.. கபிலன் அண்ணா வந்தாரோ.. நான் பிழைத்தேனோ.''

''நானும்தான் பிழைத்தேன்... நம் காதலும் சேர்ந்து பிழைத்தது...''



''நம் காதலா...? என் காதல்...''

''உன்னுடையது எல்லாம் இனி என்னுடையதுதானே...''

''கெட்டிக்காராதான்...''

''நீ மட்டும் அப்பாவியாகரும். இப்போது கேட்டு
வைத்தாய் பார் ஒரு கேள்வி.. உன் அண்ணி நேற்று இரவு
விருந்தைப் பற்றிக் கேட்டால்... வெஜிடபிள் பிரியாணி
குப்பான்னு... உன் அண்ணி வேண்டுமானால் உன்னை
அப்பாவின்னு சொல்லலாம். தாலி கட்டிய முதல் மூனு
நாட்களும் தலையாலே தண்ணீர் குடிக்க வைத்தாயே..
நான் உன்னை அப்பாவின்னு சொல்லவே மாட்டேன்...''

''ஓகே.. மச்சான்.. குளித்து விட்டு வாங்க... நாம் வெளியே கிளம்ப வேண்டும்.. அதற்காகத்தானே.. கால் கடுக்க அண்ணியுடன் நின்று திட்டம் போட்டேன்..?''

''எங்கே போகலாம்?''

''பக்கத்தில்தானே பழனி இருக்கிறது. கோவிலுக்குப் போய் விட்டு வரலாமா?''

''யெஸ்.. கோவிலுக்கு போவது என்றால்.. கார்த்திகாவைக் கிளப்புவதில் சிரமம் இருக்காது...''

''அப்படின்னா... அண்ணியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். மதியம் சாப்பாடு கட்டிக் கொடுப்பாங்களே...''

''நீயும்.. உன் அண்ணியும் ஒரு வார்த்தை மட்டும் பேசுகிறவர்களா? இதை என்னை நம்பச் சொல்கிறாயா? காலையில் காபி கொண்டு வந்தவங்க... கால் மாற்றி... மாற்றி நின்று கதை பேசிவிட்டு இப்பத்தான் கீழே போனாங்க. எங்கே காலை காபியை.. சாயங்காலக் காபியாகக் கொடுத்து வைப்பீர்களோன்னு பயந்து போய்

விட்டேன். ஏண்டி.. ஒரு வார்த்தை பேச ஒரு வருசம் காத்திருந்தேன்னு.. பாட்டு இருக்கு.. கேள்விப்பட்டிருக்கேன். இது என்னடி.. ஒரு வார்த்தை பேச.. ஒரு வருசம் பூரா எடுத்துக் கொள்வேன்னு நீயும்.. உன் அண்ணியும் சபதம் போட்டிருக்கீங்க...''

''பேசாமல் இருக்கீங்களா.. இல்லை.. வெளியில் போய்.. என் புருசனுக்கு என்னைப் பிடிக்கவில்லைன்னு கண்ணைக் கசக்கவா?''

கண்களை உருட்டி.. ஒரு விரலைக் காட்டி மிரட்டியவள். அழகாய் இருந்தாள். கழுத்தில் புது மஞ்சள் சரடு மிளிர... வாடிய பூச்சரத்துடன் தலைமுடி கலைந்திருக்க.. அழகாக தோற்றமளித்தவளைக் கண்டு அவனுக்கு ஆசை மிகுந்தது.

''உலகத்திலேயே சிறந்த பொய் இதுதான்.''

''எது...?''

''எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை என்பது.''

அவனது கண்களின் அழைப்பு புரிய அவள் விலகி எழுந்து சிரித்தபடி குளிக்கப் போய் விட்டாள். சுதாகரன் குளித்து விட்டு வந்தபோது அவனுக்காக கிரீம் கலர் பேண்ட்டும்... மெரூன் கலரில் சட்டையும் எடுத்துத் தயாராக வைத்திருந்தாள்.

விரிந்திருந்த கூந்தல் இடுப்பைத் தாண்டித் தொங்க.. நெற்றிக்கு அவள் பொட்டிட்டுக் கொண்டிருந்தபோது.. சுதாகரன்.. குளியலறையில் இருந்து வெளிப்பட்டான்.

மனைவியின் ஈரக் கூந்தலில் விரல்களை நுழைத்து விளையாடினான். சிலிர்த்து திரும்பியவள் அவனது மார்பில் முகம் புதைத்து நின்றாள்.



''ஆமாம்.. இது என்ன.. இந்த டிரஸ்ஸை எடுத்து வைத்திருக்கிறாய்?''

''ஏன்..?''

''இது நான் கொண்டு வந்த டிரஸ் போல இல்லையே...''

''இல்லைதான்.''

''அப்ப இது...?''

''ம்ம்... என் புருசனுக்கு எனக்குப் பிடித்த கலர்களில் நான் டிரஸ் எடுத்து வைத்திருக்கிறேன்.''

காதலுடன் மனைவியைப் பார்த்தபடி.. உடுத்திக் கொண்டு திரும்பிப் பார்த்தான். மெரூன் கலர் உடலும்.. மெஜந்தா கலர் பார்டரும் கொண்ட பட்டுப் புடவை உடுத்தி.. மெஜந்தா கலரில் ஜரிகை பார்டருடன் கூடிய ஜாக்கெட் அணிந்து.. பிருந்தா தயாராகி இருந்தாள்.

''ஒரே கலரில் டிரஸ் போட்டுக்கொண்டு.. ஒற்றுமையாய் நாங்கள் இல்லைன்னு பீலா விடப் போகிறாயாக்கும்...?''

''ஆமாம்.''

''நீ எது சொன்னாலும் நம்பும் உடன் பிறப்புகளைக் கொண்டவளாச்சே.''

''உங்கள் உடன் பிறப்பும் என் கைக்குள்தான்.''

''இவர்களையெல்லாம் கைக்குள் போட்டு என்ன பிரயோசனம்? புருசனையில்ல கைக்குள் போட்டுக்கணும்?''

''அதெல்லாம்.. ஆல்ரெடி... கைக்குள் அடக்கி வைத்தாயிற்று.''

''கில்லாடிதான் நீ.''

இருவரும் சிரித்துக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்து... முகம் கடுகடுக்க... கீழே இறங்கி சென்றார்கள்.

சுதாகரன்.. ஹாலுக்கு சென்று பேப்பரை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டான். பிருந்தா டைனிங் டேபிளுக்குச் சென்றாள். பாத்திரங்களை கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்த வனஜா..

"தம்பியை சாப்பிடக் கூப்பிட்டு வாம்மா..." என்றாள்.

"நான் கூப்பிட்டால் வருவாரா அண்ணி."

"நீ கூப்பிடாமல் வேறு யார் கூப்பிடுவது."

வனஜா தனபாலனைப் பார்க்க... அவன் தங்கையின் முகம் பார்த்துவிட்டு எழுந்து சென்றான்.

"மாப்பிள்ளை..."

"ம்ம்..."

"மாப்பிள்ளை... உங்களைத்தான் கூப்பிடுகிறேன்."

"ம்ம்.. காதில் விழுகிறது."

சுதாகரன் பேப்பரை இறக்காமல் பதில் சொல்ல.. தனபாலன் பார்த்த அனல் பார்வையில் பேப்பர் பற்றி எரியத் தெரிந்தது...

தனபாலன் வெற்றிகரமாக பின் வாங்கி டைனிங் டேபிளுக்கு சென்றான்... வனஜா.. தனபாலனின் பின்னால் பார்வையை ஓடவிட்டு..

"மாப்பிள்ளை எங்கே..?" என்று வினவினாள்.

தனபாலன் தன் சட்டைப் பையில் கையை விட்டு கண்களை ஓட்டி தேடுவது போல் பாவனை செய்து விட்டு...



"என் சட்டைப் பையில் இல்லை அண்ணி..." என்றான்.

பிருந்தாவிற்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள். வனஜாவின் முகத்தில் கவலைக்குறி வந்தது. இரண்டு பிள்ளைகளைப் பெற்றவள். அவர்களை சாப்பிட வைக்கக்கூட இவ்வளவு சிரமப்பட்டிருக்க மாட்டாள்.. என்று நினைக்கும் போதே பிருந்தாவிற்கு வனஜாவின் மேல் பரிவு உதித்தது.

## 23

வனஜா.. தன் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் முகத்திலிருந்தே.. அவள் என்ன வேலைக்கு ஏவப் போகிறாள் என்பதை அறிந்து கொண்ட பூபாலன்.

"ஊஹூம்... நான் மாட்டேன்.." என்று அவசரமாகக் கூறினான்.

"இப்போ.. எதற்கு முந்திரிக் கொட்டை போல் மாட்டேன் என்கிறீர்கள்."

"உன் நாத்தனார் புருசனை சாப்பிடக் கூப்பிடும் வேலையை நான் செய்ய மாட்டேன்."

"உங்க தங்கை புருசன்னு சொல்ல மாட்டிங்களா."

"என்னை வம்புக்கு இழுக்காதே..."

"குடும்பத்திற்கு மூத்தவர்.. பேசும்பேச்சா இது?"

"விட மாட்டாளே..."

அலுப்புடன் கூறிக் கொண்டே பூபாலன் ஹாலிற்கு சென்று சுதாகரனின் அருகே அமர்ந்தான். சுதாகரன் பேப்பரில் கவனமாய் இருக்க..

"பேப்பரில் என்ன போட்டிருக்கு மாப்பிள்ளை?" என்று சாதுர்யமாய் கேட்டான்.

"ஏன் உங்களுக்கு படிக்கத் தெரியாதா..?"

"நீங்கள்தானே பேப்பரை வைத்திருக்கீங்க..."

"இந்தாங்க பேப்பர்."

சுதாகரன் கொடுத்த பேப்பரை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு,

"சாப்பிட வாங்க மாப்பிள்ளை.." என்றான் பூபாலன்.

பேப்பரை பிடுங்காமல் பிடுங்கிக் கொண்ட மைத்துனனின் சாமர்த்தியத்தை மனதிற்குள் மெச்சிக் கொண்ட சுதாகரன்... எழுந்து கொண்டான்.

"கார்த்திகா எங்கே...?"

'கார்த்திகா வராமல் எங்கே போகப் போகிறாள்..' என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்ட பூபாலன்.

"வனஜா... வனஜா.." என்று அழைத்தான்.

"என்னங்க.." என்றபடி வனஜா அங்கு வர.. உதவிக் கரம் கிடைத்து விட்ட தெம்புடன்.

"கார்த்திகா எங்கே?" என்று கேட்டான்.

"டைனிங் டேபிளில் சாப்பிட உட்கார்ந்திருக்கிறாள்."

"இதை முதலிலேயே சொல்வதற்கு என்ன..?" என்று கேட்டபடி சுதாகரன் டைனிங் டேபிளுக்குப் போனான்.



தலையில் மெதுவாய் ஓர் அடி கொடுத்துக் கொண்டு பூபாலன் அவன் பின்னே சென்றான்.

டைனிங் டேபிளில் அழகான லேவண்டர் கலரில் ஜரிகை கரையிட்ட பிரிண்டட் சில்க் சேலையை கட்டியிருந்த கார்த்திகாவை... தலை முதல் கால் வரை பார்வையிட்டு ரசித்தபடி கபிலன் அமர்ந்திருக்க... அவனது பார்வையில் சங்கடப்பட்டுக் கொண்டே கார்த்திகா அமர்ந்திருந்தாள். சுதாகரன் போய் கபிலன் பக்கத்தில் அமர்ந்து கொண்டு..

"நன்றாகத் தூங்கினீர்களா.." என்று விசாரித்தான்.

"நான் நன்றாகத்தான் தூங்கினேன்.. நீங்கள்தான் கொட்ட.. கொட்ட விழித்து இருந்தீர்கள் போல.. கண்கள் சிவந்திருக்கே" என்று குறும்புடன் கபிலன் பதில் கொடுத்தான்.

சுதாகரன் பிருந்தாவின் பக்கம்... சிரமப்பட்டு பார்வையை செலுத்துவதை தவிர்த்து.. திரும்பிக் கொண்டிருந்தான். அவன் மனம் கபிலனின் குறும்புப் பேச்சை ரசித்தது.

பிருந்தாவோ.. முகம் சிவக்காமல் இருக்க பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"சாப்பிட உட்கார் பிருந்தா.." என்று வனஜா கூறியவுடன் பிருந்தா கார்த்திகாவின் அருகே அமர்ந்தாள்.

'பெண்டாட்டியின் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிடக் கூட மாட்டேன் என்கிறானே... இந்தப் பெண்... வீணாய்.. வினையைக் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்னு.. அடம் பிடித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கே...' வனஜாவின் மனம் கவலை கொண்டது.

"அண்ணி... நாங்க.. பழனிக்குப் போய் விட்டு வருகிறோம்..." பிருந்தா பயந்த குழந்தை போல் கணவனைப் பார்த்து... மிரள மிரள விழித்தபடி கூறினாள்.

மனைவியின் சந்தேகத்தை புரிந்து கொண்ட சுதாகரன்..

"நாங்கன்னா யார்.. யார்..?" என்று வினவினான்.

"இது என்னங்க கேள்வி... நீங்களும்.. நானும்தான்."

"நான் வரவில்லை..."

பிருந்தா கார்த்திகாவின் முகம் பார்க்க.. அவள் உடனே..

"அண்ணா..." என்றாள்.

"நீ இதில் தலையிடாதே..."

"நான் தலையிடாமல் யார் தலையிடுவார்கள்?"

"இதோ பார் கார்த்திகா. கோவிலுக்குப் போனால் சாமி கும்பிட்டுவிட்டு வரணும்.. இவள் பாதி வழியிலேயே சண்டை போட்டுக் கொண்டு திரும்பி வந்து விடுவாள்."

"பாரு.. கார்த்திகா.. உன் அண்ணன் சொல்வதை.. இவர் என்னுடன் சண்டை போடுகிறாரா.. இல்லை.. நான் அவருடன் சண்டை போடுகிறேனா.."

"பாருண்ணா.. பிருந்தா மேல் தப்பில்லை..."

"அப்போ.. நீ சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டிருக்கும் என் மீதுதான் தவறா..?"

"ஏன்னா.. இப்படி சண்டைக்காரன் போலவே பேசுகிறாய்?"



தனபாலனும்.. பூபாலனும்.. மகிழ்ந்து போய்.. மனதிற்குள் கார்த்திகாவை நன்றிப் பெருக்குடன் பாராட்டிக் கொண்டார்கள். வனஜா.. பரிமாறியபடியே கார்த்திகாவைப் பார்த்துக் கூறினாள்.

"எதற்கு வழக்கு கார்த்திகா.. நீயும்.. உன் அண்ணன்.. பிருந்தாவுடன் கோவிலுக்குப் போய் விட்டு வாயேன்... தெய்வ தரிசனம்.. மனதிற்கு ஆறுதலைத் தரும் விசயம்தானேம்மா."

"நானுமா.." என்று தயங்கிய கார்த்திகா.. பிருந்தா பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொள்ளவும்.. 'கோவிலுக்குத்தானே..' என்ற நினைவில் தலையாட்டி வைத்தாள்.

"அப்போ.. நீங்க நான்கு பேரும் மதியம் சாப்பிட்டவுடன் கிளம்புங்க..."

"மதியமா அண்ணி.."

"ஆமாம் பிருந்தா... மதியம் சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்து விட்டு மூன்று மணிக்கு இங்கிருந்து கிளம்பினால் நான்கு மணிக்கெல்லாம் பழனிக்கு போய் விடுவீர்கள். ரோப் காரில் ஏறினால் நாலே காலுக்கெல்லாம் மலை மீது ஏறி விடுவீர்கள். தரிசனம் பண்ணி விட்டு வர... சாயங்காலப் பொழுது தான் நல்லது."

பிருந்தா தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டிருக்க கார்த்திகாவோ.. 'நான்கு பேர்' என்றால் யார்.. யார்' என்ற சிந்தனையில் இருந்தாள்.

சாப்பிட்டு முடித்ததும் பிருந்தாவிடம் வினவவும் செய்தாள்.

''நம்முடன் வேறு யார் வருவார்கள்? என் அண்ணன்தான்'' பிருந்தா இலகுவாகப் பதில் கூறிவிட்டுச் சென்றுவிட.. கார்த்திகா நிம்மதியுற்றாள்.

பூபாலனோ... இல்லை தனபாலனோ உடன் வருவார்கள் என்பது அவள் நினைவு...

ஆனால்.. மூன்று மணிக்கு அவர்கள் கிளம்பி ஏறியது கபிலனின் வெளிநாட்டுக் காரில்.. முதல் நாள் மண்டபத்திற்குப் போகும்போது அமர்ந்தது போலவே.. கார்த்திகா கபிலனின் அருகே உட்கார வேண்டி வந்தது.

'இவன் வருகிறான் என்று தெரியாமல் போய் விட்டதே... இவன் வருவது தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேனே...' கார்த்திகா மனதிற்குள் புலம்பிக் கொண்டிருந்தாள்.

பிருந்தா இயல்பாகக் கூறுவது போல் 'அண்ணன்..' என்று பொதுவாகச் சொல்லியிருந்ததால் அவளையும் தவறாக எண்ண கார்த்திகாவினால் முடியவில்லை. அத்தோடு.. உடன் வருவது.. கார்த்திகாவின் ஒன்றுவிட்ட அண்ணனும்தானே. போவதும் கோவிலுக்குத் தானே...

எனவே ஒரு வழியில் மனம் சமாதானமுற.. கார்த்திகா சீட்டில் ஒடுங்கி அமர்ந்து கொண்டு வந்தாள்.

'எப்படித் தள்ளி அமர்ந்திருக்கிறாள் பார். வெளியே விழுந்து வைத்து விடப் போகிறாள்..' என்ற கவலையுடன் கபிலன் கார்த்திகாவைப் பார்த்தான்.

அவள் விழிகளால் 'என்ன..' என்று வினவினாள்.

''கதவை ஒழுங்காய் லாக் பண்ணியிருக்கீங்களா?''



''ம்ம்...''

தான் ஒதுங்கி அமர்ந்திருப்பதை கவனித்துவிட்டே கேட்கிறான் என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. முகம் சிவக்கவும் செய்தது. மனதில் ஏதோ ஓர் இதமும் பரவியது.

''ஒட்டன் சத்திரத்தில்.. மீனாட்சி பவன் ஹோட்டலுக்கு முன்னால் காரை நிறுத்துங்க...'' என்றான் சுதாகரன்.

''எதற்கு...'' என்று சந்தேகம் கேட்டாள் பிருந்தா.

''ஹோட்டலுக்கு எதற்கு போவார்கள்? சாப்பிடத் தான்.. அங்கேயாவது வாய்க்கு ருசியாய் டிபன் காபி கிடைக்கிறதா என்று பார்க்கலாம்...'' என்று சுதாகரன் கூற கபிலன் வாய்விட்டுச் சிரித்தான்.

தற்செயலாய் திரும்பி அவனது சிரிப்பைக் கண்ட கார்த்திகாவிற்கு பார்வையை உடனே விலக்கிக் கொள்ள முடியாமல் போனது. அவனது அழகான பல் வரிசை தெரிய அவன் சிரிக்கும்போது அவனது கவர்ச்சி பன் மடங்கு கூடுவதை அவள் கண் முன்னால் கண்டாள்.

## 24

பிருந்தா சுதாகரனை விட்டுவிட்டு கபிலனின் மேல் பாய்ந்தாள்.

''எதற்கு அண்ணா சிரிக்கிறீர்கள்?''

''ஏன்ம்மா.. கமென்ட் அடித்தது உன் கணவர். அவரை விட்டு விட்டு சிரித்த என் மேல் குற்றம் சொல்கிறாயே இது நியாயமா?''

''நியாய அநியாயத்தைப் பற்றி நீங்கள் இரண்டு பேரும் பேசாதீர்கள்.''

''மாப்பிள்ளை கேட்டுக் கொள்ளுங்கள்...''

''கேட்டுக் கொண்டுதான் வருகிறேன்.''

''இப்போது எதற்காக இரண்டு பேரும் கூட்டுச் சேர்கிறீர்கள்?''

''நீ ஏன் இப்போது கோபப்படுகிறாய்?''

''வேண்டாம் அண்ணா.. பெரிய அண்ணி இல்லை யென்ற தைரியத்தில் நீங்கள் இரண்டு பேரும் வாய் விடுகிறீர்களா? எங்கள் வீட்டுச் சாப்பாட்டு ருசிக்கு இணை எதுவுமில்லை...''

''அப்படி நீயாக நினைத்துக் கொண்டிருந்தால் அதற்கு யார் பொறுப்பு..?''

பிருந்தா 'உம்'மென்று அமர்ந்து வர.. ரெட்டியார் சத்திரம் தூரத்தில் தென்பட்டது. பிருந்தா தன் கோபத்தை மறந்து கூவினாள்.

''அண்ணா.. ரெட்டியார் சத்திரத்திற்கு முன்னாலேயே இருக்கும் பெருமாள் கோவிலின் முன்னே காரை நிறுத் துங்க...''

ஊரின் ஆரம்பத்தில் மெயின் ரோட்டின் மேலேயே இருக்கும் கோவிலின் முன்னால் காரை நிறுத்தினார்கள்.

''இது சக்தி வாய்ந்த பெருமாள் கோவில் அண்ணா.''



''பெருமாள் எல்லா இடங்களிலும் சக்தி வாய்ந்தவர் தானேம்மா.''

''வா.. கார்த்திகா.''

அவர்கள் கோவிலுக்குள் பிரவேசித்தனர். பிரம் மாண்டமான மரமும்.. அதன் நிழலும்.. அதன் முன்னால் பெரிய சுற்றுச் சுவர்களுடன் இருந்த கோவிலும் மனதைக் கவர... கார்த்திகாவின் மனம் அமைதியானது.

''அமைதியான சூழ்நிலை...'' கபிலன் ரசித்துக் கூறினான்.

''கடவுளிடம் நாம் பேசும் போது.. சத்தமில்லாமல் இருந்தால் அதைவிட வேறு என்ன வேண்டும்.''

பிள்ளையாரை வணங்கி விட்டு.. கோவிலுக்குள் போய்.. வெங்கடாஜலபதி பெருமாளை சேவித்தார்கள். காரில் ஏறினார்கள்.

ஒட்டன் சத்திரத்தில்.. மீனாட்சி பவன் ஹோட்டலின் முன் காரை நிறுத்தினான் கபிலன்.

முறைத்துக் கொண்டே காரை விட்டு இறங்கினாள் பிருந்தா.. கார்த்திகா.. பிருந்தாவுடன் இணைந்து நடக்க.. தங்கையின் சங்கடம் புரிந்து கொண்டவனாய் சுதாகரன்.. கபிலனோடு முன்னால் நடந்தான்.

ஏ.ஸி. அறைக்குள் நுழைந்து அமர்ந்த போதும்.. சுதாகரன் கபிலனின் அருகேயே அமர்ந்து கொள்ள.. கார்த்திகா நிம்மதியுடன் பிருந்தாவின் அருகே அமர்ந் தாள்.

''என்ன வேண்டும்..'' என்று கபிலன் வினவ..

''அதுதான் வாய்க்கு ருசியாக வேண்டும் என்று சொல்லி விட்டேனே..'' என்றான் சுதாகரன்.

''கார்த்திகா... உன் அண்ணனிடம் சொல்லி வை. இந்த பிருந்தா எப்போதுமே அமைதியாக இருக்க மாட்டாள்.''

''அதைத்தானே.. நானும் என் தங்கையிடம் சொல்கிறேன். அவள் நம்ப மாட்டேன் என்கிறாளே.''

''எதைச் சொன்னீர்கள்?''

''நீ எப்போதுமே அமைதியாக இருந்ததில்லை என்பதைத்தான்.''

''அண்ணா.. நான் வீட்டிற்குப் போகிறேன்.''

''ஏன் கபிலன்.. இது பழனி போவதற்கான பாதி வழி தானே...''

வீட்டில் சொன்னதை கணவன் நினைவு படுத்துகிறான் என்பதைப் புரிந்து கொண்டவளாய் பிருந்தா கண்களில் கனல் கக்கினாள். கார்த்திகா அவளை சமாதானப்படுத்தினாள்.

''பொறு பிருந்தா.. நான் அண்ணனை என்னவென்று கேட்கிறேன்.''

''என்னவென்று கேட்கப் போகிறாய்?''

''ஈஸி பிருந்தா.. இதையெல்லாம் பெரிதாய் எடுத்துக் கொள்ளாதே.''

''உனக்குத் தெரியாது கார்த்திகா.. இவர் வேண்டுமென்றே என்னை டீஸ் பண்ணுகிறார்.''

இவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்கும்போதே கபிலன் எல்லோருக்கும் பொதுவாய் ஆர்டர் கொடுத்து விட்டான்.



கார்த்திகா அவனது செய்கையை மெச்சிக் கொண்டாள். அவளது பார்வை பாராட்டுதலாய் ஒரு கணம் அவன் மீது படிந்து விலகியது.. அதை நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்ட கபிலனின் கண்களில் மின்னல் வெட்டியது.

பழனியை நெருங்கும்போது தூரத்திலேயே மலை தெரிந்தது. கார்த்திகா கன்னத்தில் போட்டுக் கொண்டாள். அதை கவனித்த கபிலன்,

''கோவிலென்றால் பிடிக்குமா?'' என்று நேரடியாய் வினவினான்.

அவனது நேரடிப் பேச்சில் தடுமாறியவள். சுதாரித்துக் கொண்டாள். காரில் அருகே அமர்ந்து கொண்டு வரும் போது.. அவனுடன் நேரடிப் பேச்சைத் தவிர்ப்பது ஒரு மாதிரியாய் அவளுக்குத் தோன்றிவிட..

''ஆமாம்..'' என்று பதில் கூறினாள்.

'பேசி விட்டாள்...' என்ற நினைவில் பிருந்தாவும்.. சுதாகரனும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

''குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்கிறார்களே.. அது ஏன்?'' பேச்சை வளர்க்கக் கேள்வி கேட்டான் கபிலன்.

''ஆன்மிகத்தில் ஏன்.. என்ற கேள்விக்கே இடமில்லை. இந்தப் பழனிமலையில் பாலகனாக அமர்ந்து தரிசனம் தருகிறான் முருகன். குழந்தைகள் எப்போதும் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுவார்கள். அதைப் போல குழந்தை உருவிலிருக்கும் இந்தப் பழனிமலை முருகனும்

கேட்டவருக்கு கேட்ட வரம் கொடுப்பான்'' கார்த்திகா மனம் உருகிக் கூறினாள்.

''அப்படியா.. நான் என்ன வரம் கேட்டாலும் இந்த முருகன் தருவானா?'' கபிலன் உட்பொருளுடன் வினவினான்.

''நிச்சயம் தருவான்.. நீங்கள் கேட்டுத்தான் பாருங்களேன்.''

''நிச்சயம் தருவான் என்றால்.. நிச்சயம் வரம் கேட்கத்தான் போகிறேன்...''

''ஆமாம்.. என்ன வரம் கேட்பீர்கள்.''

'உன்னைத்தான் வரமாய் கேட்கப் போகிறேன்' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்ட கபிலன் சிரித்தான்.

''அதை வெளியில் சொன்னால் பலிக்காதாமே...''

பழனி மலை அடிவாரத்தில் ரோப் கார் இருக்கும் இடத்தில் காரை பார்க் பண்ணிவிட்டு இறங்கினார்கள்.

''பிருந்தா.. பூஜைக் கூடையை எடுத்துக் கொண்டாயா.''

''இதோ இருக்கிறது கார்த்திகா.''

ரோப் காருக்கான வரிசையில் நின்றபோது.. கார்த்திகாவின் மனதில் ஓர் உற்சாகம் தோன்றியது...

வெயில் இறங்கிய மாலைப் பொழுதில்.. மலையின் அடிவாரத்தில் நின்று போய் வரும் ரோப் கார்களை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவளைப் பார்க்கும்போது சுதாகரனின் மனம் நெகிழ்ந்தது...

'எவ்வளவு உற்சாகமாய் இருக்கிறாள். இவளுக்கென்று ஒருவன் பிறந்து காத்திருக்கும்போது.. வேறொருவரின்



கரத்தை இவள் பிடித்து விடக் கூடாது என்றுதான் இவளது திருமணம் நின்று போய் விட்டது... தெய்வத்தின் கருணையை அறியாதவளாய்.. இவள் தூசு படிந்த சித்திரமாய் தன்னைத் தானே ஒதுக்கிக் கொண்டு மூலையில் முடங்கிக் கொண்டாளே...'

ரோப் காரில் அவர்கள் நால்வரும் ஏறிக் கொண்டனர். லேசான பயத்துடன் பிருந்தா கார்த்திகாவின் கைகளை இறுகப் பிடித்தபடி கண்களை மூடிக் கொண்டாள்.

''உங்களுக்குப் பயமில்லையா?'' என்று கபிலன் கேட்டான்.

''முருகன் காப்பாற்றுவார்..'' என்று கார்த்திகா பதில் சொன்னாள்.

புருவத்தை மேலே உயர்த்தி வியப்பாய் பார்த்ததைத் தவிர கபிலன்.. வேறு ஒன்றும் பேசவில்லை.

ரோப் கார்... மலை உச்சியை அடைந்தது. அவர்கள் இறங்கி... கோவிலின் உள்ளே நடந்தார்கள்.

''அண்ணா.. தங்க ரதம் இழுப்பதற்கு பணம் கட்டி விட்டு வாங்க... அண்ணி சொல்லி விட்டாங்க...'' என்றாள் பிருந்தா.

''ஆமாம்.. என்னிடமும் சொன்னாங்க...'' என்றபடி கபிலன் சென்றான்.

அவர்கள் கோவில் தளத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் போது கபிலன்.. இரண்டு டிக்கட்டுகளோடு திரும்பி வந்தான்.

''ஒரு டிக்கெட்டுக்கு மூன்று பேர்தான் தங்கத் தேரை இழுக்க முடியுமாம். அதனால் இரண்டு வாங்கி வந்து விட்டேன்... தங்க ரதம் இழுப்பவர்களுக்கு சிறப்புத் தரிசன அனுமதி உண்டு. இன்றைக்கு ராஜ அலங்காரமாம். போய் முதலில் தரிசனம் பண்ணி விட்டு வந்து விடலாம். தங்க ரதம் இழுக்க ஆரம்பிக்க இன்னும் ஒன்றரை மணி நேரம் இருக்கிறது.''

கபிலன் சொன்னதை ஏற்றுக் கொண்டு.. அவர்கள் ராஜ முருகனை தரிசனம் செய்யப் போனார்கள்.. சிறப்பு வழியில்.. முருகனுக்கு அருகில் மூலஸ்தானத்தில் நின்று.. ராஜ அலங்காரத்தில் இருந்த குமரனை கை குவித்து வணங்கியபோது.. கார்த்திகாவின் கண்களில் நீர் மல்கியது.. கபிலனோ கண்களை மூடி.. மனம் உருக முருகனிடம் வேண்டிக் கொண்டிருந்தான்.

## 25

முருகனின் சந்நிதானத்தில் நின்று கொண்டிருந்த அந்த நால்வரின் வேண்டுதல்களும் வேறு.. வேறு விதமாக இருந்தன.

வேண்டுதல்கள் பலவிதம். அதை வெளியிட்டவர்களின் உள்ளங்களில் இருந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும் ஒரு விதம். அவை எல்லாமே.. ஒரே ரகம்.

சுதாகரன் ராஜ அலங்காரத்தில் இருந்த பாலமுருகனிடம் கரம் குவித்து மனமார வேண்டிக் கெண்டான்.



இது என் ரத்தம்.. நான் என்ன தவறு செய்தேனென்று இதைக் காயப்படுத்தினாய்.. இது உன்னையே நம்பியிருக்கும் உயிரல்லவா..? இதை வருத்த உனக்கு எப்படி மனம் வந்தது..? நீ கடவுள்.. நாங்கள் தவறு ஏதேனும் செய்திருந்தால் மன்னித்து விடு... தண்டிக்காதே.. நீயே எங்களைத் தண்டித்தால்.. நிழல் தேடி நாங்கள் எங்கு செல்வோம்? தாயும் நீயாக.. தந்தையும் நீயாக உன்னையே வரித்தோமே.. உன் உள்ளம் எங்கள் மேல் இரங்க வேண்டாமா? மன்னித்து விடு. தண்டிக்காதே.. இந்த இளங்குருத்தை வாழ வை.. என்றென்றும் இதற்கு துணையும் செய்...''

பிருந்தாவின் மனமும் இதையே வேறு விதமாய் வேண்டியது.

'நீ நன்மையே செய்வாய் என்று உன்னை நாடி வந்திருக்கிறோம். நம்பி வந்தவர்களை நீ கைவிடக் கூடாது. கார்த்திகாவிற்கு நல்வழி காட்டு. கபிலன் அண்ணாவோடு அவளை சேர்த்து வை...'

கபிலனின் எண்ணம் வெளியிட்டது இதைத்தான்.

'நீ கேட்டால் கேட்ட வரம் தரும் முருகனாமே... நானும் கேட்கிறேன். நான் காதலிப்பவளை என்னுடன் சேர்த்து வை. அவளது மனத்தை மாற்றி.. என்னுடன் திருமணத்தில் அவள் மனத்தை இணைத்து வை.'

இவர்கள் மூவரின் கோரிக்கைகளை அறியாத கார்த்திகா.. அவளது மனதில் இருந்த பாரத்தை முருகனிடம் இறக்கி வைத்தாள்.

'இது நான் பார்த்து நடத்தி வைத்த கல்யாணம். நான் தான் தோற்று விட்டேன். நான் நடத்தி வைத்த இந்தக்

கல்யாணம் தோற்றுவிடக் கூடாது. என் மேல் கொண்டிருக்கும் பாசத்திற்குக் கட்டுப்பட்டு.. இந்தக் கல்யாணத்திற்கு சம்மதித்த என் அண்ணன்.. மனமார பிருந்தாவை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் நன்றாக வாழ வேண்டும்..'

தனக்காக வேண்டிக் கொள்ளாமல் பிறர் வாழ வேண்டிக் கொள்ளும் அந்தப் பெண்ணின் குணமறிந்த குமரன்.. அருள் பாலிக்கும் புன்னகையோடு.. அவளைப் பார்த்தான்.

கோவிலில் விளக்குகள் ஒளிர ஆரம்பித்தன... தக தக..வென ஒளிரும் தங்க ரதத்தில் அமர்ந்து முருகன் அருள் பொழியும் சிரிப்போடு அழகாக ஆடி.. ஆடி வந்தார்.

தேர் வடம் பிடித்து இழுக்க.. ஒரு பக்கம் பிருந்தாவும் சுதாகரனும் நின்றுவிட.. மறுபுறம் இயல்பாக.. கபிலனும் கார்த்திகாவும் அருகருகே நின்று இழுக்க ஆரம்பித்தனர்.

'முருகா நீயே.. துணை.. காப்பாற்று..' என்று வேண்டியபடி.. மலையை விட்டு இறங்கிய கார்த்திகாவின் மனம்... லேசாக இறகு போல் இருந்தது.

இறுக மூடியிருக்கும் அறையில் என்ன இருக்கும்? தூசியும்.. ஒட்டடையும் படிந்திருக்கும். அறையின் ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டால்.. வெளிக் காற்று நிரம்பி.. அறை விசாலமாகும்.

அதைப்போல்தான் மனமும்.. இறுக மூடிக் கொண்டால்.. மனதில் தூசி படிந்து.. வெளிக் காற்றில்லாமல் புழுக்கமாகத்தான் இருக்கும். அதுவே இதயத்தின் சாளரம் திறந்து வெளிக்காற்று உள்ளே புகுந்தால் உள்ளே



இருக்கும் தூசு.. தும்பு எல்லாம் ஓடி.. மனதில் வெளிச்சம் பரவும்.

கார்த்திகாவிற்கும் அப்படித்தான் இருந்தது... திரும்பி வரும்போது கபிலனிடம் மிகவும் சகஜமாகப் பேசிக் கொண்டு வந்தாள்.

''சாமிகிட்ட என்ன வேண்டிக்கிட்டிங்க கார்த்திகா...'' என்று கேட்டான் கபிலன்.

''நீங்க என்ன கேட்டீங்க...?''

''அதைச் சொன்னால் வேண்டுதல் பலிக்காதே...''

''அப்போ.. நான் மட்டும் சொல்வேனா..''

''ரொம்ப சுதாரிப்பான ஆள்தான் நீங்க.. நான் என்னவோன்னு நினைத்தேன்.''

''என்னவென்று நினைத்தீர்கள்? ஏமாளியென்றா..?''

''சேச்சே.. உங்களைப் போய் அப்படி நினைப்பேனா..'' என்று மறுத்த கபிலன்.. காரை ஓட்டிய வண்ணம் கார்த்திகாவின் பக்கம் திரும்பி..

''அப்படின்னு சொல்வேன்னு நினைத்தீங்களா.. அதுதான் இல்லை. கொஞ்சம் இளகின மனம் இருக்கும் ஏமாளி என்றுதான் நினைத்தேன்.'' என்றான்.

கார்த்திகா சிரித்து விட்டாள். அவள் முகம் மலர்ந்து சிரிப்பதைக் கனிவுடன் நோக்கிய சுதாகரன்.. பிருந்தாவைப் பார்த்தான். அவளது கண்களும் பனித்திருந்தன.

''உங்களுக்கு ரொம்ப தைரியம்தான்..'' என்று கார்த்திகா கூறவும்.. கபிலன் மீண்டும் அவள் பக்கம் திரும்பிக் கேட்டான்.

''ஊஹூம்..? அப்போ.. என்னை பயந்தாங்குளின்னு நினைத்தீங்களா?''

''நீங்கள் என்னை ஏமாளியென்று நினைக்கும்போது நான் உங்களை பயந்தாங்குளின்னு நினைக்கக் கூடாதா?''

''பாருடா.. வாய் பேசாமல் நீங்கள் இருக்கவும்.. ஊமையோன்னு நான் நினைத்து விட்டேன்.. பிருந்தாவிடம் கூட அவள் ரொம்ப அதிர்ஷ்டசாலின்னு சொன்னேன்.''

''ஊஹூம்..? நான் ஊமையாக இருந்தால்.. அவள் அதிர்ஷ்டசாலி ஆகிவிடுவாளா?''

''பின்னே இல்லையா?''

''அது எப்படி... அந்த விளக்கத்தையும் நீங்களே சொல்லி விடுங்களேன்.''

''இவ்வளவு சொன்ன நான் அதைச் சொல்லாமல் இருப்பேனா?''

''அதுதானே.. யாரு நீங்க...''

''அதிலும் சந்தேகமா? வேலூருக்கு வந்து கேட்டுப் பாருங்க.. சின்னக் குழந்தையிடம் கேட்டால்கூட நான் கபிலன்னு சொல்லும்.''

''ஐயோடா.. அவ்வளவு பெரிய ஆளா நீங்க... பேசவே பயமாயிருக்கே.''

''என்னைப் பயந்தாங்குளின்னு சொல்லிவிட்டு நீங்க பயப்படுவதுபோல் நடிக்கறீங்களா?''

''எனக்குப் பயமே வராதுன்னு நினைத்து விட்டீர்களா?''

''ஆஹா.. ரொம்ப தைரியசாலிதான் நீங்க...''



''இதைக் கிண்டலாகச் சொல்வது போல் இருக்கே...''

''இல்லைன்னு பொய் சொல்ல விருப்பமில்லைங்க.''

''அப்படியா உண்மை விளம்பி சார்... அப்படியே.. ஏன் நான் ஊமையாக இருந்தால்.. பிருந்தா அதிர்ஷ்டசாலி ஆவாள்ன்னும் சொல்லி விடுகிறீர்களா?''

''வாய் பேசாத நத்தனார் கிடைப்பது பெரிய வரமல்லவா?''

கார்த்திகா மீண்டும் சிரிக்க ஆரம்பித்து விட்டாள். இப்போது பிருந்தாவும் பேச்சில் கலந்து கொண்டாள்.

''உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவள் அதிர்ஷ்டசாலி அண்ணா...''

''பிருந்தா.. உன் அண்ணன் என்பதற்காக ரொம்பவும் உயர்வாகப் பேசாதே.''

''உண்மையைத்தான் சொல்கிறேன்டி.''

''என்ன உண்மையைக் கண்டு விட்டாயாம்.''

''அண்ணனுக்குக் கூடப் பிறந்த தங்கை கிடையாது. அதனால் வரும் அண்ணிக்கு கொண்டாட்டம்தான். நாத்தனார் இருக்க மாட்டாளே.''

''ஏன் நீயிருக்கிறாயே.''

''நான் ஒன்றுவிட்ட நாத்தனார் தானே.''

''நீ ஒருத்தி.. நூறு பேருக்கு சமமாச்சே...''

இப்போது சுதாகரன் ''ஹோ.. ஹோ..''வென்று சிரித்தான்.

''நன்றாகச் சொன்னாய் கார்த்திகா. ஹா.. ஹா..''

பிருந்தாவுக்கு ரோசம் வர.. கபிலனை துணைக்கழைத்தாள்.

"அண்ணா.. கேட்டீங்களா."

"கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்ம்மா."

"இவர்கள் இருவரும் கூட்டுச் சேர்ந்துட்டாங்க."

"அதற்காக.. நமது கூட்டணியுடன் இவர்களால் மோத முடியுமா? டெபாசிட் கூட கிடைக்காது. அதனால் பிழைத்துப் போகட்டும்ன்னு விட்டு விடுவோம்."

"அப்படியா சொல்கிறீர்கள்..?"

"வேறு வழி.. மாப்பிள்ளை உன் கழுத்தில் தாலி கட்டி விட்டாரே."

"என்ன அண்ணா இது... நீங்களே இவருக்கு பயந்து விட்டீர்களா?"

"பெரிய அண்ணனும்.. சின்ன அண்ணனும். மாப்பிள்ளையைக் கண்டாலே மயக்கம் போடும்போது.. நான் எம்மாத்திரம்."

இப்போது கார்த்திகாவும் பிருந்தாவும் சிரிக்க ஆரம்பிக்க.. கபிலனும் சேர்ந்து கொண்டான்.

சுதாகரன் வாய்க்குள் சிரிப்பை அடக்கிக் கொண்டான். போட்டுக் கொண்டிருக்கும் சிடுமூஞ்சி வேடத்தைக் காப்பாற்றியாக வேண்டுமே.

## 26

இரவின் மெலிதான விடிவிளக்கின் வெளிச்சத்தில் பிருந்தா.. சுதாகரனின் மார்பில் தலை வைத்து அவன் முகம் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தாள்.



"அவங்க இரண்டு பேரும் சகஜமாகப் பேசிக் கொள்வதைக் கவனித்தீர்களா?"

"ஆமாம்.. எனக்குக் கூட ஆச்சரியமாக இருந்தது. கார்த்திகா இப்படி எல்லாம் ஒரு ஆணிடம் இயல்பாகப் பேசக் கூடியவள் இல்லை."

"அதற்குக் காரணம் அவள் கிராமத்தில் பிறந்து வளர்ந்ததாய் இருக்கலாம். எங்கள் காலேஜில் கூட அவளைக் 'கட்டுப் பெட்டி'ன்னு கேலி பண்ணுவாங்க. அவள் கண்டு கொள்ள மாட்டாள்."

"அவளது அந்தக் கட்டுப் பெட்டித்தனமே.. அவளது நிம்மதிக்கு இடையூறு செய்து விட்டதே பிருந்தா."

"ஒருவனை மணக்க மணவறை வரை போன பின்பு.. இன்னொருவனை மணப்பதா.. என்று நினைத்து விட்டாளே..."

"நான்கூட அவள் காலமெல்லாம் இப்படியே இருந்து விடுவாளோன்னு நினைத்து பயந்து போனேன். நல்ல வேளை... நீ காப்பாற்றினாய்..."

"அவள் மலர வேண்டிய மலர் அத்தான்... இப்படி.. மலர்ந்தும் மலராமல் இருக்கக் கூடாது..."

"கபிலனும் இவ்வளவு தீவிரமாய் கார்த்திகாவை காதலிக்கிறாரே... அதை நினைத்தால் மனம் நிறைகிறது."

"கார்த்திகா எனக்காகப் பிறந்தவள். இன்னொருவன் எப்படி அவள் கழுத்தில் தாலிகட்ட முடியும்ன்னு அண்ணன் அடிக்கடி கேட்பார்."

"அப்படியும் இருக்குமோ... அதனால்தான் அவளது கல்யாணம் தடைபட்டதோ."

"ஆமாம். நீங்கள் வேறு என்ன நினைத்தீங்க. தெய்வம் போடும் முடிச்சை யாராலும் மாற்ற முடியாது..."

"அப்போ.. தெய்வம்தான்.. உனக்கும் எனக்கும் முடிச்சுப் போட்டதா?"

"பின்னே இல்லையா..? முதன் முதலில் உங்களைப் பார்த்தவுடன் எனக்குள் தோன்றிய உணர்வும்.. படபடப்பும் வேறு எந்த ஆணைப் பார்த்தபோதும் எனக்கு வந்ததில்லை."

"என்னவோ போடி.. நான் உன்னைக் கல்யாணம் முடித்த பின்தான் நன்றாகப் பார்த்தேன்."

"நீங்கள் தங்கைக்காக என் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட்டவராச்சே..."

"ஏய்... அதற்காக ஏன் விலகுகிறாய்?"

"என்னை.. எனக்காக.. நீங்கள் காதலிக்கவில்லையே."

"இப்போது காதலிக்கவில்லையா?"

"இது கல்யாணம் பண்ணிக் கொண்டோம் என்ற கடமைக்காக..."

"அதற்காக என் காதலை குறைத்து மதிப்பிடுகிறாயா?"

"ஹூம்.. இனிக் குறைத்து மதிப்பிட்டோ.. கூட்டி மதிப்பிட்டோ என்ன பயன்? ஆக மொத்தம்.. நீங்கள் அண்ணனும்.. தங்கையும் கொடுத்து வைத்தவர்கள். நானும்.. கபிலன் அண்ணாவும் தான் ஐயோ பாவம்."

"அப்படி என்ன நீங்கள் இரண்டு பேரும் குறைந்து போனீர்கள்..?"

"பின்னே இல்லையா? நான் விழுந்து.. விழுந்து.. உங்களைக் காதலித்து.. கார்த்திகாவிடம் சொல்லி..



என்னைப் பெத்தவங்க.. கூடப் பிறந்தவர்களிடம் போராடி.. உங்களைக் கைபிடித்தேன்... நீங்கள் கல்யாணத்திற்கு முதல் நாள் பெண்ணழைத்துக் கொண்டு வந்தபோதுகூட.. யாரையோ பார்ப்பது போல் என்னைப் பார்த்துக் கொண்டே கடந்து போனீர்கள்.."

"ஹி.. ஹி.."

"கபிலன் அண்ணா உயிருக்குயிராய் கார்த்திகாவைக் காதலிக்கிறார். அவளுக்கு எது நடந்திருந்தாலும்... அவள்தான் என் மனைவின்னு அடித்துச் சொல்கிறார்."

"யாரை அடித்துச் சொன்னார்? உன்னையா?"

"என்னை அடிப்பதில் உங்களுக்கு அவ்வளவு சந்தோசமா? இருக்கும். இருக்கும்.. அதனால்தான் கல்யாணமான மறுநாளே.. காலையிலும்.. சாயங்காலமும் என்னை அடித்து நொறுக்கினீர்கள்."

"அடித்தேன்.. சரி.. நொறுக்கினேனா.. என்னடி அபாண்டம் இது? நான் உன் காதலன்டி.. உன் கண்ணில் ஒரு சொட்டு நீர் வடிந்தால்கூட.. என் நெஞ்சில் உதிரம் கொட்டும்டி..."

"ச்ச்.. என்னமாய் பாட்டைக் காப்பி அடிக்கிறீர்கள்."

"காபி என்று சொல்லாதே. இரவல்ன்னு வேண்டுமானால் சொல்லு..."

"நாசுக்கு..? ம்ம்.. கபிலன் அண்ணா காதலிப்பதை அறியாமல் உங்கள் தங்கை... கல்லையும் மண்ணையும் பார்ப்பது போல் அவரைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாள். அதனால் தான் சொல்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் குடுத்து வைத்தவர்கள்."

''அதுதான் இல்லை. நீங்கள் இரண்டு பேரும் தான் குடுத்து வைத்தவர்கள்.''

''பெருமையா?''

''நீ எப்படியோ சொல்லிக் கொள். நான் சொல்வது தான் உண்மை.''

''எது உண்மை...?''

''சண்டைக்கு வராதே... நீ உன் மனதை என்னிடம் கொடுத்து விட்டாய்... கபிலனும் அவர் மனதை கார்த்திகாவிடம் கொடுத்து விட்டார். அப்போது நீங்கள் தானே கொடுத்து வைத்தவர்கள்.''

பிருந்தா தன் கணவனின் முகத்தை ஆச்சரியத்துடன் நோக்கினாள்.

''பார்க்க சாது போல் இருந்து கொண்டு.. இவ்வளவு தூரம் பேசுகிறீர்களே... அப்போ.. சாது பூனை போல் வேசம்தான் போட்டீர்களா.''

''இப்போது உன்மேல் காதலில்லாமல் இருப்பது போல் நடிக்கிறேனே.. இதுதான் வேசம்.''

''என் கொடுமைக்கார கணவனுக்குக் கோபம் வந்து விட்டதாக்கும்..?''

''அதுதான் கோபக்காரனென்று பட்டம் வாங்கிக் கொடுத்து விட்டாயே... இருந்திருந்து.. எனக்கென்று அருமையான மைத்துனன்மார்கள் வாய்த்தார்கள். நீ பண்ணி வைத்த வேலையால்.. என்னைக் கண்டாலே அலறுகிறார்கள்.''

''போகிறது விடுங்கள்.''

''போவது.. மைத்துனன்.. மாப்பிள்ளை உறவுடி.''



''நினைத்தது நடந்த பின்னால் உண்மையைச் சொல்லி உறவை இழுத்துக் கொள்ளலாம். இது அறுந்து போகாத உறவுச் சங்கிலி.''

''கவிதை போல் பேசுகிறாயே.''

''ஆமாம். ஆனால் இது உல்டா அடித்த கவிதையில்லை. உங்களைப் போல...''

''அதை ஏன் உல்டா என்கிறாய்.. ரீமிக்ஸ்ன்னு சொல்.''

''எனக்கு ரீமிக்ஸே பிடிக்காது தெரியுமா? அதனால் ஒரிஜினல் பாடலின் தனித்தன்மை போய் விடுகிறது.''

இப்போது சுதாகரன் மனைவியை ஆச்சர்யமாய் பார்த்தான்.

''ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''எனக்கும் ரீமிக்ஸ் பாடல்களைப் பிடிக்காது...''

''பழைய பாடல்களை கேட்பதே தனி சுகம்... ஒவ்வொரு பாடலின் கவிதை வரிகளும் அதற்குத் துணை சேர்க்கும் மெல்லிசையும் அதைப் பாடுபவர்கள் உணர்ந்து அதைப் பாடும் விதமும்... எவ்வளவு அருமையாக இருக்கும் தெரியுமா?''

''ஒருவர் கஷ்டப்பட்டு உருவாக்கிய இசையை தன் போக்கில் மாற்றி அமைத்துப் பாட மற்றவர்களுக்கு உரிமை இருக்கிறதா?''

''பழைய பாடல்களை நினைத்துப் பார்க்க வைக்க வேண்டுமானால் அப்படியே அதை சீர் குலைக்காமல் எடுத்து புதுப் படங்களில் போட்டுப் பயன்படுத்தலாம்.''

''பழமை அழிய விடாமல்.. எல்லாவற்றிலும் நாம் கவனமாய் இருப்பது போல.. பழைய பாடல்கள்

உருக்குலையாமல் இருப்பதிலும் அக்கறை செலுத்தலாம்."

"அதற்கு நாம் என்ன செய்யலாம்..."

"அதையெல்லாம் மறந்துவிட்டு இப்போது காதல் செய்யலாம்."

சுதாகரனின் கரங்கள் பிருந்தாவை இழுக்கவும் அவள் கிளர்ச்சியுற்றாள். அவன் ஆவேசத்துடன்.. அவளை அணுகினான். அவள் மூச்சுத் திணறினாள். அவனது உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கி.. அடித்துச் செல்லப்பட்டவள். மெல்ல.. மெல்ல.. தன் வசமிழந்தாள். அவன் வசமானாள்.

நேற்றைய கதையை இன்றும் அவர்கள் தொடர்ந்தனர். விடியும்போது தூங்க ஆரம்பித்தார்கள். சுதாகரனின் கரங்கள் எல்லையற்ற காதலுடனும்.. திருப்தியுடனும் மனைவியை தழுவிக் கொண்டன.

பெண்மை என்பது வழங்குவதில் ஆர்வம் கொண்டது... அன்பை.. கருணையை.. காதலை... இவை அனைத்தையும் சுதாகரனுக்கு வழங்கிய பிருந்தா அவனைத் தன் வசப்படுத்திக் கொண்டாள்.

## 27

மூன்று முடிச்சை ஒரு பெண்ணின் கழுத்தில் போட்டவுடன் அவளின் முந்தானை முடிச்சில் ஆண் சிக்கிக் கொள்வதன் சூட்சுமம் இதுதான். அவனின் கைக்குள்



அடங்குபவள்தான் அவனைத் தன் கைக்குள் அடக்க முடியும். இதைச் செய்ய முடியாமல்.. தனக்குத்தானே தடை விதித்துக் கொண்டு பிருந்தா விலகிப் போன போது சுதாகரன் எரிமலையானான். அதுவே.. அவள் அனைத்தையும் விளக்கி.. அவன் கைகளுக்குள் அடைக்கலமாய் புகுந்து கொண்ட போது அவன் பனிக்கட்டியாய் குளிர்ந்து போனான்.

ஒரு பாடல் இருக்கறது.

'நேற்று வரை நீ யாரோ.. நான் யாரோ...

இன்று முதல் நீ வேறோ.. நான் வேறோ...'

இதுதான் இந்தியத் திருமணங்கள் செய்யும் மாயம்... முதல் நாள் வரை ஒருவரையொருவர் அறியாதவர்களாய் இருந்தாலும்.. திருமணம் என்ற பந்தத்தில் இணைந்து விட்டால் இறுதிவரை ஒன்றுபட்டு விடுவார்கள்.

விடிந்த பின் முதல் நாள் போல் காபிக்காக கதவு தட்டப்பட கண் விழித்துக் கொண்ட சுதாகரன்.. அருகில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த மனைவியை மையலுடன் நோக்கி.. அவளது நெற்றியில் இதழ் பதித்தான். அவள் விழித்துக் கொண்டாள். உடனே கதவு தட்டப்படுவதை உணர்ந்து அவசரமாய் எழுந்து கதவைத் திறக்கச் சென்றாள்.

"அண்ணி..."

"இந்தா காபி... இன்றைக்கு நிலவரம் எப்படி?"

என்னவோ.. வானிலை நிலவரத்தை விசாரிப்பது போல் மைத்துனன் மனைவி விசாரிப்பதைக் கேட்ட சுதாகரனுக்கு சிரிப்பு வந்தது. மனைவியின் முகத்தை...

மூடியிருந்த இமைகளை லேசாகத் திறந்து.. அரைப் பார்வையாய் பார்த்தான். அவள் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டாள்.

'கள்ளி... என்னமாய் நடிக்கிறாள்!'

''நீங்கள் சொன்னது சரிதான் அண்ணி. வெளியே போய் விட்டு வந்ததில் கொஞ்சம் மாற்றம் தெரிகிறது...''

'என்ன மாற்றம் என்பதையும் நீயே சொல்லி விடு. அண்ணி.. நான் விடிய.. விடிய தூங்கவில்லை. என் புருசனும் என்னைத் தூங்க விடவில்லையென்ற உண்மையைச் சொல்லிவிடு..' சுதாகரன் நினைத்துக் கொண்டான்.

நடந்ததை அறியாத வனஜா.. நாத்தனாரிடம் அக்கறையாய் கூறிக் கொண்டிருந்தாள்.

''அப்படித்தான் பிருந்தா... பழகினால் சரியாகி விடும். இன்றைக்கு எங்கேயாவது சினிமாவுக்குப் போய் விட்டு வாங்க...''

''நேற்றுப் போல்தானா அண்ணி...''

''ஆமாம்.. நால்வர் கூட்டணிதான் சக்சஸ் ஆக இருக்கிறதே.''

''ஆமாமாம். நீங்கள் சொல்வதும் சரிதான்.''

''நாளையில் இருந்துதான் நீ என்ன பண்ணப் போகிறாயோ...''

''ஏன் அண்ணி...?''

''நாளைக்கு உன் வீட்டிற்கு நீ போய் விடுவாயே... அதன் பின் உனக்கு எப்படி நான் அட்வைஸ் பண்ணுவது?''



''செல்போன் இருக்கே அண்ணி.''

''அதற்கு சார்ஜும் இருக்கே.. நீயும்.. நானும் கதை பேசும் ரேன்ஜிற்கு.. செல்போன் பில் லட்சக் கணக்கில் வந்து விடும்.''

வனஜா கூறியது எவ்வளவு உண்மை என்பதை அறிந்த சுதாகரன்.. மாமனாரையும்.. மைத்துனனையும் நினைத்துப் பரிதாபம் கொண்டான்.

இந்தப் பெண்ணின் செல்போனுக்கு பில் கட்டவே இவர்கள் இன்னும் இரண்டு மணி நேரம் கடை திறக்க வேண்டும்.

வனஜா ஒரு வழியாய் கீழே போக... பிருந்தா காபியுடன் கணவனின் அருகே வந்தாள்.

''நீயும் உன் அண்ணியும்.. காபியைக் காட்டியே... என்னை ஒரு வழி பண்ணி விடும் முடிவோடு இருக்கிறீர்களா? தினமும் ஆறிப் போன காபியைக் குடிக்கச் சொன்னால் எப்படி ஒரு மனிதன் குடிப்பான்?''

''ஏங்க.. இது என்ன ஆறிப் போயா இருக்கு. அண்ணி கொதிக்க.. கொதிக்க எடுத்துக் கொண்டு வந்தாங்க.''

''அது குளிரும் வரை நின்று பேசிவிட்டுப் போகிறாங்க.''

''சும்மா பெரியண்ணியைக் குறை சொல்லாதீங்க.. அவங்க எனக்கு இன்னொரு அம்மா போல...''

சுதாகரன் ஆறாத காபியை உறிஞ்சியபடி மனைவியை ஆழமாகப் பார்த்தான்.. பிருந்தா முகம் சிவந்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க.''

''நான் உரிமைப்பட்டவன்.. அதனால் பார்க்கிறேன்.''

''ம்ம்..? பேச்சிலும் மயக்குகிறீர்களா?''

''வேறு எதில் மயக்கினேன்.''

பிருந்தா உதட்டைச் சுழித்து அவனுக்கு அழகு காட்டினாள்.

''அப்பாவி கார்த்திகாவிற்கு.. இப்படியொரு அடாவடி அண்ணன்.''

''உனக்கு உன் பெரியண்ணி அம்மாவைப் போல.. ஆனால் கார்த்திகாவிற்கு கிடைத்திருக்கும் அண்ணி அவளுடைய அம்மாவிற்கும் மேலே.''

சுதாகரன் நெகிழ்வுடன் கை விரித்தான். பிருந்தா அவன் கைகளுக்குள் புகுந்து கொண்டாள். அந்த வினாடியில்... கடவுள் எல்லையற்ற கருணை கொண்டவர் என்று எண்ணிக் கொண்டான் சுதாகரன்.

காபியை கொடுத்து விட்டு இறங்கி வந்த வனஜாவை முன் ஹாலில் மனைவி.. மகன்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சோமசுந்தரம் அழைத்தார்.

''வனஜா.. இங்கே கொஞ்சம் வாம்மா.''

''என்னங்க மாமா...''

''நாளைக்கு பிருந்தாவை.. அவள் வீட்டில் கொண்டு போய் விட வேண்டும்.. நினைவிருக்கிறதா..?''

''நினைவிருக்கிறது மாமா...'' என்றபடி கணவனின் முகத்தையும் மைத்துனன் முகத்தையும் பார்த்துக் கொண்டாள் வனஜா.

அவர்கள் முகத்தில் வெளிச்சம் சுடர் விட்டுக் கொண்டிருந்தது.



'எப்படி மறக்கும்? உங்கள் மகன்கள் இரண்டு பேரும் தான் உங்கள் மருமகன் கிளம்பப் போகும் நாளை.. இன்னும் இரண்டு நாட்கள் மூன்று மணி நேரம்.. நாற்பது நிமிடம்.. இரண்டு வினாடிகள்.. என்று அவர் வந்த முதல் நாளிலேயே கணக்கிட ஆரம்பித்து விட்டார்களே..'

''பிருந்தாவுக்கு மறு வீட்டுப் பலகாரம் அனுப்ப வேண்டும். என்ன.. என்ன அயிட்டம்னு முடிவு பண்ணிணாயா?''

''ஊம்.. நேற்றே... நானும் அத்தையும் பூமாவும் பேசி முடிவு பண்ணி விட்டோம் மாமா.''

''உன் அத்தையைக் கேட்டால் உன்னைக் கேட்கச் சொல்லுகிறாளே.''

பெரிய மருமகளை முன்னிருத்தும் மாமியாரின் பெருந்தன்மை புரிய வனஜா சிரித்தாள்.

''ஒரு பேச்சிற்கு சொல்லியிருப்பாங்க...''

அதைக் கேட்டுக் கொண்டே ஹாலுக்கு வந்த பூமாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது. எதற்கெடுத்தாலும் வனஜாவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடும் மாமியாரின் ஓரவஞ்சனையை எண்ணி கோபமுற்றிருந்தாள் அவள்.

'அது என்ன... வனஜாக்காவுக்கு மட்டும் அதிக மரியாதை தருகிறார்கள் என்னை ஒரு கணக்காகவே எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். நானும் இந்த வீட்டு மருமகள்தானே. நேற்று நாங்கள் இரண்டு பேரும்தானே அத்தைக்கு யோசனை சொன்னோம். இப்போது வனஜாவை மட்டும் கேளுங்கன்னு அத்தை சொல்வது எந்த விதத்தில் நியாயம்?'

அவளது மனதை அறியாமல் சோமசுந்தரம் மனைவியைப் பார்த்துச் சிரித்தார்.

''இவளா.. ஒரு பேச்சிற்கு சொல்லியிருப்பாள்..? ஏதாவது காரணம் இல்லாமல் சொல்ல மாட்டாளே.. பெரிய மருமகளை துணைக்குக் கூப்பிட்டால்.. அதில் ஏதோ விஷயமிருக்குன்னு அர்த்தம்.''

அது உண்மைதான். சோமசுந்தரத்திற்கு மூத்த மருமகளின் மீது மதிப்பும்.. வாஞ்சையும் அதிகம் உண்டு.

வனஜா ஒரு சொல் சொன்னால் அதை அவர் தட்டியதில்லை. அவள் வார்த்தைக்கு மறு வார்த்தை அந்த வீட்டில் இல்லை.

அதே சமயம்.. தனக்குக் கிடைத்திருக்கும் மதிப்பையும்.. மரியாதையையும் உணர்ந்ததாக வனஜா காட்டிக் கொண்டதே இல்லை. அதைப் பயன்படுத்திக் காரியத்தை சாதித்துக் கொள்ள அவள் முற்பட்டதும் இல்லை.. வீட்டின் அதிகாரத்தை மாமியாரின் கைகளிலிருந்து.. தன் கைகளுக்கு வாங்கிக் கொள்ள அவள் நினைத்ததும் இல்லை...

தகுதி உடையவர்களைத்தான்.. மதிப்பும்.. மரியாதையும் தேடி வரும்.. அதை உணராத பூமா.. தான் பாரபட்சமாய் நடத்தப்படுவதாய் நினைத்தாள்.

## 28

பூமாவின் மனம் பொறுமிக் கொண்டிருந்தது. தான் வந்து நிற்பதைக் கூட கவனிக்காமல் குடும்பத்தினர்



பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அவள் கண்கள் லேசாகக் கலங்கி விட்டன. மாமனாரிடம் மரியாதையாய் பேசிக் கொண்டே திரும்பிய வனஜா, பூமாவின் கண்கள் கலங்குவதைக் கவனித்து விட்டாள்... இருந்தும் அவளின் கண்ணீரைக் கண்டு கொள்ளாதவள் போல்.

''இதோ.. பூமாவும் வந்து விட்டாளே.. இவளும் நானும்தான்.. மறு வீட்டுப் பலகார வகைகளை யோசித்துச் சொன்னோம். அத்தை உங்களிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு.. முடிவு பண்ணிக்கலாம்ன்னு சொன்னாங்க'' என்றாள்.

''அப்படியா.. என்ன பலகாரங்கள் செய்யலாம்ன்னு நினைக்கறீங்க?''

''முறுக்கு.. அதிரசம்.. பூந்தி.. லட்டு.. ஜிலேபி..''

''பொறும்மா.. எல்லாமே பழைய காலப் பலகாரமாக இருக்குதே. இந்தக் காலத்துக்குத் தகுந்தபடி நான் சொன்னேனே...''

''ம்ம்.. அத்தை அதையும் சொன்னாங்க மாமா.''

''அதுதானே சொல்லாமல் இருக்க மாட்டாளே...''

''ஆனால் மாமா.. பிருந்தாவின் வீடு கிராமத்தில் இருக்கிறது...''

''ஆமாம்.''

''அவளுடைய மாமனார்.. ஊர் பெரிய மனிதர்.''

''அது தெரிந்ததுதானே.''

''மறு வீட்டுப் பலகாரத்தை கிராமத்தில் வீடு தவறாமல் கொடுப்பார்கள்.''

"நாம்தான் லாரியில் போய் பலகாரக் கடைகளை இறக்குவோமே."

"கிராமத்து மனிதர்களுக்கு பிடித்த பலகாரம். முறுக்கு. அதிரம்.. லட்டு.. ஜிலேபி.. மைசூர்பாகு.. இவைகள் தான்."

"ஓ.. நீ அப்படிச் சொல்கிறாயா."

சோமசுந்தரம் யோசனையில் ஆழ்ந்தார். மருமகள் மீது என்றும் போல்.. இன்றும் அவருக்குள் மதிப்பு உருவாகியது.

'எவ்வளவு புத்திசாலித்தனமாக யோசிக்கிறாள்?'

"சரிம்மா.. நீ சொல்வது போலவே செய்து விடலாம்."

'சொன்னது நானும்தான்.. பாராட்டு அக்காவிற்கு மட்டும்தானா..' பூமா பல்லைக் கடித்துக் கொண்டு அவர்களின் அறைக்குள் சென்று விட்டாள். அழுத குழந்தையை சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தபோது தனபாலன் அறைக்குள் வந்தான்.

"ஏண்டி குழந்தை அழுகிறான்?"

"ஏண்டா.. இந்த அம்மாவின் வயிற்றில் வந்து பிறந்தோமென்று நினைத்து அழுகிறான்."

"என்னடி.. ஜாடை பேச்செல்லாம் தூள் பறப்புது."

"என்னால் அதைத்தானே செய்ய முடியும். நேரேயா சொல்ல முடியும்? நான் என்ன அப்படியா வரம் வாங்கிப் பிறந்திருக்கிறேன்."

"அடி வாங்கி இரண்டு நாளாச்சில்ல... அதுதான் உனக்கு நாக்கு நமநமங்குது. வாய்க்கு வந்ததைப் பேசுகிற."



"உங்களுக்கு அதுதான் தெரியும்... வேறு என்ன தெரியும்? கட்டின புருசன் தன் பெண்டாட்டியை மதித்தால்தான்.. மற்றவர்களும் மதிப்பாங்க. நீங்க எந்தக் காலத்தில் என்னை மதிச்சீங்க. எப்போது பார்த்தாலும் மற்றவர்கள் முன்னால் அடித்தால்.. இந்தக் கதிதான்."

தனபாலன் திகைத்தான். அவன் கோபக்காரன்தான். ஆத்திரத்தில் மனைவியை அடித்து விடும் அவசரக்காரன்தான். ஆனால் அதற்காக மனைவியின் மேல் அவனுக்குக் காதல் இல்லையென்று சொல்லிவிட முடியுமா?

அவனுக்கு பூமாவை மிகவும் பிடிக்கும். பெண் பார்க்கப் போனபோதே.. நிறைந்த சபையில்.. 'எனக்கு பெண்ணைப் பிடித்திருக்கிறது..' என்று சொல்லிவிட்டு வந்தவன் அவன்.

"ஏண்டி.. உன் சின்ன மகன் என்ன அவசரத்தில் பிறந்து தொலைத்தானாடி.. பெண்ணைப் பிடித்திருந்தால் வீட்டிற்கு வந்து நம்மிடம் சொல்ல வேண்டியதுதானே. சபையில் போய் சொல்கிறானே.. விட்டால் அந்தப் பெண்ணிற்கு அப்போதே தாலிகட்டி.. கையோடு வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து விடுவான் போல இருக்கே..."

அன்று சோமசுந்தரம் அங்கலாய்த்துக் கொண்டதை அடிக்கடி சொல்லிச் சிரிப்பாள் வனஜா.

அவனுக்கா... பெண்டாட்டியின் மேல் அன்பில்லை..? என்ன ஒன்று.. அதை அவனுக்கு வெளிப்படுத்திக் கொள்ளத் தெரியாது. அதற்காக.. இவள் பிழியப் பிழிய அழுவதா?

''ஏய்.. இங்கே வாடி.. வான்னு சொல்கிறேனில்லை...'' தனபாலன் அதட்டினான்.

பூமா அவனிடம் நெருங்கி வந்தாள். சட்டைப் பையிலிருந்த கர்ச்சீப்பை எடுத்து அவளது கண்ணீரையும்.. முகத்தையும் துடைத்துவிட்டு.. கலைந்திருந்த அவளது முடி கோதி. மென்மையாக கன்னத்தில் முத்தமிட்டான்.

''என்ன விசயம்டி..? எதுக்கு இந்த அழுகை? நீதான் அடித்தாலே அழ மாட்டாயே...''

''நீங்கள் அடிப்பதற்கு போய் அழுவார்களா?''

தனபாலன் காதலுடன் சிரித்துக் கொண்டான். மனைவியின் தோள் மீது கை போட்டு இறுக்கிக் கொண்டு கேட்டான்.

''வேறு என்ன நடந்தது.''

''நேற்று நானும் அக்காவும் தான் பிருந்தாவிற்கு கொடுக்க வேண்டிய பலகார வகைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்தோம்.''

''அதற்கென்ன இப்போது.''

''இப்போது மாமா... அக்காவை மட்டும் பாராட்டுகிறார்.''

''இதுதான் விசயமா.. இதற்குப் போய் அழுவார்களா.''

''ஏங்க.. எதிலும் நான் இரண்டாவதுதானா..?''

''நீ மூத்தவரையா கல்யாணம் பண்ணியிருக்கிறாய்?''

''ச்சே... பேச்சுக்குக் கூட இப்படிச் சொல்லலாமா?''

''நான் இரண்டாவது மகன்.. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவள். இந்த வீட்டின் இரண்டாவது



மருமகள் தானே. நீ மூத்த மருமகளாய் ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டால் எப்படி?''

பூமாவிற்கு வெட்கம் வந்து விட்டது. கணவனின் கையில் செல்லமாய் தட்டிவிட்டு குழந்தையைத் தூக்கிக் கொண்டு எழுந்தாள்.

''எங்கே போற?''

''டைனிங் டேபிளுக்குத்தான்.. எல்லோரும் சாப்பிட வந்திருப்பாங்களே.''

''பரிமாறும் வேலையை எல்லாம் அண்ணி பார்த்துக்குவாங்க. நீ இப்படி வா.''

பூமா கணவனின் அருகே வந்தாள். தனபாலன் குழந்தையை வாங்கி தூக்கிப் போட்டு விளையாடினான். அது சிரித்தது. பூமா விச்ராந்தியாய் அமர்ந்து அவர்களது விளையாட்டில் இணைந்து கொண்டாள். குழந்தையை கட்டிலில் விளையாட விட்டு விட்டு.. பூமாவின் மடிமீது தலை வைத்துப் படுத்துக் கொண்டான் தனபாலன்.

கணவனின் முடி கோதி.. அவன் கைவிரல்களோடு.. தன் கைவிரல்களைப் பிணைத்துக் கொண்டு கதை பேசிக் கொண்டிருந்தாள் பூமா... சற்று நேரம் கழித்து எழுந்து அமர்ந்த தனபாலன்.

''இப்போது புரிகிறதா..?'' என்று கேட்டான்.

''என்ன..?'' பூமா புரியாமல் வினவினாள்.

''இதுபோல் ப்ரீயாய் உட்கார்ந்து பேச அண்ணிக்கு என்றுமே நேரம் இருந்ததில்லை. அவங்க இந்த வீட்டுக்கு மருமகளாய் வந்தபோது.. நான் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். பிருந்தா.. ஸ்கூலில் படித்துக் கொண்

டிருந்தாள். அம்மாவிற்கு உடம்பு சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தாங்க.. அப்பா ஒருவரால் எல்லா வற்றையும் சமாளிக்க முடியாது. அண்ணன் வியாபாரத் தில் அப்பாவுடன் இருந்தாக வேண்டும். அண்ணி.. இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த மறு வினாடியில் இருந்து குடும்பப் பொறுப்பை எடுத்துக்கிட்டாங்க.. படுத்துக் கிடந்த அம்மாவை எழுந்து உட்கார வைத்தாங்க. அவங்க கையில் திரும்பவும் வீட்டு நிர்வாகத்தை ஒப்படைத் தாங்க. இதுவரை அம்மாவைக் கேட்காமல் தானாய் ஒரு சிறு விசயத்தைக் கூட அண்ணி செய்ததில்லை தெரி யுமா? இவ்வளவு ஏன்.. நமக்குக் கல்யாணமானவுடன்.. நாம் இரண்டு பேரும்.. கொடைக்கானலுக்கு தேனிலவு கொண்டாட ஒரு வாரம் போகிறோமென்று சொல்லி விட்டுப் போய் ஒரு மாதம் இருந்துவிட்டு வந்தோமே.. நினைவிருக்கிறதா?''

பூமாவின் முகம் அந்த நாட்களின் நினைவுகளில் சிவந்தது.

''நினைவிருக்கிறது...''

''அண்ணனும்.. அண்ணியும்.. தேனிலவிற்கு என்ன.. மறு வீட்டிற்கு கூடப் போகவில்லை.. காலை யில் மறு வீட்டிற்குப் போய்விட்டு மதிய சாப்பாட்டிற்கு.. நம் வீட்டிற்கு சீர் வரிசை.. பலகாரக் கூடைகளோடு வந்து இறங்கி விட்டார்கள். இவ்வளவு ஏன்..? அண்ணன்.. கடையை அடைத்து விட்டு.. பதினொரு மணிக்குத்தான் வீட்டுக்கே வருவார். அண்ணியின் நிலை உனக்குப் புரிகிறதா.''

பூமாவிற்குப் புரிந்தது.



# 29

காலையில் கடைக்குப் போகும் கணவன்.. இரவு பதினொரு மணிக்குத்தான் வீட்டிற்குத் திரும்புவான். அவன் வந்த பின்னாலும்.. உடல் அயர்வில் மனைவி யின் முகம் பார்த்து.. அவளோடு உட்கார்ந்து பேச அவனுக்கு நேரம் இருந்திருக்குமா?

அந்த நிலையில் முகம் சுளிக்காமல்.. வீட்டுக் காரி யங்களை கவனித்து.. நோயாளி மாமியாருக்கு பணிவிடை செய்து.. சிறுமியான நாத்தனாரைப் பராமரித்து கோபக் கார கொழுந்தனையும் சரிக்கட்டி.. கண்டிப்பான மாம னாரிடமும் நல்ல பெயர் வாங்கி.. கணவனிடமும் காதலுடன் குடும்பம் நடத்தி.. அவனுடைய இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகி.. ஒரு பெண் குடும்பத்தை நிலை நிறுத்தினால்.. அவளுக்கு தலைமை பதவி தேடி வராமல் என்ன செய்யும்?

''காலையில் எல்லோருக்கும் காபி கலந்து கொடுப்பது யார்..?''

''அக்காதான்.''

''வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை உபசரித்து சாப்பிட வைப்பது யார்?''

''அக்காதான்.''

''சமையல்காரம்மாளும்.. வேலை செய்யும் அம்மாளும் வராவிட்டாலும் வீட்டு வேலைகள் நிற்காமல் நடந்து விடும். அது யாரால்..?''

"அக்காவால்தான்."

"இப்போது சொல். அவர்கள் மேல் உனக்குப் பொறாமை வருகிறதா?"

"ச்ச்.. ஏதோ தெரியாமல் பேசிவிட்டேன்."

"இப்போது மனது சமாதானமாகிவிட்டதா?"

"ம்ம். ஆனால் ஒரு சந்தேகம்."

"இன்னும் என்னடி?"

"எதற்கெடுத்தாலும் கோபம் வந்து அடித்து விடுவீர்களே.. உங்களுக்கு உங்கள் அண்ணியின் மேல் பாசம் அதிகம் உண்டு. அவங்க மேல நான் பொறாமைப் பட்டேன். ஏன் இதுக்குக் கோபப்படல?"

"கோபப்பட்டு அடிக்கும் விசயமல்ல இது.. உனக்குப் புரிய வேண்டும். நான் அடித்தால் எதிர்மறை விளைவுகள்தான் வரும். அத்தோடு.. நீயும் நல்லவள் பூமா.. உன்னை ஒதுக்கி வைப்பது போல் உனக்குப் பிரமை.. நன்றாக யோசித்தாயானால்.. அண்ணி.. உன்னை பின்னுக்குத் தள்ளி அவங்க முன்னால் நிற்க.. என்றைக்குமே விரும்ப மாட்டாங்க. உன்னையும் அவங்க கூட கூட்டுச் சேர்த்துக்கிட்டுத்தான் நிற்பாங்க."

பூமா தெளிவடைந்தவளாய்.. கணவனுடன் டைனிங் ஹாலுக்கு வந்தாள். கபிலன் ஏதோ பேசிக் கொண்டிருக்க.. சுதாகரன் சிரித்துக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"இந்த ஆளுக்கு சிரிக்கக் கூடத் தெரியும்ன்னு இப்போதுதான் தெரியுது.." என்று மனைவியிடம் முணுமுணுத்தான் தனபாலன்.



"சும்மா இருங்க. வீட்டு மாப்பிள்ளை.. அவர் காதில் விழுந்து வைக்கப் போகிறது... இருந்திருந்து.. இன்றைக்குத்தான் சிரிக்கிறார்."

"அடேங்கப்பா.. மாப்பிள்ளையின்னா கொம்பா முளைத்திருக்கிறது?"

"இதை.. என் அண்ணன் சொன்னால் நீங்க கேட்டுக்குவீங்களா?"

"நல்லா.. நியாயம் பேசுறடி. பிழைத்துக் கொள்வாய்."

உள்ளேயிருந்து கையில் பாத்திரத்துடன் வந்த வனஜா.. பூமாவைப் பார்த்து.

"குட்டிக்கு இட்லி ஊட்டி விட்டாயா..?" என்று கேட்டாள்.

"இன்னும் இல்லை அக்கா."

"இங்கே கொடு. நான் ஊட்டி விடுகிறேன். தனபாலனுக்கு டிபன் வைத்து விட்டு.. நீயும் சாப்பிடு."

வனஜா குழந்தையை வாங்கிக் கொள்ள. பூமாவின் கண்கள் பனித்து விட்டன. தனபாலன் அர்த்தத்துடன் மனைவியை நோக்கினான். பூமா தலையை குனிந்து கொண்டாள்.

நாகா - லட்சுமி தியேட்டருக்குள் கார் நுழைந்தது. தியேட்டரின் முன்னால் சுதாகரன்.. பிருந்தா.. கார்த்திகா மூவரையும் இறக்கி விட்டு விட்டு காரை பார்க்கிங் ஏரியாவில் நிறுத்திவிட்டு வருவதற்காக கபிலன் சென்றிருந்தான்.

தியேட்டர் வளாகத்திற்குள் இருந்த சிறு பூங்காவை பார்வையிட்டபடி நின்றிருந்த கார்த்திகா.

''இங்கே இருந்த மரங்களையெல்லாம் காணோமே..'' என்று கேட்டாள்.

''வெட்டி விட்டார்கள்.''

''ஏன்..?''

''தியேட்டர் நிர்வாகம் கைமாறி விட்டது.''

''யார் வாங்கியிருப்பது?''

''ரிலையன்ஸ்.''

''அவர்கள் எதையும் விட்டு வைப்பதில்லை போல.''

''மளிகைக்கடை கூட ஆரம்பிக்கப் போகிறார்களாம்.''

கபிலன் அதற்குள் வந்து விட்டான். டிக்கெட்டை வாங்கிக் கொண்டு வந்தான். தியேட்டருக்குள் நுழையும் போது.. பெண்களின் ஹேண்ட் பேக் முதற் கொண்டு செக் பண்ணி அனுப்பினார்கள்.

ஏன் என்று கார்த்திகாவிற்கு புரியவில்லை.

''ஏண்டி. இப்படிச் செய்கிறாங்க?''

''வீட்டிலிருந்து திண்பதற்கு எதையும் எடுத்து வரக் கூடாது.''

''அப்போது படம் பார்த்துக் கொண்டே கொறிக்க என்ன செய்வது?''

''தியேட்டருக்குள் இருக்கும் கேன்டினில் வாங்குவது.''

''எப்போதிருந்து இந்த மாற்றம்.''

''நீ வெளியுலகத்தைப் பார்க்காமல் வீட்டுக்குள் அடைந்து கிடக்க ஆரம்பித்ததில் இருந்து.''



கார்த்திகா கபிலன் இருக்கும் உணர்வில் மௌனமாய் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அதே சமயம் அவளது முகத்தையே தான் அவனும் பார்த்துக் கொண்டிருந்தான்.

தியேட்டரின் உள்ளே இருந்த இருக்கைகளில் அமரப் போனபோது.. ஆண்களாக இருந்த வரிசையில் அவர் களது இடம் இருந்தது. என்ன செய்வதென்று யோசித்து விட்டு.. நடுவில் பிருந்தாவையும் கார்த்திகாவையும் அமர வைத்துவிட்டு.. ஓரமாக பிருந்தாவின் அருகில் சுதாகரனும் கார்த்திகாவின் அருகில் கபிலனுமாக அமர்ந்து கொண்டனர்.

இதை எதிர்பார்க்காத கார்த்திகா பதறிப் போனாள். காரில் அவன் அருகே அமர்ந்தபோது.. சீட்டுகளுக்கு இடையே இருக்கும் இடைவெளி அதிகமாக இருந்தது. அதனால் அவளுக்கு வித்தியாசமாக எதுவும் தெரிய வில்லை.

இப்போது தியேட்டரில் அவன் வெகு அண்மையில் அமர்ந்திருப்பதைப் போல் அவள் உணர்ந்தாள். அவ ளுக்கு இயல்பாய் சுவாசிக்க முடியாமல் மூச்சுத் திண றியது. இதயம் 'பட்.. பட்'டென்று அடித்துக் கொண்டது.

படம் பார்க்க மாட்டேன் என்று திரும்பி விடலாமா என்று யோசித்தவள்.. அந்த யோசனையை கை விட்டாள். கார்த்திகா வெளியேறினாள். சுதாகரனும் அவள் பின்னால் வந்து விடுவான்... இனிமையான தருணத்தை அவள் கெடுத்தது போல ஆகிவிடும். அது நாகரிகமாகவும் இருக்காது என்பதால்.. தன் பதட்டத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனது அருகே அமர்ந் தாள் அவள்.

பிருந்தா இது எதையும் கவனிக்காமல் கார்த்திகாவுடன் பேசிக் கொண்டே படம் பார்க்க ஆரம்பித்தாள். அது அவளின் பழக்கம்... பேசிக் கொண்டே படம் பார்க்கா விட்டால்.. அவளுக்குப் படம் பார்த்தது போலவே இருக்காது.

''ஒன்றைக் கவனித்தாயா?''

''என்னதுடி...''

''ஐஸ்வர்யாராயின் முதல் தமிழ் படம்.. 'இருவர்' மணிரத்னத்தின் படம்தான்.''

''ம்ம்..''

''அபிஷேக்கும்.. ஐஸ்வர்யாராயும்.. கல்யாணத்திற்கு பின்னால் சேர்ந்து நடித்த.. 'குரு..' படமும் மணிரத்னத்தின் படம்தான்.''

''ம்ம்.''

''இப்போது.. இந்த 'ராவணன்' படத்திலும் அவங்க இரண்டு பேரும் சேர்ந்து நடிக்கிறாங்க. இதுவும் மணிரத்னத்தின் படம்தான்.''

''ம்ம்..''

''இதில் மாவோயிஸ்டுகள் பிரச்னையைத் தொட்டிருக்கிறார் மணிரத்னம்.''

''ம்ம்...''

கார்த்திகா கபிலனின் அருகாமையில் இயல்பில்லாமல் இருக்க... கபிலன் அதை உணர்ந்தவன் போல் நன்றாக விலகி அமர்ந்திருந்தான். அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த கைப்பிடியில் அவனது விரல்கள் கூடப் படவில்லை. அவனது கம்பீரமான. ஆஜானு



பாகுவான உடலை மறுபுறமாக சரித்து அமர்ந்திருந்தான் அவன்.

# 30

கபிலன் பிருந்தாவின் வார்த்தைகளுக்கு மறுமொழி கூறினான்...

''இப்போது மட்டுமில்லை.. எப்போது 'ரோஜா' படத்தை எடுத்தாரோ... அப்போதிருந்தே மணிரத்னம்.. நாட்டின் பிரச்னைகளை மையப்படுத்தியே படம் எடுக்க ஆரம்பித்து விட்டார்.''

''ஒரு நல்ல படைப்பாளிக்கு அழகு.. ஒரு பிரச்னையை மீடியாவின் மூலம் தெரியப்படுத்துவதுதான். அண்ணா.''

''இட்ஸ் ரைட்.. ரோஜாவில் காஷ்மீர் பிரச்னை. மும்பையில் வெடிகுண்டு பிரச்னை. உயிரே படத்தில் மனித வெடிகுண்டு பிரச்னை.. என்று மணிரத்னம் அஞ்சாமல்.. அவரது எல்லைகளை விரிவு படுத்திக் கொண்டே இருக்கிறார்..''

மெல்ல.. மெல்ல.. கார்த்திகா இயல்பானாள். கபிலனின் ஒதுக்கமும்.. அவள் பக்கம் பார்வையைத் திருப்பாமல் கண்ணியம் காத்த விதமும்... படத்தைப் பார்த்தபடி.. பிருந்தாவுடன் அவன் உரையாடிய முறையும் அவளை இயல்பாக்கி விட்டது. அவளது படபடப்பு

மறைந்து சுவாசம் சீரானது. அவள் இயல்பாக அவர்களது பேச்சில் கலந்து கொண்டாள்.

''அழகின்னா அது ஐஸ்வர்யா ராய்தான் பிருந்தா'' என்று அவள் சொல்ல...

'உன்னை விடவா..' என்று எண்ணிக் கொண்டான் கபிலன்.

''நம்ம விக்ரம் பாரேன்... தைரியமாக வில்லன் போன்ற ஒரு ரோலை ஏற்றுக் கொண்டு நடிக்கிறார்.''

''அவர் தைரியத்தை இப்போதுதான் பார்க்கிறாயா? 'சேது' படத்தில் தலையை மொட்டையடித்துக் கொண்டு மன நோயாளி போல் நடித்ததையும்.. பிதாமகனில் பற்களில் காரையை பூசிக் கொண்டு நடித்து நேஷனல் அவார்டு வாங்கியதையும் மறந்து விட்டாயா..?''

''மணிரத்னமும்.. விக்ரமும் அருமையான காம்பினேசன் கார்த்திகா..''

''நீயும்... அண்ணனும் போலவா.''

கார்த்திகாவின் அருகே தலையை சரித்து.. பிருந்தா கிசுகிசுத்தாள்.

''அதை நீதான் சொல்கிறாய்.. உன் அண்ணன் சொல்லவில்லையே.''

அதைக் கேட்ட சுதாகரன்.. இருட்டில் தன் மனைவியின் கால்களைத் தேடி மிதித்தான். பிருந்தா கால்களை நகர்த்திக் கொள்ளாமல்.. கைப்பிடியில் தன் கரத்தை வைத்து.. அதையும் அவன் வசம் கொடுத்தாள்.

இவர்களின் இந்த ரகசிய சரஸத்தை அறியாதவளாய் கார்த்திகா கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.



'இந்த அண்ணன் ஏன் பிருந்தாவின் மனதைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறான்...'

கார்த்திகா மௌனமாகி விட்டதைக் கண்ட கபிலனுக்கு அவள் மேல் இரக்கம் வந்தது.

'இவள்தான் எவ்வளவு இளகிய மனம் படைத்தவளாக இருக்கிறாள்? இந்த மனம்தானே... திருமணமாகாமல் இருந்தும்.. இவளை விரதம் மேற்கொள்ளச் செய்கிறது...?'

இடைவேளை விட்டதும்.. கபிலன் எழுந்து ஒதுங்கியவாறு நடந்து சென்றான். பின் திரும்பி வந்தான்.

''தியேட்டருக்குள் சாப்பிடுகிற பொருள் எதையும் அனுமதிக்க மாட்டாங்களாம்.''

''ஆமாம். அதை மறந்து விட்டேனே.. எழுந்திரு கார்த்திகா. வெளியே ஸ்டாலில் போய் சாப்பிட்டு விட்டு வரலாம்.''

'வேண்டாம்..' என்று மறுக்க வாயெடுத்த கார்த்திகா பிருந்தாவின் முகத்தைப் பார்த்து வாயை மூடிக் கொண்டாள்.

அவர்கள் மூவரும் எழுந்து போவதற்குள்.. டோக்கன்களை வாங்கியிருந்த கபிலன்.. அவர்களின் கைகளில் சான்ட்விச் தட்டுக்களை நீட்டினான்.

உடன் வருபவர்களை அவன் கவனித்துக் கொள்ளும் பாங்கு கண்டு.. கார்த்திகா ஆச்சரியம் அடைந்தாள்.

''உங்க அண்ணன்.. பரவாயில்லை பிருந்தா.''

''அவர் சூப்பர்ன்னு எல்லோரும் சொல்கிறாங்க. நீ வெறுமனே. பரவாயில்லைன்னு சொல்கிறாயே...''

''உன் சிநேகிதி.. தேவலைன்னு சொன்னாலே... அவர்கள்தான் நம்பர் ஒன்னுன்னு அர்த்தம் பிருந்தா... தேங்க்ஸ் பார் யுவர் காம்ப்ளிமென்ட் கார்த்திகா..''

கபிலன் நன்றி சொல்லவும் கார்த்திகாவின் முகம் சிவந்து விட்டது. அப்போதுதான் அது நடந்தது...

அவர்கள் அமர்ந்திருந்த வரிசையின் பின் வரிசையில் அமர்ந்திருந்த ஒருவன்.. கார்த்திகாவின் அழகில் கவரப் பட்டிருந்தான். இன்னொரு அழகியான பிருந்தாவின் பக்கம் பார்வையைத் திருப்ப முடியாமல் அவளது கழுத்தில் இருந்த புதிய மஞ்சள் சரடு மிரட்டியது.

'கல்யாணமானவள்..' என்ற நினைவோடு.. கார்த்தி காவை கவர முயன்று கொண்டிருந்தான்.

அக்கம் பக்கம் பார்க்காத கார்த்திகா அவனது சேஷ்டை களைக் கவனிக்கவில்லை. ஆனால் கபிலன் கவனித்துக் கொண்டிருந்தான். கார்த்திகா பிருந்தாவிடம் எதை யாவது கேட்டால் இவன் மறுமொழி சொல்வது.. வேண்டு மென்றே முன்னால் சரிந்து அமர்ந்து கார்த்திகாவின் தலையில் சூடியிருக்கும் பூவை வாசம் பிடிப்பது.. என்று அவனது செயல்கள் கொஞ்சம் அத்து மீறிக் கொண்டு இருந்தன.

பெண்களுடன் வந்திருக்கிறோம் என்ற நினைவினில் கபிலன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தான்.

இவர்கள் வெளியே வரவும்.. அவனும் பின் தொடர்ந்து வருவதைப் பார்த்துக் கொண்டும் இருந்தான்.

அதனாலேயே பிருந்தாவையும்.. கார்த்திகாவையும் சுவர் ஓரமாக நிற்கச் செய்து சான்ட்விச் தட்டுக்களைக் கொடுத்திருந்தான்.



ஆனால் அவர்களைக் கடந்து செல்வது போல் சென்ற அவன் கார்த்திகாவின் அருகே வரும்போது.. வேண்டு மென்றே சறுக்கி.. கார்த்திகாவின் மேல் விழுந்தான்.

பிருந்தாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்த கார்த் திகா.. கண் சிமிட்டும் நேரத்தில் தன் மேல் விழுந்த வனைக் கண்டு நகர முடியாமல் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள்.

அவன் கார்த்திகாவின் மேல் விழப்போன கடைசி வினாடியில்.. கபிலனின் கை கார்த்திகாவிற்கும்.. அவ னுக்கும் குறுக்கே வந்து அவனைத் தாங்கிக் கொண்டது.

கார்த்திகாவின் மேல் அந்த அவனின் கைவிரல் நகம் கூடப் படவில்லை. அவனைத் தாங்கி.. தள்ளிவிட்ட கபிலனின் கையும் படவில்லை.

''ஸாரி.. நான் வழுக்கி விழுந்து விட்டேன்..'' அவன் மோசமாக இளித்தான்.

''இட்ஸ் ஓகே மிஸ்டர்.. உங்களுடன் ஒரு விஷயம் பேச வேண்டும். இங்கே வாங்க.. அட வாங்க சார்..'' என்றபடி கபிலன் அவனைத் தள்ளிக் கொண்டு ஆண் களின் பாத்ரூமிற்குள் நுழைந்தான்.

பிருந்தாவும்.. சுதாகரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கார்த்திகா படபடப்புடன் பாத்ரூம் இருக்கும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஐந்து நிமிடங்களில் கபிலனும்.. அவனும் வெளியே வந்துவிட.. கார்த்திகா நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

கபிலன் கம்பீரமாக.. அவனது நிமிர்ந்த நடையுடன் வர.. அந்த அவனின் தலை கலைந்து.. முகம் வீங்கி யிருந்தது. கார்த்திகா.. இருந்த பக்கம் திரும்பிக் கூடப்

பார்க்காமல் அவளைக் கடந்து சென்று.. தியேட்டர் வாசலின் கண்ணாடிக் கதவுகளைத் திறந்து வெளியே சென்று விட்டான்.

"ஏன் அவர் மீதிப் படத்தைப் பார்க்காமலேயே போகிறார்" என்று கார்த்திகா கபிலனிடம் சந்தேகம் கேட்டாள்.

"இது இப்போ ரொம்ப அவசியமா?" கபிலன் கார்த்திகாவை முறைத்த முறைப்பில் கார்த்திகாவின் வாய் தானாக மூடிக் கொண்டது.

"ஏன் இப்படிக் கோபப்படுகிறார்...?" பிருந்தாவிடம் மெல்லிய குரலில் கேட்டாள் கார்த்திகா.

"அண்ணன் கோபமாய் இருக்கிறபோது பேசாதே.." பிருந்தா எச்சரித்தாள்.

"ஏன்...?"

"ஏன்னா அது அப்படித்தான். அவர் கோபமாய் இருக்கிறபோது அவரிடம் பேசுவதற்கு பெரியம்மாவும்.. பெரியப்பாவுமே.. ரொம்பவும் பயப்படுவார்கள்."

"இப்போது ஏன் கோபமாய் இருக்கிறார்."

அப்பாவியாய் கேட்டவளிடம் பதில் சொல்ல முடியாமல் மௌனமாக ஒரு பார்வை பார்த்தாள் பிருந்தா.

அவளது மனம் மட்டும் சொல்லியது.

'உனக்காகத்தான் கார்த்திகா. உன்னை ஒருவன் ஆசையாய் பார்த்து தொட முயன்றதால்தான்.. அண்ணன் கோபமாய் இருக்கிறார்.'

## 31

இடைவேளைக்குப் பிறகு.. படம் பார்க்கவே கார்த்திகாவிற்கு பிடிக்கவில்லை. வழக்கமாய் பேசிக்



கொண்டே படம் பார்க்கும் பிருந்தா.. வழக்கத்திற்கு மாறாக மௌனமாகப் படம் பார்த்துக் கொண்டிருந்தாள். படம் முடிந்து கிளம்பும் போது கூட கபிலனின் முகம் இறுகியே இருந்தது. இரவு உணவின் போதும் அவன் சரியாகப் பேசவில்லை.

ஏனோ அவனது கோபமும்.. மௌனமும் கார்த்திகாவை அதிகம் பாதித்தது. தியேட்டரில் ஒருவன் அவள் மேல் விழ முயன்றபோது.. அவன் அவள் மேல் அவனை விழவிடவில்லையே. அவன் அருகில் இருக்கும்போது தான்.. எவ்வளவு பாதுகாப்பாக இருக்கின்றது.

அன்று இரவு கார்த்திகா சரியாகவே உறங்கவில்லை. நடுநிசிக்கு மேல் உறங்கியவளுக்கு கனவு வந்தது. கனவில் அவள் பாலைவன மணலில் ஓடினாள். கொள்ளைக்காரன் ஒருவன் அவளைத் துரத்துகிறான். அவன் அவளைத் தொட முயன்ற கடைசி வினாடியில் வெள்ளை நிறப் புரவியில் வந்த வீரன் ஒருவன் அந்தக் கொள்ளைக்காரனை வாள் வீசி விரட்டுகிறான். புரவியில் ஏறி.. அவன் செல்லும்போது.. முகம் திருப்பி அவளைப் பார்க்கிறான்.

அந்தக் குதிரை வீரன்.. கபிலன்...

கார்த்திகாவிற்கு சட்டென்று விழிப்பு வந்து விட்டது. அவள் அதிர்ந்து எழுந்து படுக்கையில் அமர்ந்து விட்டாள்.

கனவில் கபிலன் முகம் வருகிறது என்றால்.. அவன் முகம் அவள் மனதில் எவ்வளவு ஆழமாய் பதிந்திருக்க வேண்டும்.. இதற்கு அர்த்தம் என்ன...?

அவள் அதற்குப் பின்னால் தூங்கவில்லை.

காலையில் வீடே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. பூபாலனும் தனபாலனும் முகம் மலர வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

''வனஜா.. எல்லாவற்றையும் அடுக்கியாகி விட்டதா?''

''அடுக்கியாகி விட்டது...''

''சீக்கிரம்டி...''

''ஏன் பறக்கறீங்க...''

'என் அவதி எனக்குத்தான் தெரியும். உனக்கெங்கே புரியப் போகிறது.'

''என்ன... மனதிற்குள் எதையோ சொல்லிக் கொண்டிருக்கீங்க.. போல...''

''அதுக்குக் கூட எனக்கு உரிமையில்லையாடி.. மனுசனை மனதிற்குள் கூட புலம்ப விட மாட்டேங்கறீங்களே.''

''போதும்.. சலம்பாமல் கொஞ்சம் அடக்கி வாசிங்க. பிருந்தாவின் வீட்டிற்கு மறு வீட்டுச் சீரோடு போக வேண்டும்.''

''அதற்குத்தானேடி காத்திருக்கிறேன்.''

''என்ன அண்ணன் நீங்க... ஒற்றைத் தங்கை.. கல்யாணமாகி மறு வீட்டிற்கு வந்து விட்டு புகுந்த வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறாள். அவள் கைப்பிடித்து மாப்பிள்ளையிடம் கொடுத்து.. ஆனந்தா.. என் கண்ணையே உன்னிடம் ஒப்படைக்கிறேன். இதில் ஆனந்தக் கண்ணீர்தான் வரவேண்டும்ன்னு சொல்ல வேண்டாமா?''

''அடிப்போடி.. கல்யாணமான மறுநாளே.. அடித்து.. அவள் கண்களில் கண்ணீரை வரவழைத்த ஆளிடம்



போய் ஆனந்தக் கண்ணீரைப் பற்றிப் பேசச் சொல்கிறாயே.''

பூபாலன் அகன்று விட்டான். தனபாலன்.. அவனது அறைக்குள் சுதாகரனுக்கு அர்ச்சனை பண்ணிக் கொண்டிருந்தான்.

''இந்த மனிதன் வந்து இருந்த இந்த நான்கு நாட்களும் வீடு.. வீடாகவா இருந்தது. என் வீட்டில் நான் சுதந்திரமா நடமாட முடிந்ததா.''

''சரி.. விடுங்க.. தங்கை கூடப் பிறந்து விட்டு இதையெல்லாம்.. பார்த்தால் முடியுமா?''

''இப்படியே சொல்லிச் சொல்லி.. நீயும்.. அண்ணியும்.. என் வாயை அடைத்து வைங்க.''

ஒரு வழியாய்.. ஒரு லாரியில் சீர்வரிசை சாமான்களையும் இன்னொரு லாரியில் பலகாரப் பாத்திரங்களையும் ஏற்றிவிட்டு.. சோமசுந்தரம் குடும்பத்தினர் கார்களில் கிளம்பினர்.

சுதாகரனின் காரில் கார்த்திகாவும் பிருந்தாவும் ஏறிக் கொள்ள... கபிலனின் காரில் சோமசுந்தரமும்.. பார்வதமும் ஏறிக் கொண்டனர். பூபாலனும் தனபாலனும் அவரவர் கார்களில் அவரவர் குடும்பத்தோடு ஏறி முதல் இரண்டு கார்களை பின் தொடர்ந்தனர்.

ரங்கசாமியின் வீட்டில் கிராமமமே கூடியிருந்தது. எல்லோருக்கும் தடபுடலாய் விருந்து போட்டு.. பலகாரப் பைகளை கொடுத்து அனுப்பிக் கொண்டே இருந்தார்கள்.

கார்த்திகா.. நடமாடும் பதுமை போல் தனது அறைக்குள் போய் அடைந்து கொண்டாள். விருப்பமில்லாமல்

பிருந்தாவிற்காக கிளம்பிப் போனவள்.. மனதில் இலை புரியாத வேதனையோடு திரும்பி வந்திருந்தாள்.

"அப்போ.. நாங்க கிளம்புகிறோம் சம்மந்தி.. பிருந்தா சின்னப் பெண். தெரியாமல் ஏதும் பேசி விட்டால் கொஞ்சம் நீங்க பொறுத்துக்கணும்."

"பிருந்தா அப்படிப் பேசுகிற பெண்ணில்லை. இருந்தாலும் பெற்ற பெண் போல் என் மருமகளைப் பார்த்துக் கொள்வோம். கவலைப்படாதீங்க."

வனஜா பிருந்தாவிற்கு கணவனை கைக்குள் போட்டுக் கொள்ள ஆயிரம் வழிமுறைகளை காதோடு சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

அவளது கவலையைக் கண்டு பிருந்தாவிற்கு சிரிப்பு வந்தது. ஒரு கணம் அவளிடம் உண்மையைச் சொல்லி விடலாமா என்று நினைத்தாள்.

'அண்ணி... அவருக்கு என்மேல் அன்பும் அதிகம்.. ஆசையும் அதிகம். காதலும் அதிகம். நாங்கள் கார்த்தி காவை கபிலன் அண்ணாவுடன் சேர்த்து வைப்பதற்காக இப்படி ஒரு நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறோம்.'

மனதிற்குள் நினைத்ததை வாய் விட்டுச் சொல்லி விடலாம். அதன் பின் வனஜா.. கார்த்திகாவிடம் காட்டும் அன்பு மாறிவிடும். வனஜா நல்லவள்தான். என்ன ஒன்று.. அவளுக்கு அவளது புகுந்த வீடு மட்டுமே முக்கியம். பிருந்தாவை சிறுமிப் பருவத்திலிருந்து வளர்த்தவள். அவளுக்கு இடையூறாக கார்த்திகா நிற்கிறாள் என்று நினைத்து விடுவாள். பிருந்தாவிற்கு ஆதரவாக கார்த்திகா இருப்பதாக வனஜாவை நம்ப வைப்பதுதான் கார்த்திகாவின் எதிர்காலத்திற்கு நல்லது.



எனவே அமைதியாக அறியாப் பெண் போல முகத்தை வைத்துக் கொண்டு வனஜா சொல்வதற்கு தலையாட்டி அவளை அனுப்பி வைத்தாள்.

எல்லோரும் கிளம்பும் போது கார்த்திகாவின் அறைக்கு வந்து அவளிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள்... அவர்கள் அனைவரும் வாசலில் இருந்தபோது... கபிலன் கார்த்திகாவிடம் விடைபெற்றுக் கொள்ள அவளது அறைக்குள் வந்தான். கார்த்திகா அவனை எதிர்பார்க்க வில்லை. அவசரமாய் எழுந்து நின்றாள்.

"கிளம்பட்டுமா..?" அவன் அவளது விழிகளுக்குள் ஊடுருவி ஆழமாகப் பார்த்தான்.

'என்ன பார்வை இது..?' கார்த்திகா தவித்துப் போனாள். அந்தத் தவிப்போடு "ம்ம்.." என்று தலையை ஆட்டினாள்.

"போய் வான்னு சொல்ல மாட்டிங்களா?"

"எனக்கு வா.. போன்னு பேசிப் பழக்கமில்லை."

"அப்போ போய் விட்டு வாங்கன்னு சொல்லலாமே..."

கார்த்திகா உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் முகம் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கண்களில் நீர் முட்டியது.

'போய் விடு.. அமைதியான என் மனக்குளத்தில் கல்லை விட்டெறிந்து விட்டாய். அதன் சலனம் தாங் காமல் என் மனம் சஞ்சலப்படுகிறது. உன்னை யாரென்றே எனக்குத் தெரியாது. புயல் போல் ஏன் நீ வந்தாய்? நான் எனக்கென்று ஒரு பாதையை உருவாக்கி அதில் பயணப்பட்டுக் கொண்டு இருக்கும்போது.. அந்தப் பாதையில் பயணம் செய்ய முடியாமல் ஏன்.. என்

கால்களை கட்டி இருக்கிறாய். வேண்டாம்.. என்னை என் போக்கில் போக விடு.. என்னை நிறுத்த நினைக்காதே..'

''என் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டிங்களா...''

''போய் விடுங்கள்...''

''கார்த்திகா...''

''தயவு செய்து போய் விடுங்கள். என்னைத் தனிமையில் விட்டு விட்டுப் போய் விடுங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்.''

அவள் விம்மி அழுதாள். அழுகையில் குலுங்கும் அவளது முதுகைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தவனின் முகத்தில் விசித்திரமான திருப்தியுடன் கூடிய புன்முறுவல் உதித்தது.

## 32

கார்த்திகா சிந்தும் கண்ணீர் துளி ஒவ்வொன்றும் அவளின் அடிமனதை பறைசாற்றின... கபிலன் எல்லையற்ற திருப்தியுடன் அவளது அறையை விட்டு வெளியேறினான்.

ரங்கசாமியின் பங்களாவை விட்டுக் கார்கள் வெளியேறும்போது கபிலன் கார்த்திகாவின் அறை ஜன்னலை நோக்கினான். அவன் எதிர்பார்த்தது அங்கிருந்தது.. கார்த்திகாவின் கண்ணீர் வழியும் முகம்.. அறையின் ஜன்னல் கம்பிகளில் பதிந்திருந்தது.



அடுத்து வந்த நாட்களில் கபிலனை.. கார்த்திகாவின் கண்ணீர் வழிந்த முகமே செலுத்தியது.. இருபத்தி நான்கு மணி நேரமும் இடைவிடாமல் அவனது நினைவில் நின்று துரத்தியது அந்த முகம்.. அவள் வேண்டுமென்ற தவிப்பு அவனுள் பொங்கியது. அவன் தினமும் பிருந்தாவிடம் அவனது நிலையைத் தெளிவு படுத்தினான். கார்த்திகா சீக்கிரமே அவனது மனைவியாக வேண்டும் என்று வலியுறுத்தினான். ஆவன செய்வதாக பிருந்தாவும் வாக்களித்தாள்.

இப்படியே அறுபது நாட்கள் ஓடின. பிருந்தா தாய்மை அடைந்தாள். சுதாகரன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. காதலுடன் மனைவியை கட்டி அணைத்து முத்தமிட்டபோது.. அவள் இறுகிப் போன முகத்துடன் விலகினாள். அவன் திகைத்தான்.

''ஏன் பிருந்தா..?''

''இனிமேல்தான் நமக்குள் போராட்டம் ஆரம்பிக்கப் போகிறது.''

''நீ என்ன சொல்கிறாய்..?''

''உங்கள் குழந்தை எனக்கு வேண்டாமென்று சொல்லப் போகிறேன்.''

''என்னடி சொன்னாய்..?''

சுதாகரன்.. பிருந்தாவின் உடல்நிலையைக் கூட கவனத்தில் கொள்ளாமல் பளாரென்று அறைந்தான். பிருந்தா அமைதியாய் அதைத் தாங்கி நின்றாள்.

''உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..?''

''இல்லை.. உங்கள் மேல் காதல் தான் இருக்கிறது.''

''பின்.. ஏன் இப்படி ஒரு வார்த்தையைச் சொன்னாய்?''

''எனக்கு வேறு வழி தெரியவில்லை.''

''எதற்கு.. எதை வழியாகப் பயன்படுத்த நினைக்கிறாய்?''

''கார்த்திகாவின் வாழ்க்கையை சீர்படுத்த.. உங்கள் குழந்தையை நான் பெற்றுக் கொள்ள மாட்டேனென்று சொல்லப் போகிறேன்...''

''நான் அதற்கு விட மாட்டேன்...''

''ஆமாம்.. நீங்கள் இதற்கு விட மாட்டேன் என்கிறீர்கள்.. சம்மதம் தர மறுக்கிறீர்கள். அதனால் நான் உங்களை நிரந்தரமாகப் பிரிந்து என் பிறந்த வீட்டிற்குப் போகப் போவதாகச் சொல்கிறேன். நீங்கள் இந்தப் பஞ்சாயத்தை கார்த்திகாவிடம் கொண்டு போய் புலம்புகிறீர்கள். உன்னால்தானே எனக்கு இந்த நிலைமை...? உன் வார்த்தைக்குக் கட்டுப்படுத்துத்தானே.. உன் தோழியின் கழுத்தில் தாலி கட்டினேன் என்று சத்தம் போடப் போகிறீர்கள். கார்த்திகா என்னிடம் நியாயம் கேட்டு வருவாள்.. அப்போது நான் அவளிடம் பேசிக் கொள்கிறேன்...''

மனைவி செல்லும் திசை புரிந்தது. பிரமிப்புடன் அவளை நோக்கி கை நீட்டினான். அவள் அவன் கைகளுக்குள் புகுந்து.. அவனது மார்பில் சாய்ந்து கொண்டாள். தலையை ஆதரவாகக் கோதி விட்டான்.

''ஸாரிடி.. அவசரப்பட்டு அடித்து விட்டேன்.''

''பரவாயில்லை... அப்படிச் சொன்னால் யாருக்குத் தான் கோபம் வராமல் இருக்கும்?''



''வலிக்கிறதா..?''

''எப்படி வலிக்குமாம்..? உங்கள் கோபத்திற்கு அடிப்படைக் காரணம் நம் குழந்தையின் மீது இருக்கும் அன்பும்.. பாசமும் அல்லவா?''

''கார்த்திகாவின் நல்வாழ்விற்காக என்றாலும்.. இந்த வார்த்தைகளைப் பொய்யாகத்தான் சொல்லப் போகிறோம் என்றாலும்.. என் மனம் நடுங்குகிறது பிருந்தா.. இதை விட்டு நாம் வேறு வழியை நாடியிருக்கலாம்.''

''உங்கள் மனம் நடுங்காமலிருந்தால் உங்களை நான் வெறுத்திருப்பேன். இப்போது உங்கள் தங்கையின் வாழ்வைவிட... என்னையும் நம் குழந்தையையும் பெரிதாக நீங்கள் நினைப்பது எனக்கு ஒரு கர்வத்தைக் கொடுக்கிறது.''

''ஒருத்தி கழுத்தில் தாலி கட்டும் வரைதான் ஒருவன் அவனைப் பெற்றவர்களுக்கும்.. கூடப் பிறந்தவர்களுக்கும் சொந்தம். தாலி கட்டி விட்டால்.. கட்டிய மனைவிக்குத்தான் முதல் உரிமை. மற்றவர்கள் அதற்குப் பின்னால்தான். முதலில் நான் உனக்குப் புருசன். அடுத்துத் தான் கார்த்திகாவின் அண்ணன்.''

''அவளுக்காக வாழ்ந்த நீங்கள் அவளை இரண்டாவது நிலையில் வைத்து விட்டீர்கள்தானே.. இது அவளுக்குத் தெரிய வந்தால் துடித்துப் போய் விட மாட்டாளா.. அதனால்.. அவளை முதல் நிலையில் வைத்திருக்கும் கபிலனிடம் அவளை ஒப்படைக்க வேண்டாமா? அதற்குத்தான் இந்தப் பொய்.''

''ஆனாலும்.. என் மனம் தவிக்கிறதே...''

''நமக்கு வேறு வழியில்லை அத்தான். மற்ற வழிகளில் கார்த்திகாவை மெதுவாகத்தான் வழிக்குக் கொண்டு

வர முடியும். இப்படி மிரட்டினால் கார்த்திகா உட னடியாகப் பணிவாள். எனக்கு அதுதான் வேண்டும்.''

''எனக்கு ஒரு வாரம் டைம் கொடு...''

அந்த வாரக் கடைசியில் சுதாகரன் காரை எடுத்துக் கொண்டு வெளியூரில் ஏதோ வேலையிருக்கிறது என்று சொல்லி விட்டுச் சென்று விட்டான். மறுநாள் திரும்பி வந்தவன்.. நேராக பிருந்தாவிடம் போய் அவள் நெற்றி யில் குங்குமப் பிரசாதத்தை இட்டு விட்டான். கைகளில் மஞ்சள் கயிறு ஒன்றைக் கட்டி விட்டான்.

''என்னங்க இது...?''

''கர்ப்பரட்சாம்பிகை கோவில் பிரசாதம் பிருந்தா...''

''நீங்கள்.. அந்தக் கோவிலுக்கா போயிருந்தீர்கள்...?''

''ஆமாம்.. கும்பகோணத்திற்குப் பக்கத்தில் இருக்கும் திருக்கருகாவூருக்குத்தான் போயிருந்தேன். அங்கேயுள்ள கர்ப்பரட்சாம்பிகை அம்மனுக்கு அபிஷேகம் பண்ணி.. உன் வயிற்றிலிருக்கும் என் குழந்தை பாதுகாப்பாய் இருக்க வேண்டும். சுகப்பிரசவம் ஆக வேண்டுமென்று வேண்டிக் கொண்டு வந்தேன். இனி பயமில்லை...''

சுதாகரனின் கரம் பிடித்துக் கண்களில் நீர் மல்க முத்தம் கொடுத்தாள் பிருந்தா... கணவனின் கரிசனம் கண்டு அவள் மனம் நெகிழ்ந்தது.

'இவன் மனம் தான் எப்படித் துடிக்கிறது? தாய்மையைக் காப்பாற்றும் அந்தத் தாய்மை நிறைந்த கர்ப்பரட்சாம் பிகை.. எனது குழந்தையைக் காப்பாற்றுவாள். நூறு வரு டங்கள் வாழ வைப்பாள். தீர்க்காயுளுடன் வாழ வைப்பாள்.'

அடுத்த ஒரு வாரமும்.. இருவரும்.. மனப் போராட்டத் துடனும்.. சஞ்சலத்துடனும் இருந்தனர். பிருந்தாவின்



உடல் நிலையில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. அவள் வாந்தி எடுக்க ஆரம்பித்தாள். தலை சுற்றலுடன் படுக்கையிலேயே கிடந்தாள். பார்வதம் இதைக் கவனிக்கு முன் நினைத்ததை நடத்தி முடித்து விட வேண்டு மென்று இருவரும் தீர்மானித்தனர்.

''கார்த்திகா நல்லவள் அத்தான். ஒரு போதும் நமக்குக் கெடுதல் செய்ய நினைக்க மாட்டாள். கெடுதல் நடக் கவும் விட மாட்டாள்.''

''எனக்கு அது தெரியாது என்றா நினைக்கிறாய்.''

''அப்புறம் ஏன் அவளிடம் பேசத் தயங்குகிறீர்கள்.''

''பேசுகிறேன் பிருந்தா.. கொஞ்சம் பொறு...''

''இனிப் பொறுக்க முடியாது அத்தான். அத்தைக்கு விசயத்தைச் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. ஏற்கனவே நாம் லேட்டாகச் சொல்கிறோம். இன்னும் லேட்டானால் பெரியவர்கள் கோபித்துக் கொள்வார்கள்.''

''இன்று கட்டாயம் பேசி விடுகிறேன்.''

சுதாகரன் வாக்களித்து விட்டு கார்த்திகாவைத் தேடிப் போனான். கார்த்திகா அவளது அறையில் கட்டிலில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவள் கொஞ்ச காலமாய்.. வழக்கத்தைவிட அதிக மாகத் தனிமையை நாடுவதை சுதாகரன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். அவனின் வேதனை அவ னுக்குப் புரிந்தது. திருமணமாகி இரண்டே நாட்கள் மனைவி மனதளவில் பிரிந்து நின்றதாய் அவன் தவறாக நினைத்துக் கொண்டபோது எப்படிப் பரிதவித்துப் போனான்?

கார்த்திகாவிடம்.. அவளைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளையின் முகத்தைக் கூடச் சரியாகப் பார்த்தறி

யாதவள்.. அவள் நிமிர்ந்து.. முகம் பார்த்துப் பேசிய முதல் ஆண் மகன் கபிலன்தான். அவள் மனதில் அவன் மேல் ஓர் நினைவு எழுந்து விட்டதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அதை வெளிப்படையாய் சொன்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் அவள் தவிப்பதும் தெரிந்தது.

## 33

சுதாகரன் அறைக் கதவை அடைத்துத் தாழிடுவதைக் கண்ட கார்த்திகா குழப்பத்துடன் தமையனைப் பார்த்தாள். சுதாகரன் பேச வேண்டிய வார்த்தைகளை எண்ணி மனம் புழுங்கியபடி அவள் எதிரில் அமர்ந்தான். தமையனின் முகம் இறுகிப் போய்.. கலங்கியிருப்பதைக் கண்ணுற்ற கார்த்திகா துணுக்குற்றாள்.

'ஏன் அண்ணன் இப்படி இருக்கிறான்?'

''என்ன அண்ணா.. உடம்பு சரியில்லையா?''

''அதற்கு என்ன கேடு?''

''பின் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''

''எல்லாம் உன்னால்தான்.''

''என்னாலா? நான் என்ன செய்தேன்.''

''இப்படி ஒரு கல்யாணத்தை நான் செய்து கொள்ளச் செய்தாயே.. அது போதாதா?''



''ஏன்.. அதற்கு என்ன இப்போது..? பிருந்தா மாதிரி ஒருத்தி மனைவியாய் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவளைப் போல் ஒரு பெண் நீ எங்கே தேடினாலும் கிடைக்க மாட்டாள்.''

''இப்படி ஒருத்தி எங்கேயும் இருக்க மாட்டாள்தான்.''

''பொடி வைத்துப் பேசுகிறாய் போல இருக்கிறதே...''

''ஆமாம்.. அதுக்கு என்ன இப்போ?''

''அண்ணா.. நீ வீணாக அவளைக் குற்றம் சொல்கிறாய்.. அவளுடன் இணைந்து வாழ்வதில் நீ ஆர்வம் காட்டினால் எல்லாம் சரியாகிவிடும்.''

''எதற்காக அதைச் செய்ய வேண்டும்..?''

''எனக்காக.. எனக்காக அண்ணா.. எனக்காக நீ இதைச் செய்ய மாட்டாயா?''

''உனக்காக அவளுடன் வாழ்ந்தேன் பார்.. அதில்தான் பிரச்னையே வந்திருக்கிறது.. கார்த்திகா.. எனக்கு இந்த உலகமே வெறுக்கிறது.''

''நீ உலகத்தை வெறுக்கும்படி அப்படி என்னதான் நடந்து விட்டது?''

''பிருந்தா அம்மாவாகப் போகிறாள்.''

கார்த்திகா ஆனந்தத்துடன் எழுந்து சுதாகரனின் கையைப் பிடித்துக் குலுக்கினாள். அவள் முகம் பிரகாசித்தது.

''அண்ணா.. வாழ்த்துக்கள் அண்ணா.. எப்பேர்பட்ட சந்தோசமான விசயத்தை இப்படி உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு சொல்கிறாயே... நீ அப்பாவாகப் போகிறாய்.. நான் அத்தையாகப் போகிறேன். நம்ம

அம்மாவும்.. அப்பாவும்.. பாட்டி.. தாத்தா ஆகப் போகிறார்கள். இரு.. உடனே இந்த விசயத்தை அம்மாவிடம் சொல்லி விட்டு வந்து விடுகிறேன். அம்மா இனிப்பு செய்வார்கள் இல்லையா...''

கார்த்திகா மான் போல் துள்ளிக் குதித்து அறைக் கதவின் கதவின் அருகே ஓடப் போனாள்... சுதாகரன் தடுத்தான்.

''கார்த்திகா பொறு.''

''ஏன் அண்ணா?''

''அம்மாவிடம் இதைச் சொல்ல வேண்டாம்.''

''அதுதான் ஏன்?''

''பிருந்தா.. இந்தக் குழந்தையை பெற்றுக் கொள்ள மறுக்கிறாள்.''

இதை குரல் நடுங்கக் கூறினான் சுதாகரன்... கார்த்திகா விழிகள் தெரித்து விடும்படி கண்களை அகல விரித்தாள். அவள் முகம் மாறி விட்டது.'

''பிருந்தாவா அப்படிச் சொன்னாள்.. ஏன்?''

''அவள் ஏதேதோ சொல்கிறாள்ம்மா. என்னால் அவளுடன் பேச முடியவில்லை.''

''அதற்காக.. அவள் இஷ்டப்படி விட்டுவிடப் போகிறாயா?''

''வேறு வழி.. ஒரேயடியாய் பிரிய நினைப்பவளிடம் என்ன பேசுவது?''

'இது வேறா..?' கார்த்திகா அதிர்ந்து போனாள். அவளுக்கு சுதாகரனின் முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை.



'இவன் பாட்டுக்கு இருந்தவனை.. நான்தான் வற்புறுத்திக் கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்தேன். இப்போது என்னால் இவன் வாழ்வு பாழாகி விட்டதா?'

கார்த்திகா பிருந்தாவிடம் நியாயம் கேட்டாள்.

''உன் அண்ணனின் வாழ்விற்கு என்ன குறை வந்தது'' என்று பிருந்தா கேட்டாள்.

''என் வாழ்வுதான் பாழாகி விட்டது..'' என்றும் குற்றம் சாட்டினாள்.

''போதும் நான் வாழ்ந்த வாழ்க்கை.. என் வீட்டிற்குப் போகிறேன்..'' என்று கிளம்புவது போல் பாய்ச்சலும் காட்டினாள்.

பொறுக்க முடியாமல் கார்த்திகா அதட்டினாள்.

''ஏய்.. இருடி.. நீதானே என்னிடம் வந்து கெஞ்சினாய்..? உன் அண்ணனை நான் உயிருக்குயிராய் காதலிக்கிறேன். அவரில்லாவிட்டால் செத்து விடுவேன்னு என்னை நீதானே பயமுறுத்தினாய்?''

''ஆமாம். அதற்கு என்ன இப்போது?''

''ஏன் சொல்ல மாட்டாய். உனக்காக என் அண்ணனுடன் போராடி நான் இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்தேன். அவரும் எனக்காக உன்னை ஏற்றுக் கொண்டு வாழ்க்கை நடத்தினாரா இல்லையா?''

''ஏய்.. போதும்டி உன் பெருமை... உனக்காக.. உனக்காக.. உனக்காக... இதுதானே உன் பெருமை... உனக்காக உன் அண்ணன் என்னுடன் குடும்பம் நடத்துவது உனக்கு வேண்டுமானால் பெருமையாக இருக்கலாம். எனக்கு அது சிறுமை.''

''பிருந்தா...''

''போதும் கார்த்திகா.. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டேன். உன் அண்ணன் மனம் என் பக்கம் திரும்ப மாட்டேன் என்கிறது.''

''உன் பக்கம் அவர் மனம் திரும்பாமலா நீ அண்ணனின் குழந்தைக்கு தாயாகப் போகிறாய்?''

''உனக்காக அவர் என்னுடன் குடும்பம் நடத்தியதால் நான் அவர் குழந்தைக்கு தாயாகப் போகிறேன். இதில் நான் சந்தோசப்பட என்ன இருக்கிறது?''

''பொறுமையாய் இருடி.''

''எத்தனை காலம் பொறுமையாய் இருப்பது.''

''நான் வேண்டுமானால்...'' என்று ஆரம்பித்த கார்த்திகா பிருந்தாவின் அனல் பார்வையில் வாயடைத்துப் போனாள்.

''திரும்பவும் சிபாரிசா?'' பிருந்தா ஒரு மாதிரியான குரலில் கேட்டாள்.

''நீ ஏண்டி அப்படி நினைக்கிறாய்?''

''வேண்டாம் கார்த்திகா.. என்னை என் வழியில் விட்டு விடு.''

''எந்த வழியில்...''

''நான் என் அப்பா வீட்டிற்குப் போய் விடுகிறேன். எனக்கு எதுவும் வேண்டாம்.''

''என்னடி சொன்னாய்?''

கார்த்திகா கோபத்துடன் பிருந்தாவின் கன்னத்தில் அறைந்து விட்டாள். தோழியின் நல் வாழ்விற்காக.. அவளிடமும்.. அவளது அண்ணனிடமும் அறை வாங்கிக்



கொண்டு நின்ற பிருந்தா.. தன் உணர்வுகளை மனதில் புதைத்துக் கொண்டு ஊமையாகி நின்றாள்.

''நீயாடி இப்படியெல்லாம் பேசுகிறாய்.''

''வேண்டாம் கார்த்திகா.. எனக்கு மனது வெறுத்து விட்டது.''

''புரியாமல் பேசாதே. அண்ணன் உன்னுடன் சந்தோசமாக வாழும் நாள் வரத்தான் போகிறது.''

''நீ அவர் கண் முன் இருக்கும் வரை... இன்னும் சொல்லப் போனால் நீ சந்தோசமான கல்யாண வாழ்க்கையை வாழாதவரை.. உன் அண்ணன் என்னுடன் சந்தோசமாக இருக்கப் போவதில்லை.''

''பிருந்தா...''

கார்த்திகா இந்த நேரடித் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. தோழியின் குற்றச்சாட்டில் அவள் பரிதவித்து.. துடித்துப் போனாள். அவளது துடிப்பைக் கண்டு பிருந்தாவும் மனம் துடித்தாள். இவளிடம் இப்படியெல்லாம் பேச வேண்டி இருக்கிறதே என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

'வேறு வழியில்லை.. கத்தி எடுக்காமல் ஆபரேசன் செய்ய முடியாது. நோயாளியைக் காப்பாற்றவும் முடியாது.. இவளை வாழ வைக்க இதுதான் வழி.'

''உன்னால்தாண்டி.. என் நிம்மதி போய் விட்டது. உன்னை நினைத்து.. உன்னைப் பார்த்து... என்னிடம் ஓர் சிரிப்புச் சிரிக்கக் கூட உன் அண்ணன் தயங்குகிறார். என் தங்கை வாழாத வாழ்வை... நான் வாழ்வதான்னு கேட்கிறார்.''

"என் மேல் குற்றம் இல்லை பிருந்தா."

"உன் மேலும் குற்றமில்லை. என் மேலும் குற்றமில்லை.. என்னைப் படைத்த இறைவன் மேல்தான் குற்றம்."

"மனம் வெறுத்துப் பேசாதேடி."

"வேறு என்னடி செய்யச் சொல்கிறாய்.. என்னைக் காதலிக்காத மனிதருடன் எப்படி நான் வாழ முடியும்?"

"நீ அவரைக் காதலிக்கிறாயே... அது போதாதா?"

"இருவரின் வாழ்க்கைக்கு ஒருவர் காதலித்தால் மட்டும் போதுமா?"

"போதும் பிருந்தா.. மற்றவரின் மனம் மாறுவதற்காக காத்திருக்க வேண்டியதுதான். அதில் கௌரவப் பிரச்னைக்கு இடமேயில்லை..."

"அப்படியானால்.. நீ என் நல்வாழ்வை விரும்புகிறவளாக இருந்தால் நீ ஏன் என் கபிலன் அண்ணனைக் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது."

கடலில் கப்பல் நங்கூரமிட்டு விட்டது. பிருந்தா தன் மனதில் இருந்த திட்டத்தை கார்த்திகாவிடம் சொல்லி விட்டாள். கார்த்திகா மீண்டும் அதிர்ந்து நின்றாள். இன்று என்ன.. காலையில் இருந்து.. அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாய் வந்து அவளைத் தாக்குகிறது.

"ஏண்டி.. நீ தெரிந்துதான் பேசுகிறாயா?"

"கபிலன் அண்ணனின் மனதை தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன்."

"என்ன தெரிந்து கொண்டாய்..?" கார்த்திகா குரல் நடுங்கக் கேட்டாள்.



"கபிலன் அண்ணா உன்னைக் காதலிக்கிறார்."

கார்த்திகா மீண்டும் திகைத்து நின்றாள். துக்கமா.. சந்தோசமா.. சோகமா.. ஆனந்தமா..? என்று புரியாத உணர்வுகளின் கலவைக்கு ஆட்பட்டு நின்றாள்.



## 34



'கபிலன் அவளைக் காதலிக்கிறானா.. இது என்ன புதுக்கதை?'

ஆனால் இது புதிய கதையில்லை.. பழைய கதையின் தொடர்கதையென்று பிருந்தா சொன்னாள்.

"அண்ணன் உன்னைக் காதலித்தாராம்.. அதைச் சொல்ல வரும்போது உனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருந்ததாம். நீ நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லாமல் வெளிநாடு போய் விட்டாராம்.. திரும்பி வந்து பார்த்தபோது உன் திருமணம் நின்றிருந்ததாம். உன்னை நினைத்துக் கொண்டுதான் அவர் கல்யாணத்தையே தவிர்த்துக் கொண்டு வாழ்கிறார் கார்த்திகா. உன்னால் என் வாழ்க்கை மட்டுமில்லை. என் கபிலன் அண்ணனின் வாழ்க்கையும் கேள்விக் குறியாகி விட்டது. என் நிம்மதி மட்டுமில்லை. என் பெரியப்பா. பெரியம்மாவின் நிம்மதியும் போய்விட்டது."

"இந்தப் பழியையும் என் மீது போடுகிறாயா?"

"ஆமாண்டி.. உன் மேல் பழிபோட எனக்கு ஆசை பாரு. கோபத்தைக் கிளராதே. என் பெரியப்பா.

பெரியம்மாவிற்கு ரொம்ப வருசங்களாகவே குழந்தை பிறக்காமல் தள்ளிப் போனதாம். எங்கள் வீட்டில் என் பெரியண்ணனும்.. சின்ன அண்ணனும் பிறந்த பின்.. என் பெரியப்பாவிற்கு கபிலன் அண்ணன் பிறந்தார். அதற்காக என் பெரியம்மா சுற்றாத கோவில் இல்லை... இருக்காத விரதம் இல்லை. பார்க்காத டாக்டர் இல்லை."

''அதற்கு நான் என்னடி செய்வது..?''

''அப்படித் தவம் இருந்து பெற்ற பிள்ளையின் கல்யாணம் தள்ளிப் போக நீதானே காரணம்...''

''பிருந்தா.. என் மனம் புரியாமல் பேசாதே. என்னால் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது.''

''அது உன் இஷ்டம். நான் என் வழியில் போகிறேன். நீ உன் வழியில் போ.. நான் யார் உனக்கு எடுத்துச் சொல்ல? அதே போல் நீயார் என்னை அடிக்க?''

''நான் யாரா..? நான் உனக்கு யாருமே இல்லையா?''

''நீ எனக்கு யாரும் இல்லைதான் கார்த்திகா... என் வாழ்வே வீணாகி விட்டது. கட்டிய புருசன் மனதில் நான் இல்லை... அவருடைய தங்கைதான் அவருக்கு எல்லாமாம். அவரே என்னை நீ யாருன்னு கேட்ட பின்பு... உன் உறவு எனக்கு எதற்கு? நீ யார் எனக்கு?''

''பிருந்தா.. பிருந்தா.. ஏண்டி என்னைக் கொல்கிறாய்?''

''நான் உன்னைக் கொல்கிறேனா? ஏன் பேச மாட்டாய்.. உன்னைப் பார்த்து ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டு என் புருசன் என்னுடன் வாழ மாட்டேன் என்கிறார். உன்னால் என் வாழ்க்கை பாழாகிக் கொண்டு இருக்கிறது. நீ என்னவென்றால் உன்னைப் பற்றியே யோசிக்கிறாய். உன்னைத் துன்புறுத்துகிறேன் என்கிறாய்..





கார்த்திகா.. உனக்கு உன் உணர்வுகள் எப்படி முக்கியமோ.. அதுபோல் எனக்கு என் சுயமரியாதை முக்கியம். நான் கிளம்புகிறேன். நீங்கள் அண்ணனும்.. தங்கையும் நன்றாக இருங்கள்.''

பிருந்தா பரபரவென துணிகளை எடுத்து பெட்டியில் அடைத்துக் கொண்டு கிளம்பினாள். கார்த்திகா அவசரமாய் வழிமறித்தாள்.

''நல்லவேளை... அம்மாவும்.. அப்பாவும் நத்தத்திற்கு போயிருக்கிறார்கள். இந்தக் கதைகளையெல்லாம் அவர்கள் காதுக்குக் கொண்டு போகாதே பிருந்தா.. அவர்கள் மனம் ஒடிந்து விடும்.''

''என் மனம் ஒடிந்து கிடக்கிறதே.. பரவாயில்லையா?''

கார்த்திகா.. பிருந்தாவின் கையிலிருந்த பெட்டியை பிடுங்கி எறிந்தாள். அவளைக் கட்டிலில் அமர வைத்துப் பேசிப் பார்த்தாள். பிருந்தா அசைந்து கொடுக்கவில்லை. கார்த்திகா கலங்கிப் போனாள். டவுனுக்குப் போயிருக்கும் பெற்றோர் திரும்பி வருவதற்குள் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்ற பொறுப்புணர்வில் துடித்தாள். பிருந்தா மசியவில்லை.

இறுதியாக.. கார்த்திகா ஒரு முடிவுக்கு வந்தவளாய் பிருந்தாவிடம் கபிலனின் போன் நம்பரைக் கேட்டாள்.

''உனக்கு எதற்கு.. அண்ணனின் போன் நம்பர்?''

''நான் அவருடன் பேச வேண்டும்...''

''என்ன பேசப் போகிறாய்?''

''அது உனக்குத் தேவையில்லாத விசயம்.''

''அப்படியா... இந்தா போன் நம்பர்.. ஆனால் எனக்கு ஒரு மணி நேரத்திற்குள் உன் முடிவு தெரிய வேண்டும்.''

''அது என்னடி ஒரு மணி நேரக் கணக்கு?''

''அதற்குப் பின்னால் உன் அப்பாவும்.. அம்மாவும் வந்து விடுவார்கள். நான் அவர்களிடம் பஞ்சாயத்து வைத்து விட்டுக் கிளம்ப வேண்டும்.''

கார்த்திகா செய்வது அறியாதவளாய் அவளது அறைக்குப் போய் கதவை அடைத்துக் கொண்டு கபிலனுக்கு போன் பண்ணினாள். பிருந்தாவிடமிருந்து தகவல் வந்திருந்ததால் அவளது போனுக்காக காத்திருந்த கபிலன் உடனே போனை எடுத்தான்.

''கார்த்திகா பேசுகிறேன்...''

அவளது குரலை அனுபவித்து ரசனையாய் கேட்ட கபிலன் புன்னகைத்துக் கொண்டான். கடைசி.. கடைசியில் ஒரு வழியாய் பேசி விட்டாள்.

''சொல்லுங்க...''

கார்த்திகா சொன்னாள். விலாவாரியாய் பிருந்தாவின் போராட்டத்தை விவரித்தாள். இறுதியில் அவனிடம் கோரிக்கை வைத்தாள்.

''இந்த நிலைமையில் நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்.''

''நான் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்?''

''பிருந்தாவிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.''

''அவள் கேட்க மாட்டாள்.''

''நீங்கள் சொன்னால் கேட்பாள்.''

''நான் சொல்லி எத்தனை நாள் அவள் கேட்பாள்? பிரச்னைக்கு தீர்வு.. நீங்கள் உங்கள் அண்ணனின் கண்



பார்வையிலிருந்து வெளியேறுவது.. அதுவும் நல்லபடியாய் திருமணமாகி வெளியேறுவது.. அது நடக்காமல் பிருந்தாவின் வாழ்க்கையில் நிம்மதி என்பது இருக்காது...''

''எனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை...''

கபிலன் மௌனமாக இருந்தான். கார்த்திகாவே பேசினாள்...

''என்ன.. பேசாமல் இருக்கிறீர்கள்?''

''என்ன பேசச் சொல்கிறீர்கள்? இது உங்கள் வாழ்க்கை... இதில் நான் சொல்ல என்ன இருக்கிறது? ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள் கார்த்திகா. உங்கள் நிலைமையில் உங்கள் அண்ணன் கண் முன் இருந்து.. நீங்கள் கணவனுடன் சந்தோசமாக குடும்பம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களால் மனப்பூர்வமாக உங்கள் கணவருடன் குடும்பம் நடத்த முடிந்திருக்குமா?''

கார்த்திகா பேச்சிழந்தாள். அது எப்படி முடிந்திருக்கும்? அவள் கண் முன் அவளது அண்ணன் தனி மரமாக நிற்கும்போது இவள் மட்டும் எப்படி குடும்ப வாழ்வில் ஈடுபட்டிருக்க முடியும்?

இப்போது கார்த்திகா மௌனமானாள். கபிலன் பேசினான்.

''என்ன.. பேச்சையே காணோம்.''

''முடிந்திருக்காது தான்.''

''இப்போது புரிகிறதா.. பிருந்தாவின் வேதனை என்னவென்று...''

''இதற்கு என்ன வழி?''

''பிருந்தாவே சொல்லியிருப்பாளே...''

''நான்தான் திருமணத்தில் விருப்பமில்லை என்றேனே..''

மறுமுனையில் கபிலன் மௌனம் சாதித்தான். கார்த்திகா கலக்கத்துடன் பேசினாள்.

''எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.''

''நான் ஒரு வழி சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள் என்றுதானே கேட்கிறேன்.''

''என்மேல் நம்பிக்கை இருக்கிறதில்லையா?''

கார்த்திகா திகைத்தாள். 'ஏன் இப்படிக் கேட்கிறான்..?'

''சொல்லுங்கள் என்மேல் நம்பிக்கை இருக்கிறதா.. இல்லையா?''

''இருக்கிறது...''

''அப்படியானால் திருமணத்திற்கு சம்மதம் சொல்லுங்கள்.''

''என்னது.. நான் இவ்வளவு சொல்லியுமா.. நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள்?''

''நமக்கு வேறு வழியில்லை கார்த்திகா.''

'நமக்கு...' கார்த்திகா தனியில்லை என்று உணர்த்திய அந்த ஒரு வார்த்தையைக் கேட்கும்போதே அவளுக்கு யானை பலம் வந்தது போல இருந்தது. ஆனாலும் ஒரு தயக்கம் அவளை தட்டி நிறுத்தியது.

''இருந்தாலும்.. நான் என்ன சொல்கிறேன் என்றால்...''

''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். கார்த்திகா... நான் பார்த்துக் கொள்கிறேன்.'' கபிலன் தீர்மானமான குரலில் அவளை 'நீ' என்று அழைத்தான்.



# 35

''நானும் திருமணத்தை தவிர்த்து வருகிறேன். நீயும் தவிர்க்கிறாய். நமது திருமணத்தால் நம் இருவரின் பெற்றோர்களுக்கும் நிம்மதி கிடைக்கும். பிருந்தா.. சுதாகரனின் திருமண வாழ்க்கை முறியாது எனும்போது நாம் திருமணம் பண்ணிக் கொள்வதில் தவறில்லை கார்த்திகா.. நான் உனக்கு ஒரு உறுதிமொழி கொடுக்கிறேன். உன் விருப்பமில்லாமல் உன்னிடம் என் மனைவியென்ற உரிமையைக் கேட்க மாட்டேன். போதுமா?'' கபிலன் தெளிவான குரலில் வினவினான்.

'இதற்கு மேல் என்ன சொல்வது?'

கார்த்திகா சம்மதம் தெரிவித்தாள். கபிலனின் குரலில் மகிழ்ச்சி தென்பட்டது.

''நன்றி கார்த்திகா.''

பிருந்தா புயல் வேகத்தில் செயல்பட்டாள். டவுனுக்குச் சென்றிருந்த ரங்கசாமியும்.. பூங்கோதையும் வீட்டிற்கு வந்தபோது இரண்டு மகிழ்ச்சியான விசயங்கள் அவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தன. ஒன்று அவர்களுக்கு பேரக் குழந்தை பிறக்கப் போகிறது. இரண்டாவது கார்த்திகாவை கபிலன் விரும்புகிறான். கார்த்திகாவும் கபிலனை மணந்து கொள்ள சம்மதம் தெரிவித்து விட்டாள்.

பூங்கோதை ஆனந்தத்தில் உட்கார்ந்து அழுகவே ஆரம்பித்து விட்டாள். அவளைச் சமாதானம் பண்ணுவ

தற்குள் சுதாகரனுக்கு போதும்.. போதும் என்று ஆகி விட்டது. சுதாகரன்.. அவனும் பிருந்தாவும் ஆடிய நாட கத்தை பூங்கோதையிடமும்.. ரங்கசாமியிடமும் தெரி வித்தான்.

"என்னடா சொல்ற.. இவ்வளவும் மருமகள் ஏற்பாடா?"

"ஆமாம்பா."

"இப்படியொரு மருமகள் யாருக்குக் கிடைக்கும். அம் மாடி.. என் வம்சத்தை விளங்க வைக்க வந்த தெய்வம் நீதான்ம்மா."

"இது என் கடமை மாமா.. அப்புறம் இந்த விசயமெல் லாம் என் வீட்டாருக்குத் தெரிய வேண்டாம் மாமா."

"நாங்கள் ஏன் சொல்லப் போகிறோம். பெத்தது இரண் டும் தனி மரங்களாய் நிற்கிறதுகளேன்னு கவலைப்பட் டேன். நான் நிம்மதியாய் உறங்கியது இல்லைம்மா. நீ முதலில் என் மகனின் கை பிடித்து இந்த வீட்டிற்குள் மகாலட்சுமியாய் வந்தாய். இப்போது உன் அண்ண னுக்கு என் மகளை மணம் செய்து வைத்து.. என் உயிரை தக்க வைத்து விட்டாய்."

"அத்தை... கபிலன் அண்ணா கார்த்திகாவின் மேல் உயிராய் இருக்கிறார். நான் உங்கள் மகன் மேல் உயிராய் இருந்தேன். என் காதல் நிறைவேற கார்த்திகா துணை நின்றாள். அவளுக்கு நன்மை நடக்க நான் துணை நிற்க வேண்டாமா?"

கபிலனுக்கு கார்த்திகாவை பெண் கேட்டு கல்யாண சுந்தரமும்.. காமாட்சியும் கபிலனுடன் வரப்போகும் செய்தியை அறிந்த சோமசுந்தரம் வீட்டில்... வனஜா வையும்.. பூமாவையும் தவிர மற்ற அனைவரும் ஆச் சர்யப்பட்டுப் போனார்கள்.



"ரங்கசாமியின் மகளையா கட்டப் போறாங்க.. இது என்ன கூத்து...?"

"வேண்டாம் பார்வதம்... அவசரப்பட்டு வார்த்தை களை விட்டு விடாதே. அந்தப் பெண் நம்ம பிருந் தாவின் நாத்தனார்.."

"நான் இப்ப என்ன சொல்லி விட்டேன்னு இந்தக் குதிகுதிக்கிறீங்க?"

"குதிக்கிற வயசாடி எனக்கு.. எப்படியோ.. அந்தப் பெண்ணிற்கு கல்யாணமாகி அவள் புகுந்த வீட்டிற்கு போய் விட்டால்.. நம்ம பொண்ணு நிம்மதியாய் வாழ்வாளே. அதை நினைத்துப் பார்த்தாயா?"

"அதற்கு நம்ம வீட்டுப் பையன்தான் கிடைத்தானா?"

"அவன்தான் அந்தப் பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு ஒற்றைக் காலில் நிற்கிறானாமே..."

"அதற்காக... அவன் போக்கில் விட்டு விடுவதா...?"

"பெண்ணைப் பெற்ற நாமே... பிருந்தாவை அவள் போக்கில் விட்டு விடவில்லையா? பையனைப் பெற்ற வங்க... அவனுக்குக் கல்யாணம் நடந்தால் சரின்னு நினைத்து விட்டாங்க."

பூமாவோ.. வனஜாவின் மதியூகத்தை மெச்சிக் கொண்டிருந்தாள்.

"எப்படிக்கா. இதுதான்னு நீங்க சரியாய் கண்டு பிடித் தீங்க?"

"எல்லாம் வெற்றிலையில் மை போட்டு பார்த்துத் தான்."

"எனக்கென்னவோ.. நீங்கள் அந்த மந்திரம்தான் போட்டிருப்பீங்கன்னு தோணுது."

''அந்தப் பட்டம் ஒன்றுதான் பாக்கி. பூமா.. கண்ணை வைத்து காதலைக் கண்டு பிடித்து விடலாம். கபிலனின் கண்கள் தான். கார்த்திகாவை வட்டம் போட்டதே...''

''பாவம்.. அவளுக்கு இப்போதாவது விடிந்ததே...''

''கோடீஸ்வரனுக்கு பெண்டாட்டியாகப் போகிறாள். அவள் பாவமா?''

''கொடுத்து வைத்தவள்...''

''சத்தமாகச் சொல்லி விடாதே.. உன் புருஷன் வருகிறார்.''

பூமா மௌனியாகி விட.... வனஜா சிரித்தாள்.

ஒரு நல்ல நாளில்... வேலூரில் இருந்து கல்யாண சுந்தரத்தின் குடும்பம் கிளம்பி திண்டுக்கல்லுக்கு வந்து சேர்ந்தது. சோமசுந்தரத்தின் குடும்பத்துடன் கிளம்பி.. ரங்கசாமியின் வீட்டிற்கு கார்த்திகாவை பெண் கேட்டு.. கார்களில் அணி வகுத்து அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஏற்கனவே மகனின் விருப்பத்தை அறிந்தவர்கள்... அதனால் அடுத்த முகூர்த்தத்தில் திருமண நாளைக் குறித்து.. அன்றே நிச்சயம் பண்ணி விட்டுச் சென்று விட்டார்கள்.

சுபயோக... சுபதினத்தில்.. வேலூரில் நகரின் மிகப் பெரிய திருமண மண்டபத்தில்.. கபிலன்.. கார்த்திகாவின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டு மனைவியாக்கிக் கொண்டான்.

பிருந்தாவின் முதலிரவன்று.. அவளின் அண்ணனின் குடும்பத்தார் அவளோடு துணைக்கு நின்றது போல.. இன்று கார்த்திகாவிற்கு துணையாய் சுதா



கரனும்.. பிருந்தாவும் நின்று விட்டனர். மறுநாள் காலையில் மறு வீட்டிற்கு அவர்களை அழைத்து வரச் சொல்லி விட்டு ரங்கசாமியும்.. பூங்கோதையும் முன்னால் சென்று விட்டனர்.

பிருந்தா தாய்மை அடைந்திருப்பதை அறிந்து வனஜா நிம்மதி அடைந்தாள்.

''எங்கே.. நீயும் உன் புருசனும் எலியும்.. பூனையுமா நின்று விடுவீங்களோன்னு பயந்துகிடந்தேன். நல்ல வேளை.. நான் பயந்தது போல் நடக்கவில்லை..'' என்றாள் வனஜா.

''எல்லாம்.. நீங்கள் சொல்லிக் கொடுத்ததுதான் அண்ணி...'' என்று ஒரு பொய்யை எடுத்து வீசினாள் பிருந்தா.

பிருந்தாவின் பிறந்த வீட்டாரும் சந்தோசமாக.. அடுத்து பிருந்தாவிற்கு வளைகாப்பு செய்ய ஒன்றுகூட வேண்டும் என்று அவர்களுக்குள் பேசியபடி கிளம்பிச் சென்று விட்டனர்.

கார்த்திகாவிற்கு அலங்காரம் பண்ணி விட்டுக் கொண்டிருந்தாள் பிருந்தா. முடியை தளரப் பின்னி.. தலை நிறைய மல்லிகைப் பூவை வைத்து விட்டபோது கார்த்திகா சிணுங்கினாள்.

''எதற்குடி இவ்வளவு பூ...?''

''அதை அண்ணனிடம் கேள்.. சொல்வார்.''

''அதைப் போய் அவரிடம் ஏன் கேட்க வேண்டும்?''

''இதைப் போய் அவரிடம் ஏன் கேட்க வேண்டும்?''

''வேறு யாரிடம் கேட்பாய்? நான் உன் அண்ணனிடம்தான் கேட்டேன்.. அவரும் சொன்னார்.''

''ச்ச... சும்மாயிருடி...''

"இதையும் அண்ணனிடமே சொல்."

"இது என்ன.. இவள் இப்படியே பேசுகிறாள்..?" கார்த்திகாவின் மனம் தவித்தது. என்னதான் கபிலன் வாக்குறுதி கொடுத்திருந்தாலும்.. அவனைத் தனியறையில் சந்திக்க வேண்டும் என்று நினைத்தபோது அவளுக்குப் படபடப்பாக இருந்தது.

ஆனால் தனியறையில் கபிலனைச் சந்தித்தபோது..

"படபடப்பு வேண்டாம்..." என்றான் அவன்..

"என்னிடம் உனக்கென்ன பயம்?" என்று கேள்வி வேறு கேட்டான்.

"இது அகலமான கட்டில். பிரித்துப் போட முடியாது. நாம் தனித்தனியாய் படுத்துத் தூங்குவதை தற்செயலாய் யாராவது பார்த்து விட்டால் சந்தேகப்படுவார்கள். அத்துடன்.. நாம் வாழ்வு முழுவதும் சேர்ந்து வசிக்க வேண்டியவர்கள். ரயில் பயணங்களில்... பெர்த்களில் இடைவெளி விட்டுப் படுப்பதில்லையா? அது போல் நினைத்துக் கொண்டு.. கட்டிலின் இந்தப் பக்கம் படுத்து நிம்மதியாய் தூங்கு.. நான் அந்தப் பக்கம்தான் படுத்திருப்பேன். என்னால் உனக்கு எந்தவிதத் தொந்தரவும் வராது."

அவள் இயல்பாகத் தூங்க வழி செய்தும் கொடுத்தான். நன்றியுடன் கட்டிலில் ஏறிப் படுத்தவள்.. கல்யாணக் களைப்பில் தூங்கி விட்டாள்.

## 36

கபிலனுக்குத் தூக்கம் வரவில்லை. இரவு நெடுநேரம் அவன் தூங்கவுமில்லை. கண் மூடித் தூங்கு-



பவளைப் பார்த்துக் கொண்டே அந்த இரவுப் பொழுதை கழித்தான். கார்த்திகா படுத்தவுடன் தூங்கி விட்டாள்.

அவளின் அந்தச் செயல்... அந்த நிம்மதி.. அந்த நம்பிக்கை.. அவனுக்கு மன நிறைவை அளித்தது. அவன் சொன்னதும் மறுபேச்சின்றி கட்டிலில் ஏறிப் படுத்துத் தூங்கிப் போனாளே.. அவன் வார்த்தைகளில் எத்தனை நம்பிக்கை வைத்திருந்தால் அவள் அதைச் செய்திருப்பாள்? நொடிப் பொழுது கூடத் தயங்கவில்லையே... அவனை அன்னியனாய் அவள் மனம் நினைத்திருந்தால் இந்தச் செயல் எப்படி சாத்தியமாகியிருக்க முடியும்?

ஏ.ஸி.யின் இதமான ரீங்காரம் செவிகளில் மெல்லிசை போல் ஒலித்தது. அதன் சிகப்பு நிறத்துடன் கூடிய புள்ளி போன்ற வெளிச்சக் கதிர்... அறையெங்கும் மெல்லிய வெளிச்சத்தை நிரப்பியிருந்தது. அந்த மங்கலான வெளிச்சத்தில் அவள் கண் மூடிப் படுத்திருக்கும் தோற்றம்.. ஓர் ஓவியம் போல் தோன்றியது.. கார்த்திகா தூக்கக் கலக்கத்தில் புரண்டு அவன் புறம் திரும்பிப் படுத்தாள்.

இயல்பான தோற்றத்திலேயே தேவதை போல் அழகாக இருப்பவள் இன்று பிருந்தா பார்த்துப் பார்த்துச் செய்து விட்ட ஒப்பனையில் அதீத அழகோடு இருந்தாள். காதுகளில் வைரங்கள் ஒளிர்விட்டன. கழுத்தினில் வைர அட்டிகை... கைகளில் வளையல்கள் குலுங்கின. கொலுசைத் தவிர்த்திருந்தவளின் கால்களில் திருமணத் தினத்தன்று குடியேறிய கொலுசுகளின் சலங்கையொலியையும் அவள் கைகளில் குலுங்கும் வைரங்கள் பதித்த பொன் வளையல்களின் ஓசையும். அவளது ஒவ்வொரு அசைவிற்கும்.. மெல்லிய சப்தங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

'ஏழு ஸ்வரங்களின் இன்னிசை.. இந்த வளையோசையையும்.. கொலுசு எழுப்பும் நாதத்தையும் விட சிறப்பானதா?'

அவன் மனம் மயங்கியது. அறையெங்கும் நிறைந்திருந்த பூ வாசம்.. அவள் மேனியிலிருந்து கிளம்பி வந்த இதமான நறுமணம். மனம் மயக்கும் அந்தச் சூழல்..

கபிலன் கார்த்திகாவைத் தொட்டு விடத் துடித்தான். அவளை நோக்கி அவன் கரம் நீண்டது. கடைசி விநாடியில் கரம் விலக்கிக் கொண்டான் அவன்.

'அவள் என்னைப் பற்றி என்னவென்று நினைப்பாள். 'காமுகன்.' என்றுதானே... கூடாது.'

அவன் தன்னை அடக்கிக் கொண்டான். அவன் மனது அடங்கவில்லை. எல்லையற்ற தாபத்துடன் அவன் உதடுகள் முணுமுணுத்தன.

''கார்த்திகா...''

அவள் சட்டென்று விழித்துக் கொண்டாள். எழுந்து அமர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

''கூப்பிட்டீர்களா...''

'என்னடா இது... மனதிற்குள் கூப்பிடுவதாய் நினைத்து... நிஜமாகவே கூப்பிட்டுத் தொலைத்து விட்டேனா?'

''ஆமாம்...''

''என்ன...''

'என்னவா..? நான் உன்னைக் காதலித்து.. உன்னைக் கைபிடிக்க தவம் இருந்து... உன் கழுத்தில் தாலியைக் கட்டியவன்டீ.. முதலிரவில் நான் கொட்டக் கொட்ட



விழித்திருக்க.. நீ கும்பகர்ணி போல் தூங்கி விட்டு.. என்னைப் பார்த்து.. என்னவென்றா கேட்கிறாய்.. நேரம்டீ...'

அவளுக்கு என்ன பதிலைச் சொல்வது? என்று யோசித்த கபிலன் வாய்க்கு வந்ததைச் சொன்னான்.

''கொஞ்ச நேரம் போனால் ஏ.ஸி. குளிரெடுக்க ஆரம்பித்து விடும். அதனால் இந்த பெட்ஷீட்டை பக்கத்தில் வைத்துக் கொள். குளிரெடுத்தால் போர்த்திக் கொள்.''

அவள் அவனை நன்றிப் பெருக்குடன் பார்த்தவாறு பெட்ஷீட்டை வாங்கிக் கொண்டாள். மீண்டும் படுத்து விட்டாள்.

அவள் மனதில் அவனைப் பற்றி அப்போது என்ன நினைவு ஓடிக் கொண்டிருந்திருக்கும் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

'கண்ணியவான்.'

அவனுக்கு தன் நிலையை எண்ணிச் சிரிப்பு வந்தது. காதலித்து மணந்து கொண்டவள்.. கைக்கு எட்டும் தூரத்தில் படுத்திருக்கிறாள். அவளை இழுத்து அணைத்து... அவளுக்குப் போர்வையாய் மாறுவதை விட்டுவிட்டு.. அவளுக்குப் போர்த்திக் கொள்ள போர்வையைக் கொடுத்து.. அவள் போர்த்திப் படுத்துத் தூங்குவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு.. விடிய விடிய கண் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.

'ம்ஹூம்.. யாருக்கு வேண்டும் உன் கண்ணியவான் பட்டம்? எனக்கு உன் கணவனென்ற உரிமைதான் வேண்டும்டீ...'

எப்போது தூங்கினானோ.. அவனுக்கே தெரிய வில்லை. அவனது செல்போனின் அழைப்பொலி காதருகில் ஒலிக்க... அவசரமாய் விழித்துக் கொண்டான். செல்போனை கையில் எடுத்தான்.

''காலை அட்டெண்ட் பண்ணாதீர்கள்...'' என்றவாறு அவன் எதிரே காபியுடன் வந்து நின்றாள் கார்த்திகா.

குளித்து முடித்து.. ஈரக் கூந்தலை உலர விட்டிருந் தாள். முழங்கால்களைத் தொட்ட நீண்ட கூந்தல்.. தோகை போல் தொங்கியது. கடல் வண்ண பிரிண்டட் சில்க் உடுத்தியிருந்தாள். வைரங்களின் ஒளிர்வில்... அவள் அதிகமாக ஒளிர்ந்தாள்.

'ஏண்டி.. இவ்வளவு அழகாய் இருந்து என்னை வதைக் கிறாய்..' என்ற நினைவுடன் அவளைப் பார்த்து வினவி னான்.

''ஏன் போன் காலை அட்டெண்ட் பண்ண வேண்டாம் என்றாய்?''

''அது.. நான் கூப்பிட்ட கால்தான்.''

''என்னது...''

ஒரே கட்டிலில் அருகே படுத்துத் தூங்கிவிட்டு... பக்கத்தில் படுத்திருப்பனை போன் பண்ணி அழைக் கிறாளா? என்னடா கொடுமை இது...

''இல்லை... பிருந்தா காபி கொண்டு வந்து கொடுத் தாள். நீங்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள்...''

'முதலிரவு கொண்டாடின அயர்வுதான்... வேறு என்ன..?'

''ஆனால் நேரம் ஆகிவிட்டது. காபி ஆறிவிடும்...''



'காபி மட்டுமா ஆறும்...?'

''அதனால்... உங்களை எழுப்பலாமென்று என் செல் போனிலிருந்து கால் கொடுத்தேன்...''

இப்போது கபிலனுக்கு கோபமே வந்து விட்டது.. அவனது முகமாற்றம் கண்டு கார்த்திகா விழித்தாள்.

''நான் எதுவும் தவறாக செய்து விட்டேனா.''

''பின்னே சரியாகவா செய்திருக்கிறாய்...?''

கபிலன் கூட இவ்வளவு கோபத்துடன் பேசக்கூடும் என்பதை கார்த்திகா அன்று முதன் முதலாய் கண்டாள்.

''என்ன தவறு செய்தேன்.''

''அது உனக்கே புரியாமல் இருப்பதுதான் என் பேட்லக்.''

''ஏன் ஒரு மாதிரிப் பேசுகிறீர்கள்?''

''வேறு எப்படிப் பேசுவது...?''

''நீங்கள் என்னவென்று சொன்னால் மாற்றிக் கொள் கிறேன்.''

''இது சொல்லி வரும் சமாச்சாரமில்லை. தானாய் உணர வேண்டும்.''

''நான் செல்போனில் கூப்பிட்டது தவறா?''

''பின் சரியா? ஏன் இப்படி அபத்தமாய் செய்கிறாய் கார்த்திகா.. இயல்பான தொடுகைகளைத் தவிர்த்தால்.. மற்றவர்களுக்கு நம்மேல் சந்தேகம் வராதா..? ஊரார் கண் முன் நானும்.. நீயும் கணவன் மனைவி.. அதிலும் நான் காதலித்து உன்னை மணந்தவன்...''

அவனது கடைசி வார்த்தைகளை அவளைப் பார்த்துக் கொண்டே உச்சரித்தான் அவன். அவள் முகம் சிவக்க..

பார்வையை வேறு திக்கில் பாய்ச்சினாள். அவளது இதயம் மட்டும் கேள்வி கேட்டது.

'உண்மையா.. இது உண்மையா.. பிருந்தா சொன்னதை. மற்றவர்கள் சொன்னதை... இன்று நேரே நீ என்னிடம் சொல்கிறாய்.. நீ என்னைப் போய் காதலித்தாய்..? உன் நிழலுக்கு பக்கத்தில் நிற்கக்கூட எனக்குத் தகுதியில்லை. நீ உன் இதயத்தில் போய் எனக்கு இடம் கொடுத்து இருக்கிறாயே...'

கபிலன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு.. அதன் மூலம் அவளது நினைவுகளை கண்டுபிடிக்க முடியுமா என்று முயன்று கொண்டிருந்தான்.

## 37

''என்ன யோசிக்கிறாய்?''

''ஒன்றுமில்லை...''

''ஒன்றுமேயில்லாதது என்று நாம் நினைப்பதில்தான் ஆயிரம் விசயங்கள் இருக்கின்றன.''

''அப்படியா... எனக்குத் தெரியாது.''

''உனக்கு எதுதான் தெரியும்.''

''ஒன்றுமே தெரியாது.''

கார்த்திகா சிரித்துக் கொண்டே பதில் கூறிவிட்டு அவன் வைத்திருந்த காலி காபிக் கோப்பையை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.



கபிலன் ஓர் பெருமூச்சை வெளியேற்றி விட்டு குளித்து உடை மாற்றினான். அறைக் கதவைத் திறந்து கொண்டு கார்த்திகா உள்ளே வந்தாள். விரித்து விடப்பட்டிருந்த கூந்தல்.. இப்போது பின்னலாக மாறியிருந்தது. தலையில் நெருக்கிக் கட்டப்பட்டிருந்த மல்லிகைச் சரம்.

'பூவாசம்.. பெண் வாசத்தோடு இணை பிரியாதது போல...'

அவளின் பூவாசம் ஈர்க்க கபிலன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

''நாம் சீக்கிரம் கிளம்ப வேண்டும்..'' கார்த்திகா கூறினாள்.

''எங்கே...'' என்று அவளை ஆராய்ச்சிப் பார்வை பார்த்தபடி அவன் கேட்டான்.

''ஊருக்குத்தான்.. எங்கள் வீட்டிற்குத்தான்.. மறு வீட்டிற்கு போக வேண்டாமா..? மறந்து விட்டீர்களா..?''

''இல்லை.. எனக்கு அர்ஜன்ட் வொர்க் கொஞ்சம் இருக்கிறது. அதுதான் யோசித்தேன்...''

''அப்படியா...?'' என்று வினவியவளின் முகம் வாடி விட்டது.

''அம்மா.. அப்பா.. அப்புறம் எங்கள் ஊரில் நம் கல்யாணத்திற்கு வர முடியாத நம் சொந்தக்காரர்கள்.. என்று நிறைய பேர் காத்துக் கொண்டு இருப்பார்களே..'' கெஞ்சுவது போல் கூறினாள்.

''ம்ம்ம்...'' என்றபடி மனைவியின் முகத்தைப் பார்த்தவன்,

''ஒன்று செய்யலாம்.. போனவுடன்.. திரும்பி விடலாம்..''

''அப்பா.. அம்மா வருத்தப்படுவார்களே...''

''இப்படிச் செய்யலாமா?''

''எப்படி..?''

''நாம் போகலாம்.. நீங்கள் வேண்டுமானால் உடனே திரும்பி வந்து விடுங்கள். நான் கொஞ்ச நாள் அப்பாம்மாவுடன் இருந்து விட்டு வருகிறேன். ஒகேதானே...''

கபிலன் கையில் பிடித்திருந்த பைலை தூக்கி கோபத்துடன் சுவர் மேல் விட்டெறிந்தான். பைலில் இருந்த காகிதங்கள் அறையெங்கும் சிதறின. அவனின் கோபத்தின் பரிணாமம் கண்டு கார்த்திகா ஆடிப் போய் விட்டாள்.

இன்று காலையில் இருந்து இரண்டாம் முறையாக கோபப்படுகிறான்... கார்த்திகா கைகளைப் பிசைந்தாள்.

''நீ உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்... கபிலன் என்ன களிமண் என்று நினைத்து விட்டாயா? உன் இஷ்டப்படி என்னை உருவகிக்க நினைக்கிறாயா?''

''நான் இப்போது என்ன சொல்லிவிட்டேன்?''

''இதோ பார்.. சும்மா... சும்மா.. உனக்கு நான் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.. நீ என் மனைவி.. என் நிழல்.. நிழல் எப்போதும் மனிதரைப் பிரிவதில்லை... நீயும் என்னை விட்டுப் பிரிந்திருக்க முடியாது.. படுக்கையில் நான் கணவன் என்ற என் உரிமையைக் கேட்க மாட்டேன்.. மற்ற விசயங்களில் விட்டுக் கொடுக்க மாட்டேன்... போ.. போய் புறப்படு.. நாம் உன் வீட்டில் இருக்கப் போவது ஒரே ஒரு நாள் மட்டும்தான்.. நான்



'கிளம்பு' என்று சொல்லும்போது கிளம்பி என் பின்னால் வந்து விட வேண்டும்.. புரிந்ததா..?''

அவன் கோபத்துடன் குனிந்து அறையெங்கும் சிதறிக் கிடந்த பேப்பர்களை சேகரிக்கலானான். அவளும் கண்களில் கண்ணீரோடு.. அவனுடன் சேர்ந்து பேப்பர்களை சேகரித்து.. அடுக்கி.. அவன் கைகளில் தந்தாள்.. கபிலன் அவள் முகத்தையே பார்த்தான்... அவள் பார்வையை தழைத்துக் கொண்டாள்.

''இப்போது எதற்காக அழுகிறாய்..?''

''நான் அழுகவில்லையே..''

''கண்களில் நீர் ததும்புகிறது.. அழுகவில்லை என்கிறாயே..''

''ஒன்றுமில்லை..''

''இதைத் தவிர வேறு வார்த்தையே உனக்குப் பேசத் தெரியாதா...''

கார்த்திகா மௌனமாக நின்றாள்.. கபிலன் தலையை உலுக்கி தோள்களை குலுக்கிக் கொண்டு ஒரு வினாடி மௌனமாக கண்களை மூடி நின்றான்.. மறு நொடியே இயல்பாக கண் திறந்து பேசினான்.

''ஓகே... லெட் அஸ் கோ.. சுதாகரனும்.. பிருந்தாவும் எங்கே..?''

''நமக்காக.. டைனிங் ஹாலில் காத்திருக்கிறார்கள்..''

''இதை முதலிலேயே சொல்ல வேண்டாமா?''

''இதை முதலிலேயே சொல்ல வேண்டாமா?'' கார்த்திகா

கபிலன் அறையை விட்டு வெளியேற.. கார்த்திகா மௌனமாய் பின் தொடர்ந்தாள்.. டைனிங் ஹாலில் கணவன் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பிருந்தா திரும்பிப் பார்த்தாள்.

''ஸாரி மாப்பிள்ளை.. கொஞ்சம் லேட்டாகிவிட்டது'' என்றபடி கபிலன் வந்து அமர்ந்தான்.

''பரவாயில்லை மாப்பிள்ளை...''

''அப்படியில்லை மாப்பிள்ளை.. உங்களை காக்க வைத்து விட்டேன்.''

''அதனால் என்ன மாப்பிள்ளை..''

பிருந்தா தலையைப் பிடித்துக் கொண்டு,

''அடடா...'' என்றாள்.

''என்னம்மா...'' என்று பரிவுடன் வினவினான் கபிலன்.

''மாப்பிள்ளை... தோப்பிள்ளைன்னு இரண்டு பேரும் பண்பாட்டைக் கசக்கிப் பிழியறீங்களே.. கேட்கும்போது காது ஜவ்வே கிழிந்து விடும் போல இருக்கு. இரண்டு பேரும் ஒரே வயது தானே... பிரண்ட்லியாய் மூவ் பண்ண மாட்டீங்களா..''

''நான் நினைத்தேன் பிருந்தா நீ சொல்லிவிட்டாய். சுதா.. இனிமேல் என்னை பெயர் சொல்லித்தான் கூப்பிட வேண்டும்...''

''ஓ.கே... கபில்...''

''பாருடா... இவங்க இரண்டு பேரும் பெயரை சார்ட்டாய் சுருக்கிக்கிட்டதைக் கவனித்தாயா கார்த்திகா...''

''கவனித்தேன்.. கவனித்தேன்.. நீ கூட என் அண்ணனை 'இவ்வளவு அழகாய் லவ்லியாய் கூப்பிடமாட்டாய்...சுதாவாமே...''

''உன் அண்ணன் மட்டும் என்னவாம்.. அழகான தமிழ் பெயராய் தேடிப் பிடித்து... கபிலன்னு.. என்



பெரியப்பா.. பெயர் வைத்திருக்கிறார்... இவர் அதைச் சுருக்கி கபில்ன்னு ஆக்கிவிட்டார்...''

பேச்சும்.. சிரிப்பும் விளையாட்டுமாக அவர்கள் நால்வரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது.. கார்த்திகாவிற்கு சற்று முன் நிகழ்ந்தது.. மறந்து விட்டது... பிருந்தா ஏதோ ஜோக்கடிக்க... வாய் விட்டுச் சிரித்தாள்.. அவளின் சிரிப்பொலியைக் கேட்டுத் திரும்பி அவள் முகம் பார்த்த கபிலனுக்கு ஆறுதலாக இருந்தது.

'சிரித்து விட்டாள்..'

கல்யாணசுந்தரம்.. காமாட்சி தம்பதியினரின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு... அவர்கள் நால்வரும் கிளம்பினார்கள். அன்று மாலைக்குள்.. கார்த்திகாவின் ஊருக்கு வந்து விட்டார்கள்.. இரவு விருந்து முடிந்ததும்.. கபிலன்... கிளம்பத் தயார் ஆனான்...பூங்கோதை மருமகனிடம் தயக்கத்துடன் பேசினாள்...

''வந்து ஒரு நாள் கூட இருக்காமல் கிளம்பினால் எப்படி மாப்பிள்ளை? நாங்க பெண்ணைப் பெத்தவங்க.. ஒரு வாரமாவது அவள் எங்க கூட இருக்கணும்னு நாங்க ஆசைப்பட மாட்டோமா?''

''இத்தனை நாளும் அவள் உங்கள் கூடத்தானே இருந்தாள்.. இனி என் கூட இருந்து பழகட்டும்.. எனக்கு வேலை அதிகம் அத்தை.. நான் வெளிநாட்டிற்கு பறந்து கொண்டிருப்பவன்... ஒரு நாள் முழுவதும் இங்கே தங்க எனக்கு முடியாது...''

கபிலன் தீர்மானமாகக் கூறிவிட்டு அந்த இரவுப் பொழுதில் கார்த்திகாவுடன் கிளம்பி விட்டான்.

# 38

இரவின் இருளில் சாலையில் ஒளி வெள்ளத்தை பாய்ச்சிக் கொண்டு கபிலனின் கார் சென்று கொண்டிருந்தது.. அவனருகே அமர்ந்திருந்த கார்த்திகா.. கண்களில் துளிர்த்த கண்ணீரை ரகசியமாய் கைக்குட்டையால் ஒற்றி எடுத்துக் கொண்டு வந்தாள்... அதைக் கவனித்தும் கவனிக்காதவன் போல் கபிலன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. இருவரும்.. ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்ளாமல் மௌனமாக இருந்தனர்.

கார்த்திகாவிற்கு உடனே கிளம்பி வர நேர்ந்ததில் வருத்தம் அதிகமாக இருந்தது.. கபிலனுக்கோ.. அவளை.. அப்பா.. அம்மா.. அண்ணன்.. பாசத்திலிருந்து விடுவித்து.. மாமனார்.. மாமியார்.. கணவன் என்று தன் வீட்டோடும்.... தன்னோடும் பிணைத்து விட வேண்டும் என்ற தீவிரம் அதிகமாக இருந்தது.

பெயரளவில் திருமணம் என்று ஆகிவிடக் கூடாது.. தான் கபிலனின் மனைவி என்பதை கார்த்திகா பரிபூரணமாக உணர வேண்டுமென்றால் அவள் பிறந்த வீட்டில் அதிகப் பற்று வைக்கக் கூடாது.. அதனால்தான் கபிலன் பிடிவாதமாக.. அவளைப் பிரித்து அழைத்துச் சென்றான்.

"தூக்கம் வருகிறதா..." கபிலன் அவள் முகம் பார்க்காமல் வினவினான்.

"இல்லை..." அவளும் அவன் முகம் பார்க்காமலே பதில் சொன்னாள்.



"அப்போ.. ஏதாவது பாட்டுப் போடவா..?"

"ம்ம்..."

"உனக்கு எந்தப் பாட்டு பிடிக்கும்..."

"ஏதோ ஒன்று..."

அவள் அசுவராஸ்யமாய் பதில் சொல்லிவிட்டு ரோட்டைப் பார்த்தாள். கபிலன் அவளை ஓர் பார்வை பார்த்துவிட்டு.. வலது கையால் காரை ஓட்டியபடி.. இடது கையால் காரில் இருந்த சிடிக்களை ஆராய்ந்தான். பழைய பாடல்கள் கொண்ட சிடியை எடுத்து.. ஓட்டி.. அவனுக்குத் தேவையான பாடல் வரவும்.. ஒலிக்கச் செய்துவிட்டு.. பழையபடி சாலையில் கவனமானான்.

'நிலவுக்கு என்மேல்...
என்னடி கோபம்...
நெருப்பாய் சுடுகிறது...
இந்த மலருக்கு என்மேல்...
என்னடி கோபம்...
முள்ளாய் மாறியது....'

இதமான... குளிர் காற்று வீசும்.. நிலா இரவு.. இரவின் இருள்.. சாலை விளக்குகளின் மெல்லிய வெளிச்சம்.. அருகே அவன்.. காருக்குள் ஒலிக்கும் மெல்லிசை...

கார்த்திகாவின் மனதிலிருந்த பாரம் மறைவது போல் இருந்தது.. மனம் லேசாவதை உணர்ந்தாள் அவள்.. அந்தப் பாடலை வேண்டுமென்றே அவளுக்காக ஒலிக்க வைத்துவிட்டு... கூடச் சேர்ந்து பாடிக் கொண்டு வருபவனைக் கண்டு... அவளுக்குள் ஓர் ரசாயன மாற்றம் நிகழ்ந்தது...

'திருமண நாளில்... மணவறை அருகில்...

இருப்பவன் நான்தானே...

என்னை ஒரு முறை பார்த்து...

ஓரக்கண்ணாலே சிரிப்பவள் நீதானே...'

கார்த்திகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. இவன் வாக்குறுதி கொடுத்து விட்டு.. ஏன் இப்படிப் பாடல் களைப் போட்டு அவனது காதலை உணர்த்துகிறான்? அவள் கோபம் கொண்டால் அவனுக்கென்ன வந்தது? அவன் ஏன் அவளைச் சமாதானப்படுத்த முனைய வேண்டும்...?

'சித்திரை நிலவே.. அத்தையின் மகளே..

சென்றதை மறந்து விடு...

உன் முத்திரை விரும்பும் அத்தான் என்மேல்..

கோபத்தை துறந்து விடு...'

கபிலன் பாடலை ரசித்துப் பாடிய வண்ணம் அவள் மேல் அவ்வப் போது பார்வை அம்புகளை செலுத்திக் கொண்டே இருந்தான்.. கார்த்திகாவின் முகம் மெல்ல மலர்ந்தது.. அவள் அவனுடன் பேச விரும்பினாள்... அவளது கோபத்தையும்... கண்ணீரையும் மதிக்கும் அவனது மறைமுகமான சமாதானப்படுத்துதல் அவளது மனதை மிகவும் கவர்ந்து விட்டிருந்தது.

''பாரினிலேயே.. பாதி காலம் குடியிருப்பவர்.. பழைய பாடல்களை விரும்புகிறாரா.. அதிசயம்தான்...''

கபிலனின் முகமும் மலர்ந்து விட்டது. அவள் கோபத்தை விட்டு விட்டு அவனுடன் பேசியது அவ னுக்கு மகிழ்ச்சியை அளித்தது..



''இதில் அதிசயப்பட என்ன இருக்கிறது...? எந்த இசை நம் மனதில் நிலைத்து நிற்கிறதோ.. அது தானே நம்மை கவர்ந்து இழுக்கும்? இதில் பழமை... புதுமை என்று ஒன்றும் இல்லை.. இப்போது கவனித்தாயானால் ஆஸ்கார் விருது பெற்று உலகப் புகழ்பெற்ற மியூசிக் டைரக்டர் ஏ.ஆர். ரஹ்மான் அவர் மியூசிக் போடும் பாடல்களில் ஏதாவது ஒன்றையாவது... மெல்லிசையாக போடுவார்.. மெல்லிசை எப்போதும் நம் மனதை அமைதிப்படுத்தும் தன்மை கொண்டது...''

''ஆமாமில்ல... அவருடைய முதல் படமான ரோஜா வில்... 'சின்னச் சின்ன ஆசை...'ன்னு ஆரம்பித்து இப்போது வரை அவர் நீங்கள் சொல்வது போல்தான் மியூசிக் போடுகிறார்..''

''இசையை ரசிக்காதவர்கள் யாருமில்லை கார்த்திகா.. எனக்கு வேலையில் டென்சன் அதிகம்... அதனால் இந்த மாதிரி டிராவல் நேரங்களில் நான் மியூசிக்கை விரும்பிக் கேட்பேன்..''

''நான் கூட காலேஜ் டேஸில் மேடையில் ஏறி பாடியிருக்கிறேன்..''

''ஈஸிட்... பிரைஸ் கிடைத்ததா...?''

''ம்ம்... ஆனால் தேர்ட் பிரைஸ்...''

''ஸோ வாட்... அது கிடைக்காவிட்டால் கூடப் பரவாயில்லை.. கலந்து கொள்ள வேண்டும்... என்ற முனைப்பு தான் அவசியம்.. அதில் கலந்து கொண்ட அனுபவம்தான் நமக்கு முக்கியம்.. உனக்கு ஒன்று தெரியுமா? பாரதியார் கலந்து கொண்ட ஒரு கவிதைப் போட்டியில் அவருக்கு மூன்றாம் பரிசுதான் கிடைத்தது.. அந்த மேடையில் முதல் பரிசு வாங்கிய கவிஞர் யார்

என்று நமக்குத் தெரியுமா? பாரதியாரின் பெயர் தானே காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது?''

கார்த்திகா ஆச்சரியத்துடன் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்... இசை.. கவிதை.. விளையாட்டு.. அரசியல்.. சினிமா என்று எல்லாவற்றிலும் அவனுக்கென்று தனி அபிப்ராயம் இருந்தது. அவனுடன் பேசிக் கொண்டிருப்பது.. தனக்கு மிகவும் பிடித்திருப்பதை உணர்ந்தாள் அவள். ஒரு தோழனைப் போல் அவளுடன் விவாதித்துக் கொண்டு வந்தான் அவன்.

'எப்படி இவனால் மட்டும் இப்படி போரடிக்காமல் பேச முடிகிறது..' அவள் மனதிற்குள் வியந்து கொண்டாள்.

அவன் மெல்ல.. மெல்ல தன் குடும்பத்தைப் பற்றிப் பேசினான்.

''அப்பா பெரிய பிஸினெஸ் மேன்.. நான் எம்.பி.ஏ முடித்து வந்ததும் கம்பெனி பொறுப்பை என்னிடம் கொடுத்துவிட்டு... விலகி நிற்கிறார்...''

''ஏன்... அவரும் உங்களுடன் கம்பெனிக்கு வந்தால் என்ன..?''

''அதுதான் அப்பா.. பல வருடங்களாக அவரையே முதலாளியாக பார்த்தவர்கள்.. அவரை விட்டுவிட்டு.. என்னை எப்படி முதலாளியாக பார்ப்பார்கள்? எனது தலைமையை கம்பெனியில் நிலைநாட்ட... அவர் விலகி நின்றார்...''

''ரியலி.. ஹி இஸ் கிரேட்...''

''ஆமாம் கார்த்திகா.. நான் பாரின் போகும்போது மட்டும்தான் கம்பெனிக்குள் வருவார்.. அதுவும் உடையவன் இல்லாவிட்டால்... தொழில் ஒழுங்காக நடக்காது என்பதால்தான்...''



''சூப்பர்...''

''அம்மா... இஸ் ஸோ கைண்ட் அண்ட் ஸ்வீட் லேடி... நீ அவங்களுடன் பழகிப் பாரேன்.. அவங்க உனக்கு மாமியாராய் இருக்க மாட்டாங்க.. இன்னொரு அம்மாவாகத்தான் இருப்பாங்க...''

கார்த்திகா.. அக்கறையுடன் அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டதைக் கண்டு அவனுக்கு அவள் மேல் பிரியம் வந்தது.

பேச வேண்டும்.. பேசினால் மனம் தெளிவாகும்.. உறவுகள் பலப்படும்.. உண்மைகள் புலப்படும்... அந்தப் பயணம் முழுவதும் இருவரும் பேசினார்கள்...

## 39

வழியில் ஓர் இருபத்தி நான்கு மணி நேர காபி ஸ்டாலின் முன்னால் காரை நிறுத்தி... இரண்டு கப் காப்பி வாங்கி வந்தான் கபிலன்.. கார்த்திகாவிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு.. தான் ஒரு கப்பை உறிஞ்சினான். காபி அருந்திக் கொண்டிருந்த கார்த்திகா ஏதோ நினைவில் புன்னகைத்தாள். மேகத்தின் இடையே தெரியும் மின்னல் கீற்றைப் போல் தெரிந்தது அவளது சிரிப்பு.. கபிலனின் மனதில் பூ மழை பொழிந்தது.

''என்ன சிரிக்கிறாய்...?''

''ஒன்றுமில்லை...''

கபிலனின் விழிகளில் கேலி தெரிந்ததும்.. 'ஒன்றுமில்லை.. என்பதைத் தவிர வேறு வார்த்தைகளே உனக்குத் தெரியாதா?' என்று அவன் கேட்டது நினைவுக்கு வர.. அவசரமாய் அவள் பதில் சொன்னாள்.

"இல்லை.. விஜய் டிவியில் ஒரு புரோக்ராம் வரும்."

"என்ன புரோக்ராம்?"

"காபி வித் அனு..."

இதைச் சொல்லிய கார்த்திகாவின் கண்களில் தெரிந்த ரகசியப் புன்னகை... கபிலனுக்கு மிகவும் பிடித்திருந்தது.. அவளின் பேச்சை அவன் வெகுவாய் ரசித்தான்.

"அதைப் போல.. இப்போது 'காபி வித் கபிலன்..' என்று நினைத்தாயா?"

அவள் 'ஆமாம்' என்பதாய் தலையாட்டினாள்.. கபிலன் சிரித்துக் கொண்டே காலி கப்பை அவளிடமிருந்து வாங்கி.. குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு வந்து காரை எடுத்தான்.

கார்த்திகா அவன் செயலை ஆச்சர்யத்துடன் கவனித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து புருவத்தை உயர்த்தினான்.

"பொதுவாய்.. இந்த இரவு நேரத்தில் காரில் காபியோ.. ஸ்நாக்ஸோ சாப்பிடுகிறவர்கள்.. காலி பாட்டில்களையும்... காலி கப்... பேப்பர்களையும் தூக்கி வெளியில் போட்டுவிட்டுப் போவார்கள்..."

"அது தவறு இல்லையா..? நம் நடுவீட்டில் நாம் குப்பைகளைப் போடுவோமா?"

"ஆனால் இது சாலைதானே..."

"சாலையில் குப்பை போடுவதற்கு என்று இடமில்லையா? எல்லா இடங்களிலும் போடலாமா? நீ டிவி புரோக்ராம் ஒன்றைச் சொன்னாயே.. டிவியில் வரும் விளம்பரம் ஒன்றைக் கவனித்து இருக்கிறாயா?"

"என்ன விளம்பரம்?"

"ஒரு வாலிபனும்.. யுவதியும்.. டூவீலரில் போய் கொண்டு இருப்பார்கள்.. டிராபிக்கில்.. சிக்னலுக்கா



வண்டி நிற்கும்.. அப்போது பக்கத்தில் இருக்கும் கார் கண்ணாடி இறங்கும்... அதன் வழியே ஒரு காலி தண்ணீர் பாட்டிலை வெளியே போடுவார்கள்.. இவர்கள் இருவரும் அந்த காலி பாட்டிலை எடுத்துக் கொண்டு... நம் தமிழ் படங்களில் வரும் கார் சேஸிங்கைப் போல் அந்தக் காரை விடாமல் சேஸ் பண்ணி.. பிடித்து விடுவார்கள்.. அந்தக் கார் கண்ணாடியை தட்டுவார்கள்.. உள்ளிருப்பவர்கள்.. என்ன விவரமோ என்று கார் கண்ணாடியை இறக்க.. அந்தப் பெண் கூலாய் அந்த காலிபாட்டிலை.. எடுத்து... அந்தக் காருக்குள் போடுவாள்.. அவர்கள் இருவரும் டூவீலரில் பறந்து விடுவார்கள்..."

"அட... ஆமாம்... நான் இந்த விளம்பரத்தை பார்த்து ரசித்திருக்கிறேன்..."

"சந்தடி சாக்கில் என்னை 'டா' போடுகிறாயே.."

"சேச்சே.. நான் பேச்சுவாக்கில் சொன்னேன்..."

"நான் கிண்டலுக்குச் சொன்னேன்.. ஒன்று தெரியுமா கார்த்திகா..நிறைய விளம்பரங்கள் ரசிக்கும்படி இருக்கும்.. இந்த விளம்பரம் சொல்வது என்ன தெரியுமா? ரோட்டில் தேவையில்லாமல் குப்பை போடக்கூடாது..."

அவர்கள் அடுத்துக் கொஞ்ச நேரம்.. பல விசயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்கள்.. மெல்ல... கார்த்திகா கண் அயர்ந்து விட்டாள் சீட்டில் சாய்ந்த வாக்கில் தூங்கிக் கொண்டு வந்தவள்... தூக்கக் கலக்கத்தில் அவன் தோள் மீது சரிந்து தூங்க ஆரம்பித்து விட்டாள்.

தன் தோள் மீது தலைசாய்த்திருந்தவளைக் கனிவுடன் பார்த்தான் கபிலன்.. அவன் மனம் கூவியது...

'இது.. இதைத்தான்.. நான் எதிர்பார்த்தேன்...'

கார்த்திகாவின் மனதிலிருந்த தடைகளை உடைத்து அவளை இயல்பாகத் தன்னுடன் பழகச் செய்ய அவன் மேற்கொண்ட முதல் முயற்சியே பலித்துவிட்டது.

'மாமனார் வீட்டிலேயே இன்று இரவு தங்கியிருந் தால்... இந்த இனிமையான இரவுப் பயணம் கிடைத் திருக்குமா?'

விடியலின் அருகில் இரவிருக்கும் வேலையில் வேலூரில்.. அவன் வீட்டுக் காம்பவுண்டிற்குள் அவனது கார் நுழைந்தது.

தூங்கிக் கொண்டிருந்த கார்த்திகாவின் கன்னத்தில் மெல்லத்தட்டி எழுப்பினான் அவன்... அவன் கை விரல் களின் ஸ்பரிசத்தை புதிதாய் உணர்ந்து.. சட்டென்று கண் விழித்தாள் அவள்.. விழித்தவுடன் அவள் உணர்ந் தது.. அவன் தோளில் சாய்ந்து தான் படுத்திருப்பதைத் தான்.. பதறி.. விலகி அமர்ந்தாள்.. கபிலன் எரிச்சலுற் றான்.. அதுவரை அவன் மனதிலிருந்த உல்லாசம் லேசாக குறைந்தது.

''ஸாரி...'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''எதற்கு..?''

''நான் தூக்கக் கலக்கத்தில்... உங்கள் தோளில் தலைசாய்த்து...''

''அபத்தமாய் பேசாதேன்னு ஏற்கனவே சொல்லிவிட் டேன்... ரோட்டில் போகிறவன் தோளிலா தலை சாய்த்திருந்தாய்...?''

அவன் சுள்ளென்று பேசினான்... அவன் வார்த்தை களில் இருந்து உண்மையை உணர்ந்த அவள் உதடு களை மடித்துக் கடித்தாள்.

''ஸாரி...''

''இப்போது எதற்கு ஸாரி சொல்கிறாய்...''



''இனிமேல்... இது போல் பேசமாட்டேன்...''

கபிலனின் மனதில் குறைந்திருந்த உல்லாசம்.. மீண்டும் திரும்பி வந்தது. புன்னகையுடன் கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்.

''வா...''

அவன் கோபம் குறைந்து விட்டான் என்பதை புரிந்து கொண்ட கார்த்திகா நிம்மதியுடன்.. அவனைப் பின் தொடர்ந்தாள்... வீட்டின் முன்னால் பெருக்கிக் கொண் டிருந்த வேலையாளிடம்...

''அம்மாவும்.. அப்பாவும் எழுந்துட்டாங்களா..'' என்று கேட்டான் கபிலன்.

''இன்னும் இல்லைங்க ஐயா...'' என்றாள் அந்தப் பெண்.

''சரி.. அவங்க எழுந்ததும்.. நாங்க வந்து விட்டதை சொல்லிவிடு.. காபியை எட்டரை மணி வாக்கில் கொண்டு வா.. நாங்கள் கொஞ்ச நேரம் தூங்கி எழுந் திருக்கிறோம்...''

''சரிங்க ஐயா...''

கார்த்திகா அவன் செயல்களை வியப்புடன் கவனித்த படி அவனுடன் சென்றாள். அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற கபிலன் அவள் வந்ததும்.. அறைக்கதவை தாழிட்டபடி.. வினவினான்.

''வேலையாளிடம் நான் பேசிக் கொண்டிருக்கும் போது ஏன் அப்படி 'ஆ'வென்று பார்த்தாய்...''

''இல்லை... அவளிடம் சொல்வதை செல்போனில் அத்தையிடம் சொல்லி விடலாமே..''

''சொல்லலாம்தான்.. அவர்களுடைய அதிகாலைத் தூக்கம் கெட்டுவிடும்.. பரவாயில்லையா..? அம்மாவும்.. அப்பாவும் வயதானவர்கள்.. அவர்கள் தூக்கம் கெடக் கூடாது...''

'சின்ன விசயத்தையும் எப்படி யோசிக்கிறான்?'

''அதிகாலைத் தூக்கம் எனக்குப் பிடிக்கும்.. உனக்குப் பிடிக்குமா?''

''ரொம்பப் பிடிக்கும்... படித்துக் கொண்டிருந்த போது.. ஞாயிற்றுக் கிழமைகளில்.. அம்மா காபி கொடுக்க எழுப்பினால்.. எழுந்து குடித்துவிட்டுத் திரும்பவும் படுத்துத் தூங்கி விடுவேன்...''

''குட்.. அதைப் போல... இப்போதும் தூங்கு பார்க்கலாம்...''

கபிலன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. உடையைக் கூட மாற்றாமல்.. கார்த்திகா... கட்டிலில் படுத்து தூங்கி விட்டாள்.

## 40

காலை வெளிச்சம் பட்ட... பூக்கள் அழகாக சிரித்தன.. கார்த்திகா அந்த தோட்டத்தைச் சுற்றி வந்தாள்... நேற்றுப் போல் இருந்தது.. அவளுக்கு திருமணமான தினம்... அதற்குள் அறுபது நாள்கள் ஓடிவிட்டன.. கார்த்திகா அந்தப் பெரிய வீட்டின் மருமகள் என்ற நிலைக்கு பழகிவிட்டாள்.

கபிலன் சொன்னது போல.. காமாட்சி அவளுக்கு.. இன்னொரு தாயைப் போல்தான் இருந்தாள்.

''கார்த்திகா ஏம்மா சோர்ந்து உட்கார்ந்து இருக்கிறாய்.. தலை வலிக்கிறதா.. காபி கொடுக்கவா..?''

''தலைக்கு குளித்தால்... ஈரத்துடன் தலையைப் பின்னிக் கொள்ளலாமா.. தலைமுடியை பிரித்து உலர வையம்மா.. கன்னியம்மா.. கொஞ்சம் சாம்பிராணிப்



போட்டுக் கொண்டு வா... மருமகள் தலைக்கு சாம்பி ராணிப் புகை பிடிக்க வேண்டும்...''

''கார்த்திகா.. சாப்பிட்டாயம்மா..''

''கார்த்திகா.. இந்த நகைகள் எல்லாம்... என் மருமகளுக் காகன்னு நான் வாங்கிச் சேர்த்தது.. இந்தாம்மா...''

''கார்த்திகா.. மாமாவும்.. நானும் கடை வீதிக்குப் போயிருந்தோமா.. அங்கே ஜவுளிக் கடையில் இந்தப் புடவையைப் பார்த்ததும்... உனக்கு மேட்ச்சாயிருக் கும்னு தோன்றியது.. எடுத்து வந்து விட்டேன்.. கட்டிக்கிட்டு வாம்மா...''

'கார்த்திகா.. கார்த்திகா...' என்று மருமகளைக் கொண் டாடினாள் காமாட்சி. அவளது பாசத்தில் நனைந்த கார்த்திகா தாயை மறந்தாள்.

கல்யாணசுந்தரம் மனைவியைப் போல் அதிகம் பேசமாட்டார்.. ஆனால் கண்களில் அதிகப் பரிவையும்.. பாசத்தையும் காட்டுவார்.. மருமகள் தனியே அமர்ந் திருப்பதைக் கண்டுவிட்டால்.. உடனே மனைவியை அனுப்பி விடுவார்.

''ஏம்மா.. தனியே உட்கார்ந்து இருக்கிற.. வீட்டு நினைவா.. உன்னைக் கவனிக்கலைன்னு உன் மாமா என்னைத் திட்டுகிறார்.. டிவி பாரேன்...''

இவர்களிடம் கார்த்திகாவை ஒப்படைத்து விட்டு கபிலன் காலையில் கம்பெனிக்குப் போனால்.. இரவு தான் வீடு திரும்புவான்.. மதிய உணவை டிரைவரிடம் கொடுத்து அனுப்புவார்கள்.

காலையில் அவன் எழுந்ததும் அவனுடனேயே... காபி அருந்தி விட்டு.. அவன் குளித்து விட்டு வருமுன் அவனுக்கான உடைகளை எடுத்துவைத்து... அறையை சீர் செய்து கொண்டிருப்பாள் கார்த்திகா.

முதலில் எல்லாம்... அவனுக்கான உடைகளை அவள் எடுத்து வைப்பதில்லை.. கபிலன் ஓர் முறை முகம் தூக்கி விட்டான்.

''கம்பெனியில் செம வேலை... இருபத்தி நான்கு மணி நேரமும் டென்சனில் இருக்கிறேன்.. எனக்கான டிரஸ்களை செலக்ட் பண்ணி எடுத்து வைத்தால் என்ன..? இந்தச் சின்னச் சின்ன வேலைகளைக் கூட நீ பார்க்க மாட்டாயா?''

அதன்பின்.. கார்த்திகா அவன் சொல்லும்படி வைத்துக் கொள்ளவில்லை.. அவனுக்கான வேலைகளை அவளே செய்ய ஆரம்பித்தாள்.. காலையில் குளித்து.. உடை மாற்றி கீழே இறங்கிப் போவாள்.. சமையலறையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் கன்னியம்மாளிடம் சிரித்துப் பேசியவாறு காபியை வாங்கிக் குடிப்பாள்.. அதன்பின் தோட்டத்தில் உலவிய வண்ணம் பூக்கூடையில் பூக்களைப் பறிப்பாள்.. அதை பூஜையறையில் வைத்து விட்டு... குத்து விளக்கிற்கு எண்ணை ஊற்றி.. விளக்கேற்றி வைப்பாள்.. கல்யாணசுந்தரமும்.. காமாட்சியும்.. தினமும் பூஜை செய்யும் பழக்கமுள்ளவர்கள்.

கபிலனை எழுப்பி விடும் நேரம் வந்ததும்.. காபியையும்.. காலைப் பேப்பரையும் எடுத்துக்கொண்டு... மாடிக்குச் செல்வாள்.. காபியுடன் கபிலனை எழுப்பி விட்டு பேப்பரை அவனிடம் கொடுப்பாள்.

''தேங்க்ஸ்...'' என்று புன் முறுவலுடன் அவன் அதைப் பெற்றுக் கொள்ளும்போது.. அவளுக்கு மிகவும் சந்தோசமாக இருக்கும்.

பேப்பரைப் படித்தபடி காபி அருந்தி முடிப்பவன்... வீட்டிற்குள்ளேயே அமைத்திருக்கும் ஜிம்மில் உடற்பயிற்சிகள் செய்துவிட்டு வந்து குளியலறைக்குள் புகுந்து



கொள்வான்.. படுக்கையை சரி செய்து விட்டு அவனுக்கான அன்றைய உடைகளையும்.. லேப்டாப்.. ஃபைல் அடங்கிய சிறு பெட்டியையும் தயார் நிலையில் எடுத்து வைப்பாள்.

குளித்து விட்டு வந்து உடைமாற்றிக் கொள்பவன்.. அந்த உடைகளின் பொருத்தம் கண்டு,

''குட்..'' என்று அவளை மெச்சிக் கொள்வான்.

மீண்டும் அவள் தலையில் பூமழை பொழியும்.

இருவரும் கீழே இறங்கி வருவார்கள்.. பூஜையறைக்குச் சென்று காமாட்சியின் கையிலிருக்கும் தீபாதரனைத் தட்டில் இருக்கும் கற்பூர ஜோதியை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு சாப்பிடப் போவார்கள்.

கார்த்திகா பார்த்துப் பார்த்துப் பரிமாறுவாள்.

''நீயும் என்னுடன் சாப்பிடு..'' என்று கபிலன் அதட்டுவான். அவள் அதை மட்டும் கேட்க மாட்டாள்.. அவன் முறைக்கவும்..

''நைட் வேண்டுமென்றால் சேர்ந்து சாப்பிடுகிறேன்...'' என்று ஓர் உடன்படிக்கை செய்து கொண்டாள்.

பகல் பொழுதில் கபிலனுக்கான உணவை செலோன் டப்பாக்களில் வைத்து... கூடையில் அடுக்கி.. டிரைவரிடம் கொடுத்து விட்ட பின்தான் காமாட்சியுடன் சேர்ந்து சாப்பிட உட்காருவாள்... காமாட்சிக்கு அதில் மகாப் பெருமை...

''மகனுக்கு சாப்பாடு அனுப்பாமல்.. மருமகள் சாப்பிட வருவதில்லை,'' என்று கல்யாணசுந்தரத்திடம் பெருமையாகக் கூறுவார்.

கபிலன் இல்லாத பகல் பொழுது.. கார்த்திகாவிற்கு வெறுமையாகக் காட்சி அளிக்கும்...

இரவில் அவன் வந்தவுடன்.. அவளுக்குள் உற்சாகம் உயிர்த்து எழும்... ஆவலுடன் ஓடி... அவன் கையிலிருக்கும் பெட்டியை வாங்கிக் கொள்வாள்...

அவன் குளித்து உடைமாற்றி வந்ததும்.. இருவரும் பேசிக் கொண்டே சாப்பிடுவார்கள்.. கம்பெனியின் அன்றைய நிகழ்வுகளை அவளிடம் ஒப்பித்து முடிப்பான் அவன்.

கல்யாணசுந்தரத்திடமும்.. காமாட்சியிடமும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு.. அவன் தூங்க வரும் வரை.. ஏதேனும் நாவலைப் படித்துக் கொண்டு.. கார்த்திகா அவனுக்காக காத்திருப்பாள்.

அவன் வந்தவுடன்.. புன்னகையுடன் 'குட்நைட்..' சொல்லிவிட்டு அவனருகே படுத்துத் தூங்கி விடுவாள்...

அது ஏன் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை.. இருவரும் படுக்கையில் விலகி.. இருந்தனர். கபிலன் தன் வாக்குறுதியை மீறவே இல்லை.. அவளிடம் தாபமான பார்வையைக் கூட அவன் காட்டவில்லை.

இருந்தும்.. அவன் வந்து படுத்த பின்தான்... கார்த்திகாவிற்கு உறக்கம் வரும். அது வரை அவள் விழித்து இருப்பாள். அவன் இதை அறிவான்... ரகசியமாய் தனக்குள் சிரித்துக் கொள்வான்.

தாயின் அருகாமையில் சிசு பாதுகாப்பாக உணர்ந்து உறங்குவதைப் போல தன் அருகாமையில் படுத்து... சிறு குழந்தை போல் தூங்கும் அவளைக் கனிவுடன் பார்ப்பான் அவன்.

'இவளும் ஒரு வகையில் குழந்தைதான்.. தன் மனதை தானே அறியாத சிறு குழந்தை...'

தனக்குள் சொல்லிக் கொள்வான் அவன்.

அவளுக்கு அதை அவன் அறிய வைக்கும் நாளும் வந்தது.. அன்று அதுவரை பொறுமையாக இருந்த



கபிலன்.. பொங்கி வெடித்தான்.. அவன் கேட்ட கேள்விகளை எதிர் நோக்க இயலாமல் பூஞ்சை மனம் கொண்ட கார்த்திகா தவித்துப் போனாள்.

கரை உடைந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவள் எப்படி கரை சேர முடியும்? அவள்தான் வெள்ளத்தில் மூழ்கி விட அவளை அறியாமல் துடித்துக் கொண்டிருந்தாளே...

## 41

அன்று என்றுமில்லாமல் கபிலன் மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்தான்... கார்த்திகா ஆச்சர்யத்துடன் ஓடி.. அவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்.

''நீயும் சாப்பிடு...''

''நான் அப்புறமாய் அத்தையுடன் சாப்பிட்டுக் கொள்கிறேனே...''

''உன்னுடன் பேச வேண்டும்.. சாப்பிடு...''

கார்த்திகா புரியாதவளாய் அவனுடன் சாப்பிட்டு முடித்தாள்... கபிலன் மாடியேற பின் தொடர்ந்தாள். அவன் கழுத்து டையை தளர்த்திவிட்டு.. கட்டிலின் மேல் அமர்ந்தான்.. கார்த்திகாவும் அவனருகே அமர்ந்தாள்.

''நான் கனடா போக வேண்டும் கார்த்திகா.. திரும்பி வர ஒரு வருடம் ஆகும்.''

கபிலன் அவள் முகத்தையே பார்த்தவாறு கூற அவள் துடித்துப் போய் விட்டாள்.

'அவன் இல்லாமல் அவள் எப்படி இருப்பாள்..?'

நினைத்ததை வாய்விட்டுக் கேட்டாள்.

''ஏன் இருந்தால் என்ன..?'' அவன் இளக்கமின்றி வினவினான்.

''இந்த ஐந்து மாதங்களும் என்னிடம் ஒரு எல்லைக் கோட்டை கிழித்துத் தானே வாழ்ந்து வந்தாய் கார்த்திகா.. அந்தக் கோட்டைத் தாண்ட விருப்பமில்லாதவள்.. அந்தக் கோட்டைத் தாண்டவிடாமல் என்னை வாக்குறுதியால் கட்டிப் போட்டு வைத்திருப்பவள்.. என் பிரிவால் துன்பப்படப் போவதில்லையே...''

கார்த்திகா கண்களை அகல விரித்தாள்.. அவனது பதில் அவளது இதயத்தை தாக்கியது... இவன் இப்படியெல்லாம் பேசுவானா? இப்படியெல்லாம் யோசிப்பானா? அவள் மலங்க மலங்க விழிப்பதை இரக்கமில்லாமல் பார்த்துக் கொண்டே அவன் தொடர்ந்து பேசினான்.

''உனக்கு நிச்சயம் செய்திருந்த மாப்பிள்ளை ஒரு தீவிரமான இதய நோயாளி.. எந்த நிமிடமும் இதயம் நின்று விடும் அபாயமுள்ளவனுக்கு நீ கழுத்தை நீட்ட இருந்தாய்.. அது நான் தாலிகட்ட வேண்டிய கழுத்து.. அவன் போய் விட்டான்.. அதற்காக.. காலம் முழுவதும் அவன் நினைவில் நீ வாழப் போகிறாயா?''

அமிலமாய் அவள் தலை மீது கொட்டியது போல் கார்த்திகா துடித்துப் போய்விட்டாள்...

''என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்..? அவன் நினைவில் நான் வாழ்கிறேனா?''

''பின்னே இல்லையா? அவனுக்காகத்தானே.. என்னை நீ விலக்கி வைக்கிறாய்...?''

''இல்லை.. இல்லை... இல்லை... அந்த மாப்பிள்ளையின் முகத்தைக் கூட நான் சரியாகப் பார்த்தது இல்லை... அபாண்டமாய் பேசாதீர்கள்...''

''பின்.. ஏன் திருமணத்தை தவிர்த்தாய்?''



''என் நிலையில் இருந்து பார்த்தால் தெரியும்.. ஊரே ஒன்று கூடித் தூற்றிய பின் அப்படியொரு திருமணத்தையும்.. திருமண வாழ்வையும் யோசித்துக் கூடப் பார்க்கக் கூடாது என்று எனக்குள் நானே உறுதி கொண்டேன்...''

''ஓகே.. உன் உறுதியில் நீ உறுதியாய் நில்.. என்னால் உனக்குக் கொடுத்த உறுதிமொழியை காப்பாற்ற முடியும் என்று தோன்றவில்லை... நான் வெளிநாட்டிற்கே போகிறேன்... இங்கே உனக்குத் துணையாக அப்பாம்மா இருக்கிறார்கள்.. என் சொத்து முழுவதும் உன்னுடையது தான்.. சந்தோசமாக இரு...''

''யாருக்கு வேண்டும் உங்களுடைய சொத்து.. எனக்கு அது வேண்டாம்...''

''வேறு என்னதான் வேண்டும்?''

''நீங்கள் தான் வேண்டும்... நீங்கள் இல்லாமல் என்னால் வாழ முடியாது.. நான்.. நான்... நான் செத்துவிடுவேன்...''

கபிலன் ஒரே எட்டில் அவளை அணுகி அவளது வாயைப் பொத்தினான். அவள் உடைந்து அழுதாள்.. அவன் அவளைத் தன்னருகே இழுத்து அதட்டினான்.

''என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? நீயில்லாமல் நான் இருப்பேனா?''

''அப்புறம் ஏன்.. என்னை விட்டுப் போக நினைத்தீர்கள்...''

''நீ பாட்டுக்கு படுத்து தூங்கி விடுகிறாய்.. இரவு முழுவதும் உன்னைத் தொடவும் முடியாமல் விடவும் முடியாமல் நான் படும்பாடு எனக்குத்தானே தெரியும்....''

கபிலன் தாபத்துடன் கை விரிக்க கார்த்திகா விருப்பத்துடன் அவன் கையில் புகுந்தாள்.

# 42

விமானம் தாழப் பறந்து நின்றது... சீட் பெல்டுகளை அவிழ்த்து விட்டுப் பிரயாணிகள் எழுந்தனர்... கபிலன் கார்த்திகாவுடன் விமானப் படிக்கட்டுகளில் இறங்கினான்.. பளிங்கு போன்ற விமான நிலையத்தை கண் விரியப் பார்த்துக் கொண்டு வந்தாள் கார்த்திகா.

''ஏய்.. பட்டிக்காடு... என்ன இப்படி வெறித்துப் பார்க்கிறாய்?'' என்று கபிலன் சொல்லவும் கார்த்திகாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''இந்தப் பட்டிக்காடுதான் வேண்டும்ன்னு காத்திருந்து ஏன் கல்யாணம் பண்ணினீர்கள்?''

''இங்கே பாருடா.. இந்தியாவில் விட்டுவிட்டு.. கனடாவில் வந்து இவள் சண்டை போடுகிறாள்.. என்னடி செய்வது.. எனக்கு இந்தப் பட்டிக்காட்டைத்தானே பிடித்திருந்தது...''

காதலுடன் அவள் இடுப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டான்... அவள் நெளிந்தாள்.

''ஸ்ஸ்.. சுற்றி ஆண்கள் இருக்கிறார்கள்...''

''இருந்தால் என்ன...?''

''நம்மை பார்க்க மாட்டார்களா?''

''மண்டு... மண்டு.. இது கனடாடி.. அங்கே பார்...''

கபிலன் காட்டிய திசையில்... ஒருவரையொருவர் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தது.. இளஞ்ஜோடி ஒன்று... கார்த்திகாவிற்கு வெட்கமாகி



''என்ன.. இது.. இவங்க இப்படி இருக்கிறாங்க?''

''இங்கே.. தெருவில் காபி குடிப்பது போல்.. காதலையும் செய்வார்கள்..''

''கண்றாவி...''

''உனக்கு அது கண்றாவி.. அவர்களுக்கு இயல்பு...''

பிரம்மாண்டமான அந்த அடுக்கு மாடி குடியிருப்பில்... ஒரு அபார்ட்மெண்டின் கதவைத் திறந்தான் கபிலன்... அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு தயார் நிலையில் இருந்தது. கார்த்திகா விழி விரிய வீட்டைச் சுற்றிப் பார்த்தாள்.

''ஏண்டி.. ஏர்போர்ட்டையும் அப்படிப் பார்த்தாய்.. வீட்டையும் இப்படிப் பார்க்கிறாய்... எல்லாமே உனக்கு அதிசயம்தானா?'' அவன் சிரித்தான்.

''நீங்கள் ஏதாவது ஹோட்டல் ரூமுக்கு அழைத்துக் கொண்டு போவீர்கள்ன்னு நினைத்தேன்ங்க.. நீங்களானால் இங்கேயே ஒரு சின்ன வீட்டை வைத்திருக்கிறீர்கள்.''

''அடிப்பாவி.. கதையையே மாற்றுகிறாயே.. நான் ஸ்ரீராமன்டி...''

''ச்ச... சின்னதாக ஒரு வீட்டை வைத்திருக்கிறீர்கள்ன்னு சொன்னேங்க...''

''அதைச் சரியாச் சொல்லு.. கேட்கிறவங்க என்னைத் தப்பா நினைத்து விடக்கூடாது.. அதுசரி.. அது என்ன வார்த்தைக்கு வார்த்தை 'ங்க' போடுகிறாய்... கபிலன்ன்னு பெயர் சொல்லிக் கூப்பிடு..'' கபிலன் கார்த்திகாவை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ம்ம்.. மாட்டேன்... 'அத்தான்'னு வேண்டுமானால் கூப்பிடுகிறேன்...''

''அதற்கு ஏண்டி.. என் சட்டை பொத்தானைப் பிய்க்கிறாய்.. இந்த அத்தான்.. பொத்தானெல்லாம் வேண்டாம்.. கபிலன்னு கூப்பிடு..'' அவன் பிடிவாதம் பிடித்தான்.

''ஒரு கன்டிசன்.. நாம் தனியாக இருக்கும் போதுதான் பெயர் சொல்லிக் கூப்பிடுவேன்..''

''இப்போது தனியாகத்தானே இருக்கிறோம்.. கூப்பிடு...''

''கபிலா..'' அவள் முகம் சிவக்க அழைத்துவிட்டு அவன் மார்பில் புதைந்தாள்.

அவளது வெட்கத்தைக் கண்டு 'ஹாஹா'வென்று சிரித்தவன்... அவளது இதழ் தேடிக் குனிந்தான்.. அவள் இமை மூடி அவனது தேடுதலுக்கு இடம் கொடுத்தாள்... காட்டாற்று வெள்ளம் கரை உடைத்தது... அதில் மூழ்கி எழுந்தவள்... முத்தை எடுத்தாள்.

''கார்த்திகா உண்டாகி இருக்கிறாளாம்..'' பிருந்தா மகிழ்ச்சியுடன் கணவனிடம் கூறினாள். அவன் அவளைக் காதலுடன் பார்த்தான்.

''இது உன்னால் தானே பிருந்தா.. நீ அவளை வாழ வைத்தாய்...''

மலர்ந்தும் மலராமல் இருந்த மலரை.. மலர வைத்து.. மணம் பெறுக வைத்து... அதை தலைவனின் கைகளிலும் சேர்த்து விட்ட அந்த உண்மைத் தோழி மனம் விட்டுச் சிரித்தாள்.

☺